குடும்பத்துடன் களிக்க...

கல்கி

KALKI 27.11.2005

ரூ.7.00

160 பக்கங்கள்



சத்ய சாயி 80



இந்த இதழுடன் சிறப்பு வெளியீடு

கனமானது & அழகானது



அதிக எடை நகைக் குவியல்

OKJ

SINCE 1933

ORIGINAL KERALA JEWELLERS

74,USMAN ROAD

Save Rs.25/- per gram on purchases above 150gms* of Gold.

Ph.:2434 0027/24345809.

ஞாயிறும் விற்பனை உண்டு. பார்க்கிங் வசதி உண்டு

*Conditions apply



பம்பரக் கண்ணாலே

ஆர்த்திஅகர்வால் போன்ற ஓர் அழகான இளம்பெண் கண் முன்னால் சாகத் துணிந்தால், ஸ்ரீகாந்த் மாதிரி ஒரு ஸ்மார்ட்டான இளைஞரால் வேடிக்கை பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியுமா? "இவ்ளோ அழகான பொண்ணு நீங்க... மலையுச்சிலேர்ந்து கீழே விழுந்து அகோரமா சாகலாமா? தூக்கத்துலேயே செத்துப் போற மாதிரி நிறைய வழிகள் இருக்குவாங்க" என புத்திசாலித்தனமாக கதாநாயகியை மடக்கித் தற்கொலையிலிருந்து அவரை தடுத்து நிறுத்தும்போதே படம் சூடு பிடிக்கிறது.

பார்த்த மாத்திரத்திலேயே கதாநாயகி மீது காதல்கொள்ளும் ஸ்ரீகாந்த், கதாநாயகியின் வேண்டுகோளை ஏற்று அவருக்குப் பிடிக்காத திருமணத்தை நிறுத்துகிறார். இதற்காக நிச்சயம் செய்யப்பட்ட மாப்பிள்ளையுடன் ஸ்ரீகாந்த் ஆடும் காய் நகர்த்தல்கள்தான் பாதிப் படம். கல்யாணத்திலிருந்து தப்பித்த நாயகி, ஸ்ரீகாந்தைக் கைப்பிடிக்கிறாரா என்பது மீதிப் படம். தேங்காய், மாங்காய் போட்ட சரியான மசாலா சுண்டல் கணக்காய் சராசரி ரசிகர்களை கைத்தட்டி, விசிலடித்து, ஆட்டம் போட்டு ரசிக்க வைக்கிற துறுதுறு திரைக்கதை. லாஜிக் பற்றிய நமது கவலைகளை நமீதா போன்ற கிளாமர் கறிவேப்பிலையில் மூழ்கடித்து விடுகிற இயக்குனரின் வியாபார சாமர்த்தியத்தை மெச்சுவது நல்ல ரசனைக்கு நெருப்பு வைக்கிற மாதிரி.

என்றாலும் பல காட்சிகளில் ஃப்ரெஷ்ஷான அணுகுமுறையை கையாண்டிருப்பதைப் பார்த்தால், பார்த்திபாஸ்கரிடமிருந்து அழகியலோடு படங்களை எதிர்பார்க்கலாம் போலிருக்கிறது. முதன்முதலில் கதாநாயகியைப் பார்த்துவிட்டு, அவரை சைக்கிளில் பின்தொடர்ந்து வரும் ஸ்ரீகாந்தை, துரத்திக்கொண்டு வரும் கேமராவின் துடிப்பும், இதுபோன்ற விறுவிறு காட்சிகளுக்கு ஸ்ரீகாந்த் தேவாவின் பின்னணி இசை துடிக்கிற துடிப்பும் இளமைக் கலவை. புதுமையான க்ளைமாக்ஸ் என்று சொல்லிவிட்டு கடைசி பதினைந்து நிமிடங்கள் ஃபிலிம்ரோலை வீணடித்திருக்கிறார்கள். கோடம்பாக்கத்தில் திரியும் கழுதைகள் ஃபிலிம்ரோல் தின்னும் பட்சத்தில், தைரியமாக கழுதை வாய்க்கு க்ளைமாக்ஸை கொடுத்துவிடலாம்.

- லஜ்ஜாவதி

வட்டமேஜை

புற்றீசல்போல வார இதழ்கள் பெருகிவிட்ட இந்நாளில், தரமான ரசனையுடன் எந்த வயதினரையும் படித்துக் களிக்கச் செய்யும் கற்கண்டு இதழ் கல்கி இனி ஞாயிறிலா? கலக்கறீங்க!

தஞ்சை,
பால.ராஜேந்திரா

'புலி'யைப் புகழ்ந்து பாடுவது 'சிறுத்தை'யின் இயல்புதானே. இனம் இனத்தோடு சேரும் என்று சும்மாவா சொன்னார்கள்!

திருவண்ணாமலை,
லெமூரியன்

அடுத்தவங்க டைரியைப் படிக்கிறது தப்புன்னு சொல்லுவாங்க. நீங்க என்னடான்னா 'சூர்யாவோட பர்சனல் டைரி'யைப் படிங்கன்னு வாரா வாரம் எங்களைத் தூண்டில் போட்டு இழுத்திட்டீங்க.

தேனி,
க. புவனேந்திரன்

சினிமா உலகம் பற்றிய ஏராளமான பற்பல தகவல்களை இத்தொடர் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது. திரையுலகில் புதிதாக நுழைந்திருப்பவர்கள், புதிய தயாரிப்பாளர்கள் கண்டிப்பாகப் படிக்க வேண்டிய தொடர்.

உடுமலை,
எஸ்.பொன்னுசாமி

'பர்சனல் டைரி' சூர்யாவின் வாழ்க்கைச் சுருக்கம் மட்டுமல்ல, உள்ளத்தைக் கவர்கின்ற, தெளிவான, வாழ்வியல் முன்னேற்றத் தன்னம்பிக்கைத் தொடராகவும் அமைந்துவிட்டது.

மயிலாடுதுறை,
தங்க.சுப்பையன்

'தேசிய விருது நிச்சயம்' என்ற சேரனின் பேட்டி, அவரது தன்னம்பிக்கையைக் காட்டியது.

திருப்பரங்குன்றம்,
டி.கே.சுப்பிரமணியன்

கண்களை மூடியபடி தம்புராவை மீட்டும் எம்.எஸ். அம்மாவின் ஓவியத்தை அப்படியே பிரேம் போட்டு வைத்துக்கொண்டேன். ம.செ. ஓவியம் மட்டுமல்ல, அவர் தம் கட்டுரையும் தத்ரூபம்!

குமாரபாளையம்,
காசி. சக்திவேலன்

'தண்ணீர் தண்ணீரே அல்ல' கட்டுரை காலத்துக்கேற்ற கட்டுரை. பொது

காலத்தின்



மக்களுக்குக் குடிநீரைப் பற்றிய விழிப்புணர்வை நிச்சயம் ஏற்படுத்தும்.

சென்னை,
கோவர்த்தனன்

திண்டிவனத்தின் மிரட்டல் பேட்டி மிரட்டல்தான்!

திருவரங்கம்,
அ.சம்பத்

தலையங்கக் கருத்துக்கள் அனைத்தும் காலத்தின் கட்டாயம் என்பது



இருபத்தாறு வாரங்களாக தன்னுடைய பர்சனல் பக்கங்களைப் புரட்டி, தானடைந்த வலிகளையும் அதனால் ஏற்பட்ட வலிமைகளையும் அருகேயிருந்து உரையாடியதைப் போலிருந்த தொடர் முடிவுபெற்றது வருத்தம்தான். தொடரைத் தொகுத்தளித்த ஆர்.சி.ஜெயந்தன், படங்களையளித்த சிவகுமார், ஸ்ரீஹரி ஆகியோருக்கு ஸ்பெஷல் தாங்க்ஸ்.

நெய்வேலி, **க.சுந்தர்**

நன்றாகவே புரிகிறது. ஆனால், முஷாரஃபின் முரண்பாடும் மத்திய அரசின் பிடிவாதமும் மாறப்போவதில்லை என்பதுதான் நிஜம்.

மதுரை, **என்.பாலகிருஷ்ணன்**

அறிவு என்கிற இறக்கைகளை அசைத்து மனிதன் பறவைபோல வாழ முடியும் என்பதை

இதயம்!

உதாரணங்களுடன் சுனந்தாஜி கூறியிருப்பது அற்புதம்.

சென்னை, **கே.வி.ராமன்**

இந்த ஆண்டு கல்கி தீபாவளி மலரில் இடம் பெற்றுள்ள அமரர் கல்கி அவர்களின் சாம்பசிவ சாஸ்திரி நாடகத்தைப் பழைய விகடன் தொகுப்பிலிருந்து பிரதியெடுத்து உதவியவர்கள் புதுக்கோட்டை, திருகோகர்ணம், ஞானாலயா நூலகத்தினர் என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆர்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.390/-
ஆறு மாதம் : ரூ.195/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 63.50 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2060/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேஜைக்கு

அஜீத்துக்கு எதிர்காலம் இருக்கா?

பதினெட்டு கிலோ எடையைக் குறைத்துவிட்டு கல்லூரி மாணவர் போல கோலிவுட் களத்தில் தோள் தட்டும் அஜீத்தை ரஜினி, விஜயில் ஆரம்பித்து மொத்தப் படவுலகும் பாராட்டிக் கொண்டிருக்கிறது. அஜீத்திடம் எப்படி இந்தத் திடீர் மாற்றம்!

தன் எதிர்காலம் பற்றிப் பயம் வந்துவிட்டதால் உதறி எழ முயற்சிக்கிறாரா! உண்மையில் அஜீத்துக்கு எதிர்காலம் இருக்கிறதா? அவரது இடம் அப்படியே இருக்கிறதா? திரையுலகில் வெவ்வேறு அடுக்குகளில் இருப்பவர்களிடம் பேசினோம்.



• 'பரமசிவன்' பட விழாவில்...

"தமிழ் சினிமாவை ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு ஜோடி ஹீரோக்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். - சிவாஜி, ரஜினி - கமல், போலவே விஜய் - அஜீத் ஜோடியைக் குறிப்பிட வேண்டும்.



• ஏவி.எம். சரவணன்

எம்.ஜி.ஆருக்குப் பிறகு பளிச்சென்ற தோற்றம்கொண்ட இரண்டு ஹீரோக்களைத்தான் மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் கமல், இன்னொருவர் அஜீத்.

அரவிந்த்சாமி, அப்பாஸ், ஷாம் போன்ற பலரும் தோல்வியையே தழுவியிருக்கிறார்கள்.

விஜய்க்கு அவரது தந்தை இயக்குனராகவும் தயாரிப்பாளராகவும் இருந்து, ஒரு வலுவான பின்னணியாக அவரை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு வந்திருக்கிறார். ஆனால், எந்தவிதப் பின்னணியும் இல்லாமல், சாதாரண நடுத்தரக் குடும்பத்திலிருந்து சினிமாவுக்கு வந்தவர் அஜீத்.

விஜயகாந்துடன் விஜய் இணைந்து நடித்த 'செந்தூரப்பாண்டி' படம்தான் விஜயை கிராமம் மற்றும் (B & C Audience) நகர ரசிகர்களிடம் கொண்டு சேர்த்தது. அஜீத்தை 'ஆசை' படம் பட்டி தொட்டியெங்கும் பாப்புலராக்கியது. விக்ரமன், பாசில் போன்ற பெரிய இயக்குனர்களின் கைகளுக்கு வந்த பிறகே விஜய் மோல்டு ஆனார். ஆனால், அஜீத் ஆரம்பம் முதலே புதிய இயக்குனர்களின் திறமையில் நம்பிக்கை வைத்துக் களத்தில் தாக்குப் பிடித்து வந்தார்.

கிடைத்த இடத்தை தக்க வைத்துக் கொள்ள வேண்டுமே என்கிற போராட்டத்தில் ஜனரஞ்சகமான கமர்ஷியல் கதைகளைத் தேடிப்

–பல்ஸ் ரிப்போர்ட்

பிடித்து நடிக்க ஆரம்பித்த விஜய்க்கு தொடர் வெற்றிகள் கிடைத்து வந்தன. அஜீத்தோ மாறுபட்ட கதைகளைத் தேர்வு செய்வதில் கவனம் செலுத்த, கொஞ்சம் பின்னடைவைச் சந்தித்தார். அதே நேரம் அஜீத்தின் தோல்விப் படங்கள் எதுவும் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தவில்லை.

ஷாஜஹான், தமிழன், புதிய கீதை என விஜயும் தொடர் தோல்விகளைச் சந்தித்த போதிலும் இடைவெளி இல்லாமல் படங்களைக் கொடுத்து வந்ததால் அவரது ரசிகர்கள் உற்சாகம் இழக்கவில்லை. ஆனால், நிஜவாழ்க்கையிலும் ஒரு ஹீரோவாக சாதிக்க விரும்பிய அஜீத், உலகளாவிய ஃபோர்முலா கார் பந்தயங்களில் கவனம் செலுத்தத் தொடங்கியதில் அஜீத் படங்கள் வெளியாவதில் அடுத்தடுத்து சிக்கல்கள். இந்த இடைவெளியில், அடுத்த கட்டத்தில் இருந்த விக்ரம், சூர்யா போன்றவர்கள் கடகடவென்று மேலே வந்துவிட, இன்னொரு பக்கம் தனுஷ், சிம்பு போன்ற இளம் ஹீரோக்களும் களத்தில் குதித்தனர். அஜீத் அவ்வளவுதானா என தேடிக் கொண்டிருந்தபோது, 'இல்லை மீண்டும் வருவேன்' என பதினெட்டு கிலோ உடல் எடையைக் குறைத்துவிட்டு புத்தம் புதிய மனிதராய், 'காட்ஃபாதர்', 'திருப்பதி', 'பரமசிவன்' என நடித்து வருகிறார்'' என்றனர் நாம் சந்தித்த திரையுலக விமர்சகர்கள்.



• ஷாலினி

''அஜீத்தின் இடம் அப்படியே இருக்கிறது. அவரது படம் குறைந்த பட்சம் பத்து கோடிக்கு வியாபாரம் ஆகிறது. இப்போதும் மினிமம் கியாரண்டி அடிப்படையில் குறிப்பிட்ட தொகைக்கு அஜீத் படத்தை வாங்கித் திரையிடும் தியேட்டர்கள், அது தோல்விப் படமாக இருந்தாலும் மூன்றே வாரத்தில் கொடுத்த தொகையை எடுத்து விடுகின்றனர். இப்போதும் அஜீத் படங்களுக்குப் பதினைந்து வாரம் பிஸினஸ் இருக்கிறது. சிட்டிசன் உட்பட அவரது தோல்விப் படங்கள் எதுவும் நஷ்டத்தை ஏற்படுத்தவில்லை" என்கிறார் அஜீத் படங்களை தொடர்ந்து வாங்கி வெளியிடும் சென்னை - செங்கை மாவட்டத்தின் முன்னணி விநியோகஸ்தர். இதை உறுதி செய்வது போல இருக்கிறது அஜீத் படங்களை அடுத்தடுத்து திரையிட்டு வரும் சென்னை, அசோக்நகர் காசி தியேட்டர் உரிமையாளர் சுப்ரமணியம் சொல்லும் கருத்து.

"தீனா, வில்லன்,



அட்டகாசம் ஆகிய மூன்று அஜீத் படங்களை நாங்கள் திரையிட்டோம். மூன்று படங்களுக்குமே மிகப்பெரிய ஓபனிங் இருந்தது. இடையில் அஜீத் கார் ரேஸ் என்று போய்விட்டது, 'சாம்ராட் அசோகா' மாதிரி படங்களில் கெஸ்ட் ரோலில் நடித்தது இவையெல்லாம் அவரது ரசிகர்களுக்குப் பிடிக்கவில்லை. நல்ல கதைகளில் கவனம் செலுத்தினாலே அஜீத் சட்டென்று விட்ட இடத்தைப் பிடித்துவிட முடியும்!"என்கிறார் இவர்.

சரி, அஜீத் கார் பந்தயங்களில் கலந்து கொண்டதுதான் அவரது பின்னடைவுக்கு முக்கிய காரணமா என்றால், "இல்லை" என்று மறுக்கிறார் தமிழ்ப் படங்களின் உலகளாவிய உரிமை பெற்றுத் திரைப்பட விநியோகத்தில் ஈடுபட்டு வரும் வர்கீஸ். "அஜீத் ஃபார்முலா கார் பந்தயங்களில் கலந்து கொண்டது அவரது ஹீரோ இமேஜை உயர்த்தியதோடு, வெளிநாடுகளில் படங்களை விற்பனை செய்வதற்குப் பேருதவியாக இருக்கிறது. அஜீத்தின் ரேஸ் முயற்சிகள் அவரது சினிமா வாழ்க்கைக்கு ப்ளஸ்தானே தவிர மைனஸ் அல்ல" என்கிறார் வர்கீஸ்.

அஜீத் படங்களில் தொடர்ந்து பணியாற்றி வந்த தயாரிப்பு நிர்வாகி ஒருவர், "ஒரு குறிப்பிட்ட தயாரிப்பாளருக்கு மட்டும்தான் (எஸ்.எஸ். சக்கரவர்த்தி) படம் பண்ணுவேன் என்று அஜீத் எடுத்த முடிவு அவரது வளர்ச்சிக்குத் தடையாக அமைந்துவிட்டது. ஆனால், தனது முடிவை இப்போது மாற்றிக்கொண்டு வெளிப்படங்களில் நடிக்க ஆரம்பித்துவிட்டார். இனி சுலபமாக மீண்டு வந்து விடுவார்" என்றார் நம்மிடம்.

அஜீத்துக்கு எந்த வகையான ரசிகர்கள் அதிகம்? கோவை, ஈரோடு மாவட்டத்தின் முன்னணி விநியோகஸ்தர் லட்சுமிகாந்தனிடம் கேட்டபோது,

"விஜய்க்கு பி - சி சென்டர்களில் பெண்கள், இளைஞர்கள், குழந்தைகள் தான் ஆடியன்ஸ். அஜீத்துக்கோ எல்லா வகையான ஆடியன்ஸும் உண்டு. அவருக்கு லோகிளாஸ் ஆடியன்ஸும் உண்டு, கிளாஸ் ஆடியன்ஸும் உண்டு. எமோஷனல், காமெடி கலந்த கதையோடு அஜீத் படம் வந்துவிட்டால் பதினைந்து நாட்கள் தொடர்ந்து கிராண்ட் ஓபனிங் இருக்கும்" என்றார்.

அஜீத்தை வைத்து திருப்பதி படத்தை இயக்கி வரும் பேரரசு, இதை அப்படியே ஒப்புக்கொள்கிறார். "அஜீத் ஒரு எமோஷனல் ஆக்டர். ஆக்ஷன் ஹீரோ காமெடி பண்ணினால் ரசிகர்கள் மிகவும் ரசிப்பார்கள். 'திருப்பதி' படத்தில் காமெடி கலந்த ஆக்ஷன் கதை. எம்.ஜி.ஆர். மது அருந்துவது போலோ, பாலியல் பலாத்கார காட்சிகளிலோ நடிக்காமல் மக்கள் ஹீரோவாக வந்தார். ஆனால், அடுத்த ஜெனரேஷனில் வந்த ரஜினி புகை பிடிப்பது, மது அருந்துவது உட்பட எம்.ஜி.ஆருக்கு எதிர் ரூட்டில் எதிர்



"மாறும் ரசனைக்குத் தீனிபோட்டால்தான் மாஸ் ஹீரோக்கள் நிற்க முடியும்!"


மறையான கேரக்டர்களைச் செய்து மக்களிடம் வெற்றி பெற்றார். ஒவ்வொரு காலகட்டத்துக்கும் ரசனை மாறிக்கொண்டே இருக்கிறது. இப்படி மாறும் ரசனைக்குத் தீனி போட்டால் தான் மாஸ் ஹீரோக்கள் நிற்க முடியும். அந்த வகையில் அஜீத்துக்கு இனி வெற்றிக் கதைகள் அமையும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதைப் போலவே இடைவெளி இல்லாமல் படங்கள் தருவதும் பொங்கல், தீபாவளி, கோடை விடுமுறையில் தங்கள் ரசிகர்களுக்குப் படம் தருவதும் முக்கியம்'' என்றார்.

எதிர்வரும் கோடை விடுமுறைக்கு 'திருப்பதி' படத்தை ரிலீஸ் செய்வதாக உறுதியளித்திருக்கும் அதன் தயாரிப்பாளர் ஏவி.எம். சரவணன்,

" 'திருப்பதி வந்தா திருப்பம் வரும்!' என்ற பாட்டு படத்தில் இடம்பெற இருக்கிறது. உண்மையிலேயே 'திருப்பதி' படம் அஜீத்துக்குப் பெரிய திருப்பு முனையாக அமையப்போகிறது. எல்லா தரப்பிலும் அஜீத்துக்கு ஆடியன்ஸ் உண்டு. இந்தப் படம் சின்னக்குழந்தைகளையும் அஜீத் ரசிகர்களாக ஆக்கிவிடும். இதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். அஜீத் சரியான நேரத்தில், சரியான முடிவெடுத்து முழு மூச்சோடு நடிப்பில் ஈடுபாடு காட்ட ஆரம்பித்திருக்கிறார். அதற்காகவே அவரைப் பாராட்ட வேண்டும்" என்றார்.

இன்னொரு பக்கம் அஜீத்தை வைத்து 'பரமசிவன்' படத்தை இயக்கி வரும் பி.வாசுவிடமிருந்தும் அஜீத்துக்குப் பலமான பாராட்டு.

''டைரக்டரின் நடிகர் என்றால் டைரக்டர் என்ன சொல்கிறாரோ, அதை அப்படியே செய்துவிட்டுப் போவார். ஆனால் அஜீத், ஒவ்வொரு காட்சியிலும் இம்ப்ரோவைஸ் செய்துகொண்டு, எனக்கு வேலையே வைக்காமல் ஹோம் ஒர்க் செய்து வந்து நடிக்கிறார். ஜன்னல் கண்ணாடியை அஜீத் உடைக்கிற மாதிரி படத்தில் ஒரு ஷாட். கல் எடுத்து அதை உடைத்துப் படமாக்கிவிடலாம் என்று சொன்னேன். ஆனால் அஜீத்தோ, 'வேண்டாம், நானே உடைத்து விடுகிறேன்'



• பேரரசு



• லட்சுமிகாந்தன்

என்று இறங்கி ஜாக்கிரதையாக உடைத்துக் காட்டினார். அவரிடம் உறுதியும் உழைப்பும், தன்னைத்தானே சுயபரிசோதனை செய்துகொள்ளும் ஞானமும் இருக்கிறது. அவர் ஒரு வெறியான மனிதர்'' என்றவர், ''அஜீத் எப்படி நடிக்கிறார் என்று ரஜினி இதுவரை மூன்று முறை பர்சனலாக என்னிடம் விசாரித்துவிட்டார்" என்றார்.

அஜீத்தின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கும் ஷாலினியிடம் 'கணவருக்கு எந்த வகையில் உதவுகிறீர்கள்?' என்றால், ''நான் எந்தவிதக் குறுக்கீடும் அவருக்குத் தருவதில்லை. அவர் ஒரு இண்டிபெண்டெண்ட் பர்சன். தன்னை மட்டுமே நம்பி வளர்ந்து வந்தவர். எனவே அவரை சுதந்திரமாகச் சிந்திக்க விடுகிறேன். அவர் மனைவியாக இல்லாமல், வெளியிலிருந்து ஒரு ஆளாக அவரைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், வில்பவர் அதிகமுள்ள மனிதர். அருகிலிருந்து பார்ப்பவள் என்ற முறையில், தீவிர முதுகுவலிப் பிரச்னையிலிருந்து போராடி மீண்டிருக்கிறார். இப்போது அவரிடம் அதீதமான அமைதியைப் பார்க்கிறேன். இந்த அமைதியின் அர்த்தம் எனக்குப் புரிகிறது! அவரது அமைதியில் நானும் பங்கேற்கிறேன்" என்றவர், "முன்பு எப்போதையும்விட போட்டிகள் மிகுந்த துறையாக சினிமா இருக்கிறது. எத்தனை பெரிய போட்டிக்கும் என் கணவரால் ஈடுகொடுக்க முடியும்'' என்றார் உறுதியாக.

• சினிமா அபிமானி

அபுசலீம் கைது... அதிர்ச்சியில் பாலிவுட்!



• சஞ்சய்தத்



• கோவிந்தா



• அசாருதீன்

கிட்டத்தட்ட ஒரு மாமாங்கமாய் நடந்துகொண்டிருந்த கண்ணாமூச்சி ஆட்டம் முடிவுக்கு வந்திருக்கிறது. மும்பை தொடர் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்ட அபுசலீம் தற்போது சி.பி.ஐயின் கைப் பிடியில். கூடவே அவரது காதலியான மோனிகா பேடியும் வலையில் சிக்கியிருக்கிறார். போர்ச்சுக்கல்லில் போலி பாஸ்போர்ட் விஷயத்தில் தில்லு முல்லு செய்து கம்பி எண்ணிக் கொண்டிருந்த இந்த ஜோடியை 'தூக்குத் தண்டனை தரமாட்டோம்' என்று வாக்குக் கொடுத்து இந்தியாவுக்கு மீட்டு வந்திருக்கிறது சி.பி.ஐ.

தொடர் குண்டுவெடிப்பு என்பதெல்லாம் இந்தியாவுக்கு பரிச்சயம் இல்லாத காலம். மார்ச் மாதத்தில், ஒரு மதிய நேரத்தில் அடுத்தடுத்து வெடித்த 13 குண்டுகளால் மும்பை அதிர்ந்தது. முந்நூறுக்கும் அதிகமானவர்கள் பலியானார்கள். கட்டடங்கள் தரைமட்டமாகி, ஏகப்பட்ட பொருட்சேதம். மும்பையை மட்டுமல்லாமல் இந்தியாவையே உலுக்கிப் போட்ட தொடர் குண்டு வெடிப்பு. திட்டம் போட்டுக் கொடுத்தது தாவூத் இப்ராஹிம் என்றால், அதற்குத் தேவையான ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் சப்ளை செய்தவன்தான் இந்த அபுசலீம்.

உத்தரப்பிரதேசத்தின் ஒரு குக்கிராமத்தில் பிறந்த அபுசலீம், பிழைப்புத் தேடி வந்தது டெல்லிக்கு. ரோடு ஆக்ஸிடெண்டில் உயிரிழந்த அப்பாவுக்குப் பின்னர், குடும்பத்தைக் காப்பாற்ற ஒரு மெக்கானிக் கடையை ஆரம்பித்த அபுசலீமால் ரொம்ப காலம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. வேறு வழியில்லாமல் டெல்லிக்கு ஓடி வந்து ஒரு சாதாரண டாக்ஸி டிரைவராகத்தான் தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்கினான். டில்லி வாழ்க்கை போரடிக்கவே, எண்பதுகளின்





• தாவூத் இப்ராஹிம்



• அபுசலீம்




• மோனிகாபேடி

ஆரம்பத்தில் மும்பைக்கு வந்து அந்தேரி பகுதியில் ஒரு டெலிபோன் பூத்தை ஆரம்பித்தான். பெயருக்குத்தான் அது டெலிபோன் பூத். ஆள் கடத்தல், அடியாட்கள் சப்ளை, போதை மருந்துக் கடத்தல் என சின்னச் சின்னக் குற்றங்களில் அபுசலீம் அப்போதே ஸ்பெஷலிஸ்ட்தான். அபுசலீமின் திறமை, தாவூத் இப்ராஹிமின் தம்பி அனீஸ்க்கு தெரியவரவே, கூடிய சீக்கிரமே தாவூத் கும்பலில் அபுசலீமும் ஒரு அங்கமாகி விட்டான். தாவூத் கும்பலுக்கு ஆயுதங்களைக் கொண்டுவந்து தருவது, தாவூத் பெயரைச் சொல்லி பணத்தைப் பிடுங்குவதுதான் அபுசலீமின் முழு நேர வேலை. மும்பையில் யாருடைய வளர்ச்சியாவது கண்ணை உறுத்தினால், முதலில் தாவூத் பாயிடமிருந்து மிரட்டல் போன் வரும். கூடவே தாவூத் கேட்கும் பணத்தை சம்பந்தப்பட்டவர் வீட்டிலிருந்து அள்ளிக்கொண்டு போவது அபுசலீம்தான். மறுத்தால் துப்பாக்கிதான் பேசும். பெரிய பெரிய பிஸினஸ்மேன், கட்டட காண்ட்ராக்டர், சினிமா தயாரிப்பாளர்கள் என தாவூத் கும்பல் லிஸ்ட் போட்டுக் கொடுத்தால், அபுசலீம் கலெக்ஷனைக் கச்சிதமாக முடித்துவிடுவான். தாவூத் சொல்லும் பணத்தைத் தட்டில் வைத்துக் கொடுப்பதும், கூப்பிட்ட இடத்திற்கெல்லாம் வந்து ஆடிப்பாடி பார்ட்டிகளில் கலந்து கொள்வதும் அப்போது பாலிவுட் ஆசாமிகளுக்கு சகஜம். அப்படிப் பழக்கமானவர்தான் மோனிகா பேடி. எண்பதுகளின் இறுதியில் துண்டு துக்கடா படங்களில் நடித்துவிட்டு வாய்ப்பில்லாமல் வீட்டில் இருந்தவரைத் திரும்பவும் பாலிவுட்டில் பரபரப்பான நடிகையாக்கியது அபுசலீம்தான். படப்பிடிப்புகளில் நடிகர்களை விட மோனிகா பேடிக்குத் தனி மரியாதை இருக்கும். அப்பொதெல்லாம் படத்தை இயக்கியது இயக்குனர் என்றால், படவுலகையே இயக்கிக் கொண்டிருந்தது தாவூத்தின் ஆட்கள்தான்.

வெறும் அடியாளாக இருந்த அபுசலீமை தட்டிக்கொடுத்து முன்னுக்குக் கொண்டு வந்தது தாவூத்தான். ஆயுத சப்ளை, போதைமருந்து கடத்தல், ஹவாலா, தீவிரவாத அமைப்புகளுக்குப் பணம் சப்ளை செய்வது என அண்டர் கிரவுண்ட் வேலைகளில் பேர் போனது தாவூத்தின் டி கம்பெனி. ஒரு மல்ட்டி நேஷனல் கம்பெனி போல பக்கா புரொபஷனாகச் செயல்பட்ட டி கம்பெனியின் செயல்பாடுகளை மும்பையில் முன்னின்று நடத்தியது அபுசலீம்தான். மும்பை தொடர்



• ஐஸ்வர்யா ராய்



• அமிதாப்

குண்டுவெடிப்புக்குப் பின்னர் தாவூத் இந்தியாவை விட்டு ஓடிப்போனாலும் அபுசலீம் மூலம் காரியங்களைக் கச்சிதமாக நடத்திக் கொண்டான். 1997-ல் நடுரோட்டில் டி-சீரிஸ் குல்ஷன்குமாரை சுட்டுத்தள்ளிய வழக்குதான் அபுசலீமை எல்லோரும் திரும்பிப் பார்க்க வைத்தது. பின்னர் ராஜீவ் ராய் என்னும் தயாரிப்பாளர் மீதான கொலை முயற்சி என அபுசலீமின் பெயர் பத்திரிகைகளில் அடிக்கடி அடிபட ஆரம்பித்தது. தனக்குப் போட்டியாக வளர்ந்து வந்த சோட்டா ஷகிலை தாவூத் ஆதரிக்கவே, 1998-ல் தாவூத் கும்பலிலிருந்து அபுசலீம் வெளியே வந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

தாவூத் கும்பலின் ஆதரவு இல்லாவிட்டாலும் அபுசலீமின் நடவடிக்கைகளில் எந்தக் குறைச்சலுமில்லை. அபுசலீமின் கவனமும் முழுவதுமாக சினிமா பக்கம் திரும்பியது. பல படங்களுக்கு ஃபைனான்ஸ் செய்வது, தயாரிப்பாளர்களையும் நடிகர்களையும் மிரட்டுவது என அபுசலீம் மும்பை படவுலகையே ஆட்டிப் படைத்தான். படங்கள் ஃப்ளாப் ஆனாலும் மோனிகா பேடியின் மார்க்கெட் ஸ்டெடியாக இருந்தது. அபுசலீமை கேட்காமல் 'ஸ்டார்ட் கேமரா ஆக்ஷன்' சொல்பவர்கள் மும்பையில் குறைந்து போனார்கள். மனிஷா கொய்ராலாவின் செகரட்டரி, ஒரு கட்டட காண்ட்ராக்டர் என பலரைச் சுட்டுத்தள்ளி 60 கிரிமினல் வழக்குகளில் தேடப்பட்டு வந்த அபுசலீமும் அவனுடைய காதலி மோனிகா பேடியும் இனி பத்திரமாக வெளிநாட்டில் செட்டிலாகி விடலாம் என்றுதான் தப்பியோடினார்கள். ஒரு பக்கம் சி.பி.ஐயும் இன்னொரு பக்கம் தாவூத் ஆட்களும் துரத்த போர்ச்சுக்கலில் தஞ்சமானது ஜோடி. விதி யாரை விட்டது? பாஸ்போர்ட் சம்பந்தமாக போர்ஜரி செய்த வழக்கில் அபுசலீமுக்கு நாலரை வருஷமும் மோனிகா பேடிக்கு இரண்டு வருஷமும் தண்டனை கொடுத்து போர்ச்சுக்கல் அரசு உள்ளே தள்ள, கடந்த மூன்று வருஷங்களாக லிஸ்பன் சிறையில் இருந்து வரும் அபுசலீமை போராடித் தான் இந்தியாவுக்கு மீட்டு வந்திருக்கிறார்கள்.

அபுசலீம் - மோனிகா பேடியின் கைது பாலிவுட் வட்டாரத்தில் பெரிய சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது. சஞ்சய்தத்துக்கு தானே நேரடியாக துப்பாக்கி சப்ளை செய்ததாக அபுசலீம் ஒப்புக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. போன மாதம்தான் மும்பை தாதாக்களுடன் நடிகரும் எம்.பியுமான கோவிந்தாவுக்கு இருந்த தொடர்பு சர்ச்சையைக் கிளப்பியது. தாதாக்களுடன் பார்ட்டிகளில் கலந்து கொள்வது அப்போதெல்லாம்

சாதாரணமாக நடக்கும் விஷயம்தான் எனபதைக் கோவிந்தாவும் ஒப்புக் கொண்டிருந்தார். நடுவே தனக்கு மும்பை தாதாக்களுடன் தொடர்பு இருப்பதாக ஐஸ்வர்யாராயை சல்மான்கான் மிரட்டியதாக டெலிபோன் உரையாடல்கள் வெளியே வந்து பாலிவுட்டை பரபரப்பாக்கியது. அபுசலீமோடு தொடர்பு வைத்திருந்தவர்களில் அமிதாப்பச்சன், ஐஸ்வர்யாராய் என பெரிய பெரிய பெயர்களெல்லாம் அடிபடுகின்றன. மும்பையில் மட்டுமல்லாமல் ஆந்திராவிலும் அபுசலீமின் ஆதிக்கம் இருந்ததாகத் தெரியவருகிறது. ஆந்திராவின் குர்னூல் மாவட்டத்தை தனது சொந்த ஊராக போலி பாஸ்போர்ட்டில் காட்டித்தான் மோனிகா பேடி போர்ச்சுக்கல்லில் மாட்டிக் கொண்டார். மோனிகாவுக்கு தெலுங்கு சினிமாவில் சான்ஸ் பெற்றுத் தரவும் அபுசலீம் உதவி செய்ததாகத் தெரிகிறது. சினிமா பிரபலங்கள் மட்டுமல்லாமல் அசாருதீன் போன்ற கிரிக்கெட் பிரபலங்களையும் அபுசலீமோடு தொடர்புபடுத்தி செய்திகள் வருகின்றன. எது எப்படியோ சி.பி.ஐ விசாரணை முடிந்து வெளிவரும் பட்டியலில் நிறைய அதிர்ச்சிகள் காத்திருக்கின்றன என்பது மட்டும் உண்மை.



- ஜெ.ராம்கி



வலைபாயுதே அட!

புகை :

சிகரெட்... எப்படியோ ஆரம்பிக்கும் பழக்கம், இறுதிவரை தொடர்ந்து வருகிறது. இல்லையெனில், இறுதியைச் சீக்கிரமாக அழைத்துக்கொண்டு வந்து விடுகிறது. புகை பிடிக்கும் பழக்கத்தை எப்படிக் கைவிடலாம், அதற்கான யோசனைகள், புகையினால் விளையும் தீங்குகள், புகை கர்ப்பத்தை எப்படிப் பாதிக்கும் என நட்புடன் எடுத்துச் சொல்லும் தளம் givingupsmoking.co.uk. 'தூங்குகின்ற நேரம் தவிர மற்ற நேரம் எல்லாம் புகை என்னைச் சுற்றிக் கசிந்துகொண்டே இருக்கும். புகை பிடிக்காமல் என்னால் இயங்கவே முடியாது என்றாகிவிட்ட சூழ்நிலை. ஆனால், நான் இப்போது புகைப்பதேயில்லை. எப்படி?' என புகையைக் கைவிட்ட பலர் எழுதிய கடிதங்கள், கண்டிப்பாக சிகரெட்டை எப்படியாவது கைவிட வேண்டும் என மனத்தின் ஓர் ஓரத்தில் எண்ணம் கொண்டவர்களுக்கு புத்துணர்வு, தைரியம் கொடுக்கும்.

சுடோகு :

சுடோகுதான் இப்போதைக்கு எல்லோரையும் ஆட்டி வைக்கிற நாட்டி கேம். சுடோகு போடுறேன்னு சொல்லிட்டு சோறு தண்ணியில்லாம அதுலயே சொக்கிப்போய், ஒண்ணு டு ஒன்பது எண்ணிக்கிட்டிருக்கறவங்க எண்ணிக்கையும் அதிகமாயிடுச்சு. அந்த வகை மக்களே உங்களுக்கு ஒரு நற்செய்தி... www.fingertime.com/sudoku.php-க்கு போனீங்கன்னா, அங்க ஆன்லைன்ல உங்களால எவ்வ்வ்வளவு முடியுமோ அவ்வளவு 'சுடோகு' விளையாடலாம். டௌன்லோட் பண்ணி நிதானமா விளையாடணும்னு நினைக்கறவங்க www.shareup.com/Sudoku-download-32083.htmlக்கு போய் சுடோகுவை கட்டுக்கோங்க.


எழுத்து வியாபாரிகள்!

வலைப்பதிவு :

எழுத்து வியாபாரிகள் - இந்த வார்த்தை ஏறக்குறைய இழிசொல்லாகவே பொருள் கொள்ளப்படுகிறது. சமீபத்தில் மனுஷ்யபுத்திரனின் பதிவில் ஒருவர், அவரைக் கற்பனைகளை, எண்ணங்களை விற்றுப் பிழைப்பவர் என்று குற்றம் சாட்டியுள்ளார். மனுஷ்யபுத்திரனுக்குத் தொழில் எழுத்து. அவருக்கும் வாழ்க்கை நடத்தப் பொருள் வேண்டுமே. இதே குற்றச்சாட்டு அத்தனை பிரபலங்கள் மீதும் வீசப்படுகின்றது. படித்த கல்வியைப் பயன்படுத்தி பொருள் ஈட்டி வாழ்க்கை நடத்துவதைப் போல தன் எண்ணங்களை எழுத்தில் கொண்டுவந்து, பணம் சம்பாதிக்கிறார்கள். வாசிப்பு என்பது ஒரு பசி. பசித்தவனுக்குச் சோறு போடுவதைப் போல, எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள். யாருக்கு எது தேவையோ அதை தேர்ந்தெடுத்துப் படித்துக் கொள்ளலாம். (nunippul.blogspot.com வலைப்பதிவிலிருந்து)

- வலைஞன்





பூலோக நரகம் பீஹார்!

போர்த் தாக்குதல்போல் திட்டமிட்டு ஜெஹனாபாத் சிறையைத் தாக்கியுள்ளனர் நக்ஸல்கள்!

இப்படியொரு தாக்குதல் நடக்கக்கூடும் என்று உளவுத்துறை செய்தி பீஹார் காவல் துறைக்குக் கிட்டியிருந்தும், இந்த நிகழ்வை அவர்கள் தடுக்கத் தவறிவிட்டனர்!

தேர்தல் பணிக்காக அனேகம் காவல்துறை ஊழியர்கள் களம் மாற்றப்பட்டதால் ஜெஹனாபாத்தில் போதுமான படை பலம் இல்லை. ஆகவே, தேர்தல் கமிஷனின் தலையீடுதான் இந்த அசம்பாவிதத்துக்குக் காரணம் என்று ஆளுனர் பூட்டாசிங் தமது பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டார்!

'சிறை நிர்வாகம் என்பதே நீதித் துறையின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. உளவுத்துறைச் செய்திகள் அத்துறையினருக்கும் எட்டியிருக்கும்... அவர்கள் ஏன் நடவடிக்கை எடுக்கத் தவறினர்?' என்று காவல்துறையின் ஒரு சாரார் மாஜிஸ்டிரேட் பேரில் பழியைப் போட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பழி சுமத்தும் படலங்களினூடே ஓரிரண்டு காவல்துறை அதிகாரிகள் பலிகடாக்களாக்கப்பட்டு சஸ்பென்ட் செய்யப்பட்டுள்ளனர்!


பீஹாரில் நிலவும் சட்ட-ஒழுங்கு பிரச்னை பற்றி நன்கு



கல்கி



2005 நவம்பர் 27
பார்த்திப கார்த்திகை 12
மலர் : 64
இதழ் : 17




அறிந்திருந்தும், அங்கே கட்சி அரசியல் நோக்கில் பூட்டாசிங் போன்ற ஒருவரை ஆளுனராக அமர்த்திய மத்திய காங்கிரஸ் அரசும், நடந்து முடிந்த சிறைச்சாலைத் தாக்குதல் சம்பவத்துக்குப் பொறுப்பேற்கத்தான் வேண்டும். தேர்தல் கமிஷனின் கெடுபிடி, கண்டிப்பு காரணமாக, பீஹார் மாநில மக்கள், நீண்ட காலத்துக்குப் பிறகு அச்சமின்றி, சுயமாகச் சிந்தித்து வோட்டுப் போடுவதாகத் தகவல்கள் வெளியாகிவரும் ஒரு சந்தர்ப்பத்தில் இந்தக் கலவரமூட்டும் சம்பவம் நிகழ்ந்திருப்பது பெரிய சோகம்.

வேறு எந்த மாநிலத்திலும் அல்லாத வகையில், மிகச் சிறு மாநிலமான பீஹாரில் ஆறு நிலைகளில் தேர்தல் நடக்கிறது. அதுவும் இரண்டு மாத காலத்துக்கு நீடிக்கிறது. இந்த மாநிலத்தில் பாதுகாப்புடன் தேர்தல் நடத்துவது எப்பேர்ப்பட்ட பிரம்மப்பிரயத்தனம் என்பதையே இது உணர்த்துகிறது. பீஹார் ஒரு பிரச்னை மாநிலம் என்ற பிரகடனத்துக்கு இது ஒன்றே போதும்.

பீஹாரைப் பீடித்துள்ள ஏராள பிரச்னைகளைத் தீர்க்கவோ, குறைக்கவோ எந்த அரசியல்வாதியும் வருடக்கணக்காக ஒரு துரும்பைக்கூட அசைக்கவில்லை! எனவே இங்கே 'மாவோ' இயக்கம் போன்றதொரு நக்ஸல் இயக்கம் வளர்ந்து சதா வாலாட்டிக் கொண்டிருப்பது ஆச்சர்யமில்லை. முக்கிய காரணம், அடுத்தடுத்து வந்த ஆட்சியாளர்கள் நிலப்பிரபுக்களிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு நிலச் சீர்திருத்தமே செய்யாமல் இருந்து வந்திருப்பதுதான்.

ஏழைமை, கல்வியறிவின்மை, வேலை வாய்ப்பின்மை - இவற்றின் விளைவாக முளைக்கும் வன்முறை இயக்கங்கள் என்ற சங்கிலித் தொடரின் ஒவ்வொரு கண்ணிலும் அரசியல்வாதிகளுக்கு லாபப் பங்கு இருக்கிறது!

எளிய மக்கள் அனுபவிக்கும் கொடுமைகளைக் கண்டு சகியாமல் உருவான நக்ஸல் இயக்கங்களை எதிர்கொள்ள நிலப்பிரபுக்களின் ரண்வீர் சேனா அமைப்பு தோன்றி வளர, இதே அரசியல்வாதிகள், அவ்வமைப்பினருக்குச் சுயநல நோக்கில் ஆதரவு தந்துள்ளார்கள்.



சேனாவின் கொடூரங்கள் ஒருபுறம், மாவோ அமைப்பின் வன்முறை மறுபுறம். இரண்டுக்கும் இடையே சிக்கி பீஹாரி மக்கள் மடிகிறார்கள்.

இவை போதாதென்று, மருந்துக்கும் பொறுப்புணர்வற்ற லல்லுபிரசாத் யாதவ் போன்ற முதல்வர் ; மலைமலையாக அவர் புரிந்த ஊழல், வழக்கு தொடரப்பெற்ற நிலையில், தமது மனைவியையே முதல்வராக்கிய அவருடைய மூர்க்கப் பிடிவாதம்... என பீஹார் மக்களின் பிரச்னைகளும் துயரங்களும் மலைமலையாகத்தான் அழுத்துகின்றன. இந்த பூலோக நரகத்தில் வாழ இயலாமல் கூட்டம் கூட்டமாக வெளியேறி, பிற மாநிலங்களில் அரை வயிற்றுச் சோற்றுக்காகத் தங்களை அடிமைப்படுத்திக் கொள்கின்றனர் மக்கள்.

பீஹாரின் துயரங்களைப் போக்கி அம்மாநிலத்தை முன்னேற்றத் தடையாக இருந்து வந்திருப்பது அரசியல்வாதிகளின் சுயநலமே. ஏழைகளை ஏழைகளாகவே வைத்திருந்து தேர்தல் காலத்தில் பணத்தால் அவர்களை விலைக்கு வாங்குவது சௌகரியமாயிருந் திருக்கிறது.

அறியாமையைப் போக்கி அறிவொளி ஊட்டினால் பீஹாரிகள் சிந்திக்க ஆரம்பித்து விடுவார்கள். சிந்தித்து வோட்டுப் போட்டால் ஊழல் அரசியல்வாதிகள் தங்கள் இடத்தை இழந்துவிடுவார்கள்... ஆகவே அவர்களை அறியாமையிலேயே அடைகாத்து மகிழ்ந்துள்ளனர் அடுத்தடுத்து வந்த அரசியல்வாதிகள்!

சுதந்திரப் போராட்டத்தில் பீஹாரின் பங்கு மகத்தானது. அந்தத் தலைமுறையை அடுத்து வந்த தலைவர்கள், பீஹாரை அடகு வைத்துத் தங்கள் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டார்கள்.

இந்த நிலை மாறி, மக்கள் மேம்பாட்டுக்கு அனைவரும் சேர்ந்து பாடுபடத் தீர்மானித்தாலே யொழிய, இன்று ஜெஹனாபாத் வீழ்ச்சி அடைந்ததுபோல, நாளை பீஹாரே வீழ்ச்சியுறும்.

ஸார்க் மாநாட்டின் வெற்றிக்காகப் படாதபாடு படும் பிரதமர், முதலில் பீஹாரைக் காப்பாற்றுவதற்கு ஓர் அரசியல் மாநாடு நடத்தட்டும்! ●

எங்கள் எம்.எஸ்.

சங்கீத சாகரம்!

பள்ளி, கல்லூரியில் படித்த காலத்திலேயே எம்.எஸ். அவர்களின் 'காற்றினிலே வரும் கீதம்' பாடலைக் கேட்டு பலமுறை நெக்குருகிப் புத்துணர்ச்சி கொள்வது என் வழக்கமாயிருந்திருக்கிறது. குடியரசுத் தலைவராக நான் பொறுப்பேற்பதற்கு ஏறக்குறைய நாலரை ஆண்டுகளுக்கு முன்னதாக, எனக்கும் அம்மாவுக்கும் பாரத ரத்னா விருது வழங்கினார்கள். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது... அந்நாள் 1998-ம் ஆண்டு, மார்ச் முதல் தேதி. விருது பெற வந்த எங்கள் இருவருக்கும் அருகருகே நாற்காலியிட்டு உட்கார வைத்திருந்தார்கள்.

நான் குனிந்து அம்மாவைப் பார்த்து 'வணக்கம்' சொன்னேன். அம்மாவோ, என்னிடம் சரளமாகப் பேச ஆரம்பித்தார்கள். எத்தனையோ ஆண்டுகளாக வானொலியிலும் ஒலிநாடாவிலும் நான் மெய்மறந்து கேட்ட அந்தக் குரல், என்னிடத்தில் நிஜத்திலே பேசியது. நானும் அவர்களது பரம ரசிகரில் ஒருவன் என்றேன். அம்மா இயல்பாக 'உங்களுக்கும் வீணை வாசிக்கத் தெரியுமாமே?' என்று கேட்டார்கள். நான் 'ஏதோ கொஞ்சம் தெரியும்' என்று என்னுடைய வீணை வாசிப்பு விவரங்களைச் சொன்னேன்.



• அன்றைய குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் கையால் பாரத ரத்னா விருது...

பிறகு அம்மாவிடம் 'அம்மா, நீங்கள் சங்கீத சாகரம். உங்களுக்கு மிகவும் பிடித்த ராகமும் கீர்த்தனையும் என்ன?' என்று வினயமாகக் கேட்டேன். அதற்கு 'எவ்வளவோ இருக்கிறது. எனினும் ஸ்ரீராகத்தில் 'எந்தரோ மகானுபாவுலு' என்ற தியாகராஜ கீர்த்தனை ரொம்பப் பிடிக்கும்' என்றார்கள் அம்மா. எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஏனெனில், எனக்கும் மிகவும்



• விருது பெற்ற நாளில் என்னுடன் இசைப் பேரரசி...

பிடித்த ராகமும் கீர்த்தனையும் அது தான். என் உள்ளத்திலே சிலிர்ப்பை ஏற்படுத்திய அனுபவம் அது.

நான் குடியரசுத் தலைவராக 2002ல் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, அந்த ஆண்டு டிசம்பர் 14-ம் தேதி மெட்ராஸ் மியூசிக் அகடமி பவளவிழாவின்போது, டி.டி.வாசு அவர்கள் ஏற்பாடு செய்திருந்த ஒரு விழாவில் கலந்து கொள்வதற்காக சென்னைக்கு வந்தேன். அந்த விழாவில் அம்மாவும் பங்கேற்பதாகவும் அவருக்கும் நானொரு விருது கொடுப்பதாகவும் நிகழ்ச்சி நிரலில் இருந்தது. ஆனால் ஆத்மநாதன் அவர்கள், 'அம்மாவின் உடல்நிலை சரியாக இல்லாததால் அவர்களால் சுத்தமாகப் பேச இயலவில்லை. எனவே அவர்கள் விழாவில் கலந்துகொள்வது சந்தேகம் தான்' என்று முன்கூட்டியே சொல்லியிருந்தார். எனது வேண்டுகோளின் பேரில், எமது அலுவலகத்தில் இருந்து அம்மாவின் உடல்நிலை குறித்துத் தொடர்ந்து விசாரித்து எனக்குத் தகவல் தெரியப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

சென்னையில் விழா மேடையில் அம்மா இல்லை. எனக்குத் திடீரென்று ஒரு சிந்தனை. 'நாமே நேரில் போய் ஒரு முறை அம்மாவைப் பார்த்து, அவரிடம் அவரது விருதைக் கொடுத்துவிட்டு வந்தால் என்ன?' என்று தோன்றியது. எனது பாதுகாப்பு அதிகாரிகளும் உதவியாளர்களும் காலம், நேரம், பாதுகாப்பு என்று பல கருத்துக்களை முன் வைத்தார்கள். ஆனால் நான் புறப்பட்டுவிட்டேன். நேரே கோட்டூர்புரம் போனேன். என்னைக் கண்டதும் அம்மாவின் முகத்திலே மலர்ச்சி. படுக்கையில் இருந்து எழுந்து உட்கார்ந்தவர், அடடா, அந்த தெய்வீகக் குரலில் என்னிடம் இயல்பாகச் சரளமாகப் பேசினார்கள்... பேசினார்கள்... பேசிக்கொண்டே இருந்தார்கள். கிட்டத்தட்ட இருபத்தைந்து நிமிடம் அம்மாவிடம் பேசிவிட்டுப் புறப்பட்டேன். என் நெஞ்சமெல்லாம் இனம் புரியாத பரவசம்; அளவில்லாத மகிழ்ச்சி. அந்த சென்னை விஜயத்திலேயே அம்மாவைப்



ஆ.ப.ஜெ.அப்துல் கலாம்



* அன்றைய ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் மற்றும் பிரதமர் குஜ்ராலுடன்...

பார்த்துப் பேசியதுதான் க்ளைமாக்ஸ் என்று எனக்குத் தோன்றிற்று.

சென்ற வருடம் டிசம்பர் 12-ம் தேதி காலையில் நான் பேப்பர் படித்துக் கொண்டிருந்தேன். எம்.எஸ். அம்மாவின் குரல் டேப்ரெக்கார்டரில் தேனாகப் பாய்ந்து கொண்டிருந்த போது, திடீரென்று போன் அலறியது. என்னவோ என் நெஞ்சம் சற்றே துணுக்குற்றது. போனை எடுக்க, மறுமுனையிலிருந்து இறுக்கமான அந்தத் துயரச் செய்தி. என் நெஞ்சம் குமுறிற்று.

நான் உடனே சென்னை புறப்பட்டேன். விமானத்தில் வரும்போது என் நெஞ்சில் தோன்றியதை 'யாழிசையில் பிறந்த இறையிசை வானுலகிலும் இசையாய் இருப்பாய்' என்று தலைப்பிட்டு எழுதி வைத்தேன். அதை இப்போது அனைவருடனும் பகிர்ந்து கொள்கிறேன்...

யாழிசையில் பிறந்த இறையிசை வானுலகிலும் இன்னிசையாய் இருப்பாய்!!

யாழிசையில் பிறந்த ஏழிசைக் கீதம் நீ
உன்னிசைக் கொடுத்ததோ அமைதியும் இனிமையும்
இசைச் செல்வத்தோடு பொருட் செல்வத்தையும்
எல்லோருக்கும் அள்ளி அள்ளிக் கொடுத்தாய்
மானிடக்குரலின் மகத்துவத்தை இறைவனும் வியந்திட வாய்ப்புமளித்தாய்.

ஆயிரமாயிரம் மானிடரெல்லாம் உன் காவியக் கருணையில் நனைந்து மகிழ்ந்தோம்
செவியில் செல்வம், மனதில் மகிழ்ச்சி, நெஞ்சில் நெகிழ்ச்சி அள்ளிவழங்கிய
உன் சங்கீதக்குரலின் இனியநாதத்தில் கொழித்து மகிழ்ந்தது எங்கள் உள்ளம்.
வசந்த பருவமாய், யாழிசைக் கீதமாய் எண்பது ஆண்டாய் இதயங்கவர்ந்த
ஏழிசைநாதம் நீ நிறைவுற்றாலும், எம் நெஞ்சமெல்லாமும் நிறைந்தாய்.

மத்தியமாவதியில் மாலைகள் சூடிய மங்கையர்த் திலகம் நீ
ஸ்ரீராகத்தில் சிறப்புகள் செய்து பக்திகீதத்தில் சாதனைபடைத்த பாரதரத்னம் நீ
தான்சேன் கானத்தை நாங்கள் உணர்ந்திட காலந்தந்திட்ட மாபெரும் கொடைநீ
அன்னமாச்சாரியார், புரந்தரதாசர் அற்புதம் படைத்திட்ட ஏழிசைமூவர் - மற்றும்
உள்ளங்கவர்ந்த தமிழிசையெல்லாம் உன்குரலாலே உயிர்பெற்று மலர

வாரிவழங்கிய வள்ளலாறுபோல காலக்கடலில் நீ கலந்துவிட்டாலும்
நீ போற்றி வளர்த்த இசைப்பயிர் எம் உள்ளம், உடல், உதிரத்தில் கலந்து
காலங்காலமாய் உயிர்பெற்று வளம்பெற்று உலகத்தில் வாழும்.
இசைக்கு இசைகொடுத்த நீ இவ்வுலகைநீங்கி இறையுலகு ஏகினாலும்
கோடிகோடி உள்ளத்தில் உணர்வாய் வாழ்ந்தநீ வானுலகிலும் இசையாய்
இருப்பாய். ●



வாசகர்களின் எண்ணிக்கை
அதிகரித்த
ஒரே தமிழ் நாளிதழ்
தினமணி
செய்தியில் முழுமை; சொல்வதில் புதுமை!
அதிக வாசகர்கள்
படித்த
இணைப்புகள்
இளைஞர்மணி,
வெள்ளிமணி
Source: NRS 2005



விஜயகாந்த் பேசுகிறேன்! 5

என்னோட குறும்புத்தனம், சேட்டையெல்லாம் பார்த்துட்டு அப்பா அதிரடி முடிவெடுத்தார்னு சொன்னேன்... என்ன தெரியுமா? வேறொண்ணுமில்ல, ஆகாத அதிகாரிக்கு மாற்றல் கொடுக்குற அமைச்சர் மாதிரி, 'நீ மதுரைல இருந்தா உருப்பட மாட்டே'ங்கற அர்ச்சனையோடு, என் கூட அண்ணனையும் சேர்த்து அப்பா தேவகோட்டைக்கு பேக்-அப் பண்ணிட்டார். நான் அந்த மதுரை எம்.சி. ஸ்கூல்ல ஒரே வருஷம்தான் படிச்சேன். காரணம், ரோஸ்ரி சர்ச் கான்வென்ட் விட்டு இங்க வந்தப்புறம் எனக்கு நண்பர்கள் இல்லாமல் தனியாயிருக்கிற மாதிரி ஃபீலிங் இருந்துச்சு. அதனால பழைய ஸ்கூல் நண்பர்கள் அங்கு வந்தால் ஸ்கூலை 'கட்' அடிச்சுட்டுக் கிளம்பிடுவேன்.

ஏமாறாதே...

எம்.சி. ஸ்கூலோட பின்பக்கமா ஒரு வழி இருக்கும். 'யூரின் போறேன்'னு பொய் சொல்லிட்டு எஸ்கேப் ஆயிடுவேன். இத வெளியே சொல்லக்கூடாதுன்னு வாட்ச்மேனுக்கு வாரத்துக்கு 'நாலணா' மாமூல் கொடுத்து சரிபண்ணி வச்சிருந்தேன். நண்பர்களோடு ஊர் சுற்றல், சினிமான்னு போயிடுவேன். மறக்காமல் சாயங்காலம் படிச்சுட்டு நல்ல பையனா நேரா வர்ர மாதிரி வீட்டுக்குப் போவேன். இதெல்லாம் பார்த்து வெறுத்துப் போய்த்தான் அப்பா என்னை தேவகோட்டைக்கு தூக்கியடிச்சார்.

பலபேர் சின்ன வயசுலயே சாதனைகள் பல செஞ்சிருக்காங்க. அலெக்சாண்டர் கிரகாம்பெல் டெலிபோனைக் கண்டுபிடிச்சப்ப அவருக்கு வயசு இருபத்தொன்பதாம்... ஆங்கிலச் சுருக்கெழுத்தைக் கண்டுபிடிச்ச ஐசக் பிட்மன் அதைப் பத்திய 'ஸ்டெனோகிராஃபிக் சவுண்டு'ங்கற புத்தகத்தை வெளியிட்டப்போ அவரோட வயசு இருபத்து நாலாம்...

பிரபல சினிமா கார்ட்டூனிஸ்ட் வால்ட் டிஸ்னி, தன்னோட முதல் கார்ட்டூன் சினிமாவை திரையிட்டபோது அவருக்கு வயசு இருபத்திரண்டாம்...

முதல் விண்வெளி வீரர் யூரிகாகரின் தன்னோட சாதனையைச் செய்தப்போ அவருக்கு வயசு இருபத்தேழாம்...

பிரபல பரிணாமத் தத்துவத்தின் தந்தையான சார்லஸ் டார்வின் அந்த ஆராய்ச்சிக்காக THE BEAGI என்ற கப்பலில் கடற் பயணம் மேற்கொண்டபோது அவரோட வயசு இருபத்திரண்டாம்...

இந்த மாதிரி சின்ன வயசுல சாதனை செஞ்சவங்களப் பத்திப் படிக்கும் போதும், கேள்விப்படும்போதும் அந்த வயசுல நான் என்ன செய்தேன்னு எனக்குள்ளே யோசிப்பேன்.



பள்ளிக்கூடத்தை கட் அடித்து விட்டு ஊர் சுற்றியிருந்தாலும், சொந்தக் கால்ல நின்னு நாலு காசு சம்பாதிச்சு என் தேவைகளை நானே நிறைவேத்திக்கிற அளவுக்குப் பக்குவப்பட்டிருந்தேன். விளையாட்டுப் பிள்ளையா நண்பர்களோட ஊர் சுத்திட்டிருந்தவன், அப்பா கொடுத்த பொறுப்பை ஏத்துக்கிட்டு ரைஸ்மில்லை

ஏமாற்றாதே...!

"நானும் திருடன்தான்... வெறும் நாலணா திருடன்!"

கவனிச்சுக்கிட்டதும் ஒரு சின்ன சாதனை மாதிரி தானே...?

நான் செய்யாத சாதனையை என் பிள்ளைங்க செய்வாங்க. அதனால தான் அவங்க படிப்பு விஷயத்துலயும், நல்ல பிள்ளைகளா அவங்கள வளர்க்கிறதுலயும் நானும் என் மனைவியும் ரொம்ப கவனமாயிருக்கோம்.

இப்ப மட்டுமில்ல, சின்ன வயசுல இருந்தே என்னோட பழக்க வழக்கமெல்லாம் ஏழை எளிய மக்களோடதான். ஸ்கூல்ல வசதியான

"சிலிர்த்துப் போனேன்!"

புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் அவர்களை நினைக்கும்போதெல்லாம் மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் அடைகிறேன். திரையில் ஒரு சாதாரணப் பாத்திரத்தில் அறிமுகமாகி, தன் அழுத்தமான ஆற்றலால் கதாநாயகனாகி, இன்று ஒரு வலிமையுள்ள கலைஞராக வளர்ந்து நிற்கிறார்.

தன் விடாமுயற்சியாலும் அயராத உழைப்பாலும் சிகரம் தொட்ட சீரிய கலைஞர் இவர். நான் பிறந்த மதுரை மண்ணில் பிறந்தவர் என்பதால், இவர் மீது எனக்கொரு பாசமான நேசமுண்டு. தான் நடிக்கும் பாத்திரங்களில் பெரும்பாலும் இவர் தமிழ் உணர்வுள்ளவராகவும், இனப்பற்றாளராகவும், போர்க்குணம் மிக்கவராகவும் தன்னை அடையாளங்காட்டி வருவது என்னைக் கவர்ந்த இன்னொரு அம்சமாகும்.

அன்பு நண்பர் இராம. நாராயணன் இயக்கத்தில்



• நானும் என் நண்பர்களும்...

பையன்ங்கற முத்திரை என் மேல விழுந்தது. அங்கேயும் நான் ஏழை மாணவர்களின் நண்பனாக இருந்தேன். யாராவது பென்சில், பேனா, நோட்புக் கேட்டால் கொடுத்து விடுவேன். எங்க வீட்டுக்குப் பக்கத்துல ஒரு முஸ்லிம் பெரியவர் 'இன்ஸானியத்'துங்கற ஸ்டேஷனரி கடை வெச்சிருந்தார். நாங்க யார் ஸ்டேஷனரி பொருட்கள் கேட்டாலும் கொடுத்துடச் சொல்லி எங்க அப்பா சொல்லி வைத்திருந்ததால கொடுத்துடுவார்; கணக்கில் வைத்துக் கொள்வார்.

அதே போல விஜயலட்சுமிங்கற ஓட்டல் இருக்கு. அவங்க எங்க ரைஸ் மில்ல அரிசி வாங்குவாங்க. அதனால அந்த ஹோட்டல்ல நாங்க எப்போ வேணும்னாலும் போய்ச் சாப்பிடலாம். பசங்க எது கேட்டாலும் கொடுங்க'ன்னு அப்பா சொல்லி இருந்ததால், நான் டிபன் சாப்பிடப் போவேன். அங்கே சர்க்கரை தோசை ரொம்ப டேஸ்ட்டா



• படம் : ஸ்ரீஹரி

'சிவப்பு மல்லி' படத்தில் நான் எழுதிய 'எரிமலை எப்படிப் பொறுக்கும்' பாடலை இவர் உச்சரித்து நடித்த உக்ரமும் உணர்ச்சியும் இன்னும் என் கண்களை விட்டு அகலவில்லை. நரம்புகள் புடைக்க கண்களில் சிவப்பேற்றி, என் வார்த்தைக்கு வலிமை கொடுத்து நடித்த உணர்ச்சி கண்டு சிலிர்த்துப் போனேன்.

விஜயகாந்த் பற்றி வி.ஐ.பி!

நல்ல கலைஞராக இருப்பவர்கள் நல்ல நிர்வாகியாக இருப்பதில்லை. இவர் அதிலும் விதிவிலக்கு. இன்று நடிகர் சங்கத் தலைவராகி பல்வேறு சிக்கல்களைக் களைபவராகவும் தடைகளைத் தகர்ப்பவராகவும் எதிர்காலத் திரையுலகின் வளத்துக்கு உரமிடுபவராகவும் திகழ்வது இவரது நிர்வாகத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

எளியவர், வலியவர், பெரியவர், சிறியவர் என்ற பேதமின்றி எல்லோரையும் மதித்துப் போற்றும் இவரது மாண்பு போற்றுதலுக்குரியது.

- கவிப்பேரரசு வைரமுத்து

இருக்கும். அதுக்காக நானும் இப்ராஹிமும் அடிக்கடி போயிடுவோம்.

'பொய் சொல்லக்கூடாது, யாரையும் ஏமாத்தக் கூடாது, ஏமாறக் கூடாது. செலவுக்குக் காசு வேணும்னா எங்கிட்டே கேளுங்க. ஸ்கூல் புத்தகம், பேனா, பென்சில் வேணுமா இன்ஸானியத் ஸ்டேஷனரியில் வாங்கிக்கோங்க. பசிக்குதா, விஜயலட்சுமி ஹோட்டல்ல சாப்பிட்டுக்கோங்க' இப்படி நிறைய சலுகைகளை எங்கப்பா வழங்கியிருந்தார்.

ஸ்கூலுக்குப் போகும் போது அப்பா பாக்கெட் மணி கொடுப்பார். ஆனாலும் பத்தாது. ஸ்கூல் பக்கத்துல இருக்கிற கடையில தேன் மிட்டாய், கமர்கட், தேங்காய் பர்பி, உப்பு மாங்கா, ஐஸ்க்ரீம், அப்புறம் மதுரையில ஒரு ஃபேமஸான ஐட்டம், 'ஜுகர் தண்டா'. கடல் பாசியில ஐஸ் சர்பத் போட்டுச் செய்வாங்க. இதெல்லாம் நண்பர்களுடன் சேர்ந்து சாப்பிட காசு பத்துமா...?

அப்புறமென்ன, அப்பாவின் சட்டை பாக்கெட்டே துணை. ராத்திரியில் அப்பாவுக்குத் தெரியாமல் தொங்கும் சட்டையில கை வச்சுடுவேன். அதுக்காக பெரிய திருடன்னு நெனைச்சுடாதீங்க. வெறும் நாலணா திருடன்தான் நான்.

அன்னைக்கு நாலணா இருந்தாலே மேற்கண்ட பொருட்களைத் தாராளமாகச் சாப்பிடலாம்.



• அறிவுரை தந்த அப்பா...

இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்டத்தான் என்னையும் அண்ணனையும் தேவகோட்டைக்கு அனுப்பினார் அப்பா... ஆனால், மறுநாளே நானும் அண்ணனும் மதுரைக்கு வந்துவிட, அப்பாவுக்கு கோபம் வந்தது பாருங்கள்... பெரிய ரணகளமாய்ப் போச்சு...

(சொல்றேன்)

படங்கள் : சஜோ

"வெகுஜனப் பத்திரிகைகளில்

நவீன எழுத்தாளர் ஜெயமோகனும் சினிமா பக்கம் திரும்பியிருக்கிறார். லோகிததாஸின் 'கஸ்தூரிமான்' படத்துக்கு வசனம் எழுதிய கையோடு, பாலாவின் 'நான் கடவுள்' பட வேலைகளில் இருந்தவரைச் சந்தித்தோம்...



'கஸ்தூரிமான்' படத்துக்கு வசனம் எழுதிய அனுபவம் எப்படியிருந்தது? உங்களுக்குப் போதிய சுதந்திரம் அளிக்கப்பட்டதா?

"படத்தோட டைரக்டர் லோகிததாஸ் என்னோட நீண்டகால நண்பர். ஒரிஜினல் மலையாள கஸ்தூரி மானுக்கு வசனம் எழுதினது லோகிததாஸ்தான். அவரே எழுத்தாளர்ங்கறதால ஒரு படத்துக்கு எழுத்தாளரோட பங்கு என்னன்னு அவருக்கு நல்லாவே தெரிஞ்சிருந்தது. தமிழ்ல பண்ணும்போது, மலையாள வாசனை இல்லாம முழுக்க முழுக்க தமிழ்ச் சூழலுக்கு ஏத்த மாதிரி மாத்தினோம்... இந்தப் படத்துல என்னோட ரோல் வசனம் எழுதறது மட்டும்தான். இருந்தாலும் பட வேலைகள்ல முழுக்க முழுக்க நான் கூடவே இருந்தேன். மொத்தத்தில் ரொம்ப வித்தியாசமான அனுபவம்."

சினிமாவுக்கு வசனம் எழுதுவது நாவல் மாதிரி இல்லை. எல்லோருக்கும் புரியவேண்டியது அவசியம். உங்களால் எப்படி இந்த எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ய முடிந்தது?

"நீங்க என்ன கேட்கறீங்கன்னு புரியுது. ஒரு சீரியஸ் எழுத்தாளர் எழுதின வசனமாச்சே... பக்கம் பக்கமா... பத்தி பத்தியா... ரொம்ப ஹெவியா எழுதியிருப்பாரோன்னுதான் நிறையப் பேர் சந்தேகப்படறாங்க. ஆனா கதைக்குத் தேவையான வசனங்களை மட்டும் எழுதறதுதான் ஒரு எழுத்தாளரோட வேலை. அதைத்தான் நானும் செஞ்சிருக்கேன். தேவைக்கு அதிகமா எந்தவொரு கேரக்டரும் ஒரு வார்த்தை கூட இந்தப் படத்துல பேசியிருக்கமாட்டாங்க. உதாரணத்துக்குச் சொல்லணும்னா, மீரா ஜாஸ்மினை அவங்க காதலரோட வீட்லருந்து விரட்டிடுவாங்க. தன்னோட வீட்டுக்கு வரும்போது அவங்க அக்கா, மீரா ஜாஸ்மினைப் பார்த்து பேசற டயலாக் என்ன தெரியுமா? 'கறிவேப்பிலை ஆக்கிட்டாங்க இல்லை?' அவ்வளவுதான். இந்த இடத்துக்கு எந்த மாதிரியான

இலக்கியம் படைக்க முடியாது!"

உணர்ச்சி கொடுக்கணுமோ அதைக் கொடுத்தாச்சு. தட்ஸ் ஆல்."

கதை எழுதுவதற்கும் சினிமாவில் வசனம் எழுதுவதற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்குமே... எப்படி சமாளித்தீர்கள்?

"எழுத்தாளர் என்ன நினைக்கிறாரோ, அதுதான் கதை. அதன் ஒவ்வொரு வரியிலும் ஒவ்வொரு வார்த்தையிலும் அந்த எழுத்தாளர் இருப்பார். தனக்கு என்ன பிடிக்குமோ அதை மட்டும்தான் அவர் எழுதுவார். ஆனா திரைப்படம் வேற. இது ஒரு கூட்டுமுயற்சி. அதிலே வசனம் எழுதறவர் போட்டோகிராஃபர் மாதிரி இருக்கணும். தன்னோட வேலையைத் திறமையா செய்யணும். அதே சமயம் படத்துல அவர் இருக்கிறது தெரியக் கூடாது. படத்துல நாம மட்டும் தனியா தெரியணும்னு ஒரு எழுத்தாளர் நினைச்சா அவரால சினிமாவுல வேலை செய்ய முடியாது."

அப்படியென்றால் விட்டுக் கொடுத்துப் போகவேண்டும் என்று சொல்கிறீர்களா?

"கட்டாயம். நாம எழுதற ஒவ்வொரு டயலாக்கும் படத்துல அப்படியே வரணும்னு எதிர்பார்க்கக் கூடாது. அப்படி பிடிவாதமா இருக்கவும் முடியாது. சினி ஃபீல்டுல டீ எடுத்துட்டு வர்ற பையன்கூட போகிறபோக்கில் 'இந்த டயலாக்கை மாத்தி எழுதுங்க சார்'னு சொல்லிடுவான். அதுக்காக நாம எழுதற எல்லாத்தையும் யார் சொன்னாலும் மாத்தணும்னு சொல்ல வரல. கதைக்குத் தகுந்த மாதிரி மாத்தச் சொன்னாங்கன்னா மாத்தித்தான் ஆகணும். இதை நீங்க காம்ப்ரமைஸ்னு சொல்வீங்க. என்னைக் கேட்டா 'கதையோடு பொருந்துதல்'னு சொல்லுவேன். ஒரு எழுத்தாளர் திரைப்படங்கள்ல வேலை செய்யணும்னா கதையோடு அவன் பொருந்திப் போகணும்."

ஒரு எழுத்தாளர் சினிமாவுக்குள் நுழைந்து விட்டால் பிறகு அவரை இலக்கிய உலகம் அங்கீகரிப்பதில்லையே... இதை நீங்கள் எப்படி எடுத்துக் கொள்கிறீர்கள்?

"சினிமா ஒரு முக்கியமான ஊடகம். அதை எழுத்தாளர்கள் ஒதுக்க வேண்டிய அவசியம் கிடையாது. சினிமாவுக்கு வசனம் எழுதினா அங்கீகாரம் கிடைக்காது, எழுத்து தரம் குறைஞ்சிடும்னு யார் சொன்னது? 'கஸ்தூரிமான்' படத்துக்கு வசனம் எழுதிக்கிட்டிருந்த அதே சமயம் என்னோட முக்கிய நாவல் 'கொற்



நவை'யையும் எழுதி முடிச்சிருக்கேன். இலக்கியம் மட்டும் படைச்சுக்கிட்டு இருந்தா வருமானம் வந்துடுமா? தொலைபேசித் துறையிலோ அல்லது வேறு துறையிலோ வேலை செஞ்சுக்கிட்டே கதை எழுதறாங்க. அதே மாதிரிதான் இதுவும். இன்னும் சொல்லப்போனா, சினிமாவில இருந்தா நிறைய நேரம் கிடைக்கும். நிறைய எழுத முடியும்."

இன்றைய இலக்கியச் சூழல் எப்படியிருக்கிறது?

"ஆரோக்கியமா இருக்குது. ப.சிங்காரம்னு ஒரு எழுத்தாளர். அவரு 'கடலிலே ஒரு தோணி'ன்ற நாவலை எழுதினப்போ, ஆறு வருஷம் அதை யாருமே பப்ளிஷ் செய்யலை. ஒரு வழியா நாவல் வெளிவந்ததுக்கு அப்புறமும் கிட்டத்தட்ட பத்து வருஷத்துக்கு அந்த நாவலோட விமர்சனமோ, மதிப்புரையோ எந்தப் பத்திரிகையிலும் வரலை. ஆனா இன்னிக்கு நிறையப் பேர் எழுத்தாளர்களைக் கவனிக்கிறாங்க. இது மகிழ்ச்சியான விஷயம்தான். குறிப்பிட்ட ஆளுங்க மட்டும்தான் எழுதணும்ங்கற நிலை மாறியிருக்கு. புதுசு புதுசா நிறைய கதைக்களன் கிடைச்சிருக்கு."

சிறுபத்திரிகை எழுத்தாளர்கள் என்று அறியப்பட்டவர்கள்கூட இன்று வெகுஜன இதழ்களில் பரவலாக எழுதத் தொடங்கி விட்டார்களே...

"வெகுஜனப் பத்திரிகைகள் இலக்கியங்களுக்கு இடம் கொடுப்பதில்லை!"



"வெகுஜனப் பத்திரிகைகள் இலக்கியவாதிகளுக்கு இடம் கொடுத்திருப்பது உண்மைதான். இது ஆரோக்கியமான மாற்றம்தான். ஆனா அவங்க கொடுத்திருக்கிற இடம் இலக்கியவாதிகளுக்குத்தான். இலக்கியங்களுக்குக் கிடையாது. வெகுஜனப் பத்திரிகைகள்ல இலக்கியம் படைக்க முடியாது."

இலக்கியவாதிகள் வெகுஜனப் பத்திரிகைகளில் எழுதும்பொழுது தங்களது எழுத்து எல்லோருக்கும் போய்ச் சேரவேண்டும் என்பதற்காக புரிகிற மாதிரி எழுத ஆரம்பித்து விடுகிறார்களே?

"இதை நான் 'அடாப்டேஷன்'னு சொல்லுவேன். வாசகர்களோட தேவைக்கு ஏத்த மாதிரி நம்மோட எழுத்தை மாத்திக்கறதுல தப்பு கிடையாது. நான் இப்படித்தான் எழுதுவேன்னு திட்டவட்டமா இருக்கிறதால என்ன பிரயோஜனம்? ஒரு நாவலை வாசிக்கிற வாசகரும் ஒரு சினிமாவைப் பார்க்கிற ரசிகரும் இரண்டு விதமானவங்க. ஒரே மாதிரியான எழுத்தை இரண்டு பேருக்கும் கொடுக்க முடியாது."

அப்படியென்றால் உண்மையான எழுத்துதான் எது?

"அதை காலம் தீர்மானிக்கும்."

- மருதன்



அருள்வாக்கு

பொறாமை கூடாது!

பெரிய அழுக்கு, குழந்தைகளிடம் சுலபத்தில் சேர்கிற அழுக்கு, பொறாமை குணம். இன்னொரு பையன் படிப்பிலோ, விளையாட்டிலோ நம்மைவிட கெட்டிக்காரனாக இருந்தால் அல்லது ஸில்க் சட்டை போட்டுக் கொண்டு வந்தால், காரில் வந்து இறங்கினால், முதல் கிளாஸில் ஸினிமாவுக்குப் போனால், உடனே அவனைப் பார்த்துப் பொறாமை உண்டாகி விடுகிறது. அது அழுக்கு மாதிரி மனத்தை ரொம்பவும் கெடுத்து விடும். பலவிதமான சண்டைகளில் நம்மைக் கொண்டு தள்ளிவிடும். அவனைச் சண்டை போட்டு ஜயிக்க முடியவில்லை என்றால், கோள் சொல்லிக் கெடுக்கத் தோன்றும். இம்மாதிரி ஓர் அழுக்கிலிருந்து இன்னோர் அழுக்கு என்று வளர்ந்து கொண்டே போகும். இந்த அழுக்கான எண்ணங்களாலே நம் படிப்பிலே கவனம் குறையும். விளையாட்டில் உற்சாகம் குன்றும். இவ்வாறு அறிவு, உடம்பு இரண்டையும் பாழாக்கிக் கொள்வோம். நம்மை நாமே கெடுத்துக் கொள்வதைத் தவிர பொறாமையால் வேறு எந்தவிதப் பயனும் இல்லை.

ஒன்றே ஒன்றில்தான் போட்டியிருக்க வேண்டும். 'அந்தப் பையன் இவ்வளவு நிறைய மார்க்கு வாங்குகிறானே! நாமும் அப்படி வாங்க வேண்டும்' என்ற ஆசையுடன், ஊக்கமாகப் படித்துப் போட்டி போட வேண்டும். இந்தப் போட்டியும் பொறாமையாகிப் போவதற்கு விடக்கூடாது. அறிவாளியாக, நல்லவனாக இருப்பதற்குப் போட்டி போடலாமே தவிர, பொறாமை கூடவே கூடாது. விளையாட்டிலும் அப்படியே!

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

அனு... அவன்... அது!

ரம்யா நாகேஸ்வரன்

'அம்மா' என்று முனகினாள் அனு. குனிந்து முகத்தருகே சென்று, "கண்ணம்மா... அதோ பாரு உன்னோட டீச்சர்" என்று காண்பித்தேன். இலேசான மாறுதல்தான் முகத்தில். இன்னும் நம்பிக்கை வரவில்லை. மெதுவாகக் கையை உயர்த்தி டீச்சரின் கவனத்தைப் பெற முயற்சித்தேன். நல்லவேளை! டீச்சர் என்னைப் பார்த்து விட்டார். அருகே வந்து என்னைப் பார்த்து மருந்துக்குப் புன்னகைத்து விட்டு அனுவின் கையைப் பற்றி அழைத்துச் சென்றார். சீனக் குழந்தையின் அருகே நடந்து செல்லும் அனுவைப் பார்த்தால் சாதாரணக் குழந்தையைப் போல்தான் இருந்தது. திரும்பித் திரும்பிப் பார்த்தபடி வீட்டிற்கு வந்தேன். சென்னையைப் போல் சிங்கப்பூரிலும் வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது. ஃபேனைப் போட்டுவிட்டு சோபாவில் சாய்ந்தேன்.

மணமான புதிதில் நாங்கள் சென்னையில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து கொண்டிருந்தோம். இரண்டு வருடங்களில் அனு பிறந்தாள். எல்லா அம்மாக்களைப் போல எனக்கும் பல கனவுகளும் எதிர்பார்ப்புகளும் இருந்தன. நம் குழந்தை விஸ்வநாதன் ஆனந்தைப் போல் அல்லது ஒரு வீணை காயத்ரியைப் போல் பிராடிஜியாக இருக்கலாம் என்ற நப்பாசை கூட மனத்தின் ஓரத்தில் ஒட்டிக் கொண்டிருந்தது.

இரண்டு வயது முடியும் வரை அவளும் சாதாரணமாகத்தான் இருந்தாள். அப்புறம்தான் சில மாறுதல்கள் தெரிய ஆரம்பித்தன. ஒருநாள் சாப்பிடக் கூப்பிட்டபொழுது திரும்பியே பார்க்கவில்லை. 'அனு... அனூ...' என்று பலமுறை உரக்கக் கூப்பிட்டுப் பார்த்தேன். சலனமே இல்லை. ஆனால் அவளுக்குப் பிடித்த பாட்டு டீ.வி.யில் வந்தவுடன் 'சட்'டென்று திரும்பினாள். 'காதுதான் சரியாகக் கேட்கவில்லையோ?' என்ற சந்தேகம் தீர்ந்தது. 'சரி! கொஞ்சம் பிடிவாதம் போலிருக்கிறது' என்று நினைத்துக் கொண்டேன். மற்றொரு நாள் அவள் விளையாடிக் கொண்டிருந்த பொம்மையைக் கையிலிருந்து வாங்கி வைக்க முற்பட்டபொழுது பயங்கரமாகக் கத்தி, கையில் பிடிக்க முடியாமல் அழுது என்னைக் கதிகலங்க அடித்து விட்டாள். அன்று மறுபடியும் ஏதோ சரியில்லை என்று தோன்றியது.

கணவன் குமாரிடம் சொல்வதற்கு முன், அமெரிக்காவிலிருந்து வந்திருந்த என் மாமா பெண் மீராவிடம் இதுபற்றிப் பேசினேன். அவள் ஒரு குழந்தைநல மருத்துவர். நிறையக் கேள்விகள் கேட்டாள். அனுவையும் பார்த்துப் பேசினாள். பிறகு என் கையைப் பிடித்துக் கொண்டு மென்மையாகச் சொன்னாள், "உமா, இந்த வியாதிக்குப் பேரு ஆடிஸம். இது எதனால வரதுன்னு நிச்சயமா சொல்லக்கூடிய காரணங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படலை. இது மூளை வளர்ச்சியில் ஏற்படும் குறை. ஆடிஸ்டிக் குழந்தைகளுக்கு பேச்சுத்திறன் கம்மியாக இருக்கும். படிப்பும் மெதுவாகத்தான் வரும். மாற்றங்களை அவர்கள் விரும்ப மாட்டார்கள். சில சமயம் சாதாரண விஷயங்களுக்குத் தீவிரமாக ரீயாக்ட் செய்வார்கள். பொறுமையாச் சில பிஹேவியர் தெரபி முறைகளைப் பின்பற்றினா நிச்சயம் நல்ல முன்னேற்றம் இருக்கும். நீ தைரியமா இருந்து அவளைக் குணப்படுத்தணும்" என்றாள்.

அனு ஒரு நார்மல் குழந்தை இல்லை என்பதை நான் தெள்ளத் தெளிவாக தெரிந்துகொண்ட உடன் என் உடல் சில்லிட்டது. ஒன்றல்ல... இரண்டு பயங்கள் என்னைத் தாக்கின. முதல் பயம் என் மகளின் எதிர்காலம் பற்றியது.

இரண்டாவது, என் கண வனை நினைத்து. குமா ருக்கு வெளித் தோற்றம், வறட்டு கௌரவம் போன்றவைதான் வாழ்க் கையில் மிக முக் கியமான விஷ யங்கள். அனு வுடன் அப்பா



என்ற முறையில் பெரிதாக அன்பு செலுத்த அவனுக்கு நேரமும் இருந்த தில்லை, ஆர்வமும் இருந்ததில்லை. வேலையில் முன்னேற வேண்டும், தன் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதுதான் வெறியாக இருந்தது. லீவு நாட்களில் மட்டும் சிறிது நேரம் விளை யாடுவான். அவள் கொஞ்சம் சிணுங் கினாலே என்னிடமோ, மாமியாரிடமோ கொடுத்துவிட்டு இணையத்தில் மூழ்கி விடுவான்.

எதிர்பார்த்தது போலவே அனுவின் நிலைமையைச் சொன்னவுடன் அவன் கேட்ட முதல் கேள்வி, "உன் பரம்பரை யில யாருக்குப் பைத்தியம்?" உடனே மாமியார், "அதை முதல்ல கேளு. அவ மாமா பொண்ணு இந்த வியாதியை 'டக்'குனு கண்டுபிடிச்சதிலிருந்தே தெரி யறதே, இது அவங்க குடும்ப வியா தின்னு" என்றாள். மாமனாரின் கண் களில் மட்டும் சிறிது பச்சாதாபம் தெரிந் தது. ஆனால் அவருக்கு அனாவசியமாக

வாயைத் திறந்து பழக்கமில்லை.

ஆடிஸம்மைப் பற்றித் தெரிந்து கொள்ளவோ, அனுவுக்கு உதவி செய்யவோ குமாருக்குத் துளிக்கூட விருப்பமில்லை. 'இந்த விஷயத்தை வெளி உலகத்திற்குத் தெரியாமல் மறைப்பது எப்படி? அனுவை எப்படி ஒரு சாதாரணக் குழந்தையாகக் காட்டுவது?' என்பதுதான் அவனுடைய தலையாய கவலை.

என் மகளைப் பற்றிய என் கனவுகள் எல்லாம் தேய்ந்து, உருமாறி இப்பொழுது சில சாதாரண எதிர்பார்ப்புகளாக ஆகிவிட்டிருந்தன. சம்பவங்கள் எதுவுமில்லாது சாதாரணமாக நான்கு நாட்கள் சென்றாலே மனம் சந்தோஷப்படத் துவங்கியது. பிரார்த்தனைகளில் கழிந்த நேரம் தவிர, மிச்ச நேரம் அனுவிடம் செலவிட்டேன். மீரா எனக்குப் பல இணையதளத்தின் முகவரிகள், புத்தகங்கள் எல்லாம் கொடுத்துவிட்டுச் சென்றாள். ஏதாவது சந்தேகம் இருந்தால் உடனே தனக்கு மின்னஞ்சல் அனுப்பும்படி சொல்லி இருந்தாள். நானே பல விஷயங்களைப் படித்துத் தெரிந்து கொண்டேன். கூடிய மட்டும் அனுவை சாதாரணக் குழந்தை போல் வளர்க்க வேண்டும். எல்லாக் குழந்தைகளுடன் படிக்க வைக்க வேண்டும். தனிப்பட்ட ஸ்கூல் தேவையில்லை என்று படித்ததில் புரிந்து கொண்டேன். ஆனால் அவளின் இந்த நிலைமையை நன்றாகப் புரிந்து கொண்டு ஒத்துழைக்கும் ஆசிரியையும் மாணவர்களும் முக்கியம். கே.ஜியில் சேர்க்கும் பொழுது என் தோழி ரேகா டீச்சராக இருந்த பள்ளியில் அவளைச் சேர்த்தேன். ரேகா மிகவும் அக்கறையோடு அனுவின் நிலைமையைப் புரிந்து கொண்டு அவளைக் கவனித்துக் கொண்டாள். ஒருநாள் அனு பள்ளிக்குத் தன் தலையணை இல்லாமல் போக மாட்டேன் என்று மிகவும் அடம்பிடித்தாள். ரேகா அந்த தலையணையை அனுவின் பெஞ்சுக்குப் பக்கத்திலேயே வைத்துக் கொள்ளச் சொன்ன பிறகுதான் அனு சமாதானம் அடைந்தாள்.

ஒருமுறை சென்னையில் நடக்கவிருந்த ஒரு கல்யாணத்திற்காக குமாரின் உறவினர்கள் சிலர் வந்து எங்கள் வீட்டில் தங்கினர். குமாரின் சித்திப் பெண்ணின் குழந்தை அனுவின் அறைக்குள் விளையாடச் சென்றாள். அனு தரையில் அமர்ந்து தன்னுடைய பொம்மைகளை வரிசையாக அடுக்கிக் கொண்டிருந்தாள். இந்தக் குழந்தை வரிசையிலிருந்து ஒரு பொம்மையை எடுத்துவிட, பயங்கரமாக அழுது ஊரைக் கூட்டி விட்டாள் அனு. என் மாமியார், "பைத்தியம், பைத்தியம், வாயை மூடு" என்று அவளை இரண்டு அடி அடித்து விட்டாள். குமாருக்கு மிகவும் அவமானமாகப் போய்விட்டது. என்னை விவாகரத்து பண்ணிவிடலாம் என்று தீவிரமாக யோசித்தது அன்றுதான். ஆனால், அவனின் சுயநலம்/கௌரவம் அதைத் தடுத்தது. தன் திருமணம் முறிந்தது என்றால் அவன் உறவினர்கள், நண்பர்கள் சிலர் அவனைப் பற்றித் தரக்குறைவாகப் பேச இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்து விடும் என்று அஞ்சினான். அதனால் வேறொரு திட்டம் போட்டான்.

மெடிக்கல் மூலை




எய்ட்ஸ் இருக்கிறதா என்று தன்னைத்தானே பரிசோதித்துக் கண்டறியும் கருவியை அமெரிக்க மருத்துவர்கள் கண்டுபிடித்துள்ளனர். மருத்துவரிடம் சென்று பரிசோதித்துக் கொள்ளத் தயங்கும் பலருக்கும் இந்தக் கருவி உபயோகப்படும். ஆனால் இதைப் பொது மக்களிடம் கொண்டு செல்லலாமா என்பது குறித்து அமெரிக்க மருத்துவக் குழு இன்னமும் முடிவெடுக்கவில்லை.

℞

பாபா 80

அடுத்தவர் இன்பத்தில் நாம் மகிழ்ந்து, மற்றவர் துன்பத்தில் நாம் நெகிழ்ந்து, ஏகமாக இருப்பதே இறையருள் பெறும் வழி.



திடீரென்று ஒருநாள் என்னிடம் வந்து, "எனக்கு சிங்கப்பூர்ல வேலை கிடைச்சிருக்கு. ஒரு வாரத்துல கிளம்பணும்" என்றான். "என்னங்க... என்கிட்டே ஒண்ணுமே சொல்லலை. இப்பத்தானே அனு மெதுவா ஸ்கூல்ல முன்னேறிக்கிட்டிருக்கா. என் ஃப்ரெண்ட் டீச்சரா இருக்கிறதுனால..." என்றேன்.

"ஆமாமா... பெரிய ஐன்ஸ்டைனைப் பெத்து வெச்சிருக்கே... முன்னேறிக்கிட்டு இருக்காளாம். இன்னும் இங்கே இருந்தா கொஞ்ச நஞ்ச மானமும் கப்பலேறிடும். முதல்ல வாயை மூடிக்கிட்டு கிளம்பு. ரொம்பப் பேசினே தள்ளி வெச்சுட்டு இன்னொரு கல்யாணம் பண்ணிப்பேன். ஜாக்கிரதை!" என்றான்.

என் பி.ஏ. படிப்பை வைத்துக் கொண்டு எனக்கு எந்த வேலையும் கிடைக்காது. அப்படியே கிடைத்தாலும் என் குழந்தைக்கு என் முழு கவனமும் கிடைக்க முடியாதே. வயதான தந்தை தனியாக தன் பென்ஷனில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். குமாரை விட்டால் எனக்கு வேறு வழி இல்லை. நான் ஒரு பொருளாதாரப் பிணைக் கைதி என்பதைப் புரிந்துகொள்ள எனக்கு அதிக நேரம் தேவைப்படவில்லை. அவனைத் தொடர்ந்தேன்.

இப்பொழுது சிங்கப்பூர் பழகிவிட்டது. குமார் எங்களை ஒரு தனி உலகில் அமர்த்தி விட்டான். இங்கு நண்பர்கள் மிகக் குறைவு. எங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் யாருக்கும் அக்கறை இல்லை. எல்லோரும் பிஸியாக இருந்தார்கள். இங்கு தொலைந்து போவது சுலபமாக இருந்தது. பக்கத்து வீட்டில் யார் இருக்கிறார்கள் என்றுகூடத் தெரியாது. ஒரு ஆஸ்திரேலிய ஆணை மட்டும் ஓரிரு முறை மின் தூக்கியில் பார்த்திருக்கிறேன். 'ஹலோ' என்பதோடு சரி பழக்கம். அலுவலகத்தில் ஏதாவது முக்கியமான நிகழ்ச்சி என்றால் பேபி சிட்டரை ஏற்பாடு செய்யச் சொல்லிவிட்டு என்னை மட்டும் அழைத்துச் செல்வான் குமார். அனுவின் உலகம் தனிமையானது. அதில் எனக்குக் கூட சில சமயம் அனுமதி இல்லை. அதனால் பிரச்னை ஒன்றும் ஏற்படவில்லை. அவன் அலுவலக நண்பர்களுக்கு, அவனுக்கு ஒரு குழந்தை இருக்கிறது என்று கூடத் தெரியவில்லை. தெரிந்தவர்கள் அதில் அக்கறை கொள்ளவில்லை.

சிங்கப்பூர் வந்து ஒரு வருடம் ஓடிவிட்டது. அனு முதல் வகுப்புக்குச் செல்லப் போகிறாள். இன்று அவள் புது டீச்சரை சந்திக்கப் போகிறேன். மிஸஸ். டான் என்ற அந்த சீன டீச்சரின் முகத்தில் கருணை தெரிந்தது. சிரிக்கும் பொழுது கண்கள் காணாமல் போய் இரு கோடுகள் மட்டுமே தெரிந்தன! என்னைப் பார்த்து பூரணமாகச் சிரிப்பவர்கள் குறைந்து போய்விட்டபடியால் மனதுக்கு மிகவும் இதமாக இருந்தது. என்னிடம் ஆங்கிலத்தில் 'என் தங்கை பெண்கூட மெண்டலி ரிடாடர்ட். அனுவை நான் கவனமாகப் பார்த்துக் கொள்கிறேன். கவலைப்படாதே' என்றாள். 'இது மெண்டல்



பெரியார் கெட்டப் எப்போ?

'வணக்கம் தலைவா' என்ற படத்தில் மொத்தம் ஏழு கெட்டப்புகளில் நடித்துக் கொண்டிருக்கிறார் சத்யராஜ். சரி, ஈ.வெ.ரா. பெரியார் கெட்டப்பில் எப்போது நடிக்கப் போகிறாராம்?

''பாரதி படத்தை இயக்கிய ஐ.ஏ.எஸ். அதிகாரி ஞானராஜசேகரன் தான் பெரியார் படத்தையும் இயக்கப் போகிறார். இதற்காகப் பத்து வருடம் உழைத்து ஆராய்ச்சி செய்திருக்கிறார். 'காந்தி' படத்தைப் போல இதுவும் மெகா பட்ஜெட் படம். பாதி நிதி திரட்டப்பட்டுவிட்டது. அடுத்த ஆண்டு இறுதியில் வைக்கத்தில் படப்பிடிப்புத் தொடங்க திட்டமிட்டிருக்கிறோம்'' என்கிறார் பெரியார் வேடமேற்பதை வாழ்க்கை லட்சியமாகக் கருதும் சத்யராஜ்.

- ஸ்ரீ

ரிடார்டேஷன் இல்லை' என்று சொல்ல வாய் வந்தது. 'டக்'கென்று அடக்கிக் கொண்டேன். 'உன் பெண்ணைப் பார்த்துக் கொள்கிறேன்' என்று ஆறுதலான வார்த்தையை கேட்டுத்தான் எத்தனை நாள் ஆயிற்று. அது போதும் எனக்கு. 'மிக்க நன்றி' என்றேன். சுதந்திரமாகக் கண்ணீர் கூட வந்தது.

அனுவை பொறுமையாகக் கையாண்டாள் மிஸஸ். டான். இப்பொழுது அவளுக்கு மெண்டல் ரிடார்டேஷனும் ஆடிஸமும் வெவ்வேறு என்று தெரியும். அனு ஓரளவு வரைவதில் ஆர்வம் காட்டினாள். ''பாருங்கள் மிஸஸ் குமார், அனு எவ்வளவு அழகாக வரைந்திருக்கிறாள்'' என்று.

மிஸஸ். டான் உண்மையான சந்தோஷத்துடன் சொன்னபொழுது எனக்கு இறந்து போன என் தாயைப் பார்ப்பது போல் இருந்தது. 'என் மகளும் சாதிப் பாள்' என்ற நம்பிக்கை முதல் முறை யாகத் தலைதூக்கத் தொடங்கியது.

சில வாரங்கள் சென்றன. மாலையில் வீட்டிற்கு வந்த குமார், ''எனக்கு பிரமோஷன் கிடைச்சிருக்கு. எல்லாம் ஐயாவோட திறமை. நீ போன ஜன்மத்துல செஞ்ச புண்ணியம்'' என்று சொல்லிவிட்டு குண்டைத் தூக்கிப் போட்டான். ''இன்னும் ஒரு மாசத்துல துபாய்க்கு ட்ரான்ஸ்பர். அந்த ஆபீஸை நான்தான் நடத்தணும்.''

வெலவெலத்துப் போன நான், ''ப்ளீஸ், வேண்டாங்க. இப்பத்தான் அனு சகஜ நிலைக்கு வந்துக்கிட்டு இருக்கா. நல்ல டீச்சர் கிடைச்சிருக்காங்க. ஒரு ரெண்டு வருஷம் பொறுத்துப் பார்க்கலாங்க'' என்று கெஞ்சினேன்.

'உனக்கென்ன பைத்தியமா?' என்பது போல் பார்த்தான். என் முகத்தருகே வந்து பல்லைக் கடித்தபடி சொன்னான், ''நீ பெத்திருக்கிற பரப்பிரும்மத்துக்கு படிப்பும் வராது, வேலையும் கிடைக்காது, கல்யாணமும் ஆகாது. நான் ஏதோ ஓரளவு சம்பாதிச்சு வெச்சாத்தான் நம்ம காலத்துக்கு அப்புறம் ஒரு ஹோம்லயாவது சேர்க்கலாம். இதை ஞாபகம் வெச்சுக்கோ!''

நிஷ்டூரமான வார்த்தைகள் மனதைக் கத்தியாகக் குத்தின. கண்களில் கண்ணீர் வழிய அமர்ந்திருந்தேன். ''அம்மா, அம்மா, இந்தாமா உனக்கு லெட்டர்'' என்றாள் அனு. என் தோழி ரேகாதான் எழுதியிருந்தாள். சென்னை விஷயங்களை எழுதிவிட்டு, 'மனதைத் தளர விடாதே உமா. மனநிலை சரியில்லாத குழந்தையோட வாழறது கஷ்டம்தான். ஆனா நீ தைரியமா எதையும் சமாளிப்பேன்னு எனக்குத் தெரியும். உனக்காக நான் தினம் பிரார்த்திக்கிறேன்' என்று முடித்திருந்தாள்.

'ஆமா ரேகா. மனநிலை சரியில்லாதவங்களோடு வாழறது கஷ்டம்தான். அனுவைக் கூட புரிஞ்சுக்கலாம். குமார் போன்ற வெளித் தோற்றத்துல சாதாரணமா இருக்கிற சில மனநிலை சரியில்லாதவங்களோட வாழறதுதான் கஷ்டம்' என்று மனதிற்குள் அழுதபடி துபாய்க்கு சாமான்களை மூட்டை கட்ட ஆரம்பித்தேன். ●



கறிவேப்பிலையிலிருந்து கம்ப்யூட்டர் வரை...

'ஜக்கம்மாள்' ஜவுளிக் கடையின் அதிபர் ஜம்புலிங்கம் தனது அலுவலக அறையில் அமர்ந்திருக்க, அவரைச் சந்திக்க விளம்பர டைரக்டர் விச்சு வருகிறார்.

ஜம்பு : வாங்க விச்சு. எப்படி இருக்கீங்க? ஆளையே பார்க்க முடியலை. போன்ல பிடிக்கிறதே காத்தைப் பிடிக்கற மாதிரி இருக்கு.

விச்சு : என்ன சார் பண்றது? ரொம்ப பிஸியா இருக்கேன். கறிவேப்பிலையில இருந்து கம்ப்யூட்டர் வரைக்கும் எல்லாத்துக்கும் விளம்பரம் தேவைப்படுது. இருபத்து நாலு மணி நேரமும் ஷூட்டிங்தான். இப்ப எல்லாம் நான் பல் தேய்க்கறது, குளிக்கிறதுகூட ஷூட்டிங் ஸ்பாட்லயேதான்.

ஜம்பு : கேள்விப்பட்டேன். உங்க டீம்ல இருக்கிற லைட்பாய் ஒருத்தன் கல்யாணம் செய்துக்க லீவு கேட்டானாம். முடியாதுன்னு சொல்லி அவன் கல்யாணத்தை ஷூட்டிங் ஸ்பாட்லயே நடத்தினீங்களாமே...?

விச்சு : என்ன சார் செய்யறது? ஒரு நாள் லீவு கொடுத்தாலும் ஒர்க் பாதிக்கும். இப்பகூட ஒரு ஷூட்டிங்கை என் அஸிஸ்டெண்ட்கிட்ட ஒப்படைச்சுட்டு வந்திருக்கேன்.

ஜம்பு : என்ன விளம்பரம்?

விச்சு : தள்ளுவண்டியில காய்கறி விக்கற தங்கவேலு, விளம்பரம் இருந்தா நல்லதுன்னு நினைச்சார். அதுதான் எடுத்துட்டோம். அடுத்த வாரத்துல இருந்து மத்தியான சீரியலுக்கு நடுவுல வரும்.

ஜம்பு : எப்படி எடுத்திருக்கீங்க?

விச்சு : தங்கவேலு தள்ளுவண்டியை ஒரு பெரிய பங்களா முன்னாடி நிறுத்தி குரல் கொடுக்கறார். உள்ளே இருந்து யார்

கலகல...

வர்றாங்க தெரியுங்களா? நம்ம ஐஸ்வர்யா ராய். கையில கூடை. வீட்டுக்குள்ள இருந்து தலைமுடி காத்துல பறக்க ஒயிலா நடந்து வந்து எல்லா காய்லயும் கால் கிலோ, அரை கிலோ வாங்கறாங்க.

ஜம்பு : அப்புறம்?

விச்சு : முகத்தைத் திருப்பி கேமரா வைப் பார்த்து ஸ்மைல் பண்ணி, என்னடா உலக அழகி சாதாரணத் தள்ளு வண்டியில காய் வாங்கறா ளேன்னு பார்க்கறீங்களா? பெரிய கடை கள்ல விக்கறது, பார்க்கத்தான் பள பளப்பா இருக்குமே தவிர சத்து இருக் காது. ஆனா இங்க அப்படியில்ல. தரத் துக்குத் தரம். விலையும் குறைவு'ன்னு சொல்றாங்க.

ஜம்பு : ஐஸ்வர்யாராய் ஹாலிவுட்ல பிஸியா இருக்காங்க. ரஜினி கூட நடிக் கவே 'நோ' சொல்லிட்டாங்கன்னு கேள்விப்பட்டேன். அவங்களை எப்படி...?

விச்சு : நிஜம்தான் சார். ஒரேயொரு மணி நேரம் கால்ஷீட் வேணும்னு சொல்லி கெஞ்சிக் கூத்தாடி அங்கே இருந்து ரிட்டர்ன் டிக்கெட்டோடு கூட்டிட்டு வந்தேன்.

ஜம்பு : அடேங்கப்பா! பெரிய ஆளு தான் நீங்க. அது சரி, அவங்க மெட் ராஸ்ல ஒரு வீட்ல இருந்துக்கிட்டு தமிழ்ல பேசறதா காட்டினா ஜனங்க நம்புவாங்களா?

விச்சு : என்ன சார் நீங்க, நாட்டு நில வரம் புரியாமப் பேசறீங்க? ஜாக்கிசானே தமிழ்ல வெளுத்து வாங்கறாரு. ஐஸ்வர்யா ராய் பேச மாட்டாங்களா?

ஜம்பு : சரி! சரி! மத்தவங்க கதையை விடுங்க. நம்ம விஷயத்துக்கு வாங்க. புதுசா விளம்பரம் எடுக்கணும். எப்படி எடுக்கறீங்க?

விச்சு : வழக்கம்போல எடுத்துடு வோம்.

ஜம்பு : வழக்கம் போலன்னா? போன முறை மும்பையில இருந்து பிசாசு பாஸோ... பிசாசு பெயி லோன்னு ஒரு நடிகையை வர வழைச்சீங்களே... அப்படியா?

விச்சு : அவங்க பிபாஷா பாசு சார்.

ஜம்பு : ஏதோ ஒண்ணு. அவங் களை வெச்சு எடுத்தீங்க. உடனே என் எதிரி 'முனியம்மா' ஜவுளிக்கடை முனியப்பன் என்ன பண்ணினான்? ஒரு குடும்பப்பாங்கான நடிகையை வெச்சு விளம்பரம் எடுத்தான். என்ன டயலாக் தெரியுமா? 'கர்ச்சீப் வாங்கற பொம்ப ளைங்கதான் மற்ற ஜவுளிக் கடைக்குப் போவாங்க. நம்மளை மாதிரி புடைவை கட்டற பொம்பளைங்க முனியம்மா ஜவுளிக்கடைக்குத்தான் வருவாங்க'ன்னு கிண்டல் செய்திருந்தான்.

விச்சு : ஸாரி சார், கொஞ்சம் வித்தி யாசமா இருக்கட்டும்னு செய்தேன், சொதப்பிடிச்சு. எல்லோரும் போற ரூட்டுக்கே போவோம். கும்பலா ஆட விடுவோம். தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, மும்பை, அரியானா...

ஜம்பு : என்னய்யா, லாட்டரிச் சீட்டு விளம்பரமா எடுக்கப் போறோம்?

பாபா 80

பட்டம் பதவிக்காகப் பறக்கக் கூடாது. அது பறந்து வந்து மடியில் விழ வேண்டும்.





விச்சு : அட, முழுசா கேளுங்க சார். இந்தியாவுல இருக்கிற அத்தனை பெண் மாடல்களையும் வரவழைக்கிறோம். புடைவை, சுரிதார், மிடின்னு எல்லா டிரெஸ்ஸிலும், எல்லா கலர்லயும் போட்டுக்கச் சொல்லி ஆடவிடறோம். இந்தியாவே உங்க கடைக்கு வந்துதான் துணிகளை எடுக்குதுன்னு காட்டறோம். எப்படி ஐடியா?

ஜம்பு : நல்லாத்தான் இருக்கு. ஆனா அத்தனை பேரும் ஆடறதுக்கு நம்ம கடையில இடம் இல்லையே.

விச்சு : கடையில வேண்டாம். வருஷா வருஷம் தமிழ்நாடு அரசு எக்ஸிபிஷன் போடுதே தீவுத்திடல்... அது இப்ப சும்மாத்தானே இருக்கு? அங்கே ஆட விடலாம்.

ஜம்பு : பக்கத்திலேயே கூவம் ஓடுது. நாத்தமடிக்குமே.

விச்சு : நல்லதாப் போச்சு. எல்லாரையும் ஒரு கையால மூக்கை மூடிட்டு ஆட விடலாம். அதாவது மற்ற ஜவுளிக் கடையைப் பார்த்தா மூக்கு மேல விரல்தான் வைப்பாங்க. நம்ம ஜக்கம்மா ஜவுளிக்கடைக்கு வந்தா மூக்குமேல கையே வைப்பாங்கன்னு சொல்லலாம்.

ஜம்பு : கேட்க நல்லாத்தான் இருக்கு. எல்லா மாடல்களையும் தீவுத்திடலுக்கு எப்படி வரவழைப்பீங்க? அத்தனை பேரும் கேமராவுல விழுவாங்களா? விழுந்தாலும் டீவி. ஸ்க்ரீன்ல தெரிவாங்களா? ஏன்னா அது சின்னத்திரையாச்சே.

விச்சு : சார்! மாடல்களை நாலஞ்சு லாரிகளை வெச்சு கூட்டிட்டுப் போயிடலாம். மற்ற விஷயங்க எல்லாம் டெக்னிக்கல் விஷயம். ஸ்க்ரீன்ல விழ வைக்கற பிரச்னை எல்லாம் நாங்க பார்த்துக்கறோம். நீங்க ஏன் மண்டைய உடைச்சுக்கறீங்க?

ஜம்பு : எல்லாம் சரி. இதுக்கு எவ்வளவு செலவாகும்?

விச்சு : இப்ப கேட்டீங்களே இது உங்களோட பிரச்னை. அந்த கால்குலேட்டரை இப்படிக் கொடுங்க.

(கால்குலேட்டரில் 'மளமள'வென கணக்குப் போட்டு ஜம்புவிடம் காட்டுகிறார் விச்சு. அது எட்டு இலக்க எண்களைக் காட்டுகிறது)

ஜம்பு : ஆ! இவ்வளவு செலவு செய்யணும்னா இந்தக் கடையைத்தான் விக்கணும்.

விச்சு : அப்படி ஒரு ஐடியா இருந்தா சொல்லுங்க, நானே வாங்கிக்கறேன். விளம்பரச் செலவையும் நான் பார்த்துக்கறேன்.

ஜம்பு : என்னது, நீங்க வாங்கிக்கறீங்களா?

விச்சு : ஆமா. அப்படித்தானே முல்லை டெக்ஸ்டைல்ஸ், மருதம் ஃபேப்ரிக்ஸ், நெய்தல் ஸ்டோர்ஸை எல்லாம் வாங்கி இருக்கேன். அந்தக் கடைங்களோட முதலாளிங்களுக்கு நான்தானே சம்பளம் தர்றேன்.

ஜம்பு : ஆ!

(ஜம்புலிங்கம் மயக்கம் போட்டுச் சாய்கிறார். விச்சுவின் செல்போனில் அவசர அழைப்பு வரவே, அவர் கூலாக எழுந்து வெளியேறுகிறார்.)

கற்பனை: **குசும்புராஜ்**



"முட்டாள் மனிதர்கள்" என்று திட்டித் தீர்த்தது ஒட்டகச்சிவிங்கி. "நீ சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை" என்றது சிறுத்தைப் புலி.

"ஹார்ஸ் பவராம்... சீட்டா பவர் என்று சொல்ல வேண்டாமா? அல்லது ஒட்டகச்சிவிங்கி சக்தி என்று கூறியிருக்க வேண்டாமா? நாங்கள்தானே குதிரையைவிட வேகமாக ஓடக்கூடியவர்கள்? இதை அறியாதவனா மனிதன்?" மரத்தின் மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த முயல் குட்டி "மனிதன் அறிந்தவன்தான். நீங்கள்

"எப்போதும் ஒரே நினைப்புதான் அவருக்கு" என்று வெடித்த ஸ்ரீலதா, அடுத்த சில நொடிகளிலேயே சட்டென்று கண்களை மூடிக்கொண்டாள். தொடர்ந்த சில நிமிடங்களில் லேசான குறட்டை ஒலி அவளிடமிருந்து கிளம்பியது.

அனுஷாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. மனதில் பெரும் ரணங்களை வைத்துக் கொண்டு சட்டென நிமிட மாறுதலில் இவளால் எப்படித் தூங்க முடிந்தது? அடுத்த நாள் விட்ட இடத்திலிருந்து பேச்சை இவளிடம் தொடரத்தான் வேண்டும் என்று முடிவெடுத்தாள்.

மறுநாள் ராஜன் விலங்கியல் பூங்காவிற்குக் கிளம்பிய பத்தாவது நிமிடமே தங்கையுடன் கோயிலுக்குக் கிளம்பினாள் அனுஷா. அன்று வெள்ளிக்கிழமை. அம்மனுக்கு சந்தனக் காப்பு. மிக ரம்மியமாக இருந்தது.

தற்செயலாகத் தங்கையை அனுஷா கவனித்தபோது, ஸ்ரீ அம்மனை சேவிக்காதது மட்டுமல்ல, அவள் பார்வை குறிக்கோளின்றி எல்லாத் திசைகளிலும் அலைபாய்ந்து கொண்டிருந்தது. கோயிலுக்குப் போனால் போதும், ஸ்ரீலதாவின் உதடுகள் எதையாவது வேண்டிக்கொண்டே இருக்கும். இப்போது வேண்டிக்கொள்ள எதுவுமே இல்லையா அவளுக்கு? கர்ப்பமான எந்தப் பெண்ணுக்குமே 'இந்தப் பிரசவம் நல்லபடியா நடந்து முடியணும்' என்ற குறைந்தபட்ச வேண்டுதல் இருக்குமே. அதுகூடவா இவளுக்கு இல்லை?

வீட்டுக்கு வந்தவுடன் 'மற்ற வேலைகளைப் பிறகு கவனித்துக் கொள்ளலாம்' என்று தங்கைக்கு எதிரே அமர்ந்து கொண்டாள்.

"ஸ்ரீ, நேத்து நீ என்கிட்டே எதையோ சொல்ல ஆரம்பிச்சே" என்று தொடங்கினாள்.

ஸ்ரீலதா எதுவுமே பேசாமல் அனுஷாவைப் பார்த்தாள்.

"கார்த்திக் எப்போதும் ஒரே நினைப்பா உன்கிட்டே பாசமா இருந்தார்னு சொல்லிக்கிட்டிருந்தே"

ஸ்ரீலதாவின் முகத்தில் கடுமை புலப்பட்டது. "நான் அப்படிச் சொல்லலை. அவர் வெளிப்படுத்தினது பாசம் இல்லை. வெறி. என் கணவர் எனக்கு ஒரு அப்பாவாக, அம்மாவாக, நண்பராக எல்லாமாக இருக்கணும்னு நினைச்சேன். ஆனால் அவர், தான் உடலளவில் ஆண் என்பதை நிரூபிக்கும் அளவில் மட்டும்தான் என்னிடம் பழகினார்."

சில தினங்களுக்கு முன் கார்த்திக்குடன் தான் பேசியது நினைவுக்கு வந்தது அனுஷாவுக்கு.

"சொல்லுங்க, எதுக்காக என்னைத் தனிமையில் சந்திச்சிப் பேசணும்னு சொன்னீங்க?"

அனுஷா மெதுவான, ஆனால் உறுதியான குரலில் பதிலளித்தாள். "முதல்ல கைக் கடிகாரத்தை அப்பப்போ பார்ப்பதை நிறுத்துங்க. நான் பேச வந்தது முக்கியமான விஷயம்."

"சொல்லுங்க" கைக்கடிகாரத்தை இப்போது பார்க்கவில்லை என்றாலும், அனுஷாவை நேரடியாகப் பார்ப்பதைத் தவிர்த்தான் கார்த்திக்.

"எங்க வீட்டுக்குப் போகக் கூடாதுன்னு ஸ்ரீயிடம் சொன்னீங்களாமே.. அது ஏன்?"

"நீங்க அவளைப் பார்த்துப்


13 அருண் சரண்யா

விலங்குகள்

சொன்னதை மட்டுமல்ல, வேறு சிலவற்றையும். உங்களிருவரால் கொஞ்ச நேரத்துக்குத்தான் வெகுவேகமாக ஓட முடியும். ஆனால் குதிரையால் சீராக வெகு தூரத்துக்கு, வெகு நேரத்துக்கு ஓட முடியும். தாக்குப் பிடிக்கத் தெரிந்தவனுக்குத்தான் புகழ் கிடைக்கும்" என்றது.

பேசக்கூடாதுங்கறது என் எண்ணமில்லை" என்றான்.

"என் கேள்விக்கு இது முழுமையான பதிலில்லை" என்ற அனுஷா, குரலை சற்றே உயர்த்திக் கொண்டாள். "உங்களோட செயல்பாடுகளால் ஸ்ரீ ஒரு மனநோயாளியா மாறிக்கிட்டு இருக்கான்னு உங்களுக்குத்



தெரியுமா? அவ மனசையும் நெருங்குங்க."

மனசையும் என்ற வார்த்தையில் அனுஷா கொடுத்த அழுத்தம் கார்த்திக்குக்கு திகைப்பு, கோபம், சங்கடம் ஆகிய உணர்வுகளை அடுத்தடுத்து ஏற்படுத்தியது.

"மனநோயாளின்ற பெரிய வார்த்தை எல்லாம் உபயோகிக்க வேண்டாம். ஸ்ரீ கொஞ்சம் டல்லா இருக்கா, அவ்ளோதான்."

"அவ்ளோதானா? கண்ணாடித் தொட்டியில இருக்குற மீன்களை வீசி எறிஞ்சிட்டு நீங்க அதில் ஒரு மலைப்பாம்பை வளர்க்கறதா அவள் நினைக்கத் தொடங்கியிருக்கா. எலிகளை நீங்க உணவாகப் போட்டதை அவள் பார்த்தாளாம். போதுமா? இதெல்லாம் மனநோய்க்கு அறிகுறி இல்லேன்னா, நீங்க நிஜமாவே ஒரு மலைப்பாம்பை வளர்க்கறீங்கன்னு அர்த்தம்... மிஸ்டர் கார்த்திக், என் தங்கையின் கணவர் நீங்க. அதனால மாப்பிள்ளை முறை. இருந்தாலும் இப்போ என்னை உங்க அக்காவாகவோ, அம்மாவாகவோ நினைச்சுட்டுப் பேசுங்க. உங்களுக்கு என்ன ப்ராப்ளம்?"

இதுவரை விறைப்பாகப் பதிலளித்துக் கொண்டிருந்த கார்த்திக்கின் உடல் சட்டெனத் தொய்ந்தது. அவன் கண்கள் நீரில் மினுமினுக்கத் தொடங்கின. ஆழ்மன உணர்ச்சிகளை வெளிப்படுத்தத் தொடங்கினான். சுருக்கமான வெளிப்பாடுதான் என்றாலும் அனுஷாவால் அவனை இப்போது முழுவதுமாகவே புரிந்துகொள்ள முடிந்தது.

பாபா 80

இருண்ட அறையில் விஷப் பூச்சிகள் சேரும். தூய்மையற்ற மனத்தில் அழுக்காறு, அவா, வெகுளி என்னும் நச்சுப் பூச்சிகள் சேரும்.



"கார்த்திக் உன்னைக் கல்யாணம் செஞ்சுக்க ஆசைப்பட்டதுக்கு என்ன காரணம் தெரியுமா?" என்று அனுஷா கேட்க, ஸ்ரீலதாவின் முகம் சுளித்தது.

"ஒரே காரணமாகத்தான் இருக்க முடியும்?"

"இல்லை. உன் அழகு மட்டுமே அதுக்குக் காரணம் இல்லை. அவர் வீட்டுக்குப் பக்கத்தில இருக்கிற கோயிலுக்கு நீ அடிக்கடி போவே. ஒருமுறை பிரகாரத்தை வலம் வந்த பிறகு உன் தோழியோடு உட்கார்ந்து பேசினதை, தற்செயலா அப்போ உன் பின்பக்கம் நின்னு கொண்டிருந்த கார்த்திக் கேட்டிருக்கிறார்."

'இதென்ன புதுக்கதை?' என்பது போல் ஸ்ரீலதா பார்க்க, அனுஷா தொடர்ந்தாள்.

"கார்த்திக்கிடம் நான் ஒருமுறை மனம் விட்டுப் பேசினேன் ஸ்ரீ. அப்போ அவர் சொன்னதுதான் இது. நீ உன் தோழிகிட்ட 'எனக்குக் கல்யாணம் ஆனாலும் என் கணவருக்கு நான் எல்லாமாக இருப்பேன். மனைவியா, அப்பாவா, அம்மாவா, தோழியா'ன்னு சொன்னியாம். இந்த வாக்கியம் கார்த்திக்கை ரொம்பப் பாதிச்சது. அவருக்கு அப்பா, அம்மா, அண்ணன்னு நிறைய உறவுகள் இருந்தாலும், ஏனோ எல்லாருமே சுயநலத்தோட இருந்திருக்காங்க. இதன் காரணமாவே அவங்களுக்கும் இவருக்கும் நடுவுல பெரிய இடைவெளி விழுந்து போச்சு. இந்தச் சூழல்ல நீ சொன்னதைக் கேட்டதும் அவர் மனசுல உன்னைப் பற்றி பெரிய நம்பிக்கை. நீதான் அவர் வாழ்க்கைத் துணைவின்னு முடிவெடுத்து எங்களை இதற்காக அணுகினார்."

"ஆனால், அவர் என்னிடம் அப்படி எதிர்பார்த்ததை நடத்த விடலையே. வீட்டில் இருக்கும்போதெல்லாம் என் உடல் நெருக்கம்தானே அவருக்குத் தேவைப்பட்டது."

"அவர் மனத்திலே ரொம்ப வருடங்களா ஒருவிதத் தனிமை உணர்ச்சி இருந்திருக்கு. அதைப் போக்கக்கூடிய ஒரே மருந்து நீதான்னு அவர் நினைச்சிருக்கார். நிறைய படித்த டாக்டர்னாலும் தன் அன்பை வார்த்தைகளால் வெளிப்படுத்தத் தெரியவில்லை. அவ்வளவுதான்."

"இருந்தாலும் அவர்....."

இடைமறித்தாள் அனுஷா. "அதிருக்கட்டும். இப்போ உண்மையா ஒரு பதிலைச் சொல். உனக்கும்தானே கார்த்திக்கின் அன்பைத் தொடக்கத்தில் பிடிச்சிருந்தது. என்னுடைய பிரிவுகூட பாதிக்காத அளவு நீயும் சந்தோஷமாத்தானே தொடக்கத்தில் இருந்தே."

ஸ்ரீலதாவின் மௌனமும் சிந்தனையுமே அனுஷா கூறுவதை ஏற்றுக்கொள்வது போலத்தான் இருந்தன.

"சொல்லு ஸ்ரீ. எப்போதிலிருந்து மாறினே? அதாவது எப்போதிலிருந்து கார்த்திக்கின் மீது வெறுப்பு வந்தது...? இந்த வீட்டுக்கு நீ வரக்கூடாதுன்னு கார்த்திக் சொன்னதிலிருந்துதானே?"

"ஆமாம். அதில் என்ன தப்பு?"

"தப்பில்லை. அதே மாதிரி ஆண்கள் இந்த மாதிரி நடந்துக்கறதும் சகஜம்தான்."

"நீ இதைச் சொல்லக்கூடாது அக்கா. உன் ஹஸ்பெண்ட் அப்படியா இருக்கார்?"


அனுஷா தத்தளிக்கத் தொடங்க, பேச்சின் போக்கை ஸ்ரீலதா மாற்றிக் கொள்வதாக இல்லை.

"எவ்வளவு புரிந்து கொண்டவரா உன் கணவர் இருந்திருக்கார். என்னோடுதான் நீ படுத்துத் தூங்கணும்னு நான் முட்டாள்தனமா அடம்பிடிச்சபோது கூட அவர் விட்டுக் கொடுக்கலையா? மனசுக்குத்தானே அவர் முன்னுரிமை தந்தார். அதுவும் மனைவியின் தங்கையோட மனசு. ஓர் அண்ணனா, ஏன் அப்பாவாவே கூட அவர் என்னிடம் நடந்து கொண்டார். அவர் தான் ஆண்பிள்ளை."

ஆக இவள் மனத்தில் ஒரு ஒப்பீடு நடந்திருக்கிறது. தன் கணவரைவிட ராஜனை உயர்வாக நினைக்கிறாள். அனுஷாவுக்கு ஒரு விதத்தில் பெருமையாக இருந்தது. ஆனாலும் கார்த்திக் குறித்த எதிர்மறை

பாபா 80

நன்றி மறத்தல், புறங்கூறல், பொய் சொல்லல், பிறரைப் பழித்தல் எனும் குற்றங்களற்றவன் குணவானாவான்.



எண்ணங்களை இவளிடமிருந்து போக்கியாக வேண்டும். எப்படி? எப்படி? சட்டென அதுதான் தோன்றியது.

"என்ன இருந்தாலும் உன் கணவர் ஒரு கார்டியாலஜிஸ்ட். அவருக்குச் சமுதாயத்துல இருக்கிற மதிப்பு ராஜனுக்குக் கிடையாது. இவர் ஒரு மிருக வைத்தியர்தானே."

ஸ்ரீலதா நம்ப முடியாதவளாய் அனுஷாவைப் பார்த்தாள்.

"யானைக்கு ஊசி போட்டுக்கொண்டு, மலைப்பாம்புக்கு அறுவை சிகிச்சை செய்துக்கிட்டு... நினைச்சாலே எனக்குக் குமட்டுது ஸ்ரீ"

"உனக்கு அறிவு கெட்டுப் போச்சாக்கா?"

சட்டெனத் தூக்கி வாரிப்போட்டவளாய் அனுஷா நிமிர்ந்தாள்.

(அடுத்த இதழில் முடியும்)

"யோசித்துப்

சுறுசுறுவென்றிருக்கிறது 'செல்வி' யூனிட். பரபரவென்று நடித்துக் கொண்டிருந்த ராதிகாவை ஷாட் முடிந்ததோ இல்லையோ, சரசரவென்று ஓரம் கட்டினோம்.

ராடன் நிறுவனத்தைத் தொடங்காமலேயே உங்களால் டி.வி.யில் பிரகாசித்திருக்க முடியுமா?

"ஒரு கட்டத்துக்குமேல் என்னால் சினிமாவில் வளர முடியாது என்று நினைத்தபோதுதான் ராடன் நிறுவனத்தைத் தொடங்கினேன். வழக்கம்போல் 'அச்சச்சோ டி.வி.க்கா போறீங்க' என்று பல கேள்விகள், தடங்கல்கள். எதையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. என் வாழ்க்கை என் கண்ட்ரோலில் இருக்க நினைத்தேன். நான் முதல்போட்டு ஆரம்பித்த ராடன், பின்னர் பிரைவேட் லிமிடெட் கம்பெனியாகி, இன்று பப்ளிக் லிமிடெட் கம்பெனியாக மாறியுள்ளது. நான் நினைத்த மாதிரியே எனக்குப் பிடித்த கேரக்டர்களை செய்து வருகிறேன். சின்னத் திரையுலகில் புரொஃபஷனலாக இயங்கி வரும் நிறுவனம் என்றால் அது ராடன்தான். சினிமாவில் நுழைந்து முதல் படமான 'ஜெய்ராம்'மில் தோல்வி கண்டாலும், அடுத்த படமான 'ஜித்தன்'னில் லாபம் ஈட்டி விட்டோம். அடுத்ததாக சரத்தின் நூறாவது படமான 'தலைமகன்' ஜரூராகத் தயாராகி வருகிறது."

ஏன் உங்களுடைய சீரியல்களில் எப்பொழுதும் 'இருதார' உறவுகள் இடம் பிடிக்கின்றன?

"சீரியலில் வருவதெல்லாம் எங்கேயோ ஒரு குடும்பத்தில் நடக்கிற கதை. ஏன் இதை ஒட்டுமொத்த தமிழ்நாடாகப் பார்க்கிறீர்கள்? சில சமயங்களில் நாங்கள் எடுக்கும் கதைகள், அதுபோன்ற களங்களில் அமைந்து விடுகின்றன. இதில் எந்த திட்டமிடலும் இல்லை. விமர்சனங்கள் வரவேற்கப்பட வேண்டியவைதான். ஆனால் ஒன்று... பத்திரிகைகளின் சினிமா விமர்சனங்கள் பாக்ஸ் ஆபீஸ் ரிப்போர்ட்டைப் பிரதிபலிக்காது. அது போலத்தான் இதுவும்."

அடுத்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பாக உங்களை நிறுத்தப்போவதாகச் செய்திகள் வருகின்றனவே...

"அதெல்லாம் சும்மா கதை. கலைஞர் குடும்பத்துடன் நெருக்கமாக இருப்பதால் இப்படியெல்லாம் எழுதுகிறார்களோ என்னவோ? அரசியல் என்பது முழுநேர வேலை, கடமை. அதற்கான நேரம் என்னிடத்தில் இப்போதைக்கு இல்லை. இன்று என் குடும்பம், ராடன் யூனிட் என்று என்னை நம்பி எவ்வளவு பேர் இருக்கிறார்கள்! எனக்கு அவர்கள் முக்கியம். இந்தப் பொறுப்பிலிருந்து கொண்டு என்னால் வேறு எதையும் யோசிக்க முடியாது. நான் என்றைக்கும் அரசியலில் நுழையப் போவதில்லை. அதைப் பற்றி நினைக்கவே எனக்கு நேரம் கிடையாது."

நடிப்புப் பயணத்தில் நீண்ட தூரம் வந்துவிட்டீர்கள். சோர்வு ஏற்படவில்லையா?

"ம்... அடிக்கடி 'என்னடா இது' என்று ஒருவித சலிப்பும் சோர்வும் ஏற்படும். நானும் 'சூப்பர் வுமன்' கிடையாதே. ஆனாலும், இந்த நிலைமைக்கு வருவதற்கு நான் தாண்டி வந்த தடைக் கற்களை நினைத்து எனக்குள் நம்பிக்கையூட்டிக் கொள்வேன். எவ்வளவு கஷ்ட நஷ்டங்களைச் சந்தித்திருக்கிறேன் தெரியுமா? சீரியலைவிட பரபரப்பான திருப்புமுனைகள் நிறைந்தது என் வாழ்க்கை. கூட இருந்தவர்களே எனக்கு துரோகம் பண்ணின துண்டு. முதலில் அப்படியே இடிந்துபோய் விடுவேன். பிறகு 'அவர்கள் அவ்வளவுதான். நாம்தான் உண்மையையும் கண்ணியத்தையும் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்' என்று என்னையே நான் சமாதானப் படுத்திக் கொள்வேன்."

சரத்குமார் எந்த மாதிரியான படங்கள் பண்ண வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

"பி அண்ட் சி ஏரியாக்களில் குறிப்பிட்ட ஹீரோக்களால் மட்டுமே புகழ் பெற முடியும். அவர்களில் ஒருவர்தான் சரத்குமார். என் இஷ்டத்துக்கு அவர் படம் பண்ணுவதைவிட, மக்களின் இஷ்டத்துக்கு படம் பண்ணுவதே சரியாக அமையும். ஊர்ப் பக்கம் போனால் அவருக்குள்ள ரசிகர் கூட்டத்தை யாராலும் நினைத்துக்கூட

பேசுங்கள்!"



பார்க்க முடியாது. அவ்வளவு உயிராக இருக்கிறார்கள்."

தங்கர்பச்சான் விவகாரத்தில் கருத்தைத் தெரிவித்த நீங்கள், குஷ்பு விவகாரத்தில் அமைதியாகி விட்டீர்களே?

"இப்பவும் சொல்கிறேன், தங்கர்பச்சான் பேசியது நூறு சதவீதம் தவறுதான். அதற்கு அவர் மன்னிப்புக் கேட்டுவிட்டார். அந்தப் பிரச்னையும் அத்தோடு முடிந்துவிட்டது. இது சொந்த வீட்டில் நடக்கும் ஒரு பூசல் தான். மற்றபடி குஷ்பு விவகாரம் பற்றி இப்பொழுது நான் கருத்துத் தெரிவித்தால், அது நீதிமன்ற அவமதிப்பாக இருக்கும். என் தனிப்பட்ட கருத்தை நான் குஷ்புவிடமே தெரிவித்துவிட்டேன். பொதுவாக இன்றைக்கு நடிகர், நடிகைகள் பத்திரிகைகளில் எது பேசினாலும் சர்ச்சைக்குரியதாக மாறிவிடுகிறது எனும் பொழுது, நாம் எது பற்றிப் பேசினாலும் யோசித்துப் பேச வேண்டும். இல்லாவிட்டால் பேசக்கூடாது."

- ச.ந.கண்ணன்

படம் : **ஸ்ரீஹரி**

உறவின் நிறம்!

மருத்துவமனை ஆலமரத்தடி மேடையிலே காக்கா ஒண்ணு செத்துக் கிடந்தது. ஊரிலுள்ள காக்காவெல்லாம் ஒண்ணு கூடி கா... காவென கத்தி, ஆலமரத்தைச் சுற்றிச் சுற்றி வந்து வட்ட மடித்து ஒப்பாரி வைத்தன.

"என்னடா இது காலங்காத்தால போராட்டமா போச்சு, வியாபாரம் பண்ண விடாம? மொதல்ல அந்த செத்துப்போன காக்காயத் தூக்கி காம்பவுண்டுக்கு வெளிய கடாசுடா முத்தையா." குமாஸ்தாவுக்கு உத்தரவிட்டான் கேன்டீன் மொதலாளி சர்புதீன்.

அவசரமாக காக்காவை எடுத்து வெளியே வீச ஓடினான் முத்தையா.

அதுவரை வானத்திலே பறந்துகொண்டிருந்த காக்கைகள், நிமிடத்தில் முத்தையாவைக் கொத்த சர்ரென கீழே இறங்க, அலறியபடியே கடைக்குள் ஓடி மறைந்தான் முத்தையா.

விபத்தில் உயிரிழந்த காளியப்பன் உடல், மார்ச்சுவரியில் போஸ்ட்மார்ட்டம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

காமாட்சி வேப்ப மரத்தடியில் நின்றபடி தனது பத்து வயது மகளையும் எட்டு வயது மகளையும் கையில் பிடித்தபடி அழுது கொண்டிருந்தாள்.

"ஏம்பா, போஸ்ட்மார்ட்டம் முடிஞ்சு யாருப்பா பொணத்தை எடுத்துப் போறது?" என்றான் காளியப்பன் அண்ணன் சேனாபதி.


"நல்லா இருக்குதே கதை... பொண்ண நாங்க குடுத்ததோட முடிஞ்சு போச்சு. நல்லது கெட்டதையெல்லாம் உன் ஊருல வச்சி நீதான் செய்யணும். இதெல்லாம் எங்க வீட்டுல செய்யற வேலை கிடையாது. நாங்க பணம் செலவு பண்ணவும் முடியாது'' என்றான் காமாட்சியின் அண்ணன் சோலையப்பன்.

"நான் ஏன்யா செய்யணும்? எனக்கும் அவனுக்கும் உறவறுந்து அஞ்சு வருஷமாச்சு. அவன் கம்பெனிக்குப் போறேன், கம்பெனிக்குப் போறேன்னு சம்பாதிச்சத எல்லாம் குடிச்சி அழிச்சி ஆக்ஸிடெண்ட்ல செத்தா, அதுக்கு நாங்க என்ன பண்றது? கூடப் பொறந்த தோஷத்துக்காக்



அவன் முகத்தைப் பாக்க வந்தேன். என் வீட்டுக்கு நான் பொணத்தை எடுத்துப்போனா என் பொண்டாட்டி என்னை வீட்டுலயே சேக்க மாட்டா. நீ பொணத்தை எடுத்தா எடு, எடுக்காட்டி போய்யா" என்றபடியே பிணத்தைக்கூட பார்க்காமல் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு சேனாபதி கிளம்ப, அவன் பின்னாடியே அவன் உறவுக் கூட்டம் கிளம்பிச் சென்றது.

"ஏண்டி, புருஷன் புருஷன்னு அவன் பின்னாடியே சுத்தின... அவன் பணம் சம்பாதிக்கிற திமிர்ல அம்மா வீட்டு வாசப்படிய மிதிக்கல. இப்ப அவனும் விபத்துல போய்ச் சேந்துட்டான். பத்து பைசா பணமும் வராது. எந்த லாரிக்காரன் அடிச்சான்னும் தெரியல... இந்த லட்சணத்துல உன்னைக் கூப்பிட்டுப் போய் நான் வச்சிக்கினு இன்னா பண்றது? யாரு காலத்துக்கும் வச்சிக்கினு அழறது...? என் பொண்டாட்டி மட்டும் சும்மா இருப்பாளா? அவளே ராட்சசி... நீ எப்படியாவது பொணத்தை எடு, மறந்துகூட அண்ணன் வீடுன்னு வந்துடாதே... எங்கேயாவது போய் எப்படியாவது பொழச்சுப் போ... வாங்கய்யா



என். கோதண்டராமன்

போகலாம்" சோலையப்பன் கும்பலும் அவன் பின்னாடியே சென்றது.

"ஏம்பா அந்த ஆக்ஸிடெண்ட் கேஸ் போஸ்ட்மார்ட்டம் பண்ணியாச்சு. ஆம்புலன்சுல ஏத்தணும்... ரெண்டு குழந்தைகளோட ஒரு அம்மா, அவங்க ஜனமெல்லாம் இருந்தாங்களே... எங்கே காணோம்?" மார்ச்சுவரி ஆட்கள் வருவோர் போவோரிடம் விசாரித்துக் கொண்டிருந்தனர்.

காக்கைகள் கூட்டம் செத்துப்போன காகத்திற்கு ஒப்பாரி வைத்தபடி, காகத்தை யாரும் தொட முடியாதபடி விரட்டிக் கொண்டிருந்தன. ●

ரோஜாவைப் பாருங்கள்!

காங்கேயம், ஸிந்தி, ஹோல்ஸ்டீன் என்பது போலப் பல ஜாதிப் பசுக்கள் உள்ளன. வெள்ளையும் கறுப்பும் கலந்ததாகவும், வெள்ளையும் சிவப்பும் கலந்த தாகவும் சில பசுக்களைப் பார்க்கிறோம். எந்த ஜாதி, எந்த நிறமானாலும் எப்பசுவும் தருவது ஒரே பால்தானே? அதேபோல மதங்கள் பலவாயினும் அவற்றின் போதனாஸாரம் ஒன்றேதான்.

ரோஜா மலரை வெவ்வேறு குடுவை (Vase) களில் வைப்பதுபோல, ஒரே தெய்வ தத்வத்தைத்தான் வெவ்வேறு ஸம்பிரதாயங்களில் வைத்து, வெவ்வேறு மதங்கள் தருகின்றன. மலரைப் பாராமல் குடுவையையே பார்ப்பதால்தான் வித்யாஸமே தெரிகிறது. அதனால் விரோதம் விளைகிறது.

யோசித்துப் பார்த்தால் தெய்வ பக்தி, உயிர்க்குல அன்பு, அஹம்பாவமின்மை, தியாகம், சீலமான நடத்தை இவைதானே ஒவ்வொரு மதம் போதிப்பதும்... மாறாக எந்த மதமேனும் சொல்கிறதா? ஸாரத்தை விட்டு சக்கையையே பிடித்துக் கொண்டிருப்பதால்தான், ஸ்வமதாபிமானிகளில் பலர் மத (Mata)த்துக்குப் பதில் மதம் (Madam) பிடித்துத் திரிகிறார்கள்.

அவரவர்க்கும் இயல்பாய் வாய்த்த ஸ்வமதத்தில் இல்லாததில்லையாதலால் யாரும் அதைவிட்டு இன்னொன்றுக்குப் போக வேண்டாம். அதற்காகப் பரமத நிந்தனை செய்ய வேண்டாம். உனக்கு உன் தாய் போல், அவரவருக்கு அவரவருடைய தாய் என்றிரு.

எல்லா மார்க்கங்களையும் ஒருவர் மேற்கொள்ள முடியாது. அது அவசியமேயில்லை. எந்த ஒன்றில் சென்றாலும் அதுவே லக்ஷ்யத்தில் சேர்த்துவிடும். ஆகையால் எல்லா தத்வ சாஸ்திரங்களையும் படித்துப் படித்துப் பொழுதை வீணாக்குவதைவிட, தனக்கான ஒன்றை முழுமையாகத் தெரிந்துகொண்டு, அதை அனுஷ்டித்துப் பொழுதைப் பயனுள்ளதாக்கிக் கொள்வதே அறிவுடைமை.

என்றாலும், நமக்கு எப்பேர்ப்பட்ட ஆன்மிக பாரம்பரியமுள்ளது என்று பாரதீயர்களான யாவரும் உணரவும், வெளிநாட்டாருடைய எல்லா மதங்களிலும் எப்பேர்ப்பட்ட சிந்தனை ரத்னங்கள் இருக்கின்றனவென்று அறிந்து மகிழ்வதற்காகவுமே பலத்தரப்பட்ட பொருள்களை வாசக வட்டத்தில் ஆராய்வதற்கு அனுமதித்திருக்கிறேன். இதனால் அந்த ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவருமே ஆழ்ந்து கற்றுத் தேர்ந்து வரவேண்டுமென்று அர்த்தமில்லை.


ஒருவரைக் கடைத்தேற்ற ஒரு உபதேசமே போதும்; ஒரு நாமமே போதும்!

சத்ய சாயி 80


நவம்பர் 23, சத்யசாயி ஜயந்தி

கந்தப்ப பிள்ளை சொன்ன கதைகள்-5

"எனக்குப் புத்தி தெளிந்து கண்ணை விழித்துப் பார்த்தபோது, நான் கண்ட பயங்கரமான காட்சியை என் ஆயுள் உள்ளவரையும் மறக்கமாட்டேன். எனக்கு எதிரே ஒரு பெரிய ஆலமரம், பச்சை ஆலமரம்; நெருப்புப் பற்றி எரிந்து கொண்டிருந்தது. அந்த மரத்துக்கு அடியில் ஒரு மோட்டார் வண்டியும் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. ஆகாயத்திலும் பூலோகத்திலும் சூழ்ந்திருந்த காடாந்தகாரத்துக்கு நடுவில், இம்மாதிரி ஒரு பச்சை மரமும் அதனடியில் ஒரு மோட்டாரும் நெருப்புப் பிடித்து எரிந்து கொண்டிருந்தால் என்னமாயிருக்கும்? அப்போது சிறு தூற்றல் வேறு போட்டுக் கொண்டிருந்தது. அந்த மழைத் துளிகள், எரிகின்ற தீயின் ஜ்வாலையில் விழுந்து மறைந்து போய்க் கொண்டிருந்ததைப் பார்க்கும்போது, அக்னி பகவான், நாக்கை நீட்டி அந்த மழைத்துளிகளை ருசிப்பதுபோலவும், 'என்னுடைய பெருந்தாகத்துக்கு இந்தத் துளிகள் போதுமா?' என்று மேலும் மேலும் மேக மண்டலத்தை நோக்கிப் போவது போலவும் இருந்தது. இந்த பயங்கரக் காட்சியைப் பார்த்துக்கொண்டு ஒரு நிமிஷம் கிடந்த இடத்திலேயே கிடந்தேன். தெய்வாதீனமாக, அப்போது காரில் என் தவுல் இருந்தது ஞாபகம் வந்தது! உடனே எனக்கு உயிர் வந்துவிட்டது. மறு நிமிஷம் பாய்ந்துசென்று வண்டியின் அருகில் போனேன். வண்டி மரத்தில் முட்டி நொறுங்கிக் கிடந்தது. நல்ல வேளையாக என்ஜினில்தான் நெருப்புப் பிடித்துக் கொண்டிருந்தது. இன்னும் அடிப்பாகத்துக்கு வரவில்லை. தவுலையும் நாயனங்களையும் எடுத்து அப்புறப்படுத்திவிட்டு, மனுஷர்களின் நிலைமை என்னவென்று பார்த்தேன். டிரைவர் அப்போதுதான் எழுந்து வந்து கொண்டிருந்தான். அவன் தலையில் அடிபட்டு இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. 'அடப்பாவி! இப்படிப் பண்ணிவிட்டாயேடா! நீ நாசமாய்ப்




போக!' என்று வைதுவிட்டு, தம்பி எங்கே என்று பார்த்தேன். கொஞ்சம் தூரத்தில் அவன் கிடந்ததைக் கண்டதும் இரண்டு எட்டில் பாய்ந்து ஓடினேன். கட்டை மாதிரி கிடந்தான். ஐயோ! பாவி போய்விட்டானோ? மாரைத் தொட்டுப் பார்த்தேன். அடிக்கிற சத்தமே கேட்கவில்லை. கையைப் பிடித்துப் பார்த்தேன். நாடி அடிக்கவில்லை. மூக்கின் அருகில் கையை வைத்தேன். இலேசாக மூச்சு வருவதுபோல் தோன்றிற்று; கொஞ்சம் எனக்கு உயிர் வந்தது.

அமரர் கல்கி



திருவழுந்தூர் சிவக்கொழுந்து



"இதற்குள்ளாக ஜனங்கள் பேசுகிற கலகல சப்தம் கேட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தேன். ஏழெட்டுப் பேர் கையில் லாந்தர்களுடன் ஓடிவந்து கொண்டிருந்தார்கள். அதற்கு வெகு சமீபத்தில் ரயில்வே ஸ்டேஷன் இருந்ததாகப் பின்னால் தெரிந்துகொண்டேன். கடவுளுடைய செயலைப் பாருங்கள், ஐயா! அவர் தண்டனை அளிக்கும்போது கூட, கொஞ்சம் கருணையும் காட்டுகிறார். சஞ்சாரமே இல்லாத இடத்தில் இந்த மாதிரி விபரீதம் நடந்திருந்தால் எங்கள் கதி என்ன ஆகியிருக்கும்...?"

''பிள்ளைவாள்! எனக்குப் புரியவில்லை. என்னதான் நடந்தது? ஏன் மரம் பற்றிக் கொண்டது? ஏன் மோட்டார் எரிந்தது...?'' என்றேன்.

''தெரியவில்லையா ஐயா! பச்சை மரம் ஏன் எரியும் நீங்கள்தான் சொல்லுங்களேன்? இடி விழுந்துதான்..."

"ஐயோ, அனுமார் கோயிலில் செய்த சபதம்...!"


"ஆமாம் சாமி, ஆமாம்! அனுமார் கோயிலில் சிவக்கொழுந்து செய்த சபதம் பலித்துவிட்டது. அவ்வளவு சமீபத்தில் இடிவிழுந்த அதிர்ச்சியினால் தம்பியின் மூளை கலங்கிப் போயிருக்க வேண்டும். ஸ்டீரிங்கிலிருந்து கை நழுவியது. வண்டி மரத்தின் மேல் முட்டியது. மூலைக்கு ஒருவராய்ப் போய் விழுந்தோம். ஆனால்; அதிசயத்தைக் கேளுங்கள். யாரும் சாகவில்லை. எங்களுக்கெல்லாம் சிறு காயங்களுடன் போயிற்று. தம்பிக்கு மட்டும் - தம்பிக்கு மட்டும்... சாமி! அதை நினைக்கும்போது தெய்வத்தின் தண்டனை என்றுதான் நம்ப வேண்டியதாயிருக்கிறது. ஆனால் அந்தச் சமயம் இதைப் பற்றியெல்லாம் நான் நினைக்கவில்லை. தம்பிக்கு மூர்ச்சை தெளிவிப்பதற்கு என்னவெல்லாமோ செய்து பார்த்தோம். மூர்ச்சை தெளியவில்லை. அடுத்த ரயிலில் கும்பகோணத்துக்கு டிக்கட் வாங்கிக்கொண்டு கிளம்பினோம். ரயிலில் தம்பியின் முகத்தை உற்றுப் பார்த்தபோதுதான், 'ஐயோ! இது தெய்வ தண்டனைதானோ' என்று எனக்குச் சந்தேகம் உதித்தது.

கட்டை மாதிரி அவன் பிரக்ஞை யற்றுக் கிடந்தபடியால் உயிர் இருக் கிறதோ இல்லையோ என்று எனக்கு அடிக்கடி பயம் ஏற்படும். உடனே தம்பி யின் முகத்தைப் பார்ப்பேன். அந்த முகத்தில் ததும்பிய ஜீவகளையைப் பார்த்துத் தைரியம் அடைவேன். இப்படி ஒரு தடவை பார்த்தபோது மூடியிருந்த தம்பியின் கண்களின் ஓரத்தில் ஏதோ பளபளவென்று சிவப்பாகத் தெரிந்தது. உற்றுப் பார்த்தேன். பகவானே!

அப்போதுதான் என் நெஞ்சை யாரோ ஈட்டியால் குத்திப் பிளப்பது போல் இருந்தது. ஏனெனில் மூடியிருந்த இரண்டு கண்களின் முனையிலும் இரத் தத் துளிகள் காணப்பட்டன. எலக்ட்ரிக் லைட்டின் பிரகாசத்தில் அவை அப்படி உயர்ந்த ரத்தினக் கற்களைப் போல் பிரகாசித்தன.

என் மனசில் அப்போது ஏற்பட்ட பயங்கரமான சந்தேகம் நாலு நாளைக் கெல்லாம் ஆஸ்பத்திரியில் உறுதிப்பட் டது. கும்பகோணத்தில் நம்முடைய பிரபல காங்கிரஸ் டாக்டர் இருக்கிறார் அல்லவா? அவருடைய ஆஸ்பத்திரிக்குத் தான் அழைத்துச் சென்றேன். முதல் மூன்று நாலு நாளும் டாக்டர் ஒன்றும் சொல்லவில்லை. நாலாம் நாள், என்னைக் கூப்பிட்டு, ஸ்பஷ்டமாகச் சொல்லிவிட் டார். 'பையனுக்கு மனம் கொஞ்சம் குழம்பியிருக்கிறது. கொஞ்ச நாளில் இது சரியாகப் போய்விடும். ஆனால் கண் இரண்டும் போனது போனதுதான்' என்று சொன்னார். அவரை நான் காரணம் ஒன்றும் கேட்கவில்லை. எனக்குத்தான் காரணம் தெரியுமே? ஹனுமார் கோயிலில் தம்பி செய்த பிரமாணம் அப்படியே பலித்துவிட்டது. 'இனிமேல் மதுபானம் செய்தால், என் தலையில் இடி விழட்டும், என் கண் அவிந்து போகட்டும்' என்று சபதம் செய்தபடியே ஆகிவிட்டது.

தம்பி மூன்று மாதம் ஆஸ்பத்திரியில் இருந்தான். கொஞ்சம் கொஞ்சமாகப் புத்தி தெளிவடைந்து வந்தது. பத்து நாளைக்குள் நான் இன்னாரென்று தெரிந்துகொண்டு பேச ஆரம்பித்தான். கண்ணுக்கு இன்னும் கட்டுப் போட்டி ருந்தது. கண் போய் விட்டது என்ற செய்தியைச் சொல்ல எனக்குத் தைரியம் வரவில்லை. நான் இல்லாத சமயத்தில் டாக்டரையே தெரிவிக்கும்படிச் சொல்லி விட்டேன். இனிமேல் தனக்குக் கண் தெரியவே தெரியாது என்று அறிந்ததும் அவனுக்கு மறுபடியும் சித்தப்பிரமை மாதிரி ஆகிவிட்டது. சம்பந்தமில்லாமல் தனக்குத்தானே பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டுமிருந்தான். இவ்வளவு கூத்தில் அவன் அந்த நாடகக்காரியை மட்டும் மறக்கவில்லை. அடிக்கடி 'மனோ ரஞ்சிதம்', 'மனோரஞ்சிதம்' என்று சொல்லிக்கொண்டும் வாய்க்குள்ளே சிரித்துக்கொண்டும் இருந்தான். இதனால் வனஜாவை அவனைப் பார்ப்பதற்கு அழைத்துக் கொண்டு வருவதற்கு எனக்குப் பிடிக்கவில்லை.



வனஜாவோ, தான் அவரைப் பார்க்க வேண்டும், பார்க்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தாள். யாரும் பார்க்கக்கூடாது என்று டாக்டர் கண்டிப்பாய் கட்டளையிட்டிருப்பதாகச் சொல்லிக் காலம் ஓட்டிக்கொண்டிருந்தேன். கடைசியில் அவளுடைய தொந்தரவு பொறுக்க முடியாமல் ஒரு நாளைக்கு அழைத்துக்கொண்டு வந்தேன். அவள் பார்க்க வரும் விஷயத்தைத் தம்பியிடம் தெரியப்படுத்த வேண்டாமென்று இரண்டு பேருமே பேசித் தீர்மானித்திருந்தோம். அவ்வாறே அவள் அவன் படுத்திருந்த அறையில் வந்து பேசாமல் மௌனமாய் நின்றாள்.

நான் பயந்தபடியே ஆயிற்று. சிவக்கொழுந்து தனக்குத் தானே பேசிக்கொள்கையில், 'அடி மனோரஞ்சிதம்! என் கிளியே! மடமயிலே! மானே! தேனே', என்றெல்லாம் பிதற்றினான். நான் மிகுந்த கவலையுடன் வனஜாவைப் பார்த்தேன். ஐயா! ஸ்த்ரீகளின் இதயத்தை ஆண்பிள்ளைகளால் கண்டுபிடிக்க முடியாது என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்களல்லவா? அது உண்மையென்று அப்போது எனக்குத் தெரிந்தது. இந்த மாதிரி சிவக்கொழுந்து இன்னும் மனோரஞ்சிதத்தின் பெயரை ஜபம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, வனஜா மனம் வெறுத்துப் போய்விடுவாள் என்றும், தம்பியின் மேல் அவளுக்கிருந்த பாசம் போய்விடுமென்றும், அப்புறம் அவனைப் பார்க்க வரவேண்டுமென்றே சொல்ல மாட்டாள் என்றும் நினைத்தேன். ஆனால் நடந்தது இதற்கு நேர்



மாறாகயிருந்தது. வனஜாவின் மனம் கொஞ்சம்கூட சலிக்கவில்லையென்று கண்டேன். உண்மையில் அவளுடைய பாசம் முன்னைவிட அதிகமானதாகத் தோன்றிற்று.

தினந்தோறும் தன்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போக வேண்டுமென்றும் ஆனால் தம்பிக்குச் சொல்லக்கூடாதென்றும், அவள் பிடிவாதம் பிடித்தாள். தம்பிக்குத் தன் வீட்டிலிருந்துதான் சாப்பாடு கொண்டு வரவேண்டுமென்றும் சொன்னாள். அவளே சில சமயம் எடுத்துக்கொண்டு வந்தாள். இதெல்லாம் எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. முன்னே சிவக்கொழுந்துக்கும் வனஜாவுக்கும் கல்யாணம் பண்ணி வைக்க வேணுமென்று நான் எண்ணியது வாஸ்தவந்தான். ஆனால் இப்போது அது நடக்கக்கூடிய காரியமா? அவளுடைய தாயார் சம்மதிப்பாளா? இந்தப் பைத்தியக்காரப் பிள்ளைதான் சம்மதிக்கப் போகிறானா? இவ்வளவுக்குட்' பிறகு இன்னும் அவனுக்கு 'மனோரஞ்சிதம் பிரேமை' போகவில்லையே! பின்னே வனஜாவின் பாசத்தை வளர விடுவதில் என்ன பிரயோஜனம்?

இப்படி நான் எண்ணிக் கொண்டிருக்கையில்! வனஜா சொன்ன ஒரு விஷயம் என்னைத் திடுக்கிடச் செய்துவிட்டது. 'மாமா, நான் சொல்கிறதற்கு நீங்கள் சம்மதிக்க வேணும்' என்று அவள் ரொம்ப நேரம் பூர்வ பீடிகை போட்டுவிட்டுக் கடைசியில் 'நான் என் பெயரை மாற்றி மனோரஞ்சிதம் என்று வைத்துக்கொள்ளப் போகிறேன். நீங்கள் சம்மதம் கொடுக்க வேணும்' என்றாள். முதலில், அவளுடைய நோக்கம் இன்னதென்பது எனக்கு விளங்கவில்லை. பிற்பாடு அவளுடன் பேசித் தெரிந்து கொண்டேன். தம்பிக்குத்தான் கண் தெரியாதல்லவா? இதைச் சாதகமாக வைத்துக் கொண்டு, வனஜா தன்னை மனோரஞ்சிதமாக மாற்றிக் கொள்ளப் போவதாய்ச் சொன்னாள். மனோரஞ்சிதம் மாதிரியே தன்னால் பேசவும் பாடவும் முடியுமென்று சொல்லி, அந்தப்படியெல்லாம் எனக்குச் செய்து காட்டினாள். குரல், பேச்சு எல்லாம் தத்ரூபம். நாடக மேடையில் நான் பார்த்தபடியே இருந்தது.

எனக்கென்னமோ தம்பியை இப்படி ஏமாற்றுவது பிடிக்கவேயில்லை. அதனால் என்ன கேடு விளையுமோ என்னமோவென்று பயமாயுமிருந்தது. ஆனாலும் வனஜாவின் பிடிவாதத்தையும் கண்ணீரையும் என்னால் எதிர்த்து நிற்க முடியவில்லை. 'மாமா! எனக்கு அவரைத் தவிர வேறு கதி கிடையாது. வனஜாவை அவருக்குப் பிடிக்காதபடியால் மனோரஞ்சிதமாகி விடுகிறேன் இதற்கு நீங்கள் சம்மதிக்க வேண்டும். இல்லாவிடில் உயிரை விட்டுவிடுவேன். ஸ்திரீ ஹத்தி தோஷம் உங்களை விடாது' என்றாள்.

பல நாள் தயங்கித் தயங்கி, கடைசியாக இந்த மோசடிக்கு நான் சம்மதித்தேன். அந்தப் பெண்ணின் துயரத்தை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. ஒருவேளை யுக்தி பலித்தால், சிவக்கொழுந்து மனந்தேறி முன்போல் மனுஷனாகலாம் என்ற ஆசையும் எனக்கு இருந்தது. ஆனால் கவலையும் திகிலும் ஒருபுறம் இல்லாமற் போகவில்லை. முதலில் யுக்தி பலிக்க வேண்டும்; பிறகு உண்மை வெளியாகும் போது, தம்பி என்ன செய்வானோ என்னமோ? பகவான் இருக்கிறார். நடக்கிறபடி நடக்கட்டும் என்று தீர்மானித்து விட்டேன்.



மறுநாள், வனஜாவை அழைத்துக் கொண்டு தம்பியின் வீட்டுக்குப் போனேன்.

தம்பியிடம் இந்தப் பேச்சை எப்படி எடுக்கிறது என்று நான் தயங்கிக் கொண்டிருக்கையில், தற்செயலாக வனஜாவின் கைவளையல்கள் குலுங்கின. அதைக்

கேட்டதும் தம்பிக்கு ஒரே ஆச்சரிய மாய்ப் போயிருக்க வேண்டும்.

'மாமா! யார் அது?' என்று கேட்டான்.

நல்ல வேளையாய்ப் போச்சு என்று நான் நினைத்துக் கொண்டு 'தம்பி! உன்னைப் பார்ப்பதற்காகப் பட்டணத்தி லிருந்து மனோரஞ்சிதம் வந்திருக்கு' என்றேன்.

"என்ன? மனோரஞ்சிதமா?" என்று கேட்டுக்கொண்டு தம்பி படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான். ஒரு நிமிஷம் எனக்கு ரொம்ப பயமாய்ப் போய்விட்டது.

அதே சமயத்தில், வனஜா சட்டென்று அருகில் வந்து 'ஆமாம், நான் தான் வந்திருக்கிறேன். நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லிக் கொண்டே, அவனுடைய தோள்களைப் பிடித்து மெதுவாகப் படுக்க வைத்தாள்.



ஐயோ! அப்போது தம்பி பார்த்த பார்வை இன்னும் என் மனசில் அப்படியே நிற்கிறது. ஒளி இழந்த அவனுடைய கண்களால் அப்படி வெறிக்க வெறிக்க விழித்துப் பார்த்தான். ஒரு பொருளை இழந்த பிறகுதான் அதனுடைய அருமை மனுஷர்களுக்கு நன்றாய்த் தெரிகிறதல்லவா? அவ்விதமே, கண் பார்வையின் அருமையை அந்த சமயத்தில் தம்பி ரொம்பவும் உணர்ந்திருக்க வேண்டும். 'போன பார்வை திரும்பி வராதா?' என்ற அளவில்லாத ஆத்திரத்தை அச்சமயம் அவனுடைய முகத்திலே பார்த்தபோது, எனக்குப் பெரிய வேதனை உண்டாயிற்று. இவனை ஏமாற்றுகிறோமே என்ற பச்சாதாபமும் ஏற்பட்டது. ஆனால், எப்படியோ இந்தப் பெண்ணின் வார்த்தையைக் கேட்டு இந்த மோசடியில் இறங்கியாகிவிட்டது. இனிமேல் தயங்கி என்ன பிரயோஜனம்?

முன்னாலேயே நானும் வனஜாவும் யோசித்துக் கற்பனை செய்திருந்த கதையை அப்போது சொன்னேன். தம்பி ஸ்மரணையிழந்திருந்தபோது அடிக்கடி 'மனோரஞ்சிதம்' என்று சொல்லிக் கொண்டிருந்ததாகவும், அவள் வந்தால் தான் அவனுக்குக் குணமாகுமென்று நினைத்து நான் கடிதம் எழுதினதாகவும், அதன் பேரில் அவள் வந்திருப்பதாகவும் பாடம் ஒப்புவித்தேன்.

வனஜா நான் சொன்னதை ஆமோதித்தாள். 'மாமாவின் கடிதம் பார்த்ததும் ஓடி வந்தேன்; உங்களுக்கு உடம்பு நன்றாய் சௌக்கியமான பிறகுதான் திரும்பிப் போகப் போகிறேன்' என்றாள்.

கொஞ்ச நேரம் ஏதோ பேசிக் கொண்டிருந்த பிறகு, 'எங்கே, அம்மா! ஒரு பாட்டுப் பாடுங்கள். தம்பி கேட்கட்டும்' என்றேன் நான். இதையும் முன்னாலேயே பேசி வைத்திருந்தோம்.

மனோரஞ்சிதம் நந்தன் சரித்திரத்தில் நந்தன் வேஷம் போட்டுக் கொள்வதுண்டு. அப்போது 'படமுடியாதினித் துயரம்' என்னும் அருட்பாவை ராகமாலிகையில் பாடுவாள். இப்போது வனஜா அந்தப் பாட்டை அதே மாதிரி ராகமாலிகையில் பாடினாள். குரல், பாடும் விதம், அங்கங்கே விழுந்த சங்கதிகள் முதற்கொண்டு அப்படியே இருந்ததைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டுப் போனேன். தம்பியோ பாட்டைப் பரவசமாய்க் கேட்டுக் கொண்டிருந்தான். ஒளி இழந்த அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் வந்து கொண்டிருந்தன."

(தொடரும்)

அதீ உண்டு

கணவன் - மனைவியிடையே ஏற்படும் உறவு, ரத்த சம்பந்தமில்லாமல் வாழ்நாள் முழுவதும் தொடரும் ஒரு நெருக்கமான பந்தம். இந்த நெருக்கத்தினாலேயே இதில் எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும் அதிகம். உறவை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள, ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வது மிகவும் அவசியம் என்கிற காரணத்தால், கடந்த நான்கு வாரங்களாக வளரும் சூழ்நிலைகள், குடும்பங்கள் இவை எப்படி ஒருவருடைய ஆளுமையைப் பாதிக்கின்றன என்று விளக்க முற்பட்டேன்.

'எனக்கு வாய்க்கப் போகும் வாழ்க்கைத் துணை இப்படி இருக்க வேண்டும்' என்று அவரவர் மனத்தில் ஓர் உருவகம் இருக்கும். ஆனால், அமைவது அந்த மாதிரி இருக்குமா என்றால், வெகு அரிது. காரணம்? 'எப்படிப்பட்ட துணை வேண்டும்?' என்று கேட்கும்போது, 'அன்பான மனைவி / கணவன், பாசமான குடும்பம்' என்று சொல்லலாம். அன்பு, பாசம் என்பதில் கூட கருத்து வேறுபாடு வரும் என்பது அனுபவிக்கும்போதுதான் விளங்கும். உதாரணத்துக்கு இதோ இரண்டு சம்பவங்கள்:

'என்மேல் உனக்கு அக்கறையே இல்லை; காலையில ஒரே தலைவலியோட, டிபன்கூட சாப்பிடாம ஆபீஸ் போனேன்! ஒரு போனாவது பண்ணி கேட்டியா, தலைவலி எப்படி இருக்குன்னு? எங்கம்மாவானா தவிச்சுப் போயிருப்பாங்க' என்பான் கணவன்....

'என் பிறந்தநாள் உங்க வீட்ல யாருக்காவது நினைவிருந்ததா? எங்க வீட்ல எல்லோரும் ஞாபகம் வச்சுக்கிட்டு போன் பண்றாங்க.. அப்போ கூட எனக்கு 'விஷ்' பண்ணணும்னு உங்களுக்குத் தோணல இல்ல? என் அண்ணனைப் பார்த்தாவது கத்துக்கங்க' என்று மனைவியும் வருத்தப்படும்போதுதான் அன்பான மனைவி, பாசமான குடும்பம் என்பதற்கு அவர்களுடைய விளக்கங்கள் என்னவென்று புரிகிறது.

மணவாழ்க்கை இனிமையாக அமைவதில் இருவருடைய பங்களிப்பும் தேவை.

• 'என் எதிர்பார்ப்பு நிறைவேறியதா?' என்பதற்கு முன் 'எனது கணவன் / மனைவியின் எதிர்பார்ப்பை நான் பூர்த்தி செய்தேனா?' என்று தெரிந்துகொள்வது முக்கியமல்லவா?

மணமாகும் முன் பொதுவாக ஒரு பெண் நினைப்பது: 'திருமணத்திற்குப் பிறகு இவனை / இவரை மாற்றி விடலாம்..!'

ஆண் நினைப்பது: 'இவள் மாறவே மாட்டாள். இதேபோல் என் மீது எப்போதும் பைத்தியமாக இருப்பாள்...' இரண்டும் நடக்காமல் போகும் என்பது தான் உண்மை! மாற்றங்கள்தான் மாறாதவை என்று புரிந்துகொள்வது நல்லது.

• மனத்தில் உள்ள உணர்வுகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டால் தானே, மற்றவர் புரிந்துகொள்ள முடியும்? 'நான் சொல்லமாட்டேன்; நீங்களாக / நீயாகத் தெரிந்து கொள்ள வேண்டும்' என்று அழுத்தமாக

• படம் : யோகா



மணநல ஆலோசகர்
பிருந்தா ஜெயராமன்

அந்தம் இல்லை!

இருப்பவர்களை நாம் பார்த்ததில்லையா என்ன?

வருடங்கள் ஆக, ஆக சில தம்பதிகள் 'பேசுவதற்கு என்ன இருக்கிறது?' என்றோ 'பேசினால் வம்பு வரும்!' என்றோ பேச்சைக் குறைத்துக் கொள்கிறார்கள். இது ஏன்...? கடந்தகால பல நிகழ்வுகள் மனத்தைப் புண்ணாக்கிவிட்டதால், அந்தப் புண்ணுக்குப் பயந்து பூட்டிக் கொள்கிறார்கள் வாயை!

தவிர்க்க முடியாமல், அவசியத்துக்காகப் பேசுகிறபோதுகூட, 'காரில் போகலாமா? ஆட்டோவில் போகலாமா?' என்கிற சிறு கேள்வி, வேண்டாத விவாதமாக வளர்ந்து, 50 வயது மனைவியின், தலைப் பிரசவத்தின்போது நடந்த சண்டையில் போய் முடியும்!

இந்த மாதிரி பழசைக் கிளறும் சண்டைகளுக்கு ஆதி உண்டு... அந்தமே இல்லை!

* நம்மில் பலரும் கடந்தகால கசப்பான அனுபவங்களால் நிகழ்கால இனிமையை இழந்துவிடுகிறோம். மணமாகி மூன்று வருடங்கள் கழித்து ஊட்டிக்குப் போன ஒரு தம்பதி, 'ஹனிமூன்' போகவில்லை என்கிற வருத்தத்தை மறக்கத் தயாராயில்லாததால், ஊட்டியை அனுபவிக்கவே முடியவில்லை!

* கடந்த காலத்தை நினைவிலிருந்து அழிக்க முடியாது தான். ஆனால் அதிலிருந்து கற்றுக் கொண்ட பாடத்தை மனத்தில் நிறுத்தி, புண்பட்ட கசப்பான அனுபவங்களை ஒதுக்கி வைக்கப் பழகினால்தானே வாழ்க்கை இனிமையாகும்?

* மணமான பின்பு



5

சொந்தங்கள் வாழ்க!

இங்கே மேலிருந்து கீழாகவும் இடமிருந்து வலமாகவும் தலா ஒன்பது கட்டங்கள் - அதாவது மொத்தம் 81 கட்டங்கள் உள்ளன. இவை 3 x 3ஆக ஒன்பது பெட்டிகளாகவும் பிரிக்கப் பட்டுள்ளன. 1 முதல் 9 வரையிலான எண்களை இந்தக் கட்டங்களில் நிரப்ப வேண்டும்.

மேலிருந்து கீழ், இடமிருந்து வலம், 3 x 3 என்று எந்த ஒன்பது கட்டங் களிலும், 1 முதல் 9 வரையிலான எண்களை ஒரே ஒரு முறைதான் பயன் படுத்த வேண்டும். நோ ரிபீட்டு!

விடை: 59-ம் பக்கம்...

8								
					7	6		
5	3			4	1			
		7			9	3	6	
4				3				2
	5	3	6			8		
			3	2			5	4
		9	1					
								3



மனைவி தாய் வீட்டை முற்றிலும் மறந்துவிட வேண்டும் என்று எதிர்பார்க் கும் கணவனுக்கு, அவள் நேர்முகமாகவோ, மறைமுக மாகவோ எதிர்ப்புகளைக் காட்டத்தான் செய்வாள். அதே நேரம் ஒரேயடியாகப் பிறந்த வீட்டுக்குப் போகும், பெருமையடிக்கும் பெண், புகுந்த வீட்டில் கேலிக்குள்ளா வாள். மதிக்கப்பட மாட்டாள்.

* ஒவ்வொரு ஆணும் புகுந்த வீட்டை (மனைவியின் பிறந்த வீடு, கணவனுக்குப் புகுந்த வீடு!!) தனது குடும்பமாக எண்ணினால் எதுவுமே தவறாகத் தோன்றாது.

* மாமியார், மாமனார், நாத்தனார், மைத்துனர் ஆகிய எல்லோருடைய எதிர்பார்ப்பையும் நிறை வேற்றுவது ஒரு மந்திரவாதியால் கூட முடியாது! நம் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் நாம் செயல்பட முடியும். பாராட்டுக்களையோ, பழிச் சொற்களையோ பெரிதுபடுத்தாமல் இருக்க முடிந்தால் நம்மை காப் பாற்றிக் கொள்வோம்! (வேதாந்திபோல இருக்க வேண்டுமா என்று சலித்துக் கொள்கிறீர்களா? இல்லவேயில்லை. பிறரை அவரது கோணத்தி லிருந்து புரிந்துகொண்டால் புண்பட மாட் டோம் என்கிறேன்.)

* மணவாழ்வின் அஸ்திவாரம் நான்கு ஒருவரை ஒருவர் நம்புவது, பரஸ்பர மரியாதை, விட்டுக் கொடுப்பது, புண்படுத்தாமல் தன் கருத் துக்களைச் சொல்வது - அதாவது சிறப்பான கம்யூனிகேஷன்.

இதயத்தைப் பெரிதாகவும் வாயைச் சிறிதாகவும் படைத்த இறைவன், பேச்சுத் திறனை மட்டும் நமது கட்டுப்பாட்டில் விட்டுவிட்டான்! இதய இயக்கத்தை நம்மால் கட்டுப்படுத்த முடியுமா... ஆனால் வாய்ப்பேச்சு நமது கட்டுக்குள்தான் இருக்கிறது! மற்றவரது உணர்வுகளை மதித்துப் பேசினால், சொந்தங்கள் தழைக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

சரி, குடும்பத்தில் அனைவரது தேவைக்கும் ஈடுகொடுத்துச் சமாளிப்பது எப்படி...

(சொல்கிறேன்)



வீட்ல சொல்லிட்டு வந்துட்டியா?

லக்னோவின் 'குடி'மகன் ராம்சிங்! தீவாளி அன்னிக்கு மஜாவா சீட்டு விளையாண்டுருக்காரு! எல்லா ரவுண்டு லயும் தோல்விதான் தோள்ல ஏறி உட்கார்ந்துச்சு. போய் ரெண்டு ரவுண்ட் ஏத்திட்டு வந்து அடுத்த ரவுண்ட் ஆட்டத்துக்கு தயாராயிருக்காரு ராம்சிங்! கையில ஒண்ணும் இல்லாத நிலையில 'நிலை' இல்லாம தன்னோட மனைவியை அடகு வெச்சு ஆடியிருக் காரு. மனசுல 'பாண்டவன்'னு நெனைப்பு. அதுலயும் தோல்வி. ஜெயிச்ச ஆளு விஷயத்தை ராம்சிங் மனைவி கிட்ட சொல்லி அவ கையைப் புடிச்சு இழுக்க, அந்த 'பாஞ்சாலி' கொள்ளிக் கட்டையாலயே அவனை அடிச்சு விரட்டிட்டா! மறுநாள் காலைல மச்சான் மப்பு தெளிஞ்சு வீட்டுக்கு வர, ஊரே சேர்ந்து 'தர்ம(ர்)' அடி அடிச்சிருக்கு. பேசாம இந்த மாதிரி ஆளு களை ஏதாவது சேட்டு கடையில அடகு வெச்சிரலாம். என்ன நாஞ் சொல்லுறது!





களக்காட்டுல இருக்குற அந்த வி.ஐ.பி.யை பேட்டி எடுக்குற வாய்ப்பு எனக்குக் கிடைச்சுது. கேள்விகளை அள்ளி வீசினேன். "சூப்பர் ரெக்கார்டு பண்ணியிருக்கீங்க. நீங்க இப்படி தொடர்ந்து ரெண்டு நாளா ரெக்கார்ட் பண்ணுறதுக்கு உங்களுக்கு உறுதுணையா இருந்தது யாரு? உலகமே சுருங்கிட்டு வருதுன்னு நீங்களும் காம்பேக்டா முட்டை போட்டீங்களா?" இப்படி நான் அந்தக் கோழி வி.ஐ.பி.கிட்ட கேட்ட கேள்விகளுக்கு அவங்க சொன்ன ஒரே பதில்... 'கொக்... கொக்... கொக்...' (களக்காட்டுல ஒரு கோழி ரெண்டுநாளா அளவுல ரொம்பக் குட்டியா இருக்குற மாதிரி ரெண்டு முட்டை போட்டுச்சு! இதான் மேட்டரு! எப்படி நம்ம பேட்டி!)

'சங் டடங் தினு' அப்படின்னா 'வீட்டுல சொல்லிட்டு வந்துட்டியா'ன்னு அர்த்தம். 'மமங் சுடோ குசெங்'னா 'உன் மூஞ்சியில என் கைய வைக்க'ன்னு அர்த்தம். இது சீன மொழி! சீனாவுல இருந்து என் கேர்ள் ஃப்ரெண்ட் 'அகாயி' இப்படித்தான் செல்லமா மெஸேஜ் அனுப்புவா! '110 கோடிக்கும் மேல் மக்கள் தொகை சீனாவுல. 38 கோடி பேர் செல் வெச்சிருக்காங்க. 2010-ல இது 60 கோடியா உயரும்! சீனாதான் இதுல நெம்பர் 1' - இதுகூட அவ அனுப்புன மெஸேஜ்தான். உவிங் இமாகி! (ஐ லவ் சின்னான்!) ○

எங்கே என் கண்ணன்?

17

*'கோபியர் எல்லாம்
ஜீவாத்மா - அவர்கள்
கொஞ்சி மகிழ்ந்த
தானே பரமாத்மா!'*

- ஸ்ரீகிருஷ்ணன்

சீனு பெட்டியைப் பார்த்தபடியே செல்வதன் பொருள் கணேஷுக்குப் புரிந்தது. வெளியே சாலை வரை சென்றவர், என்ன நினைத்தாரோ திரும்ப வந்தார். கணேஷும் பார்த்தான்.

"என் மத்த லக்கேஜெல்லாம் கூட ஆட்டோவுலயோ, இல்ல டாக்சியிலயோ வரட்டும். என் கண்ணனை நான் கையோட எடுத்துக் கறேன்..." என்றவர், மூங்கில் பிரம்புப் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டார்.



வாரணாசி ஜங்ஷன்! சீனு மூங்கில் பிரம்புப் பெட்டியை கீழேயே வைக்காமல் இடுப்பில் சுமந்தபடியே நின்று கொண்டிருந்தார். கூடவே ராஜம். அனுராதா பார்வை, பிளாட்பாரம் அசுத்தமாய் இருப்பதிலும் பிச்சைக்காரர்கள் வளைய வருவதிலும்தான் இருந்தது.

கணேஷ் அவர்களது அத்தனை லக்கேஜுடனும் பிளாட்பாரத்தில் நுழைந்திருந்தான். டெல்லி செல்லும் ரயிலும் ஒரு இரும்பு மரவட்டை போல பின்வழியாக மெல்ல நுழைய ஆரம்பித்திருந்தது.

"ரயில் வரவும் கணேஷ் வரவும் சரியா இருக்கு..." என்று ஸ்லாகித்துக் கொண்டாள் ராஜம். ரயில் நிற்கவும், கம்பார்ட்மெண்ட்டை தேடிப் பிடித்து அதில் லக்கேஜை ஏற்றி அவர்களையும் உட்கார்த்தி வைத்தான். அனுவும் உதவி செய்தாள். சீனு அந்த கம்பார்ட்மெண்ட்டிலும் அந்த மூங்கில் பிரம்புப் பெட்டியை அப்பர் பர்த்துக்கு நடுவில் உள்ள ஸ்டாண்டில் பாதுகாப்பாக வைத்துவிட்டு கன்னத்தில் போட்டுக் கொண்டார். அனுராதா சகலத்தையும் கவனித்துக் கொண்டேயிருந்தாள்.

"சார்... நீங்க கவனமாக பத்ரிநாத் போய்ட்டு திருச்சி போய் சேருங்க. இங்க உங்களுக்கு என்னால ஆன எல்லா உதவிகளையும் செய்துட்டேன். அதுல ஏதாவது குறைகள் இருந்தா மன்னிக்கணும்" என்று கைகளைக் கூப்பினான் கணேஷ்.

"சேச்சே... என்னப்பா நீ! எனக்கு எதிர்க்கருத்து கொண்டிருந்தாலும் அதுக்காக எனக்கு நீ ஒரு சிறு குந்தகம் கூடப் பண்ணலை. ஒரு ஆடிட்டரான நீ லோக்கல் கைட் மாதிரி கூட வந்து எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கே! எங்களால எப்பவும் அதை மறக்க முடியாது. நீ குணசீலத்துக்கு என் அகத்துக்கு ஒருமுறை வரணும். பதிலுக்கு உனக்கு நாங்க ஏதாவது செய்யும்போது தான் நன்றிக்கடன் தீரும்" என்று சீனுவும் எழுந்து நின்று கைகளைக் கூப்பினார்.

கம்பார்ட்மெண்ட்டுக்குள்



கூட்டம் வேறு அடைய ஆரம்பித்து விட்டது.

"அப்ப நாங்க உத்தரவு வாங்கிக்கறோம்" என்று கணேஷும் பதிலுக்குக் கை கூப்பினான்.

"கணேஷ் உன் செல் நம்பரைக் கொடு. சந்தர்ப்பம் கிடைக்கும் போது பேசறேன்" என்றவரிடம் தன் விசிட்டிங் கார்டை நீட்டினான். வாங்கி வைத்துக்கொண்டார். பின் அனுராதாவும் அவனும் கீழே இறங்கினர். அனு பிளாட்பாரத்தில் நடந்தபடியே கேட்டாள்,

"நீங்க ஒரு ஆடிட்டரா?"

"ம்!"

"வாவ்..."

"ஏன்... என்னைப் பார்த்தா அப்படித் தெரியலையா?"

"ஆமா... புரொபஷனல் டச்சஸ் எதுவும் உங்ககிட்ட இல்ல."

"ஆடிட்டரோட புரொபஷனல் டச் எது?"

"நிறைய கணக்குப் போட்டதால, கண் விழிச்சதால சூடேறி சொட்டை விழுந்திருக்கும். குறைஞ்சபட்சம் ஸ்பெக்ஸ் போட்டிருக்கணும். அப்புறம் சட்டை பாக்கெட்டுல ஒரு ரெண்டு மூணு பேனா... எப்பவும் பேண்ட் பாக்கெட்ல ஒரு கால்குலேட்டர், இல்

இந்திரா சௌந்தர்ராஜன்

லேன்னா கைல ஒரு ப்ரீஃப்கேஸ், சின்ன வயசா இருந்தா ஃபுல்ஹேண்ட் ஷர்ட், டக் செய்த பேண்ட், வயசானவங்களா இருந்தா சின்ன ஒரு குபேர தொந்தியும், நெற்றியில சந்தனப் பொட்டோ, குங்குமமோ..."

- கணேஷ் அதைக் கேட்டு ரசித்துச் சிரித்தான். அப்போது எதிரே நீண்ட ஒரு பிச்சைக்கார கரத்தைப் பார்த்து உடனே முகம் மாறினான்.

"ஒரே பசிப்பா... ஏதாவது பிச்சை போடேன்..." என்று அந்தப் பிச்சைக்காரன் கேட்ட விதத்தில் பசி எவ்வளவு கொடியது என்கிற உருக்கம். உடனே பக்கத்துத் தள்ளுவண்டியில் விற்றுக் கொண்டிருந்த ஒரு சப்பாத்திப் பொட்டலத்தை வாங்கி, அதைப் பிரித்துக் கொடுத்து "உம் சாப்பிடு..." என்றான். அவனும் அள்ளியள்ளி விழுங்கினான்.

"ச்சே... என்ன தேசம் இது அனுராதா... உலகத்துலயே பெரிய சக்தி மனித சக்திதான். அந்த சக்தியில நாமதான் முதல் இடத்துல இருக்கோம். இந்த பூமியில இல்லாத இடமா? இந்த நிமிஷம் ஒரு மனிதனோட காலடித் தடமே படாத புறம்போக்கு மானாவாரி இடம் மட்டும் எத்தனை கோடி ஏக்கர் இந்த பூமியில இருக்கு தெரியுமா?

அங்கல்லாம் இந்த மனுஷ சக்தி செயல்பட்டா இந்த நாட்டுல ஒரு மனுஷன்... ஒரே ஒரு மனுஷன் பட்டினி கிடப்பானா?"

- கணேஷ் ஒரு பொதுவான விசாரத்துக்குள் விழுந்து விட்டான். அனு அதை ரசித்தாள்.

அப்போது அவன் செல்போன், அவன் லோட் செய்திருந்த பாடல் ஒன்றைப் பாடியபடியே அழைக்க, அதன் திரையைப் பார்த்தான்.

திரையில் அவன் அம்மா!

"அம்மா..."

"கணேஷ்... எப்படிடா இருக்கே?"

"நான் நல்லா இருக்கேன். நீ விஷயத்துக்கு வா. எதுக்குப் கூப்ட்டே?"

"சுஜாதாவுக்கு திடீர்னு ஃபிட்ஸ் ஜாஸ்தியாயிடுச்சுப்பா... இப்ப ஆஸ்பத்திரியில அட்மிட் பண்ணியிருக்கேன்."

"ஐய்யோ... சுஜாதாவுக்கு சீரியஸா ஒண்ணுமில்லையே?"

"இப்ப பரவால்ல... அப்புறம் உன் அப்பா விஷயமா என்ன பண்ணே?"

"நான் இன்னிக்கு ராத்திரி மும்பை கிளம்பறேன்மா."

"சீக்கிரமா போடா... அவர் அடிபட்டு ரோட்ல கிடக்கற மாதிரி ஒரு கனவு வேற கண்டேன். அதுவும் காலங்கார்த்தால..."

"எப்பப்பார் அப்பா ஞாபகமாவே இருக்கறதால அந்த எண்ணம் தூக்கத்துல கனவா கசிஞ்சிருக்கு. உடனே சொப்பன பலன், அது இதுன்னு பழம்பெட்டித்தனமா யோசிக்காதே... நான் மும்பை போய்ட்டு அப்படியே ஊருக்கு வந்துடுவேன். இங்க பாக்க வேண்டிய பேப்பர்களை வேகமாகப் பார்த்துட்டேன். ஒரே பொய்க்கணக்கு."

பாபா 80

தேள் ஒரு இடத்தில் கொட்டினாலும், உடலெங்கும் வலிதரும். நாம் பிறருக்கு ஒரு தீமை செய்தாலும் அது அவர்களுக்குப் பல துன்பங்களைத் தரும்.



"எங்கடா இல்ல பொய்க்கணக்கு?"

"அதுசரி... எல்லாரும் பொய்க் கணக்கு எழுதறதால, அது சரி ஆயிடாதும்மா. சரி, நீ தைரியமா இரு. நான் உனக்கு அப்புறமா போன் பண்றேன்" என்றவன் ஒரு பெருமூச்சோடு செல்லை அணைத்தான்.

"யார் அது சுஜாதா?" அனுராதா முகத்தைப் பார்த்தபடியே கேட்டாள்.

"தங்கைங்க..."

"பேசினது யார்... அம்மாவா?"

"ஆமாம்... ஊர்ல தங்கைக்கு ஃபிட்ஸ் வந்து ஆஸ்பத்திரியில அட்மிட் பண்ணியிருக்காங்க."

"ஓ காட்! நீங்க போகலையா?"

"போகணும். அதுக்கு முந்தி மும்பையில் ஒரு வேலை. விடுங்க... என் விஷயம் பேசினா தேவையில்லாத வருத்தம் தான் மிஞ்சும்..." என்ற கணேஷ், சட்டென்று ஸ்டேஷனுக்கு வெளியே வந்துவிட்ட நிலையில் பிளாட்ஃபார கடையில் ஒரு சிகரெட் பாக்கெட்டை வாங்கிப் பற்ற வைத்தான்.

"மிஸ்டர் கணேஷ்... நீங்க தம் அடிப்பீங்களா?"

"சம் டைம்ஸ்..." என்றபடியே காரைத் தேடிச்சென்று ஏறினான். அவனிடம் ஒருவித கவலையும் பரபரப்பும் தெரிந்தது. அனுராதா அருகில் ஏறி அமர்ந்து கொண்டாள். காரும் புறப்பட்டது. அது அவனது இருப்பிடத்தை அடைவதற்குள் மூன்று சிகரெட்டுகளை ஊதித் தள்ளிவிட்டான். அனுராதா தர்மசங்கடத்தோடு நெளிந்தாள். ஒரு டென்ஷன், ரிலீஃப்பாக சிகரெட் பிடிக்கிறான் என்பது புரிந்ததால் அட்வைஸ் என்று ஆரம்பிக்கவும் தயக்கமாக இருந்தது.

காரைவிட்டு இறங்கி உள்ளே நுழையும்போது அவனிடம் கேட்டாள்.

"மிஸ் அனுராதா... நீங்க இன்னும் எவ்வளவு நாள் இங்க இருக்கறதா உத்தேசம்...?"

"கிளம்ப வேண்டியதுதான் மிஸ்டர் கணேஷ். டிக்கெட் கிடைக்கறத பொறுத்து புறப்பட வேண்டியதுதான்..."

"இப்ப ஸ்டேஷன்ல இருந்துதானே வந்தோம். அங்க ரிசர்வ் பண்ணியிருக்கலாமே..."



சுடோகு விடை:

8	7	2	5	6	3	4	1	9
1	9	4	2	8	7	6	3	5
5	3	6	9	4	1	7	2	8
2	8	7	4	5	9	3	6	1
4	6	1	7	3	8	5	9	2
9	5	3	6	1	2	8	4	7
7	1	8	3	2	6	9	5	4
3	4	9	1	7	5	2	8	6
6	2	5	8	9	4	1	7	3

"நான் உள்ள நுழையும்போதே எட்டிப் பார்த்தேன். சரியான கூட்டம். சரி ஏதாவது ட்ராவல் ஏஜென்சி மூலமா பாத்துக்கலாம்னு விட்டுட்டேன்..."

"வேண்டாத வேலை. அவங்களுக்கும் வெட்டியா கமிஷன் தரணும். எனிவே... நீங்க தரப்போறதில்ல... உங்க பத்திரிகை தானே தரப்போகுது..." என்றவன், சட்டையைக் கழற்றி ஆணிக் காதில் மாட்டினான். அப்படியே கொடியில் தொங்கிக் கொண்டிருந்த தன் காய்ந்த துணிகளை எடுத்து மடிக்க ஆரம்பித்தான். அதற்கு நடுவிலும் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

"இப்படி தம் அடிச்சா உடம்பு என்னாகறது?" அனு வாயைத் திறந்து கேட்டே விட்டாள். அப்படியே அவனை நேருக்கு நேர் பார்க்கத் தவிர்த்து அந்த அறையைச் சுற்றி நோட்டம் விட்டவள் கண்ணில் அந்த மூங்கில் பிரம்புக் கூடை பட்டது.

"இது அந்தப் பெரியவர்கிட்ட இருந்த கூடை மாதிரியே இருக்குல்ல...?" என்றபடியே அருகே சென்று அதன் மேல் மூடியைத் திறந்து யதார்த்தமாகப் பார்த்தாள்.

உள்ளே பட்டு வஸ்திரத்தில் சாளக்கிராமங்களுக்கு நடுவில் கண்ணன்!

அப்படியானால் சீனு கொண்டு சென்ற பெட்டி?

(தொடரும்)

இடம்பெயர்ந்த பெருமை!

"வொண்டர்ஃபுல்... நான் பார்த்த ஆட்டத்திலேயே இதுதான் பெஸ்ட்" என்று அதிசயமாக வாழ்த்துப்பா பாடுகிறார் நவ்ஜோத்சிங் சித்து. "விவியன் ரிச்சர்ட்ஸுக்குப் பிறகு இப்பொழுதுதான் ஒரு அதிரடி ஆட்டத்தைக் காண்கிறேன்" என்கிறார் ஒரு காலத்தில் அதிரடிக்கு பெயர் போன கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த்.

வீரேந்திர சேவாக் களத்திலிருந்தால் ஸ்க்ரீனில் ரஜினி தோன்றுவதற்குச் சமம். ஆனால், ஜெய்ப்பூரில் 45 நிமிடங்களுக்கு அதிகமாக பிட்ச்சில் இருக்கிறார் சேவாக். என்றாலும் சிந்துவார் யாருமில்லை. எதிர் முனையில் ஒரு இளம் புயல் சிக்ஸரும் ஃபோருமாக நொறுக்கும்போது வேறென்ன வேண்டும் ஒரு ரசிகனுக்கு!

மகேந்திரசிங் டோனி. குறுகிய காலத்தில் 'கிரிக்கெட் உலகின் டேஞ்சரஸ் ப்ளேயர்' என்கிற அந்தஸ்தை அடைந்திருப்பவர். கில்கிறிஸ்ட், பவுச்சர், சங்ககாரா போல இந்தியாவுக்கு பேட்ஸ்மேன் கம் விக்கெட் கீப்பர் என்கிற தகுதியுடன் எந்தவொரு வீரரும் வாய்க்கவில்லை.

ஆனால் இன்று...? கில்கிறிஸ்டை மிஞ்சி நிற்கிறார் டோனி.

லல்லு பிரசாத் ஊரிலிருந்து (ஜார்கண்ட்) வந்தவர்தான் டோனி. ஆரம்பத்தில் கால்பந்து விளையாட்டில் மூழ்கியிருந்தவர், யதேச்சையாக கிரிக்கெட் பக்கம் திரும்ப, அது இந்தியாவுக்கு அதிர்ஷ்டமாக அமைந்துவிட்டது.

"நான் இந்தியா ஏ பிரிவில் விளையாடிக் கொண்டிருந்தபோது ராகுல் டிராவிட், பார்திவ் பட்டேல், தினேஷ் கார்த்திக் என்று விக்கெட் கீப்பர்களுக்குப் பஞ்சமில்லாமலிருந்தது இந்திய கிரிக்கெட்டில். ஆனால் 'சரியான நேரம் அமையும். நீ விளையாட்டில் மட்டும் கவனம் செலுத்து' என்று உள் மனது சொல்லிக் கொண்டேயிருந்தது. நல்ல உடம்பு, மற்ற கீப்பர்களை விடவும் நான் அதிக உயரம், சிக்ஸர் அடிப்பதில் வல்லவன் என்று பெயர் பெற்றிருந்ததால் எனக்கான திருநாள் நிச்சயம் அமையும் என்றிருந்தேன்" என்று கூறும் 24 வயது டோனி, "ஜான் ரைட் என்னிடம் எப்பொழுதும் சொல்வார்... 'நீ சந்திக்கும் முதல் இருபது பந்துகளை பவுலருக்கு விட்டுக் கொடுத்துவிடு. அதன்பிறகு வீசப்படும் ஒவ்வொன்றும் உன் திறமையைப் பேச வேண்டும்' என்று. இதுதான் என் வெற்றியின் தாரக மந்திரம்" என்கிறார்.

வழக்கமாக இந்திய டூருக்காக வந்திறங்கும் வெளிநாட்டு அணிகள், 'சச்சின் டெண்டுல்கரை அவுட் பண்ண ஒரு ட்ரிக் வைத்திருக்கிறோம்' என்று சவால் விடுவர். ஆனால் இந்த முறை அந்தப் பெருமை இடம்பெயர்ந்து டோனி வசம் சென்றுள்ளது. "வீடியோ கேசட்டை ரீவைண்ட் பண்ணிப் பண்ணி டோனியை எப்படி அவுட்டாக்குவது என்று திட்டம் வகுத்திருக்கிறோம்" என்கிறார் தென்னாப்பிரிக்க அணியின் கோச் மிக்கி ஆர்தர்.

'வீ வான்ட் சிக்ஸர், வீ வான்ட் சிக்ஸர்' என்று டோனி ஸ்டேடியத்துக்குள் களமிறங்கினாலே ரசிகர்கள் கோரிக்கை வைக்க ஆரம்பித்து விடுகின்றனர். டோனியும் சளைப்பதில்லை. ஸ்ரீலங்காவுடனான தொடரிலேயே இரண்டு மேட்ச்சுகளை சிக்ஸர் அடித்து முடித்து வைத்திருக்கிறார். இவர் அரங்கத்துக்குள் அடித்த அதே சிக்ஸரை, பத்திரிகைகள் வெளியேயும் அடிக்க, பதறிப் போயிருக்கிறது டோனியின் குடும்பம். 'டோனிக்கு அப்ளிகேஷன்கள் வந்து குவியுது. சீக்கிரம் 'டும்டும்டும்' கொட்டப் போகுது' என்று



விமர்சகர்களும் ரசிகர்களும் உச்சி குளிர்ந்துபோக, சாந்தமாக இருக்கிறார் டோனி.

''நீண்ட கூந்தல் வைத்திருந்தாலும் எனக்குத் தலைக்கனம் ஏறக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறேன். இதற்கு முன்பெல்லாம் என்னைத் தாண்டி எத்தனையோ முறை கேமராக்கள் கடந்து போயிருக்கின்றன. ஆனால் இன்று? நான் தலையைக் காட்டினால் போதும், நாலா பக்கமிருந்தும் வரும் ஃப்ளாஷ்கள் கண்களைக் கூசுகின்றன. மீண்டும் என் உலக உருண்டை

பத்திரிகைகள் அடித்த திருமண மடலை கடுமையாக மறுத்திருக்கிறார் அவரது தந்தை பான்சிங். ''அப்ளிகேஷன் எல்லாம் குவியவே இல்லை. உலகக் கோப்பையை இந்தியாவுக்கு வாங்கித் தந்த பிறகுதான் கல்யாணம் காட்சியெல்லாம்'' என்று பதறுகிறார் சிங்.

மணமகள் விண்ணப்பங்கள் குவிகிறதோ இல்லையோ, எரிபொருள் கம்பெனிகள் தங்கள் கம்பெனியில் 'ஜம்'மென்று டோனியை பதவியில் அமர்த்த அடித்துக் கொள்கின்றன (டோனி தற்பொழுது இந்தியன் ஏர்லைன்ஸில் பணிபுரிகிறார்). இந்தியாவுக்கு இன்னொரு சச்சின் டெண்டுல்கர், சேவாக் கிடைத்துவிட்டதாக

எப்படி வேண்டுமானாலும் மாறலாம். ஆடும் ஒவ்வொரு ஆட்டமும் முக்கியம். அதைவிட 2007 உலகக் கோப்பை முக்கியம்'' என்று அழுத்தமாகப் பேசுகிறார் மகேந்திரசிங் டோனி.

- செந்தில்

“ஆதரவு கிடைக்குமே...

ரங்கூன்காரர் குடும்பம் என்றுதான் அவர்களுக்குப் பெயர். எழுபது - எண்பது ஆண்டுகளுக்கு முன்பாக ரங்கூனிலிருந்து குடிபெயர்ந்து குளித்தலைக்கு வந்தவர்கள், ஒரே குடும்பத்தின் மூன்று புதல்வர்கள். மூத்தவரும், இரண்டாமவரும் இயற்கை எய்திவிட, மூன்றாமவர் துரைராஜு, தன் அண்ணன் மகன்களோடு வாழ்ந்து வருகிறார். ஐம்பது வருட கல்கி வாசகரான இவர், திருமணமே செய்து கொள்ளவில்லை.

குளித்தலை பழைய கோர்ட் தெருவில் இருக்கும் அவர்களது வீட்டிற்குள் மெல்ல காலடி எடுத்து வைத்ததுமே, உள்ளே கமகமவென்று சாம்பிராணி வாசனை. சாம்பிராணிப் புகைக்கு நடுவிலிருந்து வெளிப்பட்டார் ரவிச்சந்திரன். துரைராஜுவின் அண்ணன் மகன். “பொருத்தமான குடும்பம் தேடித்தான் வந்திருக்கீங்க. எங்கள் சித்தப்பா தன் பால்ய காலத்திலிருந்து அமரர் கல்கியின் படைப்புகளை ரசித்து வாசித்தவர். கல்கியின் எழுத்துக்களே அவருக்குக் காதலியாகப் போய்விட்டனவோ என்று எல்லோரும் எண்ணுமளவுக்கு கல்கியின் தீவிர வாசகர்!” என்று இன்முகத்துடன் நம்மை வரவேற்றார்.

திடீரென்று எங்கிருந்தோ பள்ளிச் சீருடையில் துள்ளிக் குதித்து வந்த பேத்தி ஜெயமீரா, “இந்த பொன்னியின் செல்வன் புத்தகத்துல அப்படி என்னதான் இருக்குன்னு தெரியலை. எங்க வீட்டுல நான்தான் இன்னும் அதைப் படிக்கலை. உடனே படிக்கணும்னு முடிவு பண்ணியிருக்கேன்” என்றாள். ஜெயமீரா ஆறாம் வகுப்புப் படிக்கிறாளாம்.

• துரைராஜு...



துரைராஜுவினுடைய இரண்டு அண்ணன்களின் ஆறு மகன்களுக்கும் திருமணமாகி, ஒரே வீட்டில் ஒன்றாகத்தான் வசித்து வந்துள்ளனர். இடையில் ஒரே ஒரு சுவர் மட்டும்தான். இந்தப் பக்கம், முதல் அண்ணனின் மூன்று மகன்களின் குடும்பங்கள். அந்தப் பக்கம் இரண்டாவது அண்ணனின் மூன்று மகன்களின் குடும்பங்கள். பேரப் பிள்ளைகள் எல்லாம் சேர்த்து மொத்தம் முப்பது நபர்களாம். இரண்டு இடங்களில் சமையல். ஆனால், சாப்பிடுவது... பேசுவது... மகிழ்ச்சியாக அரட்டை அடிப்பது எல்லாமே ஒன்றாகத்தான். ஆறு குடும்பங்களிலும் பிள்ளைகள் பெரியவர்களாகி, படிப்பதற்கு அவரவர்க்குத் தனி அறைகள் கிட்டாது போக, இடப்பற்றாக்குறை

“அன்பு கிடைக்குமா?”

காரணமாக அதிலிருந்து நான்கு குடும்பங்கள் மட்டும் வெவ்வேறு இடங்களில் சென்று வசித்து வருகின்றன.

“பண்டிகைக் காலங்களில் எங்கள் வீடு திருவிழா போலக் காட்சியளிக்கும். எங்கள் எல்லோருக்கும் ஒரே கொண்டாட்டம்தான்” என்றான் ப்ளஸ் ஒன் படிக்கும் பேரன் விக்னேஷ்.



• குடும்பத்துடன்...

பூர்வீக வீட்டினை மூன்று பாகமாகப் பிரிக்க முனைந்தபோது, தனக்கென எதுவும் வேண்டாமெனக் கூறிவிட்டாராம் துரைராஜு. மாறாக பூர்வீகச் சொத்தை இரண்டு பாகங்களாகப் பிரித்து, தன்னுடைய அண்ணன்கள் இருவரின் வாரிசுகளுக்கே வகைப் படுத்திக் கொடுத்திருக்கிறார். தற்போது அவருக்கு மாதம் எட்டாயிரம் ரூபாய் ஓய்வூதியம் கிடைக்கிறதாம். ‘மாதா மாதம் பணம் செலுத்தித் தங்கிக் கொள்ளும்படியான வசதிகள் நிறைந்த முதியோர் இல்லங்கள் வந்து விட்டனவே... அங்கு சென்று நீங்கள் தங்கிக் கொள்ளலாமே..’ என்று தெரிந்தவர்கள் சிலர் அவரிடம் கூறுவதுண்டாம்.

“நான் அவைகளையெல்லாம் காது கொடுத்துக் கேட்பதில்லை. அதுபோன்ற இல்லங்களில் பணம் கொடுப்பதால் ஆதரவு கிடைக்கலாம். ஆனால் இங்கே என் குடும்பத்தினரிடம் பெறுவது போன்ற அன்பு கிடைக்குமா?” என்கிறார் துரைராஜு. வாஸ்தவம்தானே!

கட்டுரை, படங்கள்

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

ஸ்ப்ரிங்கை அழுத்திப் பிடித்து மெல்ல விடுவித்தால் என்னவாகிறது என்பதை விஞ்ஞான ரீதியாக மட்டுமின்றி மெய்ஞான ரீதியாகவும் விளக்க முடியும்.

ஸ்பிரிங் சுருக்கப்பட்டபோது, நம் கை மீது ஏற்படுத்திய அழுத்தம், அது தன் பழைய நிலையை அடைகிறபோது இல்லாமல் போகிறது என்றால், அதற்குக் காரணம், அந்த ஸ்பிரிங் அதற்குரிய ஒரிஜினல் நிலையை அடைந்து விட்டது. அதன் மீது எந்தவிதமான பிரஷரும் இல்லை என்பதுதான்.

இந்த எளிய விஷயத்தின் அடிப்படையில், வாழ்க்கையை நாம் சற்று கவனிக்கலாமா?

நான் பகவத்கீதை சொற்பொழிவுகளை நடத்துகிறபோது, ஏராளமானவர்கள் அரங்கத்துக்கு வருகிறார்கள். இருக்கைகளில் அமர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் எத்தனை பேருடைய கவனம், முழுமையாகச் சொற்பொழிவுகளில் சொல்லப்படும் கருத்துக்களில் பதிந்திருக்கிறது?

காதுகள் பாட்டுக்கு நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்க, சிலரது மனம், அன்று ஆபீசில் நடந்த ஏதாவது ஒரு விஷயம் குறித்து யோசித்துக்கொண்டிருக்கும். இன்னும் சிலர் வீட்டில் நடந்த விஷயங்களைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பார்கள். இன்னும் ஒருசிலரது மனம், இந்த நிகழ்ச்சி முடிந்ததும் எங்கே போக வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டுக் கொண்டிருக்கும்.

இன்னும் சிலர், 'சொற்பொழிவு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் நேரத்துக்கு முடிப்பாரா? வீட்டுக்குப் போக லேட்டாகி விடுமா?' என்று தம் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

ஒருசிலர், 'அரங்கத்துக்கு வெளியில், வாகனங்கள் நிறுத்துமிடத்தில் ஏகப்பட்ட கார்கள், இரண்டு சக்கர வாகனங்கள் இருக்கின்றனவே! இவற்றுக்கு மத்தியில் நிறுத்தியிருக்கும் நம் வாகனத்தை எப்படி வெளியே எடுப்பது? எப்போது வீடு போய்ச் சேர்வது?' என்று நினைக்கக்கூடும்.

இவை எல்லாமே மனத்துக்குள் அடைந்து கிடக்கும் ஆசைகளின், எண்ணங்களின் வெளிப்பாடுகள். இவற்றின் ஆதிக்கம் அதிகரிக்கிறபோது, 'சொற்பொழிவு கேட்டது போதும்! புறப்படலாம்!' என்று சொல்லி எழுந்து போகச் சொல்லும்.

அடுத்தபடியாக எந்த ஆசை நிறைவேற்றப்பட வேண்டும் என்று மனம் நினைக்கிறதோ, அதை நோக்கி, மனமும் உடலும் செலுத்தப்படும். இப்படியாக அடுத்தடுத்து இடைவிடாமல் ஆசைகள் எழுந்துகொண்டே இருப்பதால், மனத்தில் அழுத்தமும் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கும். அப்படி இல்லாமல் நீங்கள் உங்களுக்குரிய ஒரிஜினல் நிலையில் இருக்க முடியுமானால், பிரஷர் இல்லாமல் இருக்கும்.

ஆனால் அப்படி இருக்கிறதா இன்றைய உலகம்?

ஒவ்வொருவரும் தாம் டென்ஷன் அடைவதற்கான காரணத்தை விவரிக்க ஆரம்பித்தால், அதைக் கேட்கிறவர்களுக்கு டென்ஷன் வந்துவிடும்! அந்த அளவுக்கு ஒவ்வொருவருக்கும்

மன அழுத்தத்துக்கான

சுனந்தாஜி

“மனத்தை
வென்றுவிட்டால்
உலகை வெல்ல முடியும்”



மருந்து!

ஒவ்வொருவிதமான பிரச்னைகள்; ஆசைகள். அதனால் ஏற்படும் டென்ஷன், மன அழுத்தம், டென்ஷனுக்கான காரணங்கள் மனிதருக்கு மனிதர் வேறுபட்டாலும், அதனால் ஏற்படுகிற விளைவு ஒன்றுதான், மன அழுத்தம்! இதிலிருந்து விடுபட என்னதான் மருந்து?

பகவத் கீதை போன்றவை பூஜையில் வைத்து வணங்குவதற்காக இல்லை. படித்து, புரிந்துகொண்டு, மனத்தெளிவு அடைந்து, வாழ்க்கை அமைதியாக, திருப்தியாக, நிம்மதியாக இருப்பதற்கு என்ன வழி என்று சொல்லித் தரும் நூல்.

'மதம்' என்பதை ஆங்கிலத்தில் 'ரிலிஜன்' என்று குறிப்பிடுகிறோம். இது 'ஒன்று சேர்ப்பது' என்ற பொருள் கொண்ட இரண்டு இலத்தீன் வார்த்தைகளிலிருந்து வந்தது. 'யோகா' என்ற வார்த்தை, 'யுஜ்' என்கிற சமஸ்கிருத வார்த்தையிலிருந்து வந்தது. இதற்கும் 'ஒன்றிணைத்தல்' என்றுதான் அர்த்தம்.

ஆக, மனிதன் ஏதோ ஒன்றிலிருந்து வேறுபட்டு, மாறுபட்டு இருக்கிறான் என்பது தெளிவாகிறது.

எதிலிருந்து?

மனிதனின் இயற்கையான குணத்திலிருந்து, அமைதியான நிலையிலிருந்து மாறுபட்டிருக்கிறான். மனிதனின் 'அமைதியான நிலை' என்பது மாறி மன அழுத்தம், கவலை, அதிருப்தி ஆகியவை அவனை ஆக்கிரமித்துக் கொண்டு விட்டன.

இதிலிருந்து விடுபட்டு, மனிதன் தன்னுடைய இயற்கையான, அமைதியான நிலையை அடைய வேண்டும்.

தனது இயற்கையான நிலையை அடைய வேண்டும் என்பதற்காகத்தான், ஸ்பிரிங் இடைவிடாமல் மேல்நோக்கி பிரஷர் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. அதை நாம் சரியாய்ப் புரிந்து கொண்டு, கையை மேல்நோக்கித் தூக்குகிறபோது, பிரஷர் குறைந்து கொண்டே வருகிறது.

மாறாக, கையை கீழ்நோக்கி அழுத்தினால் என்ன ஆகும்? கையின் மீது ஸ்பிரிங்கின் பிரஷர் அதிகரிக்கும்.

வாழ்க்கையில் மனிதன் அதைத்தான் செய்து கொண்டிருக்கிறான்.

மனக்கவலைகள், பிரச்னைகள், மன அழுத்தம் இவற்றிலிருந்து விடுபட்டு, மேல்நோக்கிச் சென்று மனிதனின் இயற்கைத் தன்மையை அடைவதற்குப் பதிலாக, எதிர்த் திசை



பாபா 80

யில் செயல்பட்டு அவற்றுக்குள் சிக்கிக்கொண்டு, விடுபட முடியாமல் திணறுகிறான்; தவிக்கிறான். ஒரு நிலையில், இந்தக் குழப்பமான சூழ்நிலையிலிருந்து விடுபட என்ன வழி என்று தேட ஆரம்பிக்கிறான். அவனுக்கு ஒரு வழி இல்லை; பல வழிகள் இருக்கின்றன.

உடலைப் பயன்படுத்தித் தன்னை அறிகிற, தன் இயற்கையான நிலையை மனிதன் அடைகிற வழிதான் கர்மயோகம்.

தனது அறிவைப் பயன்படுத்தி அடையும் வழிதான் ஞானயோகம்.

தனது மனத்தைப் பயன்படுத்தினால் அது பக்தியோகம்.

ஆக, நீங்கள் புனிதச் சின்னங்களை அணிகிறீர்களா, வழிபாட்டுத்தலங்களுக்குச் செல்கிறீர்களா, மதரீதியான சடங்குகளைக் கடைப்பிடிக்கிறீர்களா என்பதெல்லாம் மத ஈடுபாடின் அறிகுறி அல்ல... ஆன்மிக ஈடுபாடின் அறிகுறியாய் இருந்து விடவும் முடியாது.

நீங்கள் ஏதாவது ஒரு பாதையில் சென்று, உங்களை மேம்படுத்திக் கொண்டு, மனிதனுக்குரிய இயற்கையான குணத்துடன் ஒன்றுபடுகிறீர்களா என்பதுதான் முக்கியம். அதுதான் உண்மையான மத ஈடுபாடு; ஆன்மிகம்.

நாளை என்பது நம் கையிலில்லை. நல்லவை நினைத்தால், அக்கணமே அவற்றைச் செய்யத் தொடங்குக.



மனிதனின் மனம் இருக்கிறதே, அது இலேசுப்பட்டது இல்லை. சும்மாவா சொன்னார்கள் 'மனம் ஒரு குரங்கு' என்று?

'இதைச் செய்' என்று உங்கள் மனத்திடம் சொல்லுங்களேன். 'செய்ய மாட்டேன்' என்று முரண்டு பிடிக்கும். 'நான் ஏன் செய்ய வேண்டும்?' என்று கேள்வி கேட்கும். 'இதை இப்படித்தான் செய்தாக வேண்டுமா?' என்று குதர்க்கமாகக் கேட்கும்.

சரி! இது ஒருபுறம் இருக்கட்டும். வேறு ஒரு காரியத்தைச் 'செய்யாதே' என்று மனத்துக்குச் சொல்லுங்கள். ரியாக்ஷன் நேரெதிராக இருக்கும். 'நான் செய்தே தீருவேன்' என்று அடம் பிடிக்கும். 'ஏன் செய்யக் கூடாது?' என்று எதிர்க் கேள்வி கேட்கும். 'செய்தால் என்ன ஆகிவிடும்?' என்று விதண்டா வாதம் செய்யும்.


எனவேதான் சுவாமி விவேகானந்தர் ''நீங்கள் உங்கள் மனத்தை வெற்றி கொண்டு விட்டால், இந்த உலகத்தையே வெற்றிகொள்ள முடியும்'' என்று கூறினார்.

'அது சுவாமி விவேகானந்தர் போன்றவர்களுக்கு வேண்டுமானால் சாத்தியமாக இருக்கலாம். சாமானியர்களுக்கு...?' என்று நீங்கள் கேள்வி எழுப்புவது என் காதுகளில் விழுகிறது.

சாமானியர்களுக்கும் சாத்தியமே! எப்படி?

(வெற்றி தொடரும்)

படம் : **ஸ்ரீஹரி**



ஆப்பிள்

● நீயில்லாத உனதறையில்
ஒரு ஆப்பிளை
வைத்துப் போகிறேன்
எடைக் கல்லாய்
அதனடியில்
படபடக்கிறது என்னிதயம்
கடிதமா
ஆப்பிளா
எது ருசியாயிருந்ததென
நாளை எனக்குச் சொல்

● குட்டி இளவரசிக்கு
ஆப்பிள் ரொம்பப் பிடிக்கும்
இளவரசியின் சமஸ்தானத்தில்
சக்கரமிழந்த ரயில் வண்டி
வெட்டியெடுக்கப்பட்ட
ஆப்பிள் துண்டங்களைச்
சுமந்து திரிகிறது
இளவரசியின் ப்ரியத்துக்காக
அவளது முயலும் புலியும்
ஆப்பிள் சாபபிடப் பழகிவிட்டன.
இன்று
அம்மா அடித்ததற்காக
அழுது கொண்டிருக்கிறாள் இளவரசி
புறப்பாட்டை ரத்து செய்துவிட்டு
ஓய்ந்து நிற்கிறது ரயில் வண்டி
இளவரசிக்கு ஆதரவாக
உண்ணாவிரதமிருக்கின்றன
முயலும் புலியும்

● ஆப்பிளை வாங்கத்
தங்களை விற்கும்
காலமும் வந்தது ஏவாள்களுக்கு
கடவுள் சிரித்துக் கொண்டார்
ஆப்பிளால் வந்த வெட்கம்
ஆப்பிளால் அழிந்தது


● நம் இல்லத்தரசியிடம்
கொஞ்சம் பணமிருக்கிறது
நீண்ட போரத்துக்குப் பின்னும்
அவள் கேட்ட விலைக்கு
ஆப்பிள் கிடைக்கவில்லை
சௌகர்யமாய்க் கிடைத்த
பேரிக்காய்களோடு
வீடு திரும்புகிறாள்
வாசலிலேயே எதிர்கொள்ளும்
பையனுக்கு
பேரிக்காயொன்றைத் தருகிறாள்
'என்னதும்மா' என்ற
செல்லத்தின் கேள்விக்கு
இல்லத்தரசி சொல்கிறாள்
'பச்சை ஆப்பிள்'

● அவசர சிகிச்சைப் பிரிவிலிருந்து
வீடு திரும்பியிருக்கிறார் அப்பா
வந்து சேர்ந்த
ஆப்பிள்களின் முகவரியிலிருந்து
விடுபட்ட உறவுகளைப் பற்றி
புகார்ப் பட்டியல்
வாசித்துக் கொண்டிருக்கிறாள்
அம்மா

ஓவியம்: அனந்தபத்மநாபன்


05

புன்னகை...



"ஏன் அடிக்கடி கண்ணாடி முன்னாடி நின்னு அழகு பாக்கறே?"

"உடம்பு சரியில்லன்னு டாக்டர்கிட்ட போனேன். அவர்தான் உடம்பை நல்லா பார்த்துக்கச் சொன்னாரு."

- எஸ்.மோகன்



"அந்த சீரியல் நடிகைக்கு இப்போ வாய்ப்பே இல்லியாமே..."

"ஆமா, கண்ணீர் திருஷ்டியாம்!"

- பி.ஜி.பி. இசக்கி



"அம்மாவோட கைப்பக்குவமே தனிடா மகனே..."

"சமையல்லயா, உங்களை அடிக்கறதுலயாப்பா?"


- ஜெ.மாணிக்கவாசகம்

மிளகு ரசமா?

"நடிக்க சான்ஸ் கேட்டு வந்த அந்த ஆள்கிட்டே, நம்ம டைரக்டர் போட்டோ ஃபிலிம் ரோலை கொடுக்கறாரே, ஏன்?"

''ஏதாச்சும் சின்ன ரோல் இருந்தாலும் கொடுங்கன்னாராம்.''

- கே.ஆனந்தன்





"காலையில பூண்டு ரசம் செய்யறதா, மிளகு ரசம் செய்யறதான்னு என் அம்மாவுக்கும் மனைவிக்கும் ஒரே சண்டை.''

"அப்படியா?"

"ஆமாம்... அப்புறம் நான் வந்துதான் சமரசம் பண்ண வேண்டியதாப் போச்சு.''

- ஆர்.தங்கராஜ்

"என் மனைவிக்குப் பிடிக்காததை நான் எப்பவும் செய்யவே மாட்டேன்."

"ஏன் அவங்க மனசு வருத்தப்படுவாங்களா?"

"ஊஹூம்... பாவம், அவளால பசி தாங்க முடியாது..."

- கே. ஆனந்தன்





நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம் : நற்பலனை அளிக்கும் வாரம். தனம், குடும்பம், கல்வி மேலோங்கும். பொருளாதாரப் பற்றாக்குறை இருக்காது. உத்தியோகஸ்தர்களுக்கு வேலையில் புதிய மாற்றம் இருக்கிறது. ஊதிய உயர்வு கிடைக்கும். சிலருக்கு வீடு வாங்கும் யோகம் உள்ளது. திருமணம் ஆகாமல் தடைபட்டு வந்தவர்களுக்குத் திருமணம் கைகூடும். ஆஞ்சநேயர் வழிபாடு செய்யவும்.

ரிஷபம் : திடீர் தனயோகத்தை அளிக்கும் வாரம். பணப் பற்றாக்குறை வராது. நெருங்கிய உறவினர் / நண்பர்களை விட்டு விலக நேரிடும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் கூட்டணிக்குள் மனஸ்தாபம் வரலாம். மனத்தில் தைரியமும் தன்னம்பிக்கையும் ஏற்படும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம். திருமணக் காரியம் கைகூடும். வியாழன்தோறும் அன்னதானம் செய்யவும். ராகு / கேது வழிபடுதல் நலம்.

மிதுனம் : பணப் பற்றாக்குறை வராது. குடும்பத்தில் சுபகாரியம் கைகூடும். பொருளாதாரச் சிக்கல் தீரும். குழந்தைகள் வழியில் நற்பலன் ஏற்படும். ஆரோக்கியம் பாதிக்காது. வியாபாரிகள் புதிய தொழில் முயற்சியில் ஈடுபடலாம். ராகு / கேது வழிபட்டு வருதல் நற்பலனை அளிக்கும்.

கடகம் : நற்பலனை அளிக்கும் வாரம். நீண்ட தூரப் பிரயாணம் செய்ய வேண்டி இருக்கும். சிலருக்கு வீடு மாற்றம் அல்லது தொழில் மாற்றம் வரலாம். திருமணம் கைகூடும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலையில் உயர்வு ஏற்படும். பொருளாதாரச் சிக்கல் வராது. ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வியாழன் தோறும் குரு வழிபாடு செய்து வரவும். சாதுக்கள் தரிசனம் செய்து வரவும்.

சிம்மம் : பண வரவு ஏற்படும். குடும்பத்தில் நல்ல காரியம் ஏற்படும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் கைகூடும். வியாபாரிகளுக்குத் தொழில் புத்துயிர் பெறும். பணப் பற்றாக்குறை தீரும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. ராகு, கேதுவுக்கு செவ்வாய் / வெள்ளி தீபம் ஏற்றவும்.

கன்னி : நற்பலனைத் தரும் வாரம். குடும்பத்தில் சுபகாரியம் கைகூடும். தனம், வாக்கு, கல்வி மேலோங்கும். வேலை நிமித்தமாக வெளிநாடு செல்லக்கூடிய வாய்ப்பு வந்து சேரும். வீடு / மனை வாங்க சிறந்த காலம். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு புதிய வேலை தேடி வரும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். பொருளாதாரம் பாதிக்காது. ராகு, கேது வழிபட்டு வருதல் நலம் தரும்.

துலாம் : சிறப்பான பலனை அளிக்கும்



வாரம். உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். பணப் பற்றாக்குறை தீரும். சிலருக்கு வீடு வாங்க யோகம் உண்டு.



தனுசு : வெற்றி தரும் வாரம். நினைத்தது யாவும் நடக்கும். சுபகாரியங்கள் கைகூடும். உத்தியோகஸ்தர்களுக்கு உயர்வு/இடமாற்றம் ஏற்படும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். புதிய வீடு / வாகனம் வாங்கலாம். குழந்தைகள் மூலம் சந்தோஷம் ஏற்படும். வியாபாரிகள் நற்பலன் அடைவார்கள். மாணவ, மாணவியர் படிப்பில் மேன்மை அடைவார்கள். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப் பளு குறையும். பொருளாதார பாதிப்பு இருக்காது. உடல் ஆரோக்கியம் சீர்படும். ராகு / கேதுவை வழிபட்டு வரவும்.

20.11.2005 முதல் 26.11.2005 வரை

தஞ்சை பரத்வாஜ்

குழந்தைகள் நலம் சிறக்கும். தொழில் முன்னேற்ற நிலைக்குச் செல்லும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். மெய்யூர் சென்று ஆஞ்சநேயருக்கு வடை மாலை சாற்றி அர்ச்சனை செய்து வர நற்பலன் மிகுதியாகும்.

விருச்சிகம் : எண்ணங்கள் யாவும் ஈடேறும், தொட்டது துலங்கும். எடுத்த காரியம் அனைத்தும் வெற்றி தரும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். வியாபாரிகளுக்கு பொருளாதார மேன்மை ஏற்படும். செலவுகள் சுபச்செலவுகளாக இருக்கும். சிலருக்கு தூரதேசம் போகும் வாய்ப்பு வரும். சிலருக்குக் குழந்தைப் பேறு கிட்டும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. புதிய முயற்சிகள் கைகூடும். குரு பகவானை வழிபட்டு வரவும். ராகு / கேது வழிபாடு செய்தல் நலம்.

மகரம் : நற்பலனை அளிக்கும் வாரம். பொருளாதாரச் சிக்கல் வராது. வேலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சிலருக்கு புதிய வேலைவாய்ப்புத் தேடி வரும். வியாபாரிகளுக்குத் தொழிலில் விறுவிறுப்பான சூழ்நிலை ஏற்படும். தெய்வ தரிசனம் கிட்டும். ஸ்தல யாத்திரை செல்வீர்கள். மாணவ, மாணவியர் நற்பலனை அடை

பரத்வாஜ் பதில்கள்

● **ஆர்.சுந்தரேசன், சென்னை - 83**

என் பேத்திக்கு எப்போது திருமணம் நடக்கும்?

உங்கள் பேத்திக்கு 2006-ல் திருமணம் நடக்கும். பிறந்த ஊருக்குத் தெற்கு திசையில், உடன்பிறப்பு ஒருவர் உள்ள இடத்தில் வரன் அமையும். வெளிநாட்டு நிறுவனத்தில் சம்பாதிப்பவராக இருப்பார். சர்ப்ப தோஷம் உள்ள வரனைப் பார்க்கவும்.

● **டாக்டர் ரவிசங்கர், நியூடெல்லி**

எனது மகனின் திருமணம் எப்போது?

உங்கள் பையனுக்கு 28 வயதில் திருமணம் முடியும். பிறந்த ஊருக்குப் பத்து மைல் சுற்றளவில் பிறந்த பெண் அமையும். படித்த, பண்புள்ள குணவதியான பெண் அமைவாள். உறவு அல்லாத இடத்தில் 2006-ல் திருமணம் நடக்கும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும்.

● **பா.மனோன்மணி, சென்னை**

என் கணவர் தற்போது வேலையில்லாமல் இருக்கிறார். அவருக்கு எப்போது வேலை கிடைக்கும்?

உங்கள் கணவருக்குத் தற்பொழுது சுக்ரதசை நடைபெற்று வருகிறது. வீண் அலைச்சல் உருவாகும். சற்று உடல் நலக்குறைவு இருக்கும். ராகு பகவானுக்கு தீபம் ஏற்றவும். இந்த வருட இறுதிக்குள் நல்ல வேலை கிடைக்கும்.

வார்கள். நீண்ட தூரப் பிரயாணம் ஏற்படும். கொடுக்கல், வாங்கல் நன்றாக இருக்கும். வராத பணம் கைக்கு வந்து சேரும். உடல்நிலை பாதிப்பு இராது. திருமணக் காரியம் நடக்கும். குரு / சனி வழிபட்டு வருதல் நலம்.

கும்பம் : போட்டி, பொறாமை விலகும். கொடுக்கல், வாங்கல் நற்பலனை அளிக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலையில் இருக்கும் பளு குறையத் தொடங்கும். நெருக்கமாக இருக்கும் நண்பர் / உறவினர் விலகிச் செல்வர். குழந்தைகள் வழியில் சந்தோஷம் கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் கைகூடும். பணப் பற்றாக்குறை தீரும். சிலருக்கு மறைமுக வருமானம் கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொலை தூர மனிதர்களால் அனுகூலம் கிட்டும். சத்ருக்கள் தொல்லை குறையும். ராகு / கேதுவை வழிபட்டு வரவும்.

மீனம் : பட்டம், பதவி தேடி வரும். உடல்நிலையில் கவனம் அவசியம். கணவன், மனைவியிடம் அனுசரணை தேவை. குழந்தைகள் வழியில் சுப காரியம் கூடும். தொலைதூர நண்பர்களால் நற்பலன் கிடைக்கும். வியாபாரிகளுக்குத் தொழிலில் முன்னேற்றமான சூழ்நிலை ஏற்படும். அண்டை நாட்டு வியாபாரம் நற்பலனை அளிக்கும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். வாக்கு, நாணயம் காப்பாற்றப்படும். மாணவ, மாணவியர் படிப்பில் அக்கறை செலுத்தவும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி மாற்றம் ஏற்படும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். ராகு/ கேது / குரு / சனி வழிபட்டு வரவும். ●

தொண்டையைச் செருமிக் கொண்டே வந்த வஸந்த், "தொப்புள் கொடி / அறுபட்ட நேரங்களில் / உயிர்க்கும் ஆசைகள்" என்றான்.

"என்ன இது... ஹைக்கூ மாதிரி இருக்கு?" என்ற ஸ்ரேயா, "நீ எழுதின மாதிரி தெரியலையே" என்றாள்.


வஸந்த் முறைத்தான். "இட்ஸ் ஓ.கே. உண்மையைச் சொல்லிடறேன். கன்னிக்கோவில் இராஜா எழுதியிருக்காரு. புக் பேரு தொப்புள் கொடி"

"நான் கூட ஒரு புதுக்கவிதை தொகுப்பு படிச்சேன். முத்தையா மோகன் எழுதியிருக்காரு. பேரு- இவைகள் மறுப்பதற்கில்லை"

"ஒரு சாம்பிள் கவிதை சொல்லு" என்றான் வஸந்த்.

"இந்தா அள்ளிக்கோ. ஏழையின் / வயிறு காய்கிறது / தேசியக் கொடியில். எப்படி இருக்கு?"

"பரவாயில்லையே... இப்பல்லாம் புரியற மாதிரி நிறைய கவிதைகள் வருதே" என்று ஆச்சரியப்பட்டான்.



"உண்மைதான். ஆனா புரியற கவிதைகள் எல்லாமே நல்ல கவிதைகளா இருக்கான்னுதான் கேள்வி" என்றாள் ஸ்ரேயா.

"ஆனா ஒண்ணு, நல்ல கவிதைகள் எல்லாமே புரியற கவிதைகள்தான். கரெக்டா?"

"டபுள் கரெக்ட். பைதிவே நான் சிந்துபைரவி படிச்சேன்" என்றாள் ஸ்ரேயா.

"ஹலோ, பார்த்தேன்னு சொல்லு. படிச்சேன்னு சொல்லாதே"

ஸ்ரேயா மறுத்தாள். "இல்லைப்பா, சிந்துபைரவியோட திரைக்கதை, புக்கா வந்திருக்கு. திரைக்கதை எழுதறது எப்படின்னு இதைப் பார்த்துத் தெரிஞ்சுக்கலாம். சிவகுமார், சுஹாசினி, சுலக்ஷனா எல்லாம் அப்படியே கண்ணு முன்னாடி வர்றாங்க. அப்புறம் என்னோட ஃபேவரிட் பாட்டு, சுஹாசினி பாடுவாங்களே.. என்ன பாட்டு... ஆங்... பாடறியேன்.. படிப்பறியேன்.. யேன்... யேன்.. யேன்... ஏய்... நீ எங்கே ஓடறே." ●





தொப்புள் கொடி

கன்னிக்கோவில் இராஜா, அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம், 41, கல்யாண சுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. பக்கம் 64, விலை 20.00

இவைகள் மறுப்பதற்கில்லை

முத்தையா மோகன், கவின் நூல் பயணம், 36, தோப்புத் தெரு, அம்மையப்பட்டு, வந்தவாசி - 604 408. பக்கம் 64, விலை 20.00

சிந்துபைரவி

கே.பாலசந்தர், கிழக்கு பதிப்பகம், 16, கற்பகாம்பாள் நகர், மயிலாப்பூர், சென்னை - 600004.
பக்கம் 120,
விலை 50.00



பலியாடு

நெய்வேலி பாரதிக்குமார்

பாதி உயரத்துக்கு சிமெண்ட் பூச்சுடன் காணப்பட்ட அந்த உயர்ந்த கட்டடத்தை நிமிர்ந்து ஒரு முறை பார்த்தான் சின்னப்ப மேஸ்திரி. இன்றைக்கும் யாரும் வேலைக்கு வரவில்லை. பிரச்னை எந்தத் திசையில் பூதாகரமாய் பயணிக்கிறது என்று தெரியாமலேயே அதை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ரங்கசாமி கொத்தனும் அவனது கூட்டாளி சித்தாள்களும் சாயபு போர் செட் ஷெட் கட்டும் இடத்தில் நைட் வேலைக்குச் சென்று விடுகிறார்கள். மேஸ்திரியாக இருப்பதால் உபத்திரவம், இது மாதிரி வேலைக்கு யாரும் கூப்பிட மாட்டார்கள். சம்பளம் இல்லையென்றால் தன் வீட்டு அடுப்பும் புகையாது என்று யார் அவர்களிடம் புரியவைப்பது.

சொன்னாலும் நம்புவார்களா? 'உனக்கென்னப்பா மெதப்பா மேம்போக்கா எல்லோரையும் மேய்ச்சுக்கிட்டு மெலுக்கா போற வேலை. அத இத வாங்கணும்னு சொல்லி வாங்கின பொருள்ல கமிஷன் அடிச்சிடுவ. காசுக்கு என்ன குறை' என்பார்கள்.

என்னமோ காண்ட்ராக்டர்கள் கேட்டவுடன் அள்ளி அள்ளி வீசுவது போலவும், இவனென்னவோ கை பத்தாமல் பொறுக்குவது போலவும் இவர்களுக்கெல்லாம் நெனப்பு.

சாயந்திரத்துக்குள் பிரச்னை திருமென்று, அவர்கள் வழக்கமாக உட்காரும் டீக்கடையில் பேச்சுவாக்கில் தெரிந்தது சின்னப்பனுக்கு.

பிரச்னை ஒன்றும் பெரிதில்லை. இரண்டாவது தளத்தில் சைடு பில்லர் வேலை பார்த்துக் கொண்டிருந்த பெரிய நாயகத்துக்குக் காலில் இரும்புக் கம்பி விழுந்து காயமாகிவிட்டது. எதிரில் இருந்த பெரியாஸ்பத்திரியில் காண்பித்து ஊசி போட்டனர். கட்டுப் போட வேண்டிய இடத்தில் கூட்டமாக இருந்தது. அதற்குள் தலைசுற்றுவதாகப் பெரியநாயகம் சொல்ல, 'தனியார் ஆஸ்பத்ரியில் காட்ட வேண்டும் பணம் கொடு' என்று கதிர்வேலு சத்தம் போட, காண்ட்ராக்டர் பஞ்சமநாதனுக்கு போன் செய்தார் சின்னப்பன். அவரோ பக்கத்து ஊரில் வாட்டர் டேங்க் வேலை நடக்கும் இடத்திலிருந்தார். விஷயத்தைச் சொன்னதும் ''அதான் ஊசி போட்டாச்சு, மாத்திரை கொடுத்தாச்சு. கட்டுப் போடற இடம் கூட்டமா இருந்தா என்ன, பொறுத்துக்கிட்டுப் போட்டுக்க வேண்டியதுதானே. இதுக்கெல்லாம் இடம் கொடுத்தா அப்புறம் காசு வாங்கறதுக்குன்னு எதையாவது கால்ல போட்டுக்குவானுங்க. இதெல்லாம் சரிப்படாது. எப்படியாவது சமாளிச்சு நேரத்தைக் கடத்து. அதுக்குள்ள கூட்டம் கொறைஞ்சிடும். அங்கயே போட்டுடு... என்னய்யா மேஸ்திரி நீ!'' என்று சலித்துக் கொண்டார்.

''முதலாளி வர்றேன்னு சொல்லியிருக்கார் கொஞ்சம் பொறுங்க.'' என்று அவர்களிடம் சமாதானமாக சின்னப்பன் சொல்ல, அவ்வளவுதான்... கதிர்வேலு ஏகத்துக்கும் குதித்தான். ''அவரு எப்ப வர்றது இவனுக்கு எப்ப வைத்தியம் பாக்கறது. இரும்பு அயிட்டம் வேற குத்தியிருக்கு... ஏதாவது செப்டிக் ஆயிடுச்சுன்னா அப்புறம் இவன் எப்படிய்யா வேலை செய்யறது. மொதலாளியோட கையாளா இருக்க வேண்டியதுதான் அதுக்காக மனுஷனோட உயிரோடு வெளையாடக்கூடாது. இப்படித்தான் போன வாரம் சிமெண்ட் வரலைன்னு காலையிலேயே சொல்லாம, இதோ வருது,

இதோ வருதுன்னு 11 மணி வரைக்கும் வேலை வாங்கிட்டு, அப்புறம் சிமெண்ட் வராது போலருக்குன்னு அரை நாள் சம்பளம் கணக்குப்பண்ணி சனிக்கிழமை தர்றே. அதைக் காலையிலேயே சொல்லி யிருந்தா வேற இடத்துல வேலைக்குப் போய் முழு நாள் சம்பளம் வாங்கியிருப்போம்" என்று பொரிந்தான்.



"நெசந்தான். மொதலாளிதான் காலையிலேயே சிமெண்ட் வந்துரும் ஆளை வுட்டுடாதேன்னார். பெறகு அவர்தான் மத்தியானம் போன் பண்ணி சிமெண்ட் வராது எல்லாத்தையும் அனுப்பிடுன்னாரு. சம்பளம் அரை நாள் போடச் சொன்னதும் அவர்தான். இதையெல்லாம் அவர் வரும்போது ஒருத்தனும் கேக்கறதில்லை. கப்சிப்புன்னு வாய மூடிக்கிட்டு கெடக்கறீங்க. என்னுகிட்டதான் அப்படியே தாண்டிக் குதிப்பீங்க."

"நீதானே கூட இருந்து வேலை பாத்த. உனக்குத்தானே எல்லார் கஷ்டமும் தெரியும்."

"ஆமாமா, எல்லார் கஷ்டமும் எனக்குத்தான் தெரியும். ஆனா என் கஷ்டம் ஒருத்தனுக்கும் தெரியாது."

"ஐயா, கஷ்டவாளி.. நீ ஒண்ணும் உன் பணத்திலேர்ந்து தர வேணாம். அள்ளிச் சுருட்டிக்கிட்டு போறாரே உங்க மொதலாளி, அவருகிட்டேர்ந்து குடு."

"அட, என் கைக்காசு போட்டே பாக்கறன்யா போதுமா' என்று கோபத்தில் சொல்லிவிட்டு சைக்கிள் கடை மாணிக்கத்திடம் கைமாத்தாக வாங்கி தனியார் ஆஸ்பத்திரியில் கட்டுப்போடச் செய்தான் சின்னப்பன். அது விஷயம் தெரிந்தும்கூட என்ன ஏதென்று கேட்காததோடு யாரோ அது பற்றி லேசபாசாக பஞ்சமநாதனிடம் கேட்க 'அவன் திமிருயார் அவனை என்னைக் கேட்காம பிரைவேட் ஆஸ்பத்திரியில காமிக்கச் சொன்னது' என்று அலட்சியமாகச் சொன்னபோது ரொம்பவே நொந்து போனான் சின்னப்பன்.

தண்ணீர் லாரி வந்தபாடில்லை. அதற்காகத்தான் உட்கார்ந்திருந்தான் சின்னப்பன். கட்டட வேலைக்காக போர் போட்டதில் செலவுதான் பலன். இரண்டு சம்ப் கட்டி வெளியிலேர்ந்துதான் தண்ணீர் சேமித்துப் பயன்படுத்தினர். சிமெண்ட் பூசிய இடத்தில் தண்ணீர் விசிறி அடிக்க வேண்டும். இதுக்கென்று

சம்பளம் கேட்க முடியாது. கேட்கவும் மாட்டான். ஒரு மணி நேரத்து வேலைக்கு சம்பளம் கேக்குறதா.. சேச்சே.. மனசாட்சி உறுத்தும்.

ரகு காலுக்கு புதுச் செருப்பு வேண்டும் என்று அடம்பிடித்துக் கொண்டிருக் கிறான். ஸ்கூலுக்குப் போகிற பிள்ளை, அவனும் எத்தனை நாளுக்குத்தான் அறுந்த வார் செருப்பையே போட்டுக் கொண்டு போவான். இப்போதே ஊக்குப் போட்டுக் கொண்டுதான் ஸ்கூலுக்குப் போகிறான். சனிக்கிழமை சம்பளம் போட்டதும் வாங்கித் தருவதாக உறுதி அளித்திருந்தான். குறைந்தபட்சம் மிச்ச மிருக்கிற இரண்டுநாள் வேலை நடந்தாத் தான் சனிக்கிழமை சம்பளம் போடுவார் பஞ்சமநாதன். இல்லையென்றால் 'அடுத்த மாசத்துல சேத்து வாங்கிக்க' என்று இவ னுக்கு மட்டும் தாக்கீது தயாராக இருக் கும். பெரியநாயகத்துக்கு இன்னும் உடம்பு சரியாகலை. வீட்டில்தான் படுத் திருந்தான். ஆனாலும் இந்த பஞ்சமநாத னுக்கு இவ்வளவு பிடிவாதம் கூடாது. பெரியநாயகமும் என்ன பண்ணுவான் பாவம். ஒண்ணு இன்னும் கொஞ்ச நாளைக்கு வைத்தியம் பண்ணியிருக் கணும், இல்லை... கொஞ்சம் பணத்தை யாவது கையில கொடுத்திருக்கணும். அதுக்கும், அரை நாள் சம்பளம் பிடிக்கப் பட்டதற்கும் சேர்த்து கதிர்வேலு வேலையை நிறுத்திவிட்டு கோபமாகப் போய்விட்டான். அவனையும் ரங்கசாமி யையும் சட்ராசில் பிறகு போய் சமா தானப்படுத்தி இன்றைக்குத்தான் பேச்சு வார்த்தையை சுமுகமாக நடத்திக் கொண் டிருந்தனர்.

குத்துக்காலிட்டு உட்கார்ந்து உட் கார்ந்து கால்கள் இரண்டும் வலித்தன. எழுந்து போய் முத்தண்ணன் கடையில் சூடா ஒரு சாயா குடிக்கலாம். அங்க போனாலாவது என்ன ஏதுன்னு விஷயம் தெரிஞ்சுக்கலாம் என்று நினைத்தபடி டீக்கடை பக்கமாக நகர்ந்தான்.

வழக்கம் போல் மீடியமாக டீயைப் போட்டு இவன் கையில் கொடுத்துவிட்டு, "என்ன மேஸ்திரி, பிரச்னை முடிஞ் சிடுச்சு போலிருக்கே. நாளையிலேர்ந்து வேலையை ஆரம்பிச்சிடலாம்னு சொன் னாங்க" என்றார்.

"அடடே, அப்படியா" எனறான் முகம் கொள்ளாச் சிரிப்புடன் சின்னப்பன்.

"ஆமாமா, இப்பத்தான் கோவிந்தன் சொல்லிட்டுப் போனான். பாவம் உன்னதான் பலியாடு ஆக்கிட்டானுங்க போல"

திடுக்கிட்டு நிமிர்ந்து, "என்னண்ணே சொல்றீங்க?" என்றான்.



"அட, நீதான் ஏதோ மொதலாளிகிட்ட சரியா எடுத்துச் சொல்லி பெரியநாயகம் வைத்தியத்துக்குப் பணம் வாங்கித்தரலை யாம். அவர் தயாராத்தான் இருந்தாராம். இனிமே ஏதாச்சும் ஆச்சுன்னா மூணாவது தெருவுல இருக்கிற ரவி டாக்டர்கிட்ட காண்பிக்கிற மாதிரி ஏற்பாடு பண்ணி

யிருக்கிறாராம். அவரு பின்னாடி பில்லை பைசல் பண்ணிக்குவாராம். போன வெசாளக்கிளமை வேலைக்குக் கூட முழு நாள் சம்பளம் குடுத்திர்றேன்னுட்டாராம். குழப்பத்துக்கு நீதான் காரணமாம். உன்னை நிறுத்திப்புட்டாங்களாம்"

"இதென்னண்ணே அக்குறும்பா இருக்கு. நான்தானே அண்ணே நம்ம சைக்கிள் கடை மாணிக்கத்துக்கிட்ட கைமாத்தா வாங்கி வைத்தியம் பாத்தேன். அதைக்கூட இன்னும் குடுத்த பாடில்லை."



"இதையெல்லாம் சொல்றதுக்கு யார் இருக்கா. இவனுவளுக்கும் ஏதோ நீ வேலை செய்யாமயே சம்பளம் வாங்கறதா நெனப்பு. உங்க மொதலாளிக்கும் ஏதோ உனக்கு வெட்டி சம்பளம் கொடுக்கறதா எண்ணம். ஆனா எவன் நெனச்சுப் பாக்கறான், இந்த மேஸ்திரிக்கெல்லாம் ஒரு வேலையும் இல்லாத மாதிரிதான் இருக்கும். ஆனா உன்ன மாதிரி ஒரு மேஸ்திரி இல்லாட்டி இங்க ஒரு வேலையுமில்லன்னு. இரண்டு பேரும் சேர்ந்து உன்னை பொலிபோட்டுட்டானுங்க."

கண்கள் இருண்டு கனத்தன. என்ன செய்யப் போகிறோம், அடுத்து எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்று நினைத்த போது, அக்னி குழம்பு ஒன்று அடி வயிற்றிலிருந்து புறப்பட்டு நெஞ்சுக்குழியில் இறங்கியது போலிருந்தது சின்னப்பனுக்கு.

வழக்கமான 'பபபாய்ங் பாய்ங்' என்ற ஹாரன் ஒலியுடன் தண்ணீர் லாரி கட்டட வேலை நடக்கும் இடத்தை நோக்கித் திரும்பியது.

சட்டென்று உணர்வு திரும்பிய சின்னப்பன், பாதி டீயை வரிக்கி பாட்டில் மேல் வைத்துவிட்டு "அட, தண்ணி லாரி வந்திடுச்சி. முத்தண்ணே, போய் தண்ணி புடிச்சு கொஞ்சம் அடிச்சிட்டு வந்திடறேன்" என்று கீ கொடுத்த பொம்மை போல கட்டடத்தை நோக்கி நடந்தான்.

விசித்திரமாகப் பார்த்த முத்து, "என்ன, தண்ணி புடிச்சி அடிக்கப் போறியா? சரியான வெவரங்கெட்ட பிலாக்காய்யா நீ! உன் வேலைக்கே ஒலை வச்சிட்டானுங்க. அப்புறம் என்னய்யா அங்க வேலை" என்று கடிந்து கொண்டான்.

"அப்படியும் இது சம்பளம் இல்லாத வேலைதான். பேசுனவனுங்க ஒருத்தனும் இன்னிக்கு இங்க வரப்போறதில்லை. வீட்டுக்குப் போயிடுவானுங்க. ஆனா இத இப்படியே விட்டுட்டுப் போனா எனக்கு நிம்மதியா தூக்கம் வராது. அப்படிப் பழகிட்டேன். போயிட்டு போவுது விடுங்கண்ணே, அவனுங்க பண்ணினதுக்கு கட்டடம் என்ன பண்ணும் பாவம். தண்ணி அடிக்கலைன்னா புது சிமெண்ட் பூசின இடம் புசு, புசுன்னு மூச்சுவிட முடியாம தெணறும். அதுவும் என்ன மாதிரி ரெண்டுங்கெட்டானாத்தானே நிக்கிது" என்றபடி கருமமே கண் போல நகர்ந்தான் சின்னப்ப மேஸ்திரி. ●

உலகம் இவ்வளவுதான்!

கோபர்நிகஸின் மண்டை ஓடு!

'இப்பொழுது நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பது கோபர்நிகஸின் மண்டை ஓடு'. 'ஈஈஈஈ' என்று சிரிக்கும் அந்த மண்டை ஓட்டைக் கையில் பிடித்தபடி இப்படி மகிழ்ச்சியுடன் அறிவித்திருக்கிறார் போலாந்து நாட்டு மானுடவியலாளர் ஒருவர். பால்டிக் நதி துறைமுகத்தில் உள்ள ஃப்ரோம்போர்க் எனும் இடத்தை கடப்பாறை, மண்வெட்டியோடு தோண்டிய பொழுது, இந்த மண்டை ஓடு அகப்பட்டிருக்கிறது. பாவம்! மானுடவியலாளர்களின் பணி பரிதாபத்துக்குரியது. வருடம் முழுவதும் விடாமல் தோண்டினால், போனால் போகட்டும் என்று ஏதாவது ஒரு பிராணியின் அல்லது பூச்சியின் கட்டை விரல் நகமோ, கடவாய்ப் பல்லோ கிடைக்கும். அதுவும் எப்பொழுதாவதுதான்.

இப்படியிருக்க, ஒரு முழு மண்டை ஓடு அதுவும் கோபர்நிகஸின் மண்டை ஓடு கிடைத்தால் சும்மா விடுவார்களா? பய பக்தியுடன் அதை நன்றாகத் தேய்த்துக் குளிப்பாட்டி, பவுடர் போட்டு கம்ப்யூட்டர் லேபுக்கு அழைத்துப்போய் பரிசோதித்திருக்கிறார்கள். முதலில் அவர்கள் அறிய விரும்பியது கோபர்நிகஸ் உயிரோடு இருந்தபொழுது எப்படியிருந்தார் என்பதைத்தான். புத்திசாலி கம்ப்யூட்டர், மண்டை ஓட்டைப் பற்றி இவர்கள் கொடுத்த விவரங்களை விழுங்கி ஏப்பமிட்ட மறுகணமே ஒரு எழுபது வயது தாத்தாவின் முகத்தை உருவாக்கித் தந்திருக்கிறது. (முன் வழுக்கை, கலைந்த கேசம், நெற்றிச் சுருக்கங்கள், அடர்த்தியான புருவங்கள், கால் மணி நேரத்திற்கு முன்புதான் விளக்கெண்ணெய் குடித்தது போன்ற முக அமைப்பு)

கோபர்நிகஸ் (1473 - 1543) தன் வாழ்நாளில் மிகுதியான எதிர்ப்பைச் சம்பாதித்தது தேவாலயங்களிடமிருந்தும் பாதிரிமார்களிடமிருந்தும்தான். பூமிதான் இவ்வுலகின் மையப் புள்ளி என்று சொல்லி வந்தவர்களை (2வது நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க தத்துவ அறிஞர் டால்மிதான் முதலில் இந்த வாதத்தைத் தொடங்கி வைத்தவர்) கோபர்நிகஸ் தயவு தாட்சண்யமின்றி நிராகரித்தார். சூரியன்தான் உலகின் மையப்புள்ளி என்று சாதித்தார். தேவாலயங்களும் பாதிரிமார்களும் கோபர்நிகஸை கிண்டலடித்தனர்; கண்டித்தனர். 'பூமிதான் மையம். பூமிக்கு மேலே சொர்க்கம். கீழே நரகம். இதுதான் தேவ உண்மை' என்று வாதமிட்டனர். கோபர்நிகஸ் தனது தலையை இடது பக்கமும் வலது பக்கமும் ஆட்டி அவர்களை மறுத்தார்.

அது மட்டுமல்ல. பாதிரிமார்களை மேலும் வெறுப்பேற்றினார். பூமி தன்னைத் தானே தினமும் சுற்றி வருகிறது என்றார். 'நல்ல தமாஷ். பூமியாவது சுத்தறதாவது? யார் காதுல பூ சுத்தறே' என்றது எதிர் கோஷ்டி. 'நீ சொல்ற மாதிரி பூமி சுத்தினா அப்புறம் ஏன் நாம கீழே விழாம கல்லு மாதிரி நிக்கிறோம்? இந்த டம்ளர்ல இருக்கிற தண்ணி ஏன் கீழே கொட்டாம இருக்கு?' யானை, பூனை, தவளை எல்லாம் எப்படி நடந்து போகுது' என்று அறிவியல்பூர்வமாக கேள்விகள் எழுப்பினர்.

இன்று கோபர்நிகஸ்தான் நவீன வானியல் துறையின் தந்தை. எல்லாம்

சரிதான். ஆனால் இந்த மண்டை ஓடு விவகாரத்தில் சந்தேகத்திற்கு இடமிருக்கிறது. 'இது கோபர்நிகஸின் மண்டை ஓடுதான்' என்று நூற்றுக்கு நூறு சதவீதம் உறுதியுடன் மெய்ப்பிக்க வேண்டுமானால் DNA பரிசோதனை செய்ய வேண்டும். ஆனால் இது சாத்தியமில்லை. காரணம் கோபர்நிகஸின் வாரிசு யாராவது உயிரோடு இருந்தால் தான் மண்டை ஓட்டு DNAவை அவர்களுடைய DNA சரங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து 'மூக்கு தாத்தா மாதிரி இருக்கு. தாடை கொஞ்சம் கீழே இறங்கியிருக்கு. முன் பல் அச்சு அசல் தாத்தாவேதான்' என்று நின்று நிதானமாக நிரூபிக்கலாம்.



இனி நிர்வாகவியலின் தந்தையைப் பற்றிப் பார்க்கலாம். 1987-ல் அமெரிக்காவில் பங்குச்சந்தை பாதாளத்தை நோக்கிச் சரிந்த பொழுது பீட்டர் ட்ரக்கர் அமைதியாகக் கூறினார், 'இதை நான் முன்பே எதிர் பார்த்தேன்'. அடப்பாவி என்றது அமெரிக்கா. ஆனால், தான் அவ்வாறு யூகித்தது ஏன் என்பதை ட்ரக்கர் விளக்கிய பொழுது அமெரிக்கா நிமிர்ந்து உட்கார்ந்தது. ட்ரக்கர் கூறிய காரணம் இதுதான். 'முதலீடு செய்பவர்களைவிட விற்பனை செய்பவர்கள் மிகுதியாக லாபம் பெறுகிறார்கள். இது தொடர்ந்தால் கட்டாயம் பங்குச்சந்தை கவிழ்ந்தானே செய்யும்?'

ட்ரக்கர் ஒரு தீர்க்கதரிசி என்பதை உலகம் விரைவிலேயே கண்டு கொண்டது. ஜெனரல் மோட்டார்ஸ், இண்டல் போன்ற நிறுவனங்கள் கிளிப்பிள்ளைகள் போல ட்ரக்கர் சொல்படி நடந்து கொண்டன, வெற்றி பெற்றன. தனது 75 வயது அனுபவத்தைக் கொண்டு அவர் எழுதிய 39 புத்தகங்களையும் நிர்வாக உலகின் 39 பைபிள்கள் என்று உலகம் ஏற்றுக் கொண்டது. ஒரு நிர்வாகம் வெற்றிகரமாக செயல்பட மக்கள் சக்தி இன்றியமையாதது என்பது இவருடைய முக்கியவாதம். கம்ப்யூட்டர், மனிதர்களுக்குச் சமமாக வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யும் என்பதை அவர் 1960களிலேயே கணித்து விட்டார்.

கடந்த நவம்பர் 11ம் தேதி தனது 95வது வயதில் பீட்டர் ட்ரக்கர் மரணமடைந்தார். டை கட்டிக்கொண்டு முதுகுப் பையோடு சுற்றும் விற்பனைப் பிரதிநிதிகள் முதல், சாய்வு நாற்காலியில் அமர்ந்து கம்ப்யூட்டரைத் தட்டிக் கொண்டே தேநீர் அருந்தும் கார்ப்பரேட் முதலாளிகள் வரை அனைவரும் பீட்டர் ட்ரக்கருக்கு ஏதோ ஒரு வகையில் கடன்பட்டிருக்கிறார்கள்.

- மருதன்



இவர் ரப்பர் ஸ்டாம்ப் அல்ல!

"லட்சக்கணக்கானவர்கள் கைகளில் மொபைல் போன் வைத்துக் கொண்டிருந்தபோதிலும், கோடிக்கணக்கான இந்தியர்கள், கையில் திருவோடு ஏந்தும் நிலைமையில்தான் இருக்கிறார்கள். சிலர் குடிப்பதற்கு மினரல் வாட்டரைப் பயன்படுத்தினாலும், பலகோடி மக்கள் அசுத்தமான தண்ணீரைத்தான் குடிக்க வேண்டியிருக்கிறது."

இப்படிச் சொன்னவர், யாரோ ஒரு கம்யூனிஸ்ட் தலைவர் இல்லை. நம் நாட்டின் ஜனாதிபதி. அதுவும், சுதந்திர தினப் பொன்விழாவை ஒட்டி ஆற்றிய உரையில் இப்படி ஆதங்கப்பட்டார். அவர் கே.ஆர்.நாராயணன்.

அண்மையில் காலமான நாராயணன், 'இந்திய ஜனாதிபதி பதவி வெறும் ரப்பர் ஸ்டாம்ப் பதவி இல்லை' என்று தேசத்துக்கு எடுத்துச் சொன்னதோடல்லாமல், தேர்தலில் வாக்களித்த முதல் இந்திய ஜனாதிபதி என்கிற பெருமைக்கும் உரியவர். கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவரான ஜனாதிபதி, தேர்தலில் வாக்களிக்கலாமா என்று சர்ச்சை எழுந்தபோது, 'வாக்களிப்பது ஜனநாயகக் கடமை' என்று விளக்கம் அளித்தார்.

ஆயுர்வேத வைத்தியரான ராமன் வைத்தியரின் ஏழு குழந்தைகளில் நாலாவதாகப் பிறந்தவர் நாராயணன்.

மிகவும் ஏழைக் குடும்பம். "பள்ளிக்கூட நாட்களில் ஃபீஸ் கட்ட பட்ட கஷ்டம் சொல்லி மாளாது. நான் குறித்த காலத்தில் ஃபீஸ் கட்டாத காரணத்தால், வகுப்பில் பெஞ்ச் மீது ஏறி நின்ற நாட்கள் பல" என்று ஒரு பிரிட்டிஷ் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார் நாராயணன். பாடப் புத்தகங்கள் வாங்க வசதி இல்லாத காரணத்தால் ஆஸ்துமா நோயாளியான அவரது அண்ணன் நீலகண்டன், மற்ற மாணவர்களிடமிருந்து புத்தகங்களை வாங்கிக் கொண்டு வந்து, அவைகளை அப்படியே பிரதி எடுத்துத் தம்பிக்குக் கொடுப்பாராம்.

மெட்ரிக் பாஸ் செய்தபின், கோட்டயத்தில் மெரிட் ஸ்காலர்ஷிப்பில் இன்டர்மீடியட்டை முடித்தவர், திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. ஆங்கில இலக்கியத்தில் பல்கலைக்கழகத்திலேயே முதலிடம் பெற்றிருக்கிறார். பல்கலைக் கழகத்தில் முதலிடம் பெறும் மாணவர்களுக்குக் கல்லூரியில் நிரந்தர ஆசிரியர் வேலை தரும் மரபுக்கு மாறாக, நாராயணன் தாழ்ந்த ஜாதிக்காரர் என்று சொல்லி, கிளார்க் வேலை கொடுத்தது திருவிதாங்கூர் சமஸ்தானம். இதை அவமானமாகக் கருதி, வேலையை ஏற்க மறுத்தது மட்டுமின்றி, பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தார் நாராயணன்.

ஐம்பது ஆண்டுகள் கழித்து, அவர் ஜனாதிபதியான பிறகு, திருவனந்தபுரம் பல்கலைக்கழகம் தனி விழா நடத்தி, நாராயணனிடம் அவரது டிகிரி சான்றிதழை அளித்து கௌரவம் தேடிக் கொண்டது.

டெல்லிக்குச் சென்ற நாராயணன், ஹிந்து மற்றும் டைம்ஸ் ஆப் இந்தியா தினசரிகளில் நிருபராகப் பணியாற்றினார். 1945 ஏப்ரலில், நிருபர் நாராயணன் பேட்டி கண்ட வி.வி.ஐ.பி. மகாத்மா காந்தி.

காந்திஜி, நாராயணனுக்குப் பேட்டியளிக்க நேரம் தந்த தினம், அவரது மௌனவிரத தினமான திங்கட்கிழமை. எனவே நாராயணன் தனது கேள்விகளை எழுதிக் கொடுக்க, காந்திஜியும் தனது பதில்களை எழுதியே கொடுத்துவிட்டார். காந்திஜி பதில்கள் எழுதிக் கொடுத்த காகிதங்களை நாராயணன் பொக்கிஷமாகக் கருதிப் பாதுகாத்து வந்தார்.

இன்னொரு விசேஷம் என்னவெனில், நாராயணன் எடுத்த காந்திஜி பேட்டியை, அப்போதைய ஆங்கிலேய நிர்வாகத்தின் கீழ் இருந்த டைம்ஸ் ஆப் இந்தியா வெளியிடவில்லை. "காந்திஜியை பேட்டி காண நாராயணன் அதிகாரபூர்வமாக அனுப்பப்படவில்லை. தவிர பேட்டியில் பரபரப்பான விஷயம் எதுவுமில்லை" என்று காரணம் கூறப்பட்டது.

ஆனாலும் 'மகாத்மாகாந்தியின் தொகுக்கப்பட்ட எழுத்துகள்', 'கே.ஆர். நாராயணனின் சுயசரிதம்' ஆகிய இரு நூல்களிலும் இந்தப் பேட்டி முழுமையாய் இடம்பெற்றுள்ளது.



இங்கிலாந்தில் உள்ள லண்டன் பொருளாதாரப் பள்ளியில், நாராயணனுடன் ஒரே அறையில் தங்கிப் படித்தவர் வீராசாமி ரிங்காடோ. அவர் பின்னாளில் மொரீஷியஸ் நாட்டின் ஜனாதிபதியானார். நாராயணனின் அந்த நாள் நண்பரான ட்ருதேவ், பின்னர் கனடா நாட்டுப் பிரதமராய் பதவி வகித்தார்.

லண்டன் பொருளாதாரப் பள்ளியில் நாராயணனுக்கு ஆசிரியராக இருந்தவர் ஹரோல்டு லஸ்கி. லண்டனில் படிப்பை முடித்துவிட்டு, இந்தியா திரும்பியபோது, லஸ்கி அளித்த சிபாரிசுக் கடிதத்துடன் அப்போதைய பிரதமர் நேருவைச் சந்தித்தார் நாராயணன்.

இந்திய அயலுறவுப் பணிக்கு நாராயணன் தேர்வு செய்யப்பட்டு பர்மாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கே இளம் கிறிஸ்தவப் பெண்கள் சங்கத்தின் 'மாடிரின்ட் பிரின்ட்', லண்டனில் அரசியல் விஞ்ஞானம் படித்த நாராயணனை சொற்பொழிவாற்ற அழைத்தார். அந்த இளம்பெண்தான் உஷா என்று பெயர் மாற்றிக்கொண்டு, பின்னர் கே.ஆர். நாராயணனின் மனைவியானார்.

இந்தத் தம்பதியருக்கு இரண்டு பெண்கள். மூத்த மகள் சித்ரா அயலுறவுத் துறையில் பணியாற்றுகிறார். அடுத்தவர் அம்ரிதா.

• சோனியாகாந்தியுடன்...





• சந்திரிகா குமாரதுங்காவுடன்...

நாராயணனின் உடன்பிறந்தவர்களான கௌரி (வயது 87), பாஸ்கரன் (82) இருவரும் கேரளாவில் சொந்த ஊரில் வசிக்கிறார்கள். முதுமை காரணமாக அவர்களால் தங்கள் தம்பியின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்ள முடியவில்லை.

- எஸ். சந்திரமௌளி



• டாக்டர் கோவிந்தராஜ்



• டாக்டர் அருள்மொழி வர்மன்

மழைக்கால

பருவமழை ஓய்ந்தாலும் அது கிளப்பிய நோய்மழை ஓய்ந்தபாடில்லை. சமீபத்திய மழைக்குப் பிறகு வந்திருக்கும் நோய்கள் என்னென்ன, அவை வராமலிருக்க என்ன செய்ய வேண்டுமென்பது குறித்து பல்லாவரம் லட்சுமி மருத்துவ மனையின் பொது மருத்துவரான டாக்டர் டி.ஜி. கோவிந்தராஜிடம் கேட்டோம்.



"அண்மையில் பெய்த மழை பல தொற்று வியாதிகளை ஏற்படுத்தியுள்ளது. ஈரத்தன்மையுள்ள காற்றின் மூலம் இன்ஃபுளுன்ஸா வைரஸ் பரவி, அதை சுவாசிக்கும் மனிதரிடத்தில் ஜலதோஷம், காய்ச்சல், வீசிங், தொண்டைக் குழாய் வீக்கம் எனப் பல நோய்களை உண்டாக்கியிருக்கிறது. இந்த மாதிரியான நோய்களுடன் என்னிடம் மருத்துவத்திற்கு வந்தவர்கள் அநேகம். இவற்றைத் தடுப்பதற்கு இந்நோய் அறிகுறி கண்டவர்களுடன் கவனமுடன் பழகினாலே போதும். எளிதில் தொற்றக்கூடிய நோய்களாதலால் நோய் கண்டவர் உபயோகப்படுத்திய கைக்குட்டை, போர்வை, படுக்கை போன்றவற்றை மற்றவர் பயன்படுத்தாமலிருப்பது நல்லது. நோய் வந்தவர் தனியறையில் ஓய்வு எடுத்தல், வாய் மூடித் தும்முதல், இருமுதல் போன்றவற்றின் மூலம் இந்நோய்கள் அடுத்தவருக்குப் பரவாமல் தடுக்கலாம்.

அடுத்தபடியாக அதிகம் தென்படுவது தண்ணீர்க் கேட்டினால் உண்டாகும் நோய்கள். மழை நீர், கழிவு நீர் இரண்டும் குடிநீரில் கலந்து விடுவதால் நிகழும் பிரச்னை இது. இது போன்ற நீரில் வாழும் பாக்டீரியாக்கள், வைரஸ்கள், காலரா, சீதபேதி, டயரியா, டைபாய்டு, மஞ்சள் காமாலை போன்ற நோய்களை ஏற்படுத்துகின்றன. இதுபோன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும் என்னிடம் சிகிச்சைக்கு வருகின்றனர். அதிலும் காலரா, டைபாய்டு, மஞ்சள் காமாலை நோய்கள் அதிகளவில் தென்படுகின்றன. காலராவால் பாதிக்கப்பட்டவரின் குடும்ப உறுப்பினர் உடனடியாக அதை உள்ளூர் சுகாதார அலுவலருக்குச் சட்டப்படி தெரிவித்தாக வேண்டும். அப்போது தான் நோய் மற்றவர்களுக்கும் பரவாமல் தடுக்க, அரசால் விரைந்து நடவடிக்கை எடுக்க முடியும். சால்மோநல்லா எனப்படும் பாக்டீரியா தான் டைபாய்டு காய்ச்சலுக்குக் காரணமானது. இரத்தப் பரிசோதனை மூலம் இதனை எளிதில் கண்டறிந்து குணப்படுத்தி விடலாம். ஆனால், அரைகுறை





சிகிச்சையோடு விட்டுவிட்டால் மஞ்சள் காமாலையில் போய் முடிந்துவிடும் அபாயம் உண்டு. மஞ்சள் காமாலையில் ஏ, பி, சி, ஈ என்று நான்கு வகைகள் உண்டு. இவற்றில் இந்த மழைக்குப் பிறகு 'மஞ்சள் காமாலை ஏ' அதிகம் தென்படுகிறது. இத்தருணத்தில் தண்ணீரைக் காய்ச்சிக் குடிப்பது மிக முக்கியம்.

மழைநீர் சாலைகளில் தேங்கி, அதில் கொசுக்கள் உருவாகி டெங்கு, மலேரியா, ஃபைலேரியா (யானைக்கால்) வியாதிகளும் இந்நேரத்தில் வர சாத்தியமுண்டு. மலேரியா, டெங்கு தற்போது அதிகம் தென்படுகின்றன. நமது சுற்றுப்புறங்களைச் சுகாதாரமாக வைத்திருந்தாலே போதும், இவற்றைத் தடுத்து விடலாம். மாநகராட்சியினர் சாலைகளில் கொசு மருந்து அடிப்பதன் மூலமும் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்வதன் மூலமும் இந்நோய்களுக்கு முடிவுரை எழுதலாம். மேலும் கண் நோய்களும் இந்த மழைக்குப் பிறகு அதிகளவில் காணப்படுகின்றன" என்றவருக்கு நன்றி சொல்லிவிட்டு, அண்ணா நகர் உமா கண் மருத்துவமனையின் தலைவரும் லேசிக் அறுவை சிகிச்சை நிபுணருமான டாக்டர் அருள்மொழிவர்மனின் முன் சென்று அமர்ந்தோம்.


நோய்களும் தீர்வுகளும்...

“மழைக்குப் பிறகு...” என்று நாம் ஆரம்பித்ததுதான் தாமதம்...

"ஆமாம்... மழைக்குப் பிறகு கண் நோய்கள் மளமளவென்று வந்து விட்டன" என்று டாக்டரே சொல்லத் தொடங்கி விட்டார்.

"கண்களைத் தாக்கும் பல பெரிய வைரஸ்கள் ஒருமுறை வந்து விட்டால், மீண்டும் வராது. ஆனால் மழைக் காலத்தின் போதும் மழைக்குப் பிறகும் குளிர் மற்றும் கோடைக்காலங்களிலும் கூட பருவ கால கண் நோய்களின் பாதிப்பு ஏற்படலாம். இத்தகைய சீசனில் வைரஸ்கள் ஒருமுறை வந்தால், திரும்பவும் எப்போது வரலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும். குறிப்பாக 'மெட்ராஸ் ஐ' நோயானது, எப்போதெல்லாம் சுற்றுச் சூழல் கெட்டு விடுகிறதோ அப்போதெல்லாம் விரைந்து பரவக்கூடியது. அதிலும் இது காற்று மூலம் பரவும் வைரஸ். எனவே, மெட்ராஸ் ஐ வந்தவர் சற்றுத் தனித்திருத்தல் சிறந்தது. அது மட்டுமல்ல. பாதிக்கப்பட்டவரின் கர்சீப், டவல், போன்றவற்றை மற்றவர் கையாளக் கூடாது.

அடுத்து மழைக் காலத்தில் மாசுபட்ட தண்ணீரில் நடப்பது, கையாளுவது, துடைப்பது, குளிப்பது போன்ற செயல்களால் தண்ணீர் மூலம் பரவும் வைரஸ் நோய்களின் தொடர்ச்சியாகவோ அல்லது நேரடியாகவோ கண்களின் வெண்படலத்தை பாதிக்கும் Pharyngo வகை நோய்கள் ஏற்படுகின்றன. மாசுபட்ட தண்ணீரில் உள்ள பல வைரஸ்கள் கருவிழியை நேரடியாகத் தாக்கும் தன்மை கொண்டவை. எனவே நாம் பயன்படுத்தும் தண்ணீர் தூய்மையாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். மழைக்காலங்களில் ஷம்ப், ஓவர்ஹெட் டேங்க் போன்றவற்றைக் கழுவி



சுத்தமாக வைத்துக்கொள்ளலாம். குளிக்கும் தண்ணீரை முடிந்தவரை கொதிக்க வைத்துக் குளிக்கலாம்.

"மாசுபட்ட தண்ணீர் மற்றும் சுற்றுச் சூழல் மூலம் கண் நோய் வைரஸ் தொற்று ஏற்பட்டிருந்தால், முதலில் தாடையில் நெறி கட்டும். கண்களிலிருந்து தண்ணீர் ஊற்ற ஆரம்பிக்கும். பிறகு கண் சிவந்து விடும். வெளிச்சத்தில் கண் கூசும். உடனே மெடிக்கல் ஷாப்புக்கு ஓடிப் போய் ஏதோ ஒரு சொட்டு மருந்தை வாங்கிக் கண்களில் போடக் கூடாது. தவறான மருந்தால் கருவிழிகள் பாதிக்கப்படும் வாய்ப்புகள் மிக அதிகம்.

தவறான மருந்தைப் பயன்படுத்தி, கண்கள் வீங்கிய நிலையில் பலரும் வருகிறார்கள். கண் மருத்துவர் அருகில் இல்லை என்ற நிலையில் தவறிப் போய் கடையில் மருந்து வாங்கிப் போட்டு, ஓரிரு நாட்களில் சரியாகவில்லை என்றால் கொஞ்சமும் கால தாமதம் செய்யாமல் கண் மருத்துவரிடம் செல்வது மிக அவசியம். விழியின் வெண் படலத்தில் தோன்றும் நோய்களை விரைந்து குணப்படுத்தாவிட்டால், கருவிழியைப் பாதிக்கும் ஆபத்து இருப்பதை மறந்து விடக் கூடாது.

மழைநீர், மாசுபட்ட தண்ணீர், மனிதக் கழிவு, மாட்டுச்சாணம் போன்றவற்றில் எலியின் சிறுநீர் கலந்து, லேப்டோஸ் வைரோஸிஸ் என்ற வைரஸ் மூலம் 'ரேட்ஃபீவர்' பரவுகிறது. மழைக்காலத்தில். தோன்றும் மற்ற எல்லா நோய்களையும் விடக் கொடியது இந் நோய். இந்த வைரஸ் தாக்கினால் முதலில் கெண்டைக்கால் சதை, தொடை போன்றவற்றில் வலி ஏற்படும். அடுத்து கண்களில் இரத்தக்கசிவு ஏற்படும். பொதுவாக இந் நோய்க்கு பென்சிலின் மருந்து கொடுக்கிறார்கள். ரேட்ஃபீவருக்கு சிகிச்சை எடுக்கும் அதே நேரம் கண்ணுக்கும் சிகிச்சை எடுத்துக் கொள்வது, கருவிழி பாதிப்பிலிருந்து தப்பிக்க உதவும்" என்றார் டாக்டர் அருள்மொழிவர்மன்.

தொகுப்பு : **ஸ்ரீசக்கரம்**


• கனிமொழி



• பெரியார்தாசன்



• க.ப. அறவாணன்





• சுஹாசினி

“கவலை தரும் கலாசாரம்!”

தமிழ் சினிமாவுக்கு இது சோதனைக் காலம். எஸ்.ஜே. சூர்யாவில் ஆரம்பித்து மாதவன், தங்கர்பச்சான், குஷ்பு, சுகாசினி... என சர்ச்சையில் சிக்குபவர்களின் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது.

தமிழ்நாட்டில் நிலவும் இந்தப் போக்கு குறித்து நம்மிடம் கவலையோடு பேசினார் பேராசிரியர் பெரியார்தாசன்...

“தமிழ்நாட்டில் 1972-ம் வருடம்தான் ராஜா முத்தையா செட்டியார் தலைமையில் முதல் விதவைத் திருமணம் நடந்தது. அந்தளவுக்கு கற்பு என்கிற பெயரில் பெண்களுக்குத் திங்கிழைக்கப் பட்டிருந்தது. விதவைத் திருமண ஆதரவு, பால்ய திருமண ஒழிப்பு போன்ற உயர்ந்த நோக்கங்களுக்காகத்தான் பெரியார் கற்பு பற்றிப் பேசினார். ஆனால் குஷ்பு, சுஹாசினி போன்றவர்கள் பேசியது மலிவு விளம்பரத்துக்காக. இரண்டையும் ஒரே தராசில் வைத்து எடைபோடக்கூடாது” என்றவர், “சொந்தமாகக் கருத்துச் சொல்ல நிறையப் படிப்பும் விவர சேகரிப்பும் தேவை.

சொந்தமாகப் பேசும் பொழுது நாட்டு நடப்பு பற்றிய தெளிவின்மையால் அவர்களுக்குப் பிரச்னைகள் ஏற்பட்டு விடுகின்றன. இப்படித்தான் அன்றைக்கே தி.மு.க.வில் எம்.ஜி.ஆர். சொந்தமாகப் பேச ஆரம்பித்தபோது பிரச்னை எழுந்தது. அதேபோல் அ.தி.மு.க.வுக்கு ஆதரவாக மனோரமா மேடையேறி ரஜினிக்கு எதிராகப் பேச, ஆயிரம் படங்களுக்கு மேல் நடித்தவரின் பாடு திண்டாட்டமானது” என்றார்.

தமிழர் வரலாறு, தமிழர் பண்பாடு, கலாசாரம் பற்றிப் பல ஆய்வுகள் செய்து நூல்கள் வெளியிட்டுள்ள எழுத்தாளர் க.ப. அறவாணன் நம்மிடம் பேசும்போது, “அண்ணல் காந்தி, ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் போன்றோர் அறிவுரைகளும் ஞான உபதேசங்களும் செய்த இம்மண்ணில் நடிகைகள் தவறான உபதேசம் செய்வதும் நாம் அதைக் கேட்க நேர்வதும் பெரும் துர்பாக்கியம். ஒரு மண்ணில் மக்களின் தேவையான, நியாயமான பாரம்பரியத்தை அழிக்கச் சொல்லப்படுகின்ற கருத்துகளை உரிமை என்று ஏற்க முடியாது. இதுபோன்ற கவலை தரும் கலாசாரம் தொடர்வது மிகவும் வேதனைக்குரியது” என்றார்.

கருத்துரிமை பற்றி அனைவரும் பேசும் இந்தத் தருணத்தில், கருத்து டாட் காம் என்றொரு இணையதளத்தை கார்த்திக் சிதம்பரத்துடன் இணைந்து ஆரம்பித்துள்ளார் கவிஞர் கனிமொழி. குஷ்பு - சுஹாசினி பிரச்னையை இவர் எப்படிப் பார்க்கிறார்?

“கருத்துகளைச் சொல்ல அனைவருக்கும் உரிமை உண்டு எனும் பொழுதும் அதை நாகரிகமாகச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். அதே சமயம், தமது கருத்தை ஒருவர் தெரிவித்ததற்காக அவர் மீது கிரிமினல் வழக்குகள் போடுவது எனக்குப் புதிதாகவே தோன்றுகிறது.”

- ச.ந.கண்ணன்

படம் : ஸ்ரீஹரி



* கௌரவப் பதவி...



* ... பனிஷ்மென்ட் போஸ்டிங்!

ரயில்களை ரயில்வே நிர்வாகம் இயக்குவதும் நிச்சயமாக உண்டு.

● அ.சுகுமார், காட்பாடி

? சென்னையை அடுத்து ஓர் ஏரியில் கட்டப்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளி இன்று நீரால் சூழப்பட்டுள்ள அவலம் பற்றி...?

! நீரால் சூழப்பட்டது அந்தப் பள்ளி மட்டுமல்ல. ஆயிரக்கணக்கானோர் அவதிப்பட்டனர். இன்னமும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அந்தப் பள்ளிக்கூடம், அரசே நீர்நிலைகளை ஆக்கிரமித்து, தவறான வழி காட்டுவதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

இலாகா அமைச்சர்– இலாகா இல்லாத அமைச்சர்... என்ன வேறுபாடு?

● ஜி.செல்வராஜன், ரிஷிவந்தியம்

? குஷ்பூ, சுஹாசினி வடிவில் மீண்டும் முருங்கை மரம் ஏறி விட்டாரே?

! இரண்டு பேருமே பகிரங்கமா மன்னிப்புக் கேட்டுட்டாங்க, அத்தோட கௌரவமா விஷயத்தை முடிச்சுக்கலாம். அவங்களை சந்திக்கு இழுத்து கொடுமைப்படுத்துவதும் தமிழ்ப் பண்பாடு அல்லவே அல்ல.



* சர்ச்சை...

● பி. ஜெகன், வேலூர்

? சிவகாசி - மஜா - எது நெம்பர் ஒன்?

! சிவகாசிதான் - ரசிகர் ஆதரவில் மட்டுமின்றி சர்ச்சையிலும் நெம்பர் ஒன்.

● டி.கே.சுப்பிரமணியன், திருப்பரங்குன்றம்

? வெள்ள காலங்களில் 'ரயில்கள் ரத்து செய்யப்படுகின்றன' என்று ரொம்ப சுலபமாக அறிவிக்கும் ரயில்வே, மாற்று ஏற்பாடுகள் ஏதேனும் செய்யக்கூடாதா?

! ரிஸ்க் எடுத்து மக்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படுத்துவதை விடவும் ரயில்களை ரத்து செய்வதே மேல். சாத்தியமான அளவில் மாற்றுப் பாதையில் சில

● அ.பேச்சியப்பன், ராஜபாளையம்

? எம்.ஜி.ஆரின் பிரசார வேனை விஜயகாந்த் பயன்படுத்துவது தவறா?

! ஜானகி எம்.ஜி.ஆர். விரும்பிக் கொடுத்த வாகனம் - பயன்படுத்துவதில் தவறே இல்லை. ஆனால், 'நான் அதை நினைவுப் பரிசாக வைத்திருக்கிறேனே தவிர, பிரசாரம் செய்ய அல்ல' என்று

நீங்கள் கேட்டவை -தராசு

விஜயகாந்தே தெரிவித்து விட்டாரே!

● பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி ❒

? இலாகா அமைச்சர் - இலாகா இல்லாத அமைச்சர்... என்ன வேறுபாடு?

! நேருஜிதான் முதன் முதலாக ராஜாஜியை இலாகா இல்லாத அமைச்சராக மத்திய அமைச்சரவையில் நியமித்தார். எந்தெந்த அமைச்சகத்தில் எந்த அமைச்சருக்கு என்ன சந்தேகம், குழப்பம், தயக்கம் இருந்தாலும் கோப்பு ராஜாஜியிடம் போய்விடும். அவரது மதிநுட்பம் செயல்படும். இன்று அதுவே punishment posting ஆகிவிட்டது. யார் மதிப்பார்கள்? வேலையின்றி, அதிகாரங்களை மட்டும் அனுபவித்து, சம்பளம் வாங்கும் பதவி.



• ... வலையில்!

● பா.ஜெகன், சென்னை - 93

? இளையராஜா நிகழ்ச்சியில் எஸ்.ஜானகி இல்லாதது பெரிய குறைதானே...?

! எஸ்.எஸ்.! அதிலும் 'செந்தூரப் பூவை' பவதாரிணி ரொம்பவே வாட வைத்து விட்டார்.

● எஸ்.மாலதி, மன்னார்குடி

? 'நீதி / தர்மம் என்பவையெல்லாம் நூறாண்டுகளுக்கொரு முறை மாறிவிடுகின்றன. எனவே காலத்தையொட்டியே படைப்பாளி பயணிக்கிறான்' என்று எழுத்தாளர் புஷ்பா தங்கதுரை கூறியிருப்பது குறித்து...?

! காலத்தைக் கடந்து நிற்கும் இலக்கிய, இதிகாசப் படைப்புகளை மறந்துவிட்டுப் பேசுகிறார். நீதி / தர்மம் என்பதெல்லாம் நிலையானவை என்று அவை பறைசாற்றிக் கொண்டேயிருக்கின்றன. மனிதனின் நோக்கும் போக்கும் மாறுவதால் ஆதார நீதி / தர்மம் மாறாது.

● ஜி.பி. லக்ஷ்மிநாராயணன், நகரி

? முன்னாள் பிரதமர் கௌடா, 'இன்ஃபோசிஸ் பெங்களூரிலிருந்து சீனாவுக்குப் போவதால் பெரிய இழப்பு ஏதும் இல்லை' என்று கூறியிருக்கிறாரே... இது குறித்து?

! சீனாவில் 845 ஏக்கர் நிலம் இன்ஃபோஸிஸுக்கு ஒதுக்கறாங்களாமா? கொஞ்சம் கேட்டுச் சொல்லுங்க... தனியார் தொழில் விஸ்தரிப்பு தேவைதான். அது மக்களை ஏமாற்றி முதுகு சவாரி செய்வதாகிவிடக் கூடாது.

● அ. அப்துல் காதர், விளாத்திகுளம் ★

? உலகத் திரைப்பட விழாக்களில் காட்டப்பட்ட 'Memento' என்ற படத்தின் அப்பட்டமான காப்பிதான் கஜினி என்று 'புதிய பார்வை'யில் படித்தேன். அப்படியெனில் டைட்டிலில் 'கதை ஏ.ஆர்.முருகதாஸ்' என்று பெயர் காட்டப்படுவது தவறில்லையா?

• மறப்போம்...



• ... மன்னிப்போம்!







• கருத்துக்...

• ... கோணல்!

!மெமென்டோதான் கஜினிக்கு அடிப்படை எனில், அதை ஒப்புக் கொள்வதுதான் கதை - வசனகர்த்தா, இயக்குனர், தயாரிப்பாளர் யாவருக்கும் அழகு - இதில் வெட்கப்படவோ தயங்கவோ எந்த அவசியமு மில்லை. உண்மையை மறைத்தால்தான் அகௌரவம்.

● இரா.சக்கரபாணி, மதுரை - 7


? மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மத்திய அரசு மூன்று பங்கு மானியம் வழங்குகிறது. தமிழ்நாடு அரசு ஒரு பங்கு மானியம் வழங்குகிறது. அதனால், சுய உதவிக் குழுக்கள் மாநில அரசுக்கு ஒரு 'ஜெ' போட்டால், மத்திய அரசுக்கு மூன்று 'ஜே' போட வேண்டும் என்கிறாரே ப. சிதம்பரம்.

! ஆகக் கூடி, மானியம் பெறுவோரெல்லாம் 'ஜே' போட வேண்டும், வோட்டுப் பெற்றுத்தர வேண்டும் என்பதுதான் மத்திய - மாநில அரசுகளின் உள்நோக்கம் என்பதை ஒப்புக் கொண்டு விட்டார்!

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? 'மரண தண்டனை விதிக்கமாட்டோம்' என்ற ஒப்பந்தத்துடன் மிக அதிக பொருட்செலவில் அபுசலேம், மோனிகா பேடி போன்ற தாதாக்களை இந்தியாவுக்குக் கொண்டு வந்து நடத்தும் விசாரணையினால் என்ன நடத்துவிடப் போகிறது?

! 1. உலக அரங்கில் இந்தியாவின் கௌரவம் காப்பாற்றப்படுகிறது. 2.நீதி நிலைக்கிறது 3.தொடர்குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்ட பம்பாய்வாசிகளுக்கு நியாயம் கிடைக்கிறது 4.பயங்கரவாதத்தின் ஆணிவேரை அசைப்பதுகூட இந்த வழக்கின் மூலம் சாத்தியமாகலாம். இதுக்கு மேலே இன்னும் என்னங்க வேணும்.



• செந்தூரப் பூ...



• ... வாடிய சோகம்!

● ப.இராம் முருகன், சென்னை - 81

? "ஃபிரான்ஸ்தான் என் கனவு தேசம்... அது மாதிரி ஒரு சூழல் வரும் போதுதான் இந்தியா உருப்படும்" என்கிறாரே சாருநிவேதிதா?

! உருப்படாத கருத்து! எந்த தேசத்துக்கும் ஒரு தனித்தன்மை இருக்கிறது. அதைத் தக்கவைத்துக் கொள்ளவும் அதன் இயல்பான வளர்ச்சிக்கு வளமான தொரு சூழலை ஏற்படுத்தவும்தான் அந்தந்த நாட்டுக் குடிமகன்கள் முயற்சி செய்ய வேண்டும். ●

☐ ரூ.100 பரிசு பெறுபவர் :
பி.ஜெயப்பிரகாஷ்,
டி.என்.ஈ.பி. குடியிருப்பு,
சர்க்கார்பதி - 642 133
சேத்துமடை (வழி)
கோவை மாவட்டம்

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
அ. அப்துல்காதர்,
37பி, சாலையம் தெரு,
விளாத்திகுளம் அஞ்சல்
தூத்துக்குடி - 628 907

வானமே எல்லை!

குமரி மாவட்டத்தின் தலைவாயிலான ஆரல்வாய்மொழிக்கு அருகே இருக்கிறது பனக்குடி. பனை மரங்கள் சூழ்ந்து பசுமையாய் காட்சி தரும் இந்தப் பெரிய கிராமத்தை நோக்கிப் படையெடுத்தபடி இருக்கிறார்கள் அருகிலுள்ள கிராம மக்கள். அங்கே உலகத் தரத்தில் ஒரு விமான ஓடுதளம் தயாராகிக் கொண்டிருக்க, ஆச்சர்யம் விலகாத விழிகளோடு அதைப் பார்வையிடும் மக்கள், "நம்ம ஊருக்கு ஒரு ஏர்போர்ட்டா! கல்லுவீட்டு ஃபெர்னாண்டஸ் இந்த மண்ணை மறக்கலவே" என்று நெகிழ்ச்சியாகச் சொல்கிறார்கள். யார் இந்த ஃபெர்னாண்டஸ்?

குமரி மாவட்டத்தின் நிர்வாக நகரான நாகர்கோவிலில் நின்று 'கல்லுவீடு' என்று கேட்ட மாத்திரத்தில் கிங்ஸ்லி ஃபெர்னாண்டஸின் வீட்டைக் கைகாட்டுகிறார்கள். இந்த அறுபத்து நான்கு வயது தொழிலதிபரின் வெற்றிக் கதை கொஞ்சம் வித்தியாசமானது. அதை அவரே சொல்கிறார்...

"அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டப்படிப்பை முடித்து 1963-ல் வெளியே வந்தபோது, 'அரசின் வரிப்பணத்திலும் படித்திருக்கிறோம். ஏதேனுமொரு அரசுப் பணியில் சேர்ந்து மக்கள் பணிக்குச் செல்ல வேண்டும்' என்று முடிவெடுத்தேன். பொதுப் பணித் துறையில் இளநிலைப் பொறியாளராக வேலை கிடைத்தது. ஆனால், சென்னையில் வேலை. நமது படிப்பும் திறமையும் குமரி மாவட்ட மக்களுக்குப் பயன்படவில்லையே என்றொரு எண்ணம். அது ஈடேறும்விதமாக நாகர்கோவில் அரசு பாலிடெக்னிக்கில் விரிவுரையாளராகப் பணி கிடைத்ததும், பொறியாளர் பணியை ராஜினாமா செய்துவிட்டு மகிழ்ச்சியோடு சொந்த ஊருக்குப் புறப்பட்டேன். ஆனால், எனது வேகத்திற்கும் சிந்தனைக்கும் ஈடு கொடுப்பவையாக இந்தப் பணிகள் இல்லை. இந்த நேரத்தில் ஓடி ஓடி உழைத்த அப்பா, களைத்துப் போனார். குடும்பத்தில் நான் மூத்தவன். குடும்பப் பொறுப்புகளை மகிழ்வோடு ஏற்றுக் கொண்டேன். அப்பா விரும்பியது போலவே அவர் செய்து வந்த ஏற்றுமதி, இறக்குமதித் துறையில் இறங்கினேன்.



எனது முதல் அசைன்மெண்ட் பத்திரிகைக் காகிதங்களை இறக்குமதி செய்தது. அப்போது எதிர்பாராத ஓர் அற்புதம் நடந்தது. நன்றாக நினைவிருக்கிறது அந்த நாள். 1968ஆம் ஆண்டு மே மாதம் பத்தாம் தேதி, பத்திரிகைக் காகிதத்துக்கான இறக்குமதி வரியைத் திடீரென்று எண்பது சதவிகிதம் கூட்டியது மத்திய அரசு. வரி அறிவிப்புக்கு முன்பே நாற்பது டன் காகிதத்தை இறக்குமதி செய்வதற்கான எல்லா ஏற்பாடுகளும் முடிந்து, எங்களுக்கான காகிதம் கப்பலில் வந்து கொண்டிருந்தது. ஒரு டன் ஆயிரத்து நூறு ரூபாய் வீதம் இறக்குமதி செய்த காகிதத்தை, ஒரு மடங்கு ஏற்றம் கண்டிருந்த மார்க்கெட் விலைக்கு விற்றபோது, எட்டு லட்ச ரூபாய் எதிர்பாராமல் லாபம் கிடைத்தால் எப்படியிருக்கும்...

கடவுளுக்கு நன்றி சொல்லிவிட்டு கிடைத்த லாபத்தையே முதலீடாக வைத்து பொறியியல் தொழில்கள் தொடர்பான ஆலோசனை மையம் ஒன்றைத் தொடங்கினேன். இன்டர்நெட் இல்லாத அந்தக் காலத்தில் எனது கன்சல்டன்ஸிக்காக உலகம் முழுக்கப்

பயணம் செய்து தகவல்களைத் திரட்டி வந்தேன். ஆனால், அதைப் பயன்படுத்திக் கொள்ள உள்நாட்டில் ஆர்வத்தோடு முன்வந்தவர்கள் மிகக் குறைவு. அதே நேரம் இதே தொழில் வெளிநாடுகளில் கொடி கட்டிப் பறந்தது. நான் கொஞ்சம்கூட யோசிக்கவில்லை... மஸ்கட், ஓமன் நாடுகளில் 'இன்ஜினியரிங் கிங்' என்ற பெயரில் கன்சல்டன்சி தொடங்கினேன்.

இந்தியர்களின் தொழில்நுட்ப மூளைக்கு அங்கே எப்போதுமே வரவேற்பு. பொறியியல் கன்சல்டன்ஸியின் தொடர்ச்சியாக தமிழகத்திலிருந்து படித்த இளைஞர்களை வெளிநாடுகளில் வேலைக்கு அமர்த்தும் மேன்பவர் ஏஜென்ஸி தொடங்கி, தொழிலை விரிவாக்கினோம். இப்படி வெளிநாடுகளுக்கு வேலைக்குப் போனவர்கள், தாங்கள் ஈட்டிய பொருளை, தம் குடும்பத்தாருக்குச் சரியான நேரத்தில் விரைவாகக் கிடைக்கும்படி செய்ய முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்ததைக் கண்டேன். அப்போது நாணய மாற்றுச் சந்தையில் வெளிநாட்டு நிறுவனங்கள் மட்டுமே கோலோச்சிக் கொண்டிருந்தன.

அதிலும் டூடர் அண்ட் ரூடர், சூப்பர் அண்ட் சூப்பர், யூனியன் மணி டிரான்ஸ்ஃபர் எனப் பன்னாட்டு நிறுவனங்கள் காலம் காலமாக வேரூன்றி நிற்கும் ஒரு துறையில் போய் இறங்குகிறேன் என்றதும் எடுத்த எடுப்பிலேயே தடுத்தார்கள். அதுவே எனக்குக் கொம்புசீவி விட்ட மாதிரி ஆகிவிட்டது. ஃபோரெக்ஸ் எக்ஸ்சேஞ்ச் தொடங்குவதென்றால் அமெரிக்காவுக்குப் போய்த் தொடங்க வேண்டும். அதன்பிறகு வளைகுடாவுக்கு வருவோம் என்று வம்படியாக, வைராக்கியத்தோடு 1984-ல் ஓமனிலிருந்து நாடு திரும்பினேன்.



அப்போது அமெரிக்காவில் எனக்கு தெரிந்தவர்கள் எனது மைத்துனர் குடும்பத்தினர் மட்டும்தான். அவர்கள் அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டன் டி.சி.யில் வசித்து வந்தார்கள். அங்கே போய் இறங்கியதும் கொண்டு போயிருந்த இந்தியப் பணத்தை ஆயிரத்து ஐநூறு அமெரிக்க டாலர்களாக மாற்றிக் கொண்டேன். அதில் ஆயிரம் டாலரைக் கொடுத்து அவர்களை ஒரு வீடு வாங்க வைத்தேன். அடுத்து பதினைந்து டாலர்களைக் கட்டியதும் ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான லைசென்ஸை நாற்பத்தெட்டு மணி நேரத்துக்குள் கொடுத்து அதிசயிக்க வைத்தார்கள். எஞ்சிய பணத்தில் நியூ ஹாம்சயரில் அலுவலகம் ஒன்றை வாடகைக்குப் பிடித்து அடுத்த நாளே அமெரிக்கன் எக்ஸ்சேஞ்ச் என்ற பெயரில் வியாபாரம் ஆரம்பித்தேன்.

நியூ ஹாம்சயரைச் சுற்றிலும் பஞ்சாபிகள், சிந்திகள், மராட்டியர்கள், ஜெயின்ஸ் என்று வசித்து வந்தார்கள். அவர்கள்தான் எனது முதல் வாடிக்கையாளர்கள். அவர்களது தாய் மொழியான ஹிந்தியில் பேசினால் இன்னும் நெருக்கமாக உணர்வார்கள் என்று தோன்றியது. அடுத்த சில தினங்களிலேயே ஒரு ஹிந்தி

ஆசிரியரைத் தேடிப் பிடித்து தினசரி ஒரு மணி நேரம் ஹிந்தி டியூஷன். ஆறே மாதத்தில் ஹிந்தி சரளமானது. நான் நினைத்தது வீண் போகவில்லை. புதிய வாடிக்கையாளர்கள் அதிகரித்தார்கள். நள்ளிரவு பன்னிரண்டு மணி வரை எனது எக்ஸ்சேஞ்ச் இயங்க ஆரம்பித்தது. தினசரி நான்கு மணி நேரம் மட்டுமே தூங்கி, இரவு பகலாக உழைத்ததற்கு கைமேல் பலன். அமெரிக்க மண்ணில் மிகப்பெரிய வெற்றி.

கையோடு தாய் மண்ணிலும் ஒரு ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் கவுன்ட்டர் தொடங்க வேண்டும் என்ற கனவோடு இங்கே புறப்பட்டு வந்தால், ரிசர்வ் வங்கியின் சட்ட திட்டங்கள் திக்குமுக்காட வைத்தன. என்றாலும் இந்தியச் சூழலுக்கு ஏற்றவகையில் விதிகள் இருந்ததால், ஒரு குடிமகனாக அவற்றை ஏற்று, ரிசர்வ் வங்கியின் அங்கீகாரத்தோடு செயின்ட் மேரிஸ் ஃபோரெக்ஸ் என்ற பெயரில் நாகர்கோவிலில் நாணய மாற்றுக் கிளையைத் தொடங்கினேன். வெவ்வேறு நாடுகளில் பணியாற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் அனுப்பும் பணத்தை, அவர்களின் குடும்பத்தாருக்கு குயிக் மணி டிரான்ஸ்ஃபர், டெலி மணி டிரான்ஸ்ஃபர் ஆகிய இரண்டு அதிவேக ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் பணப் பட்டுவாடா வசதி மூலம் அரை மணி நேரத்தில் டெலிவரி செய்து, முகம் தெரியாத முகங்களில் புன்னகை பூக்கச் செய்கிறோம்.

அமெரிக்கா, நாகர்கோவிலை அடுத்து கனடா, ஹாங்காங், ஐரோப்பா, பாரீஸ், ஜெனீவா, சுவிட்சர்லாந்து மற்றும் எல்லா வளைகுடா நாடுகளிலும் செயின்ட் மேரிஸ் ஃபோரக்ஸ் எக்ஸ்சேஞ்ச் இன்று கிளை பரப்பி நிற்கிறது" என்றவரின் அடுத்த மெகா கனவுகள் இரண்டு. செயின்ட் மேரிஸ் ஃபிளையிங் அகாடமி மற்றும் நாகர்கோவிலை தலைமையிடமாகக் கொண்ட ஒமேகா ஏர்லைன்ஸ்.


"குமரி மாவட்டம், கேரளத்தைப் போலவே மிகப்பெரிய சுற்றுலாத் தலமாக வளர்ச்சி பெற்று வருகிறது. அனைவருக்கும் பயன்படும் வகையில் இங்கே உள்நாட்டு விமான சேவையைத் தொடங்க திட்டமிட்டிருக்கிறோம். அதற்கு முன் தேவையான அளவு ஃபைலட்டுகளை சர்வதேசத் தரமுடைய பயிற்சியுடன் உருவாக்க வேண்டும் என்று நினைத்தேன். அதற்காகவே இப்போது 'செயின்ட் மேரிஸ் ஃப்ளையிங் அகாடமி' தொடங்கியிருக்கிறோம்'' என்றவர், "இந்தப் பள்ளிக்காக ஆஸ்திரேலியாவில் இயங்கும் சர்வதேச விமானப் பயிற்சிப் பள்ளி மற்றும் ஆஸ்திரேலிய அரசின் சிட்னி விமான பயிற்சி மையம் ஆகியவற்றுடன் இணைந்து பயிற்சி தர, முறைப்படியான கல்வி ஒப்பந்தம் கடந்த ஜூலையில் கையெழுத்தாகி இருக்கிறது'' என்றார்.



• பேரனுடன் ஃபெர்னாண்டஸ்

அறுபத்து நான்கு வயதில் இத்தனை பெரிய கனவுகளை கையிலெடுத்திருக்கும் இவருக்கு முதுமை ஒரு தடையில்லையா? "தொண்ணூற்று நான்கு வயது வரை இதே வேகத்தோடு என்னால் உழைக்க முடியும்... எனது கனவுக்குத் தோள் கொடுக்க எனது பேரன் கிரண்பால் குன்னில் இப்போதே தயாராகிவிட்டான்" என்று சிரிக்கிறார் இந்தத் தொழில் மேதை.

கட்டுரை, படங்கள் : **தாகூர்**



நிகிலா... நிகிலா...!

ஒரே நொடியில் பத்தாயிரம் புத்தகங்களுக்கு ஆர்டர் வந்து விழுந்தால்... 'ஹாரி பாட்டர்' ரௌலிங்குக்குத்தானே இந்த அதிசயமெல்லாம் என்று கேட்டுவிட்டு வேறு வேலை பார்க்கக் கிளம்பிவிடுவீர்கள். அதுதான் இல்லை. 'டீன் ஐடோல்ஸ் ஃபார் டுடே' என்கிற தனது முதல் புத்தகத்தை எழுதிய சென்னைப் பெண் நிகிலா ஸ்ரீனிவாசனுக்குத்தான் இந்த அதிசயமெல்லாம் நிகழ்ந்திருக்கிறது.

ராகுல் ட்ராவிட் முதல் தெரசா, கல்பனா சாவ்லா வரையிலான பிரபலங்களிடமிருந்து இளைஞர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய குணாதிசயங்கள் பற்றிக் குட்டிக் குட்டிச் சம்பவங்களோடு பட்டியலிட்டிருக்கும் புத்தகம்தான், ஒரே ஸ்ட்ரோக்கில் பத்தாயிரம் பிரதிகளைத் தொட்டிருக்கிறது. சென்ற வாரம் மும்பையில் இதன் வெளியீட்டு விழா நடைபெற்றபோது, ரேயான் க்ரூப்ஸ் பள்ளிகளின் தலைவரான கிரேஸ் பின்ட்டோ மேடையிலேயே தான் பத்தாயிரம் புத்தகங்களை ஆர்டர் செய்வதாக அறிவிக்க, தன் காதுகளையே அன்று நம்ப முடியாத நிகிலா, இன்னமும் அந்த அதிர்ச்சியிலிருந்து எழாமலிருக்கிறார்.

சென்ற வருடம் 'நீ... நான்' என்று ஆளாளுக்கு சண்டை போட்டுக்கொண்டே ஒலிம்பிக் தீபத்தை ஏந்திச் சென்றபோது, அந்த உற்சவத்தில் சென்னை சார்பாக கலந்துகொண்ட ஒரே பள்ளி மாணவிதான் இந்த நிகிலா.

"அதுமட்டுமல்ல... இந்திய அளவுல நடந்த 'டீன் ஆஃப் த இயர் 2003' போட்டியிலும் நான்தான் வின்னர்" என்று இமைகள் படபடக்க சாதனைகளை வாசிக்கும் நிகிலா, 'டீனேஜர்' என்கிற மும்பை ஆங்கிலப் பத்திரிகையில் பள்ளிப் பருவத்திலிருந்தே கட்டுரைகள் எழுதி வருகிறார்.

இவர் சிறந்த பேச்சாளரும் கூட. எந்த தலைப்பானாலும் மடைதிறந்த வெள்ளம். "எல்லாம் புத்தகங்கள் ஊட்டி வளர்த்த அறிவு. அகதா கிறிஸ்டி தொடங்கிடேன் ப்ரௌன் வரைக்கும் எல்லோருடைய எழுத்துக்களையும் கரைச்சுக் குடிச்சாச்சு" என்றவரிடம் ஒலிம்பிக் தீப நினைவுகளை ஏற்றச் சொன்னோம்.

"அது என் பாக்கியம். மும்பையில நம்ம ஊரைச் சேர்ந்த 'ட்ரம்மர்' சிவமணி, சங்கர் மகாதேவனையெல்லாம் பார்த்தேன். எல்லாரும் ஜாலியா தமிழ்ல பேசிட்டிருந்தோம். 'சென்னையோட திறமையே தனி'ன்னு சிவமணி ரொம்ப உருகினார்" என்கிற இந்த இங்கிலீஷ் ஆத்தருக்கு தமிழிலும் புலமை உண்டாம். "ஆங்கிலோ இந்தியன் பத்தாம் வகுப்பு தமிழ் தேர்வுல நான்தான் ஸ்டேட் ஃபர்ஸ்ட்" என்று காலரை உயர்த்துகிறார்.

- சநகன்

போட்டுத் தாக்கு!

-பரமு



இலங்கை கேப்டன் மார்வன் அட்டப்பட்டுவிடம் கேட்கக்கூடாத பத்துக் கேள்விகள் :

1. 'நீங்க இருந்தா எங்களை இந்தக் கதிக்கு ஆளாக்கியிருக்க மாட்டீங்களே!'ன்னு கங்குலிக்கு போன் பண்ணி ஒப்பாரி வெச்சீங்களாமே, உண்மையா?

2. 'தோனி.. எங்க நாட்டுக்கு வா நீ! வைச்சுக்கறேன் போணி'ன்னு ராஜேந்தர் ஸ்டைல்ல சவால் விடறீங்களாமே...?

3. டிரெஸிங் ரூம்ல டீமோட உட்கார்ந்து, இந்தியா உங்ககிட்ட தோத்துப் போன பழைய மேட்சையெல்லாம் பார்த்து ஆனந்தக் கண்ணீர் விட்டீங்களாமே.. அப்ப உங்க மனசுல என்ன பாட்டு ஓடுச்சு... 'ஞாபகம் வருதே'வா?

4. "அங்க 11 பேருமா! அவங்களால எவ்வ்வளவு முடியுமோ அவ்வளவு அடிச்சாய்ங்க. நாங்களும் எவ்வளவு நேரம்தான் விளையாடுற மாதிரியே நடிக்கிறது. அதுல டிராவிட்னு ஒருத்தன் சொன்னான்... 'டேய் நாம எப்படி விளையாண்டாலும் இவங்க தோத்துருதாங்க. இவன் ரொம்ப நல்லவன்'னு..." வடிவேலு ஸ்டைல்ல இப்படி அழுதுக்கிட்டே புலம்புனீங்கன்னு பேசிக்கறாங்களே?

5. 'கிரிக்கெட் கிரவுண்ட் ஒரு வட்டம். இங்க ஜெயிக்கறவன் தோப்பான். தோக்கறவன் ஜெயிப்பான்' - இதுதானே உங்களுக்குப் பிடிச்ச பன்ச் டயலாக்?

6. கங்குலிய டெஸ்ட் டீம்ல எடுத்து கேப்டனாவும் அறிவிச்சாங்கன்னா, சந்தோஷப்படுற முதல் ஆள் நீங்கதானாமே...?

7. தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரால பெஞ்ச மழை, மேட்ச் நடந்த இடங்கள்ல பெய்யாம ஏமாத்திடுச்சேன்னு பார்க்கறவங்ககிட்ட எல்லாம் சலிச்சுக்குறீங்களாமே...?

8. கேப்டன் பதவியில டென்ஷனோட இருக்குற உங்களைப் பார்த்து ஜெயசூர்யா அடிக்கடி நமுட்டுச் சிரிப்பு சிரிச்சாராமே?

9. 'இனிமே ஒருநாள் போட்டிகள்ல முரளிதரன் மட்டும் இருபது ஓவர் போடுறதுக்கு அனுமதிக்கணும்'னு கோரிக்கை வைக்கறதா இருக்கீங்க போல?

10. தென்னாப்பிரிக்காகிட்ட நாங்க தோத்த அன்னிக்குத்தானே நீங்க நிம்மதியா தூங்கினீங்க?

மங்கையர் மலர்

திருமண மலர்

பயனடைந்தவர்கள் பாராட்டு!







மீரா - கிருஷ்ணன்

SHS மணி, வடிவீஸ்வரம், நாகர்கோயில்

நான் மங்கையர் மலர் பத்திரிகையை வெகு காலமாகப் படித்துக் கொண்டிருப்பவன். எனது மூத்த மகனின் திருமணம் மங்கையர் மலர் விளம்பரம் மூலமாகத் தான் 2001ம் வருடம் நடந்தது. இப்பொழுது இரண்டாவது மகனின் திருமணமும் மங்கையர் மலரின், திருமண மலர் விளம்பரம் மூலமாகத்தான் நடைபெற்றது. திருமண விளம்பரத்திற்காக நான் அனுப்பிய தொகை சிறியது. ஆனால் அதனுடைய பிரதிபலனோ மகத்தானது.

மங்கையர் மலரின் திருமண மலர் விளம்பரம் மூலம் கிடைக்கும் பலனும், திருப்தியும், வேறு இடத்தில் கிடைப்பது மிக அரிது.

இப்படிக்கு,
SHS மணி

அனைத்து இல்லங்களையும் அலங்கரிக்கும் மங்கையர் மலரின் திருமண மலர் பகுதியில் நீங்களும் விளம்பரம் செய்து பயனடையலாமே!

உடன் அணுகவும் :

மானேஜர், திருமண மலர் பகுதி, கல்கி பில்டிங்க்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032
தொலைபேசி : 2225 1522 / 0623 / 1324 தொலைநகல் : 044-2225 1021
மங்கையர் மலர் இன்டர்நெட் முகவரி : www.mangayarmalaronline.com

திருமண மலர் விளம்பரக் கட்டணம்

முதல் 30 வார்த்தைகளுக்கு	ரூ.400.00
30க்கும் மேற்பட்ட வார்த்தை ஒவ்வொன்றுக்கும் தலா	ரூ. 15.00
வண்ணத்தில் 'ஹை லைட்'' செய்து வெளியிட	ரூ.100.00

கட்டணத்தை நேரில் ரொக்கமாகவோ / சென்னை காசோலையாகவோ / வெளியூர் டிமாண்ட் டிராப்டாகவோ **'மங்கையர் மலர்'** என்ற பெயரில் எடுத்து அனுப்பலாம்.


தென்னிந்திய பாரம்பரியப்பட்டில்
வடஇந்திய கைவேலைப்பாடுகள்.
வஸ்த்ர கலா பட்டு
வடக்கும் தெற்கும் பட்டில் சங்கமம்.
பல நூற்றாண்டுகளாக சிறந்து விளங்கும் வட இந்திய பட்டு எம்பிராய்டரி கைவேலைப்பாடுகள் இப்போது காஞ்சிபுரம் பட்டில் இணைந்து உங்களுக்காக போத்தீஸ் அளிக்கிறது. வஸ்த்ர கலா பட்டு - இது வடக்கும் தெற்கும் பட்டிலே சங்கமமாகும் ஓர் உன்னத படைப்பு. உங்கள் வாழ்க்கையை மேலும் வண்ணமயமாக்க, ஜர்தோஸி, குந்தன், ஆரி, காந்தா, கஸோட்டி, முகேஷ், பாதுலா, காஷ்மீரி, கச் மற்றும் லக்னோவி எழில் வேலைப்பாடுகள். வாருங்கள் உங்கள் வாழ்க்கையை வண்ண மயமாக்குங்கள்.
போத்தீஸ்
அழகிய ஜவுளிகளின் ஆலயம்
பனகல் பார்க், திநகர், சென்னை – 600 017. போன்: 2431 0901 www.pothys.com e-mail: info@pothys.com

கல்கி

27.11.2005 இதழுடன்

சிறப்பு
வெளியீடு



வைராக்கியத்தின் வைரவிழா!



சிவமய மாம்சுத்த சோதி - சுத்த
சித்தாந்த வீட்டில் சிறந்தொளிர் சோதி
உவமை இல்லாப் பெருஞ்சோதி - எனது
உள்ளே நிரம்பி ஒளிர்கின்ற சோதி

- இராமலிங்க சுவாமிகள்



வேதாத்ரி மஹரிஷி

வாழ்க வளமுடன்!

அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகர் பூங்காவில் முதல் முறையாக என்னைப் பார்த்திருக்கிறார் என். மகாலிங்கம். ஆனால் பேசவில்லை. பிறகு தில்லியில், எம்.கே. தீனதயாளன் என்ற சிடரின் இல்லத்தில் சந்தித்தார். பிறகு பகீரதன் அவர்களுடன், சென்னையில் சில முறை என்னைப் பார்த்துப் பேசியிருக்கிறார். அடுத்து, தன் ஊரான பொள்ளாச்சியில், காந்தி மண்டபத்தில், '83ஆம் ஆண்டு நடந்த மனவளக்கலை பயிற்சி முகாமை தொடங்கி வைத்துப் பேசினார் மகாலிங்கம்.

அதற்கு முன்பு, இங்கே மாக்கினாம்பட்டியில், ஒரு பயிற்சி முகாம் ஏழு நாட்களுக்கு நடத்தினேன். அப்போது நமது அன்பர் எம்.சின்னசாமி, ''நீங்கள் மேற்கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று என்னைக் கேட்டார்.

''இந்த இடத்தைப் பார்த்தால் சௌகரியமாய்த் தெரிகிறது. ஓர் ஆசிரமம் அமைக்க வேண்டும்!'' என்றேன்.

''எவ்வளவு இடம் வேண்டும்?''

''சுமார் இருபது ஏக்கர்.''

''அப்படியா? சரி. எங்கே வேண்டும்? எப்படி வேண்டும்?''

''சுற்றிலும் மலை இருக்க வேண்டும். நீர் நிலையும் இருக்க வேண்டும். ரம்மியமான சூழ்நிலை வேண்டும். அத்துடன் பொது மக்கள் வந்து போகும் அளவுக்கு, பத்து மைல் சுற்று வட்டாரத்தில் இருந்தால் நல்லது...''

''சுவாமி அந்த வேலையை என்னிடம் விட்டுவிடுங்கள்!'' என்றார் அன்பர் சின்னசாமி.

சின்னசாமி, மகாலிங்கம் அவர்களிடம் போய்ப் பேசிவிட்டு, 'அவர் விருப்பப்படி இடம் கொடுக்க முடியுமா?' என்று கேட்டிருக்கிறார்.

''என்னிடம் நாலு இடங்கள்





இருக்கின்றன. சுவாமிஜி எதை விரும்புகிறார் என்று தெரிந்தால், அதைக் கொடுத்துவிடுகிறேன்'' என்றார் மகாலிங்கம்.

ஆழியாறில் அவர் காட்டிய இடத்தைப் பார்த்தேன். அங்கே ஒரு சின்னக் கொட்டகை மட்டுமே இருந்தது அப்போது.

"இது பிடித்திருக்கிறதா?" என்று கேட்டார் மகாலிங்கம்.

"எனக்கு இந்த இடம்தான் மிகவும் பிடித்திருக்கிறது. நான் நினைத்த படியே இருக்கிறது. இதுவே போதும்!" என்றேன்.

''அப்படியானால் எடுத்துக் கொள்ளுங்கள். எனக்குப் பதினொரு ஏக்கர் இங்கே இருக்கிறது. நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று உடனே கொடுத்து விட்டார். மனவளக் கலை மன்றத்தின் பெயரால் ஒரு சின்னக் கட்டிடம் கட்டினோம். வள்ளலார் குடில் என்று பெயர். பிறகு நான் அறிவுத் திருக்கோயில் கட்ட வேண்டும் என்று விருப்பப் பட்டேன். பல ரூபங்களில் பக்தி வழிபாடு இருக்கிறது. ஞான வழிபாட்டுக்கு ஓர் அறிவுத் திருக்கோயில் வேண்டும் என்றேன். 'அப்படியா, சரி!' என்று உடனே ஒரு குழு அமைத்து, தலைவராக இருந்து செயல்பட்டார்.

கட்டட வேலை ஆரம்பமாயிற்று. பேராசிரியர் கே.ஆறுமுகம் கூடவே இருந்து பிளான் தயாரித்துக் கொடுத்தார். தனிமனிதன் பண்பாடு உயரணும், சிறப்படையணும் என்ற கொள்கை அடங்கிய ஐந்தொழுக்கக் கோட்பாடு எனும் நியதியோடு இங்கே ஆழியாறில் மன்றம் ஆரம்பித்தோம். அதற்கு முக்கிய காரணம் மகாலிங்கம்தான்!

இந்தப் பணிக்கு, அவருடைய குடும்பத்தினர் அனைவரும் ஒத் துழைத்தார்கள்!

ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்.

- திருக்குறள்

என் கதை



எங்கள் திருமணம் நடந்து அறுபது ஆண்டுகள் ஆகின்றன. அமெரிக்காவில் இதைச் சொன்னால், 'எவ்வளவு முறை பிரிந்து, மறுபடி திருமணம் செய்து கொண்டீர்கள்?' என்று கேட்பார்கள்!

அறுபதாம் ஆண்டு திருமண விழா என்பது, இன்று இந்தியாவில் கூட அபூர்வமான நிகழ்வுதான். எங்கள் திருமணம் என் 23வது வயதில், என் துணைவியாருக்கு 18வது வயதில், ஆகஸ்ட் 27, 1945ஆம் ஆண்டு, பொள்ளாச்சி ஏபிடி போர்டு அலுவலகத்தில் நடைபெற்றது.

வாழ்க்கை என்ற பாதை எங்களுக்கு ஒரே மாதிரி இருக்கவில்லை. ஏற்ற இறக்கங்களும் சுக துக்கங்களும் இருந்தன. என் துணைவி, என் அத்தை கப்பம்மாள் - மாமா அழகப்பக் கவுண்டரின் மகள்.

என் தந்தை நாச்சிமுத்துக் கவுண்டர். வீட்டுப் பொறுப்பு, விவசாயம் ஆகிய வற்றை என் தாயார் ருக்மணி அம்மாளிடம் முழுமையாக விட்டு விடுவார். நானும் அதே மாதிரி, என் மனைவி மாரியம்மாளிடம் பொறுப்பை விட்டுவிட்டேன். அதனால் ஒன்றும் குறைவு இல்லை!

என் இருபதாண்டு அரசியல் வாழ்வு 1948 முதல் 1969வரை - பிறகு 1984 வரை தொழில் துறை வாழ்க்கை. குழந்தைகள் வளர்ப்பு, படிப்பு போன்றவை தவிர, விருந்தினரை உபசரித்தல் எல்லாம் அவர்கள் பார்த்துக் கொண்டார்கள்.

சாப்பாட்டு நேரத்தில் என் தந்தையும் சரி, நானும் சரி, எவ்வளவு அன்பர்களோடு வருவோம் எனச் சொல்ல முடியாது. ஆனால் அனைவருக்கும் சாப்பாடு தயாராக இருக்கும்! எவ்வளவு நேரமானாலும் நாங்கள் ஊரில் இருந்தால், என் தாயாரும் மனைவியும் எங்களுக்கு உணவு அளித்த பின்புதான் தாங்கள் சாப்பிடுவார்கள்.

என் ஐம்பதாவது பிறந்த நாள் விழா சென்னையில் நடைபெற்றது. அறுபதாவது பிறந்த நாள் விழா திருவிடை மருதூர் மகாலிங்கேசுவரர் திருக்கோயிலில் நடந்தது. எந்த விழாவானாலும், இதுவரை என்னில் ஒரு பகுதியாகத்தான் அவர் செயல்பட்டு வருகிறார்.

என் தாயார் - மனைவியிடம் சிறு சிறு குடும்பச் சிக்கல் வரும் போது, மௌன விரதம் இருந்து, சிக்கல்களைத் தீர்த்து வைப்பேன்.

வருண பகவானும் சூரிய பகவானும் எங்கள் வீட்டுக்கு விஜயம் செய்த காலம் உண்டு! 1945முதல் 1951 வரை பொள்ளாச்சி இமான்கான் வீதியிலுள்ள வீட்டில் பெற்றோருடன் வசித்தோம்.

1951-ல் கட்டிய பொள்ளாச்சி 'சக்தி



நிலைய'த்தை, இன்னும் புதுப் பொலிவுடன் பராமரித்து வருகிறார் என் துணைவியார்.

என் மகன்கள் மாணிக்கம் 1956லும், பாலசுப்பிரமணியம் 1958லும் பிறந்தார்கள். அம்மா கொடுக்கும் செல்லத்தினால், படிப்பு எந்த விதத்திலும் குறையக் கூடாது என என் மனைவியிடம் அறிவுரை சொல்வேன்.

1964 முதல் 1986 வரையிலான சென்னை வாழ்க்கையில், என் மூத்த மகள் கருணாம்பாள் ராணி மேரி கல்லூரியில் தன் பட்டப் படிப்பை முடித்தார். சென்னையில் முதலில் 1964 முதல் 1966 வரை க்ரீன்வேஸ் சாலையிலும், 1966 முதல் 1972 வரை தியாகராயநகரில் நடிகை சாவித்திரி வீட்டிலும் வாடகைக்குக் குடியிருந்தோம். 1971-ல் செயின்ட் மேரி சாலையில் வீடு வாங்கி, 1974-ல் குடிபுகுந்தோம். சென்னை வந்தால் இன்றும் இங்கேதான் வாசம்.

இப்போது கொஞ்சம் பின்னோக்கிப் பார்க்கிறேன்:

1954 - 56 ஆண்டுகளில், பொள்ளாச்சி அரசியல் கூட்டங்களில் எதிர்கட்சியினர் கடுமையாக என்னை விமர்சித்துப் பேசுவார்கள். இது பற்றி என் நண்பர்கள் என்னிடம் வந்து கூறுவார்கள்.

''காற்றில் ஒலி வினாடிக்கு 400 அடி செல்வதால் உங்களுக்கு அவர்களின் பேச்சு கடுமையாகத் தெரிகிறது!'' என்பேன் நான்.

1969-ல், காங்கிரஸிலிருந்து நான் விலகியபோது முதலில் மகிழ்ச்சி அடைந்தவர் என் துணைவியார்தான்!



• திருமணக் கோலத்தில்...

நா.மகாலிங்கம்

"அரசியல் போதும், குழந்தைகள் படித்து, பொறுப்புக்கு வரும் வரை, தொழிலைக் கவனியுங்கள்!" என்று வேண்டிக் கொண்டார். நானும் அதைத் தட்டாமல் ஏற்றுக் கொண்டேன்.

1973-74ல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருக்க வேண்டும் என்று ஆளுனர் திரு ஷா அழைத்தார். நான் சம்மதிக்கவில்லை.

1980-ல் என்னை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட அழைத்தார்கள். அதையும் ஏற்கவில்லை.

மீண்டும் 1982-ல் த.நா.கா.க.க்குத் தலைவராக வருமாறு அழைப்பு வந்தபோதும் நிராகரித்து விட்டேன்.

என் துணைவியாருக்கு மகாத்மா காந்தி மீதும் இந்திரா காந்தி மீதும் மிகுந்த பற்று உண்டு. 1971 தேர்தலின் போது, இந்திரா காந்தியை விருந்துக்கு அழைத்திருந்தோம். அழைப்பை ஏற்று



• திருமதி மாரியம்மாள்

வந்தார்.

இந்திரா காந்தி 1984-ல் மறைந்த போது,பதினாறு நாட்கள் தொடர்ந்து மோட்ச தீபம் வைத்து, பிரார்த்தனை செய்தோம்.

ராஜீவ் காந்தி மறைந்த போதும் அப்படியே செய்தோம்.

எங்கள் குடும்பம் பெரிது. அதனால் எனக்குப் பொறுப்புகளும் அதிகம்! என் தந்தையாருக்கு மூன்று சகோதரிகள். கடைசித் தங்கையான திருமதி சுப்பம்மாளுக்கு மட்டும்தான் ஒரு பெண்; ஐந்து ஆண் மக்கள். 1943 முதல் 1954 வரை என் தந்தைதான் அவர்களைப் பொறுப்பாகக் கவனித்துக் கொண்டார். 1954-ல் என் தந்தையார் காலமானார்.

ஐந்து மைத்துனர்களுக்கும் திருமணம் செய்து வைத்தோம். அவர்களுக்குத் தொழிலில் பங்கும் கொடுத்து வளர்த்தோம்.

எனக்குத் தாய் மாமன் மக்கள் - ஐந்து மகன்கள், ஒரே மகள். சின்னம்மா குழந்தைகள் - நான்கு மகள்கள், ஒரே மகன். இவர்களை என் தாயாரும் மனைவியும் வளர்த்து, திருமணம் செய்து, சொத்தில் பாகமும் கொடுத்தோம். இதற்கு என் தாயாரும் மனைவியும் மகிழ்ச்சியுடன் ஒத்துழைத்தார்கள். இன்றும் என் மைத்துனர்களுடன் கூட்டுக் குடும்பமாக இருக்கிறோம்.

மாமன் மகன் எஸ்.வி.பாலசுப்ரமணியம் 1987-ல் சொந்தத் தொழில் ஆரம்பித்து, பண்ணாரி சர்க்கரை ஆலை அதிபராக இருக்கிறார். அவர் மைத்துனர் - அக்கா கணவர் - திரு பி.கே. துரைசாமி, ஏ.ஆர்.சி. பார்சல் சர்வீஸை ஏற்று நடத்தி வருகிறார்.

மைத்துனர்கள் பாலசுப்பிரமணியம், வெள்ளியங்கிரி, அழகப்பன், ஷண்முக சுந்தரம், காளிமுத்து இவர்களில் இப்போது ஷண்முக சுந்தரம் மட்டும்தான் இருக்கிறார். வயதில் இளைய உறவினர்கள் மறைவு எங்களுக்குப் பெரும் துயரம் தந்தது.


மாமன் மைத்துனர்கள்: பி.கே.துரைசாமி, எஸ்.வி.பாலசுப்பிரமணியம், எஸ்.வி.அழகப்பன், டாக்டர் எஸ்.வி. கந்தசாமி, எஸ்.வி. ஆறுமுகம் மற்றும் எஸ்.வி.பாலகிருஷ்ணன்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

- திருக்குறள்

சின்னம்மா மக்கள்: சண்முக வேலாயுதம் - சரோஜா; வேலு மணி - நித்தியானந்தம்; சௌந்தரம் - எஸ்.வி.பாலசுப்பிரமணியம்; ரத்னா - சென்னியப்பன்; நீலாம்பாள் - ஜனகராஜ்.



• நா. மகாலிங்கம்

1960-ல் என் தாயார், மற்றும் உறவினர் 35 பேருடன் இரண்டரை மாத காலம் காசி முதல் ராமேசுவரம் வரை சென்று வந்தோம்.

மதுரை மீனாட்சி அம்மன் மீது என் மனைவி மாரியம்மாவுக்கு மிகுந்த ஈடுபாடு. அடிக்கடி மதுரை சென்று தங்கி, வழிபாடு செய்வார். நானும் பல முறை உடன் சென்றிருக்கிறேன்.

திருவிடைமருதூர் மகாலிங்கேசுவர சுவாமி கோயிலில் ஆண்டு தோறும் என் பிறந்த நாளை, குடும்பத்தாருடன் சென்று கொண்டாடுவோம். சமயச் சான்றோர்களும் நெருங்கிய நண்பர்களும் இதில் கலந்து கொள்வார்கள். வீட்டிலேயே உள்ள கரிய காளியம்மன் மற்றும் குலதெய்வங்களுக்கும் மலர்கள் கொடுத்து வழிபாடு செய்வோம்.

எங்களுக்கு ஒரே மகள்: கருணாம்பாள். கிருஷ்ணராஜ வாணவராயர் அவள் கணவர். மாணிக்கம், பாலசுப்பிரமணியம், சீனிவாசன் - மூன்று புதல்வர்கள். பேரன் - பேத்திகள் ஒன்பது பேர். அனைவருமே விசேஷ நாட்களில் குடும்பத்தினருடன் எங்கள் உடன் இருப்பார்கள். இப்போது எங்களுக்கு மகள் வழி வந்த பேத்தி கற்பகவல்லியின் மகன் கோவிந்த் - கொள்ளுப் பேரன்!

1975-ல் இரண்டரை மாத காலம் மனைவி மாரியம்மாள், மகன்கள் மாணிக்கம், பாலசுப்பிரமணியத்துடன் உலகச் சுற்றுப் பயணம் செய்தேன்.

நான் துவக்கிய கல்வி நிலையங்கள்:

அப்பா பெயரில் நாச்சிமுத்து பாலிடெக்னிக். அம்மா மற்றும் பாட்டனார் பெயரில் உயர்நிலைப் பள்ளிகள், மனைவி பெயரில் ஒரு துவக்கப் பள்ளி, மற்றும் மேல்நிலைப் பள்ளி. என்.ஜி. எம்.கல்லூரி மற்றும் டாக்டர் எம்.சி. இ.டி.கல்லூரி பொள்ளாச்சியில் இயங்கி வருகின்றன.

1984-ம் ஆண்டு அக்டோபர் 27ஆம் தேதி பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் வளாகத்தில் துவக்கப் பட்ட குமரகுரு பொறியியல் கல்லூரி, பின்னர் 1987-ல் கோவை சின்ன வேடம் பட்டியில் உள்ள சொந்தக் கட்டடத்துக்கு மாற்றப்பட்டது. இந்த ஆண்டு என் பெயரில் அங்கே மகாலிங்கம் வித்யான் பவன் துவக்கப்பட்டது.

எங்கள் 60ஆவது மணநாள் விழாவை, வழக்கம் போலின்றி, காந்திஜி புத்தகங்களை மறுபதிப்புச் செய்து வெளியிட விரும்பினேன். அய்யா அவிநாசலிங்கம் 1959-ல் அரும்பாடுபட்டு 17 தொகுதிகளாக வெளியிட்டார்கள். இதன் மறுபதிப்பை வர்த்தமானன் பதிப்பகம் மூலமாக 20 தொகுதிகளாக வெளியிட்டிருக்கிறேன். இந்த நூல்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிக் கூடங்களிலும் படிக்கக் கிடைக்க வேண்டும் என்பதே என் இலட்சியம்.

தேவாரம்

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

- **திருஞான சம்பந்தர்**

மாயத்திரை அறுத்தவர்!



அருட்செல்வர் என்று தமிழ் மக்கள் அனைவராலும் மிகப் பொருத்தமாக அழைக்கப்படும் திரு. மகாலிங்கம் அவர்களைக் கடந்த 45 ஆண்டுகளாகப் பரிச்சயம் கொண்டு அறியவும் ஆன்மிக உரம் பெறவும் பேறு பெற்ற பலரில் நானும் ஒருவன்.

பொருட்செல்வமும் அருட்செல்வமும் பொருந்தி வாழ்ந்த முன்னோர் பலர், தமிழகத்தில் ஏராளம் உண்டு. வெறும் ஏட்டுக் கருத்துக்களைப் படித்து ஒரு சார்புடையோரைச் சார்ந்து வாழ்ந்த ஒரு காலத்தில், ஏழைகளோடு தோழமை கொள்ளுகின்ற பண்பும், செல்வம் ஏறியோரைக் கண்டால் சீறி விழுகிற பண்புப் பிறழ்வும் என்னிடம் இருந்ததுண்டு. தவறான கருத்துக்கள் ஒருவர் சித்தத்தில் குடிபுகுவது தவறன்று. ஒரு திருந்திய நற்கருத்து மனத்தில் தழைத்து வளர்வதற்கான வித்து, அந்தத் தவறான கருத்துத்தான் என்று அனுபவம் நமக்குக் கற்றுத் தருகின்றது. அத்தகு படிப்பினையை எனக்கு நல்கிய ஆசான்களில் ஒருவர் அருட்செல்வர் ஆவார்.

ஒத்த கருத்துடையவர்கள்பால் ஒருவர் அன்பும் நேயமும் கொள்வது வியப்பன்று. மாறுபட்ட கருத்துடையவர்கள்பாலும் அதிக அன்பும் நேயமும் பாராட்டுகின்ற உள்ளம்தான் அருள் உள்ளம்.

முதன் முறையாக 1966 ஆம் ஆண்டில், கோவை சன்மார்க்க சங்கக் கூட்டத்தில் நடைபெற்ற ஓர் இலக்கிய விழாவின் புரவலராக, விருந்தோம்பும் பண்பில் சிறந்து விளங்கிய ஓர் அன்பராக, அவரோடு எனக்கு நேரிடைப் பரிச்சயம் நேர்ந்தது ஒரு பேறு. அந்த முதல் சந்திப்பிலேயே அதுகாறும் என் மனத்துள்ளிருந்த ஒரு மாயத்திரை முற்றிலும் அறுந்து விழ, ஒரு நற்காட்சியின் நாயகராக அவரை நான் தரிசனம் கண்டேன்.

பின்னர் அவரைப் பார்க்கவும், பழகவும் கிட்டிய சந்தர்ப்பங்களை என் மனத்துள் எண்ணி, எண்ணி நான் மகிழ்வது உண்மை.

அருட்செல்வர் அவர்களைப் பற்றி, அவரது பால்ய நண்பரான எனது அருமைத் தோழர் பாலதண்டாயுதம் அவர்கள் என்னிடம் புகழ்பட நிறையவும் கூறியுள்ளார்கள். அண்மையில் அருட்செல்வர் எனக்குக் கையொப்பமிட்டு அளித்த அவரது குடும்ப வாழ்க்கை வரலாறு, தோழர் பாலதண்டாயுதம் சொன்னதெல்லாம் எத்தகைய வரலற்று ரீதியிலான உண்மைகள் என்பதை எனக்கு உணர்த்தின. பொருளை அருளாலும், அருளைப் பொருளாலும் அளந்து மெய்யாக அறிந்து கொள்கின்ற ஓர் அளவுகோலான அருட்செல்வர் அவர்களின் மூதாதையர்கள் பெருஞ்செல்வந்தர்களல்லர். அவர்தம் அன்பினாலும், தம்மைச் சூழ்ந்து வாழ்கின்ற மக்கள்பால் கொண்ட அன்பினாலும், எல்லாவற்றுக்கும்

மேலாகக் கடுமையான உழைப்பினாலும் உயர்ந்தவர் அருட்செல்வர் என்பதனை ஒவ்வோர் இளைஞரும் உணர்ந்தால் வாழ்க்கையில் முன்னேறுவது எப்படி என்பதற்கு, எல்லாக் காலத்திலும் வழிகாட்டியாக அமையும் அந்த வாழ்க்கை வரலாற்று நூல்.



அருட்செல்வர் அடிப்படையில் ஒரு காந்தியவாதி; தேசியவாதி; மனிதாபிமானி; சமூக விஞ்ஞானி.

தாய்மொழியாகிய தமிழ் மீது எத்தகைய ஈடுபாடும் அன்பும் உண்டோ, அதே அளவுக்குப் பிற இந்திய மொழிகளின் பாலும் அவருக்குள்ள பார்வையைப் பிற தமிழர்கள் அனைவரும் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும். "சிறியோரை மேம்பட வைத்தால் பின்பு தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்" என்பது பாரதியின் வாக்கு. ஆகவே எளியவர்களையும் தக்காரையும் ஆதரித்து மேம்பட வைக்கும் பண்புதான் அவரைத் தெய்வ வடிவாக இன்று வாழ்த்துகிறது.

அருளும் பொருளும் பிரிந்து நிற்கிற ஒரு சமுதாயத்தில், இவை இரண்டும் ஒருங்கே ஒருவரிடம் செறிந்திருப்பது மனித முயற்சியினால்.

"செய்க பொருளை" என்பார் வள்ளுவர். எதற்கு? "செறுநர் பகையறுப்பதற்கு." நமக்குச் செறுநர் யார்? அறியாமை, கல்லாமை, வறுமை, நோய் ஆகிய பகைவரை அறுப்பதற்குப் பயன்படாத பொருள், பொருளற்றதாகும் என்பதைப் புரிந்து கொண்ட செல்வர், அருட்செல்வர் அவர்கள்.

அருட்செல்வர் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து நமக்கெல்லாம் அருள்புரிவாராக.



ஜெயகாந்தன்

கம்பீரம்; ஆனால் கனிவு.

அடக்கம்; ஆனால் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று ஒரு பார்வை யிலேயே அளந்துவிடும் ஆற்றல்.

முகம் முழுவதும் ஒரு மலர்ச்சி. அந்த மலர்ச்சியில், கண்களில் தெரியும் கருணை.

- மாரியம்மாள் மகாலிங்கம் அவர் களைப் பார்த்த உடனேயே, நம் மனத்தில் பளிச்சென இவை தெரி

அப்பா ஏற் கெனவே விருப்பப்பட்ட படிதான் எங்கள் கல்யாணம் நடந்தது. அதனால் ஏதாவது தெரியவில்லை என்றால் கேட்டுத் தெரிந்து கொள்வேன்.

என் சின்ன வயதிலேயே அப்பா காலமாகிவிட்டார். அதனால் மாமா தான் வீட்டுக்குக் கூட்டிவந்து பார்த்துக் கொண்டார்.

பூஜை முறைகளை யார் சொல்லித்

• முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியுடன் திருமதி மாரியம்மாள்



"கடவுளுக்கு நன்றி!"

கின்றன... அவருடன் ஒரு பேட்டி:

உங்கள் திருமணம் பற்றி...?

அவர் என் தாய்மாமாவுடைய மகன். உறவுதான். சின்னக் குழந்தையாக இருந்த போதே அவரைத் தெரியும். அவருடைய

தந்தார்கள்?

காலை 7 மணிக்கு முன்னால் விளக்கு ஏற்றி வைத்துத் தொழுவேன். பிள்ளையார் கோயில் பூஜை முறைகளை எல்லாம் சாமி கற்றுக்



கொடுத்தார். நாராயண சாமி என்று அவர் பெயர். 'ஜோசியத் தாத்தா' என்று அவரைக் கூப்பிடுவார்கள்...

திருவிடைமருதூர் கோயிலுக்கு, வருஷா வருஷம் அய்யாவோட பிறந்த நாளுக்குப் போவோம். எங்கள் குடும்ப நண்பர் டாக்டர் சிதம்பரம் என்பவர்தான் சொன்னார். அங்கே போகணும் என்றார்.

திருப்பனந்தாள் மடத்தில் ஒரு பெரியவர் இருந்தார். அந்த மடத்துக்கும் அய்யா கூட்டிக் கொண்டு போவார்.

எனக்கு சாதுக்கள், சந்நியாசிகள் மீது மரியாதை உண்டு. அதனால் அய்யாவுடன் தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள், பேரூர் ஆதீனம், கௌமார மடம் சுந்தர சுவாமிகள் எல்லோரையும் தரிசனம் செய்திருக்கிறேன். சுவாமி சித்பவானந்தாவையும் சந்தித்து வணங்கி இருக்கிறேன்.

உங்கள் மண வாழ்க்கையின் வெற்றிக்குக் காரணங்கள்?...

அய்யா பொது வாழ்க்கையில் ஈடுபட்டு அரசியலில் பங்கெடுத்துக் கொண்டபோது நான் எதையும்

• நாச்சிமுத்துக் கவுண்டருடன் அருட்செல்வர் தம்பதி...



கேட்டதில்லை. அவர் விருப்பத்துக்குக் குறுக்கே போய் நாம் தடுக்கக் கூடாது என்று இருந்துவிடுவேன். நாம் ஏன் தடுக்க வேண்டும்? நாம் தலையிடக் கூடாது என்று அந்த மாதிரி விஷயங் களில் ஒதுங்கி இருந்துவிடுவேன். கூடுமானவரை ஒத்தாசை பண்ணனும். உபத்திரவம் கொடுக்கக் கூடாது. நாம் வேண்டுமானால் அவர்கள் பொறுப்பு களை எடுத்துக் கொள்ளலாம்.

மூன்றாவது தடவை அவர் தேர் தலுக்கு நின்றபோது ஏதும் சொல்ல வில்லை.

அடுத்த தடவை அவரிடம் எல்லா ரும் கேட்டுக் கொண்ட போதும் அவரே வேண்டாம் என்றார். நானும் அதைத் தான் அப்போது அவரிடம் சொன் னேன். 'அரசியல் போதும். வீட்டைக் கவனியுங்கள்' என்றேன்.

எதிலுமே பிடிவாதமாக இருப்பது பயன் தராது. விட்டுக் கொடுப்பதில் தான் வெற்றி இருக்கிறது. எதிலுமே நல்லது என்றால் விட்டுக் கொடுத்து விடுவேன்.

வீட்டுக்குத் திடீரென்று விருந் தாளிகள் வந்து விட்டாலும் கூட சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள் என்கிறார்களே?


அது பெரிய விஷயமில்லை. பழக் கம்தான். ஆரம்பத்தில் கொஞ்சம் பயம் இருந்தது. பிறகு, தைரியம் தன்னாலேயே வந்து விட்டது!

திடீரென்று போன் பண்ணி, 'நான் நண்பர்களுடன் வந்து கொண்டிருக் கிறேன். சாப்பாடு தயாராக இருக் கட்டும்' என்று தகவல் அனுப்பி விடு வார். அவர்கள் வரும்போது எல்லாம் ரெடியாக இருக்கும்!

வீட்டுக்கு விருந்தாளிகள் வந்தால், வேலையாட்கள் எதையும் கொண்டு கொடுக்கக் கூடாது. நாம்தான் கொண்டு போய்க் கொடுக்கணும் என்பதில் பிடிவாதமாக இருப்பேன். ஒரு பணி யாளிடம் ஒரு ட்ரேயில் வைத்துக் கொடுப்பது எனக்கு என்னவோ சரி யாகப் படாது.

ஒரு விசேஷம், அமாவாசை என்று

• சதாசிவம் - எம்.எஸ். தம்பதியுடன் அருட்செல்வர்



வந்துவிட்டால் எல்லாரையும் உட்கார வைத்து நாம்தான் பரிமாறணும். தீபாவளி, பொங்கல் என்று பண்டிகைகள் வந்தால், வீட்டுக்கு எல்லோரையும் வரவழைத்துச் சமைத்துச் சாப்பாடு போட வேண்டும்.

உங்கள் பெயரில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறதே?

வீட்டிலேயே நர்சரி மாதிரி ஆரம்பித்திருந்தோம். அப்புறம் அது பெரிதாகி ஸ்கூல் ஆகிவிட்டது. இப்போது 2000 குழந்தைகள் அங்கே படிக்கிறார்கள்!

சென்னை வரும்போதெல்லாம் மயிலைக் கற்பகாம்பாளை தரிசனம் செய்ய வருவீர்களாமே?

எனக்கு சுபாவமாகவே கோயில்களுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்வது பிடித்தமான விஷயம். மயிலைக் கற்பகாம்பாளுக்கு, அங்கே இருக்கிற குமார் குருக்கள் ரொம்பப் பொறுமையாக தினசரி அலங்காரம் செய்து வைப்பதைப் பார்க்கப் போவேன். ஒரு குழந்தைக்கு அலங்காரம் செய்வதைப் போல, அம்மனுக்கு அலங்காரம் பண்ணுவார். கண்ணுக்கும் மனசுக்கும் நிறைவாக இருக்கும்.

அறுபது ஆண்டு மணவாழ்க்கையை நினைத்துப் பார்க்கிறபோது என்ன தோன்றுகிறது?

(மலர்ச்சியுடன் சிரிக்கிறார்) என்னுடைய பாக்கியம் என்று நினைக்கிறேன். கடவுளுக்கு நன்றி சொல்லுகிறேன். திருப்தியான வாழ்க்கை. கணவர், குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக இருப்பதற்கு அந்த இறைவனை நினைத்துக் கொள்கிறேன்.

• இல்லம் சங்கீதம்...






எங்களுடைய வழி காட்டி அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் - தமக்கையார் திருமதி மாரியம்மாள் அவர்களின் அறுபதாண்டுத் திருமண நிறைவு விழாவை யொட்டி, கல்கி வார இதழ் மிகச் சிறந்ததொரு தொகுப்பு வெளியீட்டை நவம்பர் மாதம் 20-ஆம் தேதியன்று, கோவை அவினாசிலிங்கம் பல்கலைக் கழகத்தில் நடைபெறும் மகாத்மா காந்தி நூல்களின் இரண்டாம் பதிப்பு வெளியீட்டு விழாவின் போது வெளியிட இருப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது.

அருட்செல்வர் தம்முடைய, பொது வாழ்க்கையில் தேசப்பிதா மகாத்மா காந்தியின் பாதச் சுவடுகளை ஒட்டி கிராம மக்களின் முன்னேற்றத்திற்காகப் பல அரிய திட்டங்களைத் தீட்டியும், மாநில-மத்திய அரசிற்குத் தெளிவான கருத்துக்களைத் தொகுத்தும் கொடுத்துள்ளார். காந்தியுடைய வாழ்வை நாம் எவ்வாறு சிறப்பாகக் கருதுகின்றோமோ, அதுபோலவே, நமது தமிழ்நாட்டில் தோன்றியுள்ள தலைவர்களில், அருட்செல்வர் அவர்களுடைய வாழ்வும் சமுதாயத் தொண்டும் போற்றுதலுக்குரியவை.

எனக்கும், எனது சகோதரர்களுக்கும் மற்றும் எங்களது குடும்பம் அனைத்திற்கும் தலைவராக இருந்து, எங்களுடைய வாழ்க்கையில் ஒளியூட்டிய பெருமை அவரையே சேரும். இத்தகையதொரு நல்ல தருணத்தில், அருட்செல்வர் அவர்களும் அவரது துணைவியாரும் பல ஆண்டுகள் வாழ்ந்து மக்களுக்குச் சேவை செய்யும் வாய்ப்பை நல்க எல்லாம்வல்ல முருகப் பெருமானை வேண்டி வணங்குகின்றேன்.

- எஸ்.வி.பால சுப்ரமணியம்





காந்திய காவலர்!

கட்டிக் காத்த குடும்பச் சொத்து!



• வானவராயர்

அருட்செல்வர் அவர்கள், எட்ட இருந்து பார்க்கின்ற எண்ணற்றவர்களுக்கு, மிகப் பெரிய ஓர் எழுச்சியாக விளங்குகின்றார் என்றால், அவரை அருகிலிருந்து பார்க்கும் வாய்ப்புள்ள என்னைப் போன்றவர்களுக்கு, எவ்வளவு பெரிய தாக்கமும் ஊக்கமும் ஏற்படும் என்பதை மற்றவர்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

அருட்செல்வர் அவர்களை வெளியிலிருந்து மற்றவர்கள் பார்க்கிறார்கள். நாங்கள் வீட்டுக்குள்ளிருந்து அருட்செல்வர் அவர்களைப் பார்க்கிறோம். சமுதாயத்தில் உள்ளவர்களின் பார்வைக்கு அவர் எப்படி இருக்கிறாரோ, அப்படியே எங்களுடைய பார்வைக்கும் தெரிகிறார். வீடு வேறு, சமுதாயம் வேறு என்று அவர் தனித்தனியாகப் பிரித்துப் பார்ப்பதில்லை. சமுதாயம் என்பது விரிவாக்கப்பட்ட ஒரு குடும்பம் என்ற கொள்கைப்படி வாழ்ந்து வருபவர்.

அவரை நாங்கள் புரிந்து கொண்ட வகையிலேயே எங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறோம். தம்முடைய எந்தக் கருத்தையும் பிறர் மீது திணிக்கும் நோக்கம் சிறிது கூட இல்லாதவர். ஒவ்வொருவரும் அவரவருடைய நடைமுறை அனுபவங்களிலிருந்தே தாமாகக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைப்பவர். பிறர் கருத்து தம் கருத்துக்கு மாறாக இருப்பினும், அதில் உண்மை இருப்பின், தம் கருத்தை மாற்றிக் கொள்வதோடு, அவர்களை அவர்கள் கருத்துக்கு ஏற்ப நடக்க ஊக்குவிப்பார்.

• என்.எம்.



மாணவப் பருவத்தில் காமராஜரை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது எனக்கு. அவர் என்னைப் பொது வாழ்வில் பங்கேற்க ஊக்குவித்ததன் பேரில், கல்லூரி மாணவர் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வென்றேன். எனது இயல்பான தேசிய உணர்வு, அருட்செல்வர் அவர்களின் குடும்பத்துடன் உறவு ஏற்பட்ட பிறகு, மேலும் விரிவாகியது.

அருட்செல்வரின் தந்தை அமரர் நாச்சிமுத்துக் கவுண்டர் அவர்கள் ஒரு வித்தியாசமான சுதந்திரப் போராட்ட வீரர். அவர் நேரடியாகச் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. ஆனால், ஏராளமான சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு

அவர் பல வகையிலும் மறைமுகமாக உதவி வந்திருக்கிறார்.



அருட்செல்வர் அவர்களுக்கு அவருடைய தந்தையார் அளித்த சொத்து, பெரிய போக்குவரத்து நிறுவனம் என்று சொல்லுவார்கள். உண்மை என்னவென்றால், அருட்செல்வர் அவர்களுக்கு அவர் தந்தையார் விட்டுச் சென்ற மிகப் பெரிய சொத்துக்கள் - வள்ளலாரை அறிமுகப்படுத்தியது ஒன்று; மகாத்மா காந்தியை அடையாளம் காட்டியது மற்றொன்று. அருட்செல்வர் அவர்களின் வியக்கத் தகுந்த மனோபாவத்திற்கும் சாதனைக்கும், பின்னணியில் அந்த இரண்டு மகான்களுமே தொடர்ந்து இருந்து வருகிறார்கள் என்று கருதுகிறேன். இவ்விருவரின் கொள்கைகளும் வழிகாட்டலும்தான் அருட்செல்வர் குடும்பத்தின் மிகப்பெரிய சொத்துக்கள். அவற்றைக் கட்டிக் காத்து அடுத்தடுத்த தலைமுறைகள் அனுபவிக்கும் வகையில் கொடுத்துள்ளார் அவர்.


அருட்செல்வர் அவர்கள் எங்களை எல்லாம் ஒருமுறை வடலூருக்கு அழைத்துச் சென்றார்கள். அப்போது அருட்பெருஞ் சோதி வள்ளல் பெருமானின் சத்தியஞான சபைக்கு எல்லோருமாகச் சென்றோம். ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும், அந்த இடத்தில் ஓர் அறிவிப்புப் பலகை இருப்பதைக் கவனித்தேன். 'புலால் உண்பவர்கள் இந்த எல்லைக்கு மேல் வரக் கூடாது' என்று இருந்தது.

அதன்படி நான் அந்த இடத்திலேயே நின்று விட்டேன். முன்னால் சென்ற அருட்செல்வர் அவர்கள், திரும்பி நின்று என்னை ஒருகணம் பார்த்தார். பிறகு திரும்பி மற்றவர்களுடன் தொடர்ந்து சென்று விட்டார்.

அந்தக் கணம் முதலாக, நான் புலால் உணவு உட்கொள்வதை விட்டு விட முடிவு செய்தேன். இப்படித்தான் அவர் மனப்போக்கைப் புரிந்து கொண்டு, நடைமுறைகளைத் தெரிந்து கொண்டு, என்னை மாற்றிக் கொண்டேன்.

அருட்செல்வர் அவர்கள் எப்போதும் ஒரே வகையான மனோபாவம் கொண்டிருப்பார். எவரையும் தரம் பிரித்துப் பார்த்துப் பழக மாட்டார். மனத்தில் பட்டதைத் துணிந்து சொல்லி விடுவார். அவரைப் புரிந்து கொள்ளாதவர்கள்தாம் அவரிடம் சங்கடம் கொள்வது உண்டு.

'சக்தி நிலை'யத்துக்குப் பல பெரிய மகான்களையும் கலைஞர்களையும் வல்லுநர்களையும் அழைத்து வந்து, அவர்களோடு நாங்கள் நேரிடையாகப் பழகும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவார்.



வீட்டில் நடக்கும் முக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது, எப்படி நடத்த வேண்டும் என்று கருத்துச் சொல்ல மாட்டார். அதை நடத்துபவர்களின் விருப்பத்துக்கு விட்டு விடுவார்.

டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ வாணவராயர்

அருட்செல்வர் அவர்களிடம் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய பண்பு, எளிமை. மிக மிக எளிய மனிதரின் வீட்டிலும் தரையில் அமர்ந்து அவர்களுடன் விருந்து உண்பார். எந்தவித வசதியையும் எதிர்பார்க்காதவர்.

அருட்செல்வர் அவர்களின் தொழில் முயற்சியின் விளைவாக, இன்று சுமார் 15,000 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. "செல்வத்தைப் பெருக்குவது குடும்பத்திற்காக அல்ல தேசத்திற்காகவே" என்ற கொள்கை உடையவர்.



• வள்ளலார்

காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, சட்டசபையில், தாம் நடத்தி வந்த லாபகரமான போக்குவரத்துத்துறை பஸ்களை அரசுடைமையாக்க வேண்டுமென்று பேசினார். "இப்படிப் பேச வேண்டிய அவசியமென்ன?" என்று காமராஜர் கேட்டார். "அப்போதுதான் மக்கள் எல்லோருக்கும் பயன் தரும் வகையில் போக்குவரத்துத் துறையை விரிவாக்க முடியும்!" என்றார். பிறகு கலைஞர் ஆட்சியில் போக்குவரத்துத்துறை அரசுடைமை ஆக்கப்பட்ட போது, பஸ்களை எடுத்துக் கொண்டதற்கான நியாயமான இழப்பீட்டுத் தொகையை மட்டுமே பெற்றுக் கொண்டார்!

மூன்று ஆண்டுகளுக்கு முன், இத்தாலியில் வாட்டிகனில் நடந்த உலக சமய சமாதான மாநாட்டில் கலந்து கொள்ள எனக்கு அழைப்பு வந்தபோது, அதை ஏற்கத் தயங்கினேன். அதை என் மகன் மூலம் தெரிந்து கொண்டு, என்னைச் சந்தித்து வற்புறுத்தி ஏற்கச் செய்து, பயண ஏற்பாடுகள் அனைத்தையும் செய்தார். பேரன் சங்கரின் பட்டமளிப்பு விழா... இங்கிலாந்துக்கு, அந்தக் கடுங் குளிரையும் பொருட்படுத்தாமல் சென்று கலந்து கொண்டார்.

கால மாற்றங்களுக்கு இடையிலும், கூட்டுக் குடும்ப வாழ்க்கையைப் போற்றிக் காத்து வருபவர் அருட்செல்வர் அவர்கள். ○



பிறை ஓராயிரம் கண்டு பெருவாழ்வு வாழ..

அறப்பணியும் திருப்பணியும் ஆற்றி வரும் அருட்செல்வராய்,
எளிமையின் சின்னமாய்ப் போற்றப்படும் பொருட்செல்வராய்,
காந்திவழி நடந்து, சன்மார்க்க நெறிவாழும் வள்ளலார் வழித்தோன்றலாய்,
இளைஞருக்கு வழிகாட்டும் இல்லறஞானியாய்,
தமிழ்வளமும் தொழில்வளமும் மூலதனமாகக் கொண்ட மூதறிஞராய்,
'எல்லார்க்கும் நன்றாம் பணிதல்' என்ற குறள்வழித் தேர்ந்த மனிதராய்,
சதாபிஷேகம் கொண்டாடி, அறுபதாவது மணநாள் விழா காணும் தாங்கள் மேலும் பிறை ஓராயிரம் கண்டு பெருவாழ்வு வாழ, இறைவன் அருள் பொழிய வேண்டுகிறோம்!

- ஏவி.எம்.ராஜேசுவரி

சென்னையில் இராமலிங்கர் பணி மன்றம் தொடங்கி நடத்தி வருகிறார் அருட்செல்வர். அதன் செயலாளர் பொறுப்பை அவ்வை நடராஜனுக்குப் பிறகு, பகீரதன் ஏற்றுக் கொண்டார். அவ்வை, அரசுப் பணியை ஏற்க வேண்டி வந்ததால் பகீரதன் ஏற்றார்.

பகீரதன் அப்போது 'சத்ய கங்கை' என்ற பத்திரிகை நடத்திக் கொண்டிருந்தார். ஆன்மிகத்துக்கும் தேசத்துக்கும் பணியாற்றும் வகையில் ஒரு பத்திரிகையைத் தொடங்குவது நல்லது என்று நினைத்துக் கொண்டிருந்த அருட்செல்வருக்கு, பகீரதன் மேலும் ஊக்கம் கொடுத்து, பத்திரிகையின் பெயரை 'சக்தி' என்றுதான் மனுவில் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே 'சக்தி' என்ற இதழ் வெளி வந்த காரணத்தால், 'ஓம் சக்தி' என்ற பெயரில் பத்திரிகை வெளியிட முடிவாயிற்று. ஒரே சமயத்தில் 'ஓம் சக்தி' ஆசிரியராகவும் 'சத்ய கங்கை' ஆசிரியராகவும் பகீரதன் செயல்பட்டு வந்தார்.



• பகீரதன்

1983 ஜனவரியில் தொடங்கப் பட்ட அருட்செல்வரின் 'ஓம் சக்தி' இதழ், தேசியம், காந்தியம், இந்தியக் கலாசாரம், பண்டைய தமிழ் இலக்கியம், சித்தர்கள் - ஞானிகள் வரலாறு ஆகிய அம்சங்களை அடக்கி ஒரு கலாசார, ஆன்மிக இதழாகத்தான் வெளி வந்து கொண்டிருந்தது. பகீரதனின் உடல்நலக் குறைவு காரணமாக, இதழைச் சென்னைக்குப் பதில் கோவையிலிருந்து வெளியிட அருட்செல்வர் ஏற்பாடு செய்தார்.

இணை ஆசிரியராகப் பேராசிரியர் நமசிவாயம் என்பவரை வைத்து நடத்துவதாகத் திட்டம். ஆனால், அவர் பொள்ளாச்சி மகாலிங்கம் கல்லூரித் தாளாளராகப் பணியாற்றி வந்ததால் பத்திரிகைக்கு நேரம் ஒதுக்க முடியவில்லை. ஆனால், அவர் ஒரு தேர்ந்த இலக்கியவாதி. அவருக்குப் பிறகு, கல்லூரிப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற கவிஞர் மீரா இணை ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

ஆசிரியர் என்ற முறையில் அருட்செல்வர் இரண்டு வழிகாட்டி நெறிகளை வலியுறுத்தினார்:

1. சினிமா, இப்பத்திரிகையில் இடம் பெறக் கூடாது.

2. கட்சி அரசியலும் இடம் பெறக் கூடாது. இவற்றைத் தவிர்த்து, நம் பண்டைய கலாசார முயற்சிகளுக்கு உண்மையாகப் பாடுபட வேண்டும் என்று கருதினார்.

மீராவும் பிறகு உடல்நலக் குறைவு காரணமாக ஓய்வு பெற வேண்டியதாயிற்று.





அதன் பிறகு நான் வெளியீட்டாளர் மற்றும் இணை ஆசிரியர் பொறுப்பை ஏற்றேன். கடந்த பத்து ஆண்டுகளாக அருட்செல்வரின் வழிகாட்டுதலோடு ஆன்மிக - கலாசார - இலக்கிய இதழாக வெளிவந்து கொண்டிருக்கிறது 'ஓம் சக்தி.' கோவைக்கு பிப்ரவரி '96-ல் இடம் பெயர்ந்து, தொடர்ந்து



பண்புக்கோர் இதழ்; பயிருக்கோர் இதழ்!



'ஓம் சக்தி' இதழின் பொறுப்பாசிரியர் பெ.சிதம்பரநாதன்

இங்கிருந்து இயங்கி வருகிறது.

'கிஸான் வேர்ல்ட்' ஆங்கில இதழ் தொடங்கிய வரலாறு:

அருட்செல்வர் சர்க்கரை ஆலைகள் அதிபராக இருந்து வருகிறார். இந்தச் சர்க்கரை ஆலைகள், கிராமப்புறத்தில்தான் அமைக்கப்படுகின்றன. விவசாயத்துறை சார்ந்த தொழிற்சாலையாக இது விளங்குகிறது. இவை கிராமப்புறத்தில் அமைய மத்திய - மாநில அரசுகள் ஊக்குவிக்கின்றன. காரணம்–

* சாலைகள் உருவாகின்றன.
* பாசன வசதி வாய்ப்பு வருகிறது.
* போக்குவரத்து அதிகரிக்கிறது.
* கிராமப்புறங்களில் வங்கிகள் வருகின்றன.
* கரும்பையும் சர்க்கரையையும் ஏற்றிக் கொண்டு போகும் வாகனங்கள் வருகின்றன. எனவே வாகனங்களைப் பழுது பார்க்கும் பணிமனைகள் தோன்றுகின்றன.
* மளிகைக் கடைகள், மருந்துக் கடைகள், மருத்துவமனை எல்லாமே வந்து விடுகின்றன.
* கிராமப்புற பொருளாதாரம் பன்மடங்கு அதிகரிக்கிறது.

தமிழ்நாட்டில் நான்கு சர்க்கரை ஆலைகள் இவர் தலைமையில் நடப்பதால் இந்திய சர்க்கரை ஆலைகள் தலைவராகவும், தென்னிந்திய சர்க்கரை ஆலைகள் தலைவராகவும் இருந்திருக்கிறார். மூலப் பொருளுக்காக, கரும்பு விவசாயிகளோடு நெருங்கிய உறவு வைக்க வேண்டிய அவசியம் உண்டாயிற்று.

இவற்றையெல்லாம் விவரித்து, விவசாயிகளோடு தொடர்பை விரிவாக்க, ஒரு விவசாயப் பத்திரிகையை அகில இந்திய அளவில், ஆங்கிலத்தில் தொடங்கினார். முதல் இதழை வெளியிட்ட அப்போதைய முதல்வர் கலைஞர் 'கிஸான் வேர்ல்ட்', 'உழவர் உலகம்' என்று தமிழிலும் வெளியிடப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அருட்செல்வருக்கு, வேளாண் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் கொடுத்து கௌரவித்தபோது, 'கிஸான் வேர்ல்ட்', 'ஓம் சக்தி' இதழ்களின் ஆசிரியர் என்று பட்டப் பத்திரத்தில் பெருமையோடு குறிப்பிட்டிருக்கிறார்கள்.



காந்தியும் பாரதியும் வரவழைத்த கண்ணீர்!

சென்னையில் 30 ஆண்டுகள் காதி பவனில் பணிபுரிந்தவன் நான். முதன் முதலில் என்.எம்.அய்யா அவர்களை நான் சந்தித்தது, திருப்பூரில் ஈசுவரன் கோயிலில், புரிசை முருகேச முதலியாரின் ஆன்மிகச் சொற்பொழிவுக்கு அவர் வந்திருந்து உரையாற்றியபோது. பின்னர் 1960களில், சென்னை சீனிவாச சாஸ்திரி ஹாலில் இத்தாலிய வரலாறு, பண்பாடு, அவர்களது கட்டடக் கலை பற்றி மிகச் சிறப்பாகப் பேசினார். எனக்கு வியப்பாக இருந்தது.

தமிழ்வாணன் எழுதிய 'அருட்பா அரசு கிரிதாரி பிரசாத்' என்ற நூலை உட்லண்ட்ஸ் ஓட்டலில் அய்யா வெளியிட்ட போது அவர் பேசியதைக் கேட்டு மெய்மறந்து போனேன்.

அய்யா அவர்களின் கதர் உடைகளை சென்னை காதி பவனில் பணி புரிந்த விடுதலைப் போராட்ட வீரரும், தையற் கலைஞருமான வி.கே. ராஜா தைத்துக் கொடுப்பது வழக்கம். அவருடன் அய்யா வீட்டுக்குச் செல்லுவேன். உட்கார வைத்து, உபசரித்து, பல விஷயங்கள் குறித்துப் பேசுவார்.

பணி ஓய்வுபெற்று, 1985-ல் கோவை சென்று விட்டேன். ஏப்ரல் '87-ல் திடீரென்று சென்னையில்



• கிரிதாரி பிரசாத்



அவரைச் சந்திக்கும்படி அழைப்பு வந்தது. சிங்காநல்லூரில் காந்தி மியூசியம் அமைக்கும் பணி குறித்து விரிவாகப் பேசினார்.

அதே ஆண்டு, நவம்பரில் கோவையில் வடமதுரையில் என் வீட்டு கிரஹப்பிரவேசத்துக்கு வர அவரால் இயலவில்லை. அடுத்த ஆண்டு மார்ச் மாதம், காலை உணவுக்கு என் வீட்டுக்கு வருவதாகத் தாமே தகவல் அனுப்பியிருந்தார். எனக்கு ஒரே இன்ப அதிர்ச்சி. ரொம்பவும் மகிழ்ச்சியாக இருந்தது. சுமார் ஒரு மணி நேரம் என் தந்தையுடன் உரையாடிக் கொண்டிருந்தார். நான் இன்னும் மறக்கவில்லை.

1989-ல் டிசம்பர் மாதம், பவானியில் சந்தித்தபோது, "என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். சொன்னேன். "என்னிடம் வந்து விடுங்கள். நல்ல நாள் பார்த்து வாருங்கள்!" என்றார்.

கஸ்தூர்பா காந்தி தேசிய நினைவு நிதியின் அறங்காவலருக்குச் செயலாளராகப் பணி செய்ய அமர்த்தினார்.

காந்தி கிராமத்தின் பொன்விழா நிகழ்ச்சிகள் சென்னையில் நடைபெற்றன. காந்தி கிராமக் கலைஞர் கே.வி.ராமனின் 'பாதை தெரியுது பார்' என்ற காந்திய நாடகத்தைப் பார்த்து முடித்து விட்டு, கண்ணீர் மல்கி காந்திஜிக்கு அஞ்சலி செலுத்தினார் அருட்செல்வர்.

ஒரு நாள் மாலை 'பாரதி' படத்துக்குப் போனோம். பாரதியாரின் உடலைத் தூக்கி வந்து எரியூட்டும் கடைசிக் காட்சி. அருட்செல்வர் உள்ளம் உருகிப்போய், இருகை கூப்பித் தொழுதார். என் கண்ணிலும் நீர் நிறைந்து விட்டது.



• 'பாரதி' படத்தில்...

அருட்செல்வருடன் பயணம் செய்யும்போது, ஆன்மிகம், அரசியல், குடும்பம், தொழில்கள், மேலைநாட்டு முன்னேற்றம், பாரதம் தழைத்து ஓங்க அவர் காணும் கனவு, எதிர்பார்ப்பு, ஏக்கம், வெற்றி தோல்வி எல்லாவற்றையும் பற்றிப் பேசுவார். அத்தனை நல்லுணர்வுகளும் உடனிருக்கும் நமக்கும் தொற்றிக் கொள்ளும்.



சி.எஸ்.ராமகிருஷ்ணன்
கஸ்தூர்பா கிராமம்



“அப்போது, மகாலிங்கம் அவர்கள் பொறியியல் கல்லூரி மாணவர். உடல் நலம் சரியில்லாமல், அப்பா நாச்சிமுத்துக் கவுண்டரின் வேண்டுதலுக்கிணங்கி, திரு மகாலிங்கம் அவர்கள் எங்கள் வீட்டுக்கு எங்கள் அப்பா திரு டி.ஸ்ரீனிவாசன் அவர்களால் அழைத்து வரப்பட்டார். வீட்டிலேயே சிகிச்சை துவங்கியது. ஆண் வாரிசு காணாத எங்கள் வீட்டில் மகாலிங்கம் பற்றிப் பேசுவார். அலசி ஆராய்வார். முதற்கட்டமாக, அவர் புலால் உண்பதைத் தவிர்த்தார். கதராடை அணிந்தார். அந்தணர் குலத்தைச் சார்ந்த எங்கள் குடும்பத்தில் உண்டும் உறங்கியும் ஒன்றாய்க் கலந்து, எங்களுள் ஒருவராய் இருந்த காலகட்டத்தில் பேதமே இருக்கவில்லை. அன்பு மட்டும்தான் இருந்தது. எங்கள் வீட்டு மூத்த மகனாக நாங்கள் அவரை எண்ணினோம். அவரது அப்பாவின் சகோதரி மகள், செல்வி



• திரு ஸ்ரீனிவாசன் குடும்பத்தினர்...

பேதமில்லை... அன்பு மட்டும்தான்!

அவர்களின் வருகை, எங்கள் எல்லோருக்குமே மகிழ்ச்சியான, வரவேற்கப்படும் வருகையாக இருந்தது. காந்திமகானின் கொள்கைகள், காங்கிரஸ் கட்சியின் நல்நோக்கங்கள் என்று பல்வேறு உறுதியான மனநிலையில் இருந்த மாணவர் மகாலிங்கம், எங்களிடம் அவை


மாரியம்மாளை அவருக்குத் திருமணம் முடித்து வைத்தார்கள். ஒரு நாள், சாயங்கால நேரம், எங்கள் வீட்டு வாசலில் தம்பதி சமேதராய் இருவரும் நின்ற காட்சி இன்றும் பசுமையாக இருக்கிறது. கிராமத்துப் பெண்களுக்கே உண்டான மருட்சி மாரியம்மாளின் கண்களில்

பண்புமிக்கார் பலராய் அணையினும்
உண்ப வேண்டி ஒருவர் அணையினும்
எண் பெருக்கிய அன்பால் எதிர்கொண்டு
நண்பு கூர்ந் தமுதூட்டும் நலத்தினார்.

- சேக்கிழார்

தெரிந்தது.

பண்புகளின் அடையாளங்களுடன், எப்போதாகிலும் வாய்திறந்து பேசிய அந்த மாரியம்மாள் என்ற பெண், நாளை உருவாகவிருக்கும் சக்தி நிறுவனத்தின் ஒரு பெரும் சக்தியாவார்



• ருக்மணி அம்மாள் - நாச்சிமுத்துக் கவுண்டர்

என்று யார் நினைத்தார் அன்று? அமைதியான நுண்ணறிவு, சக்திவாய்ந்த செயல்பாடுகள், தீவிரமான கடவுள் பக்தி - திருமதி மாரியம்மாள் சரஸ்வதி நதி போல் மறைந்து ஓடும் ஜீவநதியாய் அன்று இருந்தார். இன்றும் இருக்கிறார். என்றும் இருப்பார். மாதவம் புரிந்து, வாராது வந்த மாமணியாய் லோக சுந்தர கருணாம்பாள் பிறந்தபோது எங்கள் உலகே மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியது. எங்களுடன் திரு மகாலிங்கம், திருமதி மாரியம்மாள் மற்றும் குழந்தை கருணாம்பாள் தங்கிய காலத்தில் எங்கள் குடும்பத்துடன் நெருக்கம் அதிகமாகியது. பழக்க வழக்கங்களில் பலவித வேறுபாடுகள் இருந்தாலும் எங்களின் பாட்டி மற்றும் அம்மா அந்தக் குடும்பத்திற்கு தங்களால் இயன்ற சரீர உதவியும் மற்றும் மனோபலத்தையும் அளித்து உற்சாகப்படுத்தினார்கள். அந்தக் கால கட்டத்தில் எங்கள் வீட்டில் முதல் ஆண் வாரிசாக எங்கள் தம்பி பாலன் பிறந்தான். வைணவ குலத்தைச் சார்ந்த எங்கள் குடும்பம் முருகப் பெருமானின் திருநாமத்தைச் சூட்டியதற்குக் காரணம் திரு. மகாலிங்கத்தின் தாயார் திருமதி ருக்மணி அம்மாள்தான். முதல் மொட்டை அடித்திட பழனியில் எல்லா ஏற்பாடுகளும் செய்து ஆரவாரமாய்க் கொண்டாடினோம்.

பல்வேறு கால கட்டங்களில், எங்கள் குடும்பம், முக்கியமாக எங்கள் தந்தை திரு. ஸ்ரீனிவாசன் அவர்களும் திரு. நாச்சிமுத்துக் கவுண்டர் அவர்களின் குடும்பமும் ஒரே குடும்பமாய் ஒன்று கூடி இருந்திருக்கிறோம். இன்று திருமதி மற்றும் திரு மகாலிங்கம் அவர்கள் முத்தொட்டில் கண்டு விட்டார்கள். ஆல்போல் தழைத்து அருகுபோல் படர்ந்து இருக்கும் அவர்களின் குடும்பத்துடன் எங்களுக்குள்ள உறவு - ஆழமானது, அமைதியானது, அற்புதமானது.

லட்சுமி ஸ்ரீனிவாசன்,
ஜெயா கிருஷ்ணசுவாமி
சரோஜா சுந்தரராஜன்
சுபாஷிணி சோமசுந்தரம்
வேதா ரங்கன்
பாலன் தேசிகன்
கீதா கிருஷ்ணன்

சிலம்பம் கற்க டியூஷன்!

ம. பாலசுப்பிரமணியன்-வினோதினி

(என்.எம்மின் இளைய மகன், மருமகள்)



அப்பாவும் சரி, அம்மாவும் சரி யதார்த்தமாக எதைச் செய்ய முடியுமோ அதைத் தான் சொல்லுவார்கள். தங்களால் செய்ய முடியாததை, பிறருக்கு உபதேசம் செய்யும் வழக்கம் இரண்டு பேருக்குமே கிடையாது.

நாங்கள் சென்னையிலும் இருந்திருக்கிறோம்; அவர்களோடு பொள்ளாச்சியிலும் இருந்திருக்கிறோம். ஆரோக்கியம், கல்வி, உயர்வான மதிப்பீடுகள் இவற்றுக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். படிக்கிறபோது, ஒரு தடவைகூட அவர் திட்டியதாக நினைவில்லை. உடல் ஆரோக்கியத்திலும் கவனமாக இருக்க வேண்டும் என்பார். ஆறாவதோ ஏழாவதோ படிக்கிறபோது, சிலம்பம் செய்யப் பயிற்சியாளர் ஒருவரைக் கூட்டிக் கொண்டு வந்தார். சிலம்பம் ஒரு நல்ல உடற்பயிற்சி என்பார்.



வாழ்க்கையில் நல்ல கலாசாரம் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவார். தெய்வ பக்தி, ஆன்மிக விஷயங்களில் அவருக்கு எல்லையற்ற ஈடுபாடு உண்டு. எங்கள் சின்ன வயதிலேயே பல கோயில்களுக்கும் அழைத்துச் சென்றிருக்கிறார்கள் அம்மாவும் அப்பாவும். அதேபோல வெளிநாடுகளுக்கும் அழைத்துப் போயிருக்கிறார். அன்பு காட்டும்போது வழிகாட்டவும் செய்வார் அப்பா. அம்மாவுக்கு டிசிப்ளின் மிக முக்கியம். கண்டிப்பு இருக்காது; ஆனால் கட்டுப்பாடு இருக்கும்.

'முதலில் இந்தியாவைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள். அப்புறம் வெளிநாடுகளைப் பற்றி அறிந்து கொள்ளலாம்' என்பார். இருவருக்குமே காலத்தின் அருமை முக்கியம்.

அப்பா ஒரு போதும் 'நான்' என்ற கோணத்தில் சிந்திக்க விடமாட்டார். 'என்னோடது' என்பதை விட 'நம்மோடது' என்று தான் நினைக்கச் சொல்லுவார்.

அம்மாவுக்கு நினைவு சக்தி அதிகம். ஒவ்வொரு சம்பவத்தையும் நினைவு வைத்திருந்து சொல்லுவார். எதையும் கச்சிதமாகச் செய்ய வேண்டும் அவருக்கு. அவர் சத்தம் போட்டுப் பார்த்ததே இல்லை. குழந்தைகளின் நண்பர்களையும் வீட்டுக்கு அழைத்துவரச் சொல்வார்.

எங்கள் மகள் சம்யுக்தா சென்னையில் பயோ-டெக் படிக்கிறாள். சென்னை போனால் போய்ப் பார்த்துவிட்டு வருவார்கள். "ஒரே இடத்திலிருந்து மூன்று கார்களில் ஏன் போகணும்? ஒரே காரில் போகலாமே?" என்பார் அம்மா. சிக்கனத்தை எடுத்துச் சொல்வார்.

மகன் விஷ்ணுவுடன் சரிசமமாக அமர்ந்து செஸ் ஆடுவார் அப்பா. ('சூப்பரா ஆடுவார் தாத்தா!' - விஷ்ணு) குழந்தைகளிடம் கொள்ளை ஆசை. எப்போதும் வெறுங்கையோடு வரவே மாட்டார். சென்னை வரும்போது, சில சமயம் நல்ல நாடகங்களுக்குக் கூட்டிக் கொண்டு போவார். நன்றாக ரசிப்பார். ○

கரும்பு செய்த கல்வி உதவி!

திருமதி மருதபுஷ்பம் கைலாசம், ஈரோடு, என்.எம்.குடும்பத்துக்கு நெருக்க மானவர்.

91-ல் ராஜீவ் காந்தி இறந்தபோது, என்.எம். அய்யா காஷ்மீரிலிருந்து சென்னை வந்து, நீலகிரி எக்ஸ்பிரஸ் ரயிலில் கோவை வந்து கொண்டிருந்தார். ரயில் அதிகாலை மூணரை மணிக்கு ஈரோடு ஜங்ஷன் வருவதற்கு முன்னால், அவர் மகன் மாணிக்கம் டெலிபோன் செய்து, 'வழியில் சிக்கல் ஏதும் இருக்கலாம். அதனால் போய்க் கூட்டிக் கொண்டு வந்து விடுங்கள்' என்று தகவல் சொன்னார். நாங்கள் போய் அவர் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த பெட்டியை அடைந்து அவரை எழுப்பினோம். அவருக்கே அதிர்ச்சியாக



மருதபுஷ்பம் கைலாசம்

இருந்தது. அப்போதே, 'அடுத்த பிரதமர் நரசிம்மராவ்தான்!' என்று சொன்னார் என்.எம். அய்யா. இரண்டு நாட்களுக்கு இங்கே தான் இருந்தார். அது மட்டுமில்லை, பஸ் ஸ்டாண்டில் இருந்த அத்தனை பேருக்கும் இரண்டு நாளும் இங்கே தான் சாப்பாடு போட்டு உதவினோம். ஏனென்றால் எந்த ஓட்டலும் திறக்கவில்லை. மக்கள் சாப்பாட்டுக்குக் கஷ்டப்படக் கூடாதே என்று இங்கேயே எல்லாருக்கும் ஏற்பாடு பண்ணினோம். என்னால் அதை மறக்கவே முடியாது.

திருமதி மருதபுஷ்பத்தின் மகன் வி.கே. சுவாமிநாதன்:

அய்யா அவர்களின் 60-வது பிறந்த நாள் விழாவை கோபிசெட்டிப்பாளையம் சீதா மண்டபத்தில் நடத்தினோம். அப்போது விவசாயிகள் ஒரு டன் கரும்புக்குப் பத்து ரூபாய் வீதம், எங்கள் மகா - மாரி டிரஸ்ட்டுக்குக் கொடுத்து, அறக்கட்டளையை ஆரம்பித்து வைத்தார்கள். கல்விக்காக மாணவர்களுக்கும் மருத்துவ வசதிக்காக நோயாளிகளுக்கும் திருமண சமயத்தின்போது உதவி கேட்டு வருபவர்களுக்கும் இந்த அறக்கட்டளை மூலம் உதவி செய்து வருகிறோம்.

அப்பாவும், (வி.எம். கைலாசக் கவுண்டர்) அய்யா என்.எம்மும் சேர்ந்து சக்தி சுகர்ஸின் ஏஜென்சியாக 1965-ல் பவானி எண்டர்பிரைசஸ் என்று ஆரம்பித்தார்கள். அன்று ஒரு நாளைக்கு 1500 டன் அரவைத் தகுதி இருந்தது. இன்று 7000 டன் அரவைத் தகுதி பெற்றிருக்கிறது. மொத்தமாக எல்லா சர்க்கரை ஆலைகளும் சேர்த்து - அதாவது சிவகங்கை, ஒரிசா, மாண்டியா ஆலைகள் - 18000 டன் கரும்பு அரவை செய்து, 18000டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ் நாடு காகித ஆலைக்கு பகாஸே எனப்படும் கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொடுத்து வருகிறோம். பதிலாக அவர்கள் பாய்லர் இயங்க மின்சாரம் தந்து விடுகிறார்கள்.

பவானி சங்கமேசுவரர் கோயிலுக்கு கும்பாபிஷேகத்துக்காக மொத்தம் நாலு கோடி ரூபாய் வசூலித்துக் கொடுத்தார் ஐயா.

ஈச்சநாரி கோயில் அவரால்தான் பெரிதாக ஆயிற்று. தேசிய மயமாவதற்கு முன்பு பத்து நிமிடத்துக்கு ஒரு ஏபிடி பஸ் அந்த வழியாகப் போகும். அப்போது முதன் முதலில் போகிற பஸ் டிரைவர் அங்கே தேங்காய் உடைக்க வேண்டும். அதே போல கடைசி பஸ் டிரைவரும் தேங்காய் உடைக்க வேண்டும்!

இனநன்மை இன்சொல் ஒன்றீதல் மற்றேனை
மனநன்மை என்று இவையெலாம் - கனமணி
முத்தோடு இசையும் முழங்குஉவரித் தாள்சேர்ப்ப
இற்பிறந்தார் கண்ணே உள.

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை; மழையும்
தவமுளார் இல்வழி இல்லை - தவமும்
அரசிலார் இல்வழி இல்லை; அரசனும்
இல்வாழ்வார் இல்வழி இல்.

கண்ணில் சிறந்த உறுப்பில்லை; கொண்டாளின்
துன்னிய கேளிர் பிறரில்லை - மக்களின்
ஒண்மையவாய் சான்ற பொருளில்லை!

- நான்மணிக்கடிகை

நன்மை தீமைகளுக்கு இடையில் வாழ்ந்து வரும் இந்தச் சமுதாயத்தில், நன்மைகளை மட்டுமே தேர்ந்தெடுத்துக் கொண்டு அடக்கமாக வாழ்ந்து வரும் டாக்டர் நா. மகாலிங்கம் ஒரு நிறைகுடம் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். நிறைகுடம் தளும்பாது!

- 'சோ'ராமசாமி



சுமார் 20 வருடங்களுக்கு முன், பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை சுந்தரேசனார் கருத்தை ஏற்று, இராமலிங்கர் பணி மன்றம் இசைக் கலை விழாக்களைத் தொடங்கியது. படிப்படியாக, தேவாரம், திவ்யப் பிரபந்தம், திருப்புகழ், பல அருளாளர்களது கீர்த்தனைகள் என்று சுமார் 200 அரிய தமிழ்ப் பாடல்கள் கற்கும் வாய்ப்பினை இந்த விழாக்கள் எனக்கு அளித்தன.

- சென்னைப் பல்கலைக் கழக இசைத்துறைத் தலைவர் டாக்டர் பிரமிளா குருமூர்த்தி

மாதம் தவறாமல் கலை நிகழ்ச்சிகள் நடத்தி, இதுவரை ஆயிரத்தைம்பது கலை நிகழ்ச்சிகளுக்குமேல் நடத்த அய்யாவின் பரிபூரண ஒத்துழைப்பும் ஆசிகளும்தான் மூலகாரணமாகும்.

- இராம. வெள்ளையப்பன், பொள்ளாச்சி தமிழிசைச் சங்கம்



வெற்றிகரமான தொழிலதிபர், தொண்டுள்ளம் கொண்ட கல்வியாளர், அப்பழுக்கற்ற காந்தியவாதி, சமுதாயச் சீர்திருத்தவாதி என்று பலவிதமாக அருட்செல்வரைப் பார்க்கலாம். ஆனால், அவை எல்லாவற்றுக்கும் மேலானது அவரது மனித நேயம்.

- அமால்கமேஷன்ஸ் அ.சிவசைலம்



பொள்ளாச்சி
நா. மகாலிங்கம் அவர்களைத்
தூரத்திலிருந்து பார்த்தால்
பொருட்செல்வர்.
அருகிலிருந்து பார்த்தால்
அருட்செல்வர்.
ஆழ்ந்து பார்த்தால்
அறிவுச்செல்வர்.

- **கவியரசு வைரமுத்து**





இன்றைய இளைஞர்கள் அருட்செல்வர் மகாலிங்கம் வாழ்க்கையைப் படித்துப் பயன்பெற வேண்டும். ஒரு சாதாரண மனிதராக, இந்தியக் கலாசாரத்தோடு, கதர்வேட்டி - சட்டை அணிந்து கொண்டு பேசுகிற முறை, நாகரிகம், வெறுப்பில்லாத வார்த்தைகள் பேசுவது, முக்கியமாக மனத்தில்பட்ட உறுதியான கருத்துக்களைத்தான் பேசுவது, சொல்வதைச் செய்வது, செய்வதைத்தான் சொல்வது, இவற்றை இன்றைய இளைஞர்கள் அருட்செல்வரிடம் இருந்து கற்றுத் தொடர வேண்டும்.


- **டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி**

ஏ.சோமசுந்தரம்

ஜோதி நகர் கூட்டுறவு வீட்டமைப்புத் தலைவராக அய்யாவும் செயலாளராக நானும் (1999 வரை) இருந்தபோது 200 ஏக்கர் பரப்பளவில் உருவானது இந்தக் குடியிருப்புப் பகுதி.

1200 வீட்டு மனைகள், அய்யாவின் தாயார் ருக்மணி அம்மாள் பெயரில் ஓர் உயர்நிலைப் பள்ளி, துணைவியார் மாரியம்மாள் பெயரில் ஓர் ஆரம்பப்பள்ளி. பள்ளிக் கூடங்கள் இரண்டுமே சொசைடியின் பணத்திலிருந்தே கட்டியவை. ஓர் அறக்கட்டளை மூலமாக நடத்துகிறோம்.

சமூக விசேஷங்களுக்கு, பள்ளி விழாக்களுக்கு வாடகைக்குத் தர சமூகக் கூடம் கட்டியிருக்கிறோம். பூங்கா, விளையாட்டுத் திடல், திறந்த வெளி, காவல் நிலையம், தபால் - தந்தி அலுவலகம், தீயணைப்பு நிலையம், மருத்துவமனை, நூலகம் என்று எல்லாவிதமான பொது வசதிகளுக்கும் இடம் ஒதுக்கியிருக்கிறோம். ஒரு குடியிருப்புப் பகுதிக்குத் தேவையான அத்தனையும் இருக்கிறது இங்கே. கடைகளுக்கும் இடம் ஒதுக்கியிருக்கிறோம். பாதுகாக்கப்பட்ட நீர் வினியோகத்துக்காக தொட்டி கட்டியிருக்கிறோம். ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால், எந்தக் கூட்டுறவு காலனியிலும் பார்க்க முடியாத 100 அடி சாலை, 80 அடி சாலை, 70, 60 அடி சாலைகளை இங்கேதான் பார்க்கலாம். எல்லாம் தார் ரோடு.



பொள்ளாச்சி (நா.மகாலிங்கம்) அய்யாவின் கூட்டுறவு இயக்கத்தில், மகாலிங்கபுரம், ஜோதி நகர் போக, கீழ்த்தட்டு மக்களுக்காகவே தியாகி திருப்பூர் குமரன் பெயரில் குமரன் நகர் குடியிருப்பு, எல்லா வசதிகளோடும், 30 அடி 40 அடி சாலையோடு, கோயில், மசூதி உட்பட, குடிநீர் வசதியோடு உருவாக்கப்பட்டிருக்கிறது. இதில் 400 வீட்டு மனைகள் உள்ளன.

இது தவிர, (பொள்ளாச்சி-திண்டுக்கல் சாலை) தேசிய நெடுஞ்சாலையில், வள்ளலார் நகர் என்று ஆசிரியர்களுக்காக வீட்டுமனை ஒதுக்கியிருக்கிறோம். இதுவும் வளர்ந்து வருகிறது.

பொள்ளாச்சி கூட்டுறவு வீட்டமைப்புச் சங்கம், 1979-லிருந்து தொடர்ந்து தமிழ்நாட்டில் சிறந்த கூட்டுறவுச் சங்கமாக இருந்து வந்திருக்கிறது. வருடா வருடம் இதற்கான கேடயம் பரிசு பெற்று வருகிறோம்.



இந்தியாவிலேயே பெருமைப்படக் கூடிய விஷயம், தாலுக்கா அளவில், பொருளாதார ரீதியாக இந்தக் கூட்டு



கூட்டுறவு ஒளி வீசும் ஜோதி நகர்!



றவுச் சங்கம் வலுவான கட்டமைப்பில் இருக்கிறது.

சன்மார்க்க சங்கம் ஆதரவில் முதியோர் இல்லம் ஒன்று நடத்தி வருகிறோம். அருள்மிகு விசாலாட்சி உடனமர் ஜோதி லிங்கேசுவரர் கோயில் கட்டி, பராமரித்து வருகிறோம். ஜோதிலிங்கேசுவரர் அறக்கட்டளை நிறுவி அதன் மூலமாக முதியோர் இல்லம் நடத்துகிறோம். அகில இந்திய அளவில் இத்தனை வசதிகளோடு வேறு எந்தக் கூட்டுறவு வீட்டமைப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தச் சங்கம் தொடர்ந்து லாபத்தில் நடந்து வருகிறது.

அய்யா எங்கள் எல்லோரையும் தம் குடும்பத்தில் ஒருவராகப் பாவித்து, அவ்வப்போது ஆலோசனைகள் தந்து, தவறுகள் இருந்தால் சுட்டிக்காட்டி, ஒரு பொறுப்பான வழிகாட்டியாக இருந்து வருகிறார். பொதுமக்களுக்கு, சேவை மனப்பான்மையோடு விளங்குவது எப்படி என்று சொல்லித் தருகிறார்.

இத்தோடு மட்டுமல்ல. பொள்ளாச்சியில் அய்யா, சக்தி கோஆபரேடிவ் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் என்ற தொழிற்பேட்டைக்கு நிலம் வாங்கி, பல்வேறு வகையான தொழிற்சாலைகள் உருவாக்கித் தந்திருக்கிறார்.


உடுமலைப்பேட்டையில், சிறு தொழில்கள் சிறப்பாக இயங்கி, பொருளாதார ரீதியில் லாபத்தில் செயல்பட்டு வெற்றிகரமாக நடந்து வருகின்றன. இதற்கெல்லாம் அய்யாவின் தலைமைதான் காரணம்.

அய்யா மாதிரியேதான் அம்மாவும். காலா காலத்திலும், எங்கெங்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அதை எல்லாம் ஒன்றுவிடாமல் செய்து தருகிறார். கோழி தன் குஞ்சுகளை எல்லாம் தன் இறக்கைகளுக்குள் அணைத்துக் கொண்டு அரவணைப்பது போல், அவர் செயல்கள் எல்லாம் இருக்கும்.





விடிகிற வரை எரியும் விளக்கு...



எங்களுக்கு 'சக்தி நிலையம்' ஒரு கோயில் மாதிரி என்றால், அம்மா கடவுள் மாதிரி. எங்களுக்கு ஒரு குறை இருந்தால், அதை அம்மாவிடம் சொன்னால் போதும். சரியாப் போயிடும். எதுவாய் இருந்தாலும், எங்களை நம்பி விட்டுட்டுப் போவாங்க.

ஏ.பி.டி. டிரைவராக இருந்த என் தகப்பனார் காலமானதால், எனக்கு 1967-ல் அய்யா வேலை கொடுத்தார். நான் அப்போ சின்னப் பையன். 69-ல் இங்கே பங்களாவுல கொண்டு வந்துவிட்டாங்க. ஒரு பத்து வருஷம் 71-லிருந்து 81-வரை - மெட்ராஸ்ல பங்களால இருந்தேன். 82-லிருந்து 92-வரை மாணிக்கம் அய்யா வீட்டுல வேலை பார்த்தேன். அப்புறம் இங்கே வந்திட்டேன்.

அம்மா ரொம்ப நியமமாய் இருப்பாங்க. ஐயாவும்தான். முதலில், பால் காய்ச்சி நைவேத்தியம் பண்ணின பிறகுதான் காப்பி சாப்பிடுவாங்க. வீட்டுக்கு உள்ளேயே இருக்கிற பிள்ளையாருக்கு அவரேதான் மாலை தொடுத்துச் சாத்துவார். படுக்கப் போகும்போது தீபம் ஏத்தி வைச்சுட்டுத்தான் போவது வழக்கம். அந்தக் காமாட்சி விளக்கு விடிகிற வரை எரியும்.

இந்த வயசிலயும் ஸ்டோர் ரூமுக்கு வந்து, என்னென்ன வேணும் என்று கேட்டு எடுத்துக் கொடுப்பாங்க.

'பத்துப் பேர் என்னோட சாப்பிட வராங்க' என்று திடீரென்று அய்யா சொல்லிட்டா, அம்மாவே எங்களுக்குக் காய்கறி நறுக்கிக் கொடுப்பாங்க! அதே மாதிரி வருஷா வருஷம் ஊறுகாய் எதெது வேணுமோ எல்லாம் போட்டு, எல்லாருக்கும் கொடுத்துடுவாங்க. வீட்டுச் சாவிகள் சுமார் 200 இருக்கு. அதிலே கரெக்டான சாவியைத் தேடாம எடுத்துக் கொடுப்பார். எந்தெந்தப் பாத்திரம் எந்தெந்த இடத்தில் இருக்கிறது என்று அவருக்குத் தெரியும். ''மூன்றாவது வரிசையில் இருக்கும், பார்!'' என்பார்.

சிக்கனமாக இருக்கக் கத்துக்கணும் என்பார். 'இன்றைக்கு இருக்கிறது என்பதற்காக எல்லை தெரியாமல் இருந்து விடக் கூடாது. நாளைக்கு இல்லை என்றால்...?' திடீரென்று கரெண்ட் போய்விட்டது என்றால் அய்யா இருந்தால்தான் ஜெனரேட்டர் போடணும். அய்யா இல்லை என்றால், 'நான் மட்டும்தானே? எதுக்கு வீணா ஜெனரேட்டர் போடணும்?' என்பார்.

பழனிக்குப் பாத யாத்திரை போவார்கள் பல ஊழியர்கள். பொள்ளாச்சியில் அம்மா அன்னதானம் செய்வார். பெரும்பாலும் அவர்களே பரிமாறி, ஆரம்பித்து வைப்பார்கள். இலையை அவர்கள் அல்லது மருமக்களே எடுப்பார்கள். அதற்கெல்லாம்கூட அம்மா நேரம் பார்த்துச் சொல்லிடுவார்.

அய்யா பங்குனி - பரணி நட்சத்திரத்துக்கு, தன் பிறந்த நாளுக்கு, திருவிடைமருதூர் கோயிலில் தங்கும் விடுதியில்தான் இருப்பார். ஃபேன் சத்தத்தோட தூங்கும். அவர் பாட்டுக்குப் படுத்திருப்பார். இரண்டு நாள் முழுக்க அங்கேதான் தங்கியிருப்பார். ஒரு மணி நேரத்துக்குத்தான் குழாய்ல தண்ணீர் வரும். அவரே எழுந்து தண்ணீர் பிடித்து வைத்துக் கொள்வார். அவ்வளவு எளிமையானவர்!

- ஊழியர் பிரபாகர்,
பொள்ளாச்சி

நிறை தவத்துப்
பேராளர் அவர் தமக்கு
பெருகு மனையறத்தின்
வேராகி

- பெரிய புராணம்

அருட்செல்வரின் தந்தை நாச்சிமுத்துக் கவுண்டருக்கு மூன்று சகோதரிகள். முதல் சகோதரியை நான் பார்த்ததில்லை. இரண்டாவது சகோதரி என் பெரியம்மா. மூன்றாவது சகோதரி என் அம்மா சுப்பம்மாள். அவருக்கு ஒரே பெண், ஐந்து பிள்ளைகள். பெண்தான் மாரியம்மாள். எனக்கு அக்கா.

என்னுடைய ஆறாவது வயதிலேயே என் தகப்பனார் அழகப்பக் கவுண்டர் காலமானார். பிறகு நாச்சிமுத்துக் கவுண்டரும், துணைவியார் ருக்மணி அம்மாவும் தான் எங்களுக்குத் தாயும் தந்தையுமாகி வளர்த்தார்கள். நாச்சிமுத்துக் கவுண்டர் எப்போதெல்லாம் நேரம் கிடைத்ததோ அப்போதெல்லாம் வீட்டுக்கு வருவார். சுப்பிரமணிய செட்டியார் என்று ஒருவரை எங்களுக்கு ட்யூஷன் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தார். ஸ்விம்மிங் முதற்கொண்டு அவர் சொல்லித் தருவார்.

அப்போது பொள்ளாச்சியில் நேதாஜி ரோடில் குடியிருந்தோம். என்.எம். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். என் மூன்றாவது சகோதரர் அழகப்பனை லவ்டேல், பள்ளியில் சேர்த்தார் மாமா. பெரிய பாக்ஸர் என்று பெயர் எடுத்தார் காலமானார்.

அப்போதுமுதல் அய்யா - அக்காதான் எங்களுக்கு அப்பா - அம்மா என்று சொல்லுவேன்.

நான் பள்ளிப் படிப்பை முடித்தவுடன், ஜெம்ஷட்பூரில் டாடா இன்ஸ்டிடியூட்டில் மூன்று வருடங்கள் படித்தேன். அதை முடித்த பிறகு பிராக்டிகல் பயிற்சி வேண்டும் என்று கோழிக்கோட்டில் மூன்று வருடங்கள் இருந்தேன். டெல்கோவில் 350 மாணவர்கள். மிஸ்டர் ஃப்ளுகர் என்ற ஜெர்மன்காரர்தான் அதிகாரி. அவர் கொடுத்த பயிற்சிதான், எனக்கு இன்னும் உதவுகின்றது. அவருக்கு டிசிப்ளின் மிக முக்கியம். வெளியில் நாம் எங்காவது நடந்து போவதைப் பார்த்துவிட்டாரானால், 'கேன் ஐ ஹெல்ப் யூ?' என்று கேட்டு காரில் ஏற்றிக் கொண்டு போய்விடுவார்!

இந்தப் படிப்புக்கெல்லாம் காரணமே அய்யாவும் அக்காவும்தான். என் கல்யாணத்தையும் அவர்கள்தான் நடத்தி வைத்தார்கள்.

வால்பாறையில் சக்தி எஸ்டேட்ஸ், பொள்ளாச்சியில் என்.மகாலிங்கம் அன்ட் கம்பெனி இரண்டுக்குமே என்னைப் பொறுப்பாளராக நியமித்தார்

தாயாகி தந்தையுமாய்...

ஏ. சண்முகசுந்தரம்

அவர். ஒரு கட்டத்தில் அவர் வலது கையையே உபயோகிக்கக் கூடாது என்றார்கள். அத்தனை பவர்ஃபுல்! அவர் ஜெர்மனிக்கு மேல் படிப்புப் படிக்கப் போனார். என் இரண்டாவது சகோதரர் வெள்ளியங்கிரியும் ஜெர்மனிக்குப் போய்ப் படித்தார்.

நாச்சிமுத்துக் கவுண்டர் இருந்த போதே, என்.எம்.முக்கும் என் அக்கா மாரியம்மாளுக்கும் திருமணம் நடத்தி வைத்தார். பிறகு நாச்சிமுத்துக் கவுண்டர் அய்யா.

வால்பாறையிலிருந்து திரும்ப நேரமானால் அம்மா காத்திருப்பார்கள். அம்மா எப்படி இருந்தார்களோ, அதே மாதிரிதான் அக்காவும். அவர்களும் சாப்பிடாமல் காத்திருப்பார்கள். அப்போது வால்பாறையில் புலி அட்டகாசம் இருந்தது என்று கேள்விப்பட்டிருந்தார். எங்களுக்கு சகஜம். ஆனால் அவர்களுக்குப் பயம்.

1931-ல் நாச்சிமுத்துக் கவுண்டர்,

ஆரம்பித்தது ஏபிடி. 1972-ல் ஏபிடி பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார் அய்யா. கோவையில் ஆபீஸ். கோழிக்கோடு, கண்ணனூர், காசர்கோடு, திருவனந்தபுரம், மும்பை எல்லாக் கிளைகளையும் பார்த்துக் கொள்ளச் சொன்னார்.



அய்யாவின் மகன்கள் எல்லாம் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அய்யா அரசியலில் ஈடுபட்டிருந்த நேரம். தகப்பனார் நாச்சிமுத்துக் கவுண்டர் பெயரில் ஒரு பிரசவ விடுதி கட்டி நடத்தி வந்தார். அதைப் பிறகு முனிசிபாலிடிக்கே கொடுத்துவிட்டார்.


• ஏ. சண்முகசுந்தரம் குடும்பத்தினர்...



அய்யாவுடைய விருந்தோம்பலில் அன்பும் யதார்த்த நோக்கும் கலந்திருக்கும். சமையல்காரர்கள் காளியப்பன், ரங்கசாமி இவர்களிடம் பார்வையாளர்கள் எவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள் என்று பார்த்துவிட்டு அத்தனை பேருக்கும் இலை போடச் சொல்லுவார். அவர்களில் கார் டிரைவர்கள் இருந்தால், அவர்களையும் தனியே உட்கார வைத்துச் சாப்பிட வைத்துவிடுவார். விருந்தாளிகள் காரோட்டுனர்களுக்காகக் காத்திருக்கக் கூடாது என்பார். குழந்தைகளிடம் பேரன்பு. அவர்களோடு செஸ் ஆடுவார். அவர்களுக்குத் தர எப்போதும் பிஸ்கெட் வைத்திருப்பார்.

ஆன்மிகத்தில் அய்யாவுக்கு இணையான ஈடுபாடு அக்காவுக்கும் உண்டு. திருவிடைமருதூரில் அய்யாவின் பிறந்த நாளுக்கு அன்னதானம் செய்து, சந்நியாசிகளுக்குத் துணி கொடுத்துவிட்டு, விழுந்து நமஸ்காரம் பண்ணிவிட்டுத்தான் சாப்பிடுவார். நாச்சிமுத்துக் கவுண்டரின் திதியான குருபூஜை அன்றும் அதே மாதிரிதான். இப்போது இது மாதிரி விசேஷங்களில் மகன்கள், மகள், பேரக் குழந்தைகள் எல்லோரையும் அழைத்து அவர்களையும் கலந்து கொள்ளச் செய்கிறார் அக்கா. அந்தப் பாரம் பரியப் பணிகள் விட்டுப் போய் விடாமல் அவர்களும் தொடர வேண்டும் என்பதற்காக.

அநேகமாக அய்யா நன்கொடை வழங்காத கோயில்கள் எதுவும் இருக்காது எனலாம். திருவிடைமருதூர் மட்டுமல்ல, சூரியனார் கோயிலுக்கும் செய்திருக்கிறார். சுவாமி அபேதானந்தா மீது அபார பக்தி. அவருடைய ஆசிரமத்துக்கும் வேண்டியதைச் செய்து கொடுத்திருக்கிறார்.



பொறுப்பைக் கொடுத்துவிட்டால் தலையிட மாட்டார்!

ம.மாணிக்கம் (என்.எம்.மின் மூத்த மகன்)

ஒரு பொறுப்பை எங்களிடம் கொடுத்துவிட்டால், அதை நிறைவேற்ற நூறு சதவிகிதம் சுதந்திரம் கொடுத்து விடுவார். அதில் தலையிடவே மாட்டார். நாங்களாக அவரை அணுகி எதற்காவது ஆலோசனை கேட்டால்தான் உண்டு. அப்படிக் கேட்டாலும், பொறுமையாக எடுத்துச் சொல்லுவார். ஆனால், ஒரு முடிவு எடுத்துவிட்டால் அதை நீங்கள்தான் செயல்படுத்த வேண்டும் என்பார். எதையும் செய்ய உரிமை மட்டுமல்ல, பொறுப்பும் ஒருவருக்குத் தரப்பட வேண்டும் என்பதில் குறியாக இருப்பார். அதற்காக உங்களைத் தவிக்கவும் விட்டுவிட மாட்டார். நாங்கள் 25 - 30 வயதாக இருக்கையிலேயே எங்களுக்குப் பொறுப்பைக் கொடுத்துவிட்டார்.

நாங்கள், எங்கள் கருத்தைச் சொல்லும் போது, அது அவர் நினைப்புக்கு மாறாக இருந்தாலும்கூட, அதனால் மனசு நொந்துகொள்ள மாட்டார். 'ஓகே, நோ பிராப்ளம்!' என்பதுதான் அவர் பதிலாக இருக்கும்.

சில வருடங்களாகவே அவர் நிறைய இலக்கிய, கலாசார, சமூக விஷயங்களில் அதிக ஈடுபாடு காட்டி வருகிறார். அதனால் நிர்வாகம் தொடர்பான விஷயங்களில் அவரால் அவ்வப்போது ஆலோசனை மட்டுமே தர முடிகிறது.

அவர் எதில் திருப்தி காண்கிறாரோ அதில் தம் நேரத்தைச் செலவிட முடிவதில் எங்களுக்கும் மகிழ்ச்சியே!


நல்ல மனைவி, நல்ல பிள்ளை,
நல்ல குடும்பம், தெய்வீகம்.

- கண்ணதாசன்

சொந்த பந்தங்களை அரவணைத்துக்கொண்டு போகும் அரிய குணம்.

அருட்செல்வர் மனிதநேயம் மிகுந்தவர். அரசியலில் அவருக்கு நெருக்கடி கொடுத்தவர்கள், தேர்தலின்போது அவதூறு பேசியவர்கள், நிறையப் பேர். அவர்களில் வேட்டைக்காரன்புதூர் சோஷலிஸ்ட் தங்கவேல் ஒருவர். 1970-ல், வயதான காலத்தில், விபத்தில் சிக்கி சென்னை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அருட்செல்வர் செய்தி அறிந்தவுடன், பெருந்தொகை கொடுத்து உதவி, 'நான் இருக்கிறேன், பயப்பட வேண்டாம்! எத்தனை செலவானாலும் பரவாயில்லை!' என்று ஆதரவு அளித்தார். 'யாரை அவதூறாய்ப் பேசினேனோ அவரே இன்றைக்கு எனக்கு உதவி செய்தார்!' என்று தங்கவேல் மனம் நெகிழ்ந்துவிட்டார். பிறவியே பிறருக்கு உதவுவதற்காகத்தான் என நினைப்பவர் அருட்செல்வர்.

படிப்பதில் அலாதி விருப்பம் கொண்ட அருட்செல்வர், தம்மைச் சந்திக்க வருபவர்களுக்கெல்லாம் நல்ல



'குமரகுரு' என்றொரு 'செல்லப்பிள்ளை'!

பல நூல்களைக் கொடுப்பார். படிக்க ஊக்குவிப்பார். வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கத்தில் அதிக ஈடுபாடு உள்ளவர்.

அருட்செல்வரின் துணைவியார் மாரியம்மாள் அவர்களுக்கு வீடுதான் முதலில். விருந்தோம்பல் முதல் தரமாக இருக்க வேண்டும் அவருக்கு. யாரையும், எத்தனை நாள் கழித்துப் பார்த்தாலும் பெயரைச் சொல்லி அடையாளம் கண்டுவிடும் அபார ஞாபக சக்தி. எதைச் செய்தாலும் சொன்னாலும் அது மனத்திலிருந்து வரும்; போலித்தனமே இருக்காது.

அருட்செல்வர் வல்லமை மிக்க நல்லவர். அவர் பணியில், அவர்

அருகில் ஐம்பதாண்டுகளுக்கு மேலான எங்கள் நட்பைத் தொடரும் வகையில் இருக்க நேர்ந்ததால், என் வாழ்க்கையே அர்த்தமுள்ளதாக அமைந்தது!



எம்.ஜி.ஆர் அவர்கள் கேட்டுக் கொண்டதால், குமரகுரு பொறியியல் கல்லூரியை, கோவையில் தொடங்க முடிவு செய்த நாள் முதலாக, அருட்செல்வர் என்னிடம் முழுப் பொறுப்பையும் ஒப்படைத்தார்கள். எதையும் திருத்தமாகச் செய்ய வேண்டும் என்ற அருட்செல்வரின் கொள்கையின் துணையோடு, பல சவால்களையும் ஆரம்பத்தில் சந்தித்து, இந்தப் பொறியியல் கல்லூரியை உருவாக்கினோம். இந்தக் கல்லூரியை அருட்செல்வர் ஒரு செல்லப்பிள்ளை போல் கருதுகிறார். அவ்வப்போது தம் நண்பர்களை அழைத்து வந்து, கல்லூரியைக் காண்பித்து மகிழ்வார்.

1984-ல் மூன்று பாடப் பிரிவுகளுடனும் 180 மாணவர்களுடனும் தொடங்கிய குமரகுரு காலேஜ் ஆஃப் டெக்னாலஜி, இன்று 10 பட்டப் படிப்புகள், 10 பட்ட மேற்படிப்புகள், 2600 மாணவர்கள் என்று பரந்து பெருகி வளர்ந்து நிற்கிறது!

ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள் சமீபத்தில் இங்கு வந்திருந்து மாணவர்களுடன் உரையாடியது எங்களுக்குக் கிடைத்த தனிச்சிறப்பு.



> “அவ்வப்போது தம் நண்பர்களை அழைத்து வந்து, கல்லூரியைக் காண்பித்து மகிழ்வார்.”

பேராசிரியர் கே.ஆறுமுகம்

(தாளாளர், குமரகுரு பொறியியல் கல்லூரி, கோவை.)



ஆண்டவனின் பிரதிநிதி அம்மா!

சரசுவதி பொன்னுசாமி

எங்களைப் பொறுத்தவரை என்.எம்.அய்யாவும் அம்மாவும் பார்வதி - பரமசிவன் மாதிரி. அய்யாவுடைய வெற்றிக்கெல்லாம் அம்மாதான் காரணம். வெளியிலே தெரியாது. அம்மா ரொம்பவும் ஸ்ட்ரிக்ட். யாரும் அவரை எளிதில் ஏமாற்ற முடியாது. எந்த வேலை செய்தாலும் ஏனோ தானோ என்று செய்ய மாட்டார்கள். அப்படியே மற்றவர்களிடமும் எதிர்பார்ப்பார்கள்.

எந்த வேலையையும் 'இப்படிச் செய், அப்படிச் செய் என்று சொல்ல மாட்டார். 'நான் சொல்லித்தான் பண்ணணுமா? இத்தனை வருஷங்களாகப் பார்க்கிறீர்களே? தெரிந்து கொள்ள வேண்டாமா?' என்று கேட்பார்.

நாமே இன்வால்வ் ஆகிச் செய்தால் அவருக்குப் பிடிக்கும். சரியாக இல்லை என்றால் திட்டுவார். பிறகு அவரே 'திட்டற மாதிரி ஏன் நடந்து கொள்கிறீர்கள்?' என்று சமாதானமும் செய்வார்.

அவர் கோபித்துக்கொண்டால் அது சரியான காரணத்தோடு இருக்கும். அதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளவும் முடியும். மகள் - மருமகள் எல்லாரிடமும் ஒரே மாதிரிதான் நடந்து கொள்வார். அடுப்பின் அருகே சின்ன விளக்கு இருக்கும். கூடவே சில காகிதத் துண்டுகளும் வைக்கச் சொல்லுவார். ஒவ்வொரு தடவையும் தீப்பெட்டியைத் தேடிக்கொண்டு இருக்க வேண்டாம்; விளக்கிலிருந்து அடுப்பைப் பற்ற வைக்கலாம் என்பார்.

உப்புட்டு (போளி) அவர் மாதிரி செய்ய முடியாது. அவ்வளவு சுவையாகச் செய்வார். நமக்குப் பக்கத்திலிருந்து பார்த்தாலும் அது மாதிரி செய்ய வராது.

மாரியம்மன் நோன்பின்போது, கோயில் போகிற வரைக்கும் தீச்சட்டியை (பூவோடு) அவர்களே எடுத்துப் போவார்கள். சுவாமி மெதுவாக வரும். ஆனாலும் சுவாமி கூடவேதான் வருவார்கள். வாரா வாரம் விரதம் இருப்பார்கள். அப்போதெல்லாம் தானாகத் துவைத்த,

காய்ந்த சேலைதான் கட்டுவார். நாரில் கோத்த மாலைதான் சுவாமிக்குப் போடுவார். போடாத நாளே கிடையாது. நூலில் கோத்தால் ஏற்க மாட்டார். விழா சமயத்தில் திண்டுக்கல்லிலிருந்து பூக்கள் கொண்டுவரச் சொல்லுவார்.

டி.வி.யில் பிரம்மோற்சவம் பார்த்துக் கொண்டிருந்தால் போன் செய்து, "உடனே டி.வி. போடு. நல்லது எல்லாம் காண்பிக்கிறார்கள் பார்!" என்பார்.



ஒரு விசேஷம் என்றால் அவரிடம் ஆசிகள் வாங்குவது எங்களுக்கெல்லாம் பெரிய பாக்கியம். அவர் பஞ்சாங்கம் பார்த்து நேரம் குறித்துக் கொடுத்தால், அவ்வளவு சரியாக இருக்கும். நாம் மறுபடி பார்க்கவே வேண்டாம்.

எங்கள் பெண் கல்யாணத்துக்கு அவர்தான் நாள், நேரம் எல்லாம் குறித்துக் கொடுத்தார். 'கல்யாணத்துக்கு வருவது கஷ்டம். கால் வலி அதிகமாக இருக்கிறது' என்ற போது, 'நீங்கள் சிரமப்பட வேண்டாம். வந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொள்கிறோம்!' என்று சொல்லும்போதே எனக்குக் கண்ணில் நீர் வந்துவிட்டது. முதுகில் தட்டிக் கொடுத்து, 'அடுத்த பெண் கல்யாணத்துக்கு வருகிறேன்!' என்றார். வந்து நடத்திக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தேன். அதேபோல் சிரமப்பட்டு வந்தது என்னால் என்றைக்கும் மறக்க முடியாது. ரொம்ப நேரம் இருந்து, சாப்பிட்டு, பாட்டுக் கச்சேரியும் கேட்டுவிட்டுத்தான் போனார்கள்.

ஆண்டவனின் பிரதிநிதி என்றுதான் அம்மாவை நான் நினைப்பேன்.

யாவரும் கேளிர்



அவர்கள் ஊரான பொள்ளாச்சிதான் எனக்கும் சொந்த ஊர். அவர்கள் எனக்கு உறவு. அதனால் அடிக்கடி வந்து போய்ப் பழக்கம்.

இப்போது, இவ்வளவு வசதி வந்த பிறகும் துளிகூடப் பெருமை கிடையாது. ஏழை பாழை என்ற வித்தியாசம் கிடையாது. 'எங்க இருக்காங்க? நல்லா இருக்காங்களா?' என்று பார்க்கும்போதெல்லாம் பிற உறவினர்களைப் பற்றி விசாரிப்பார்கள். வீட்டு விசேஷங்களுக்கு வராமல் போக மாட்டார்கள்.

இப்போதும், அவர்கள் முன்பு குடியிருந்த வெள்ளாளர் தெருவில் குடியிருப்பவர்கள் எல்லாரும் அம்மாவை விசாரிப்பார்கள். காரணம், அவர்கள் நல்ல மனசு. அய்யா தர்மவான். நம்ம மக்கள் நல்லா இருக்கட்டும் என்று நிறையப் பேருக்கு வேலை கொடுத்திருக்கிறார்.

சொந்தக்காரர்கள், சொந்தமல்லாதவர்கள் என்ற பாகுபாடே அவர்களிடம் கிடையாது. சில சமயம் குடும்பத்தில் யார்யார் சொந்தம் என்று என்.எம். அய்யாவுக்கே தெரியாது. ஆனால் அம்மாவுக்கு எல்லா சொந்தத்தையும் தெரியும்! பெரியவர் நாச்சிமுத்துக் கவுண்டர் குடும்பத்துப் பெயரைத் தொடர்ந்து காப்பாற்றி வருவதற்கு, அம்மா முக்கிய காரணம்.

சுருக்கமாகச் சொன்னால், இனிமேல் இது மாதிரி ஒரு தம்பதியைப் பார்க்க முடியாது!

- கண்ணம்மாள் (எ) பழனியம்மாள்

"சக்தி - சிவன் என்கிறோம். ஆனால் நேரில் பார்த்ததில்லை. எங்களுக்கு என்னவோ சக்தி-சிவம் என்றால் இவர்கள் தான். அவர்கள் வாழுகிற முறை அப்படி அமைந்திருக்கிறது. அய்யா அவர்களு டைய 80-ஆவது பிறந்த நாளின்போது ஆசிகளும் பிரசாதமும்



• டாக்டர் முருகையன்

ஊரிலிருந்து வந்ததும், 'எனக்குச் சொல்லவே இல்லையே?' என்று துண்டை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு கிளம்பி விடுவார். விசாரித்து விட்டுத் தான் வருவார். கல்யாணப் பத்திரிகை எல்லாம் வந்தால், எதையும் விட மாட் டார். எடுத்துப் பார்ப்பார். பவுனாகவோ, பணமாகவோ, தஞ்சாவூர் பெயின்டிங் படமாகவோ, இடத்துக்குத் தகுந்த மாதிரி கொடுப்பார். ஒரு கல்யாணம் தவறவிட மாட்டார். ஜாதி, மதம், கட்சி எதுவும் பார்க்க மாட்டார். அவர் கால்கள் படாத வீடுகள் மிக மிகக் குறைவு. எல்லாரையும் பெயர் சொல்லிக் கூப்பிடுவார். விசாரிப் பார். எங்கேயும் நேரத்துக்குப் போவார். அங்கே என்ன சாப்பிடக் கொடுத்தாலும் சாப்பிடுவார். மறுத்தால் அவர்கள் மனம் வருத்தப்படும் என்பார்.

"பொள்ளாச்சி வளர்ச்சிக்கு மட்டு மல்ல. பரம்பிக்குளம் - ஆளியாறு ப்ராஜெக்ட் கொண்டு வந்ததே அய்யாதான். கே.எல். ராவ் உதவியுடன்,

நலம் தரும் கல்வியும் செல்வமும்...

கொடுத்தார்கள். எங்களுக்கு ஒரே பிரமிப்பு. ஆயிரக்கணக்கான மக்கள், மணிக் கணக்கில் சாப்பிடக் கூடப் போகாமல், அவர்களின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்காக, க்யூவில் காத்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தைக் கட்டுப்படுத்தவே சிரமப்பட்டுப் போனோம். பொள்ளாச்சி நகர சரித்திரத் திலேயே இப்படி ஒரு கூட்டத்தைப் பார்த்ததில்லை.

"பொள்ளாச்சி இத்தனை வளர்ச்சி பெற அய்யாதான் காரணம். இப்பகுதியில் ஒவ்வொருவருடைய வளர்ச்சியிலும் அவர் நிழல் நிச்சயம் இருக்கும். எந்த வகையிலாவது அவர் உதவியிருப்பார். அவர் மீது அன்பும் பிரியமும் வைத்தி ருப்பவர்கள் ஏராளம். வசதியில் கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் வீடாக இருக் கும். ஏதாவது இழப்பு நடந்திருக்கும்.

சி.எஸ். மூலமாக தில்லியில் மூவ் பண்ணி னார். இதில் வி.கே. பழனிசாமிக் கவுண் டரும் உதவினார்.

"இவர் நிறுவிய பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள், பதினேழு - பதினெட்டு இருக்கின்றன. இந்தியாவிலேயே டாப்-டென் பாலிடெக்னிக்குகளில் ஒன்றுதான் நாச்சிமுத்து பாலிடெக்னிக். ஐந்தாவது வரை தமிழில்தான் கற்பிக்க வேண்டும் என்பார். அதற்காக ஜோதி நகரில், தாயார் ருக்மணி அம்மாள் பெயரில் ஒரு ஹைஸ்கூலே ஆரம்பித்தார்! பிறகு ஓர் இங்கிலீஷ் மீடியம் பள்ளியும் ஆரம்பித்துக்



கொடுத்தார்.

"வீட்டில் அவரைப் பார்க்க நிறையப் பேர் வருவார்கள். மடங்கள், கோயில் திருவிழா, தொழில் உதவி, ஆலோசனைகள் கேட்டுப் பலரும் வருவார்கள். மனத்தில் சரி என்று பட்டால் இரண்டு பேரை முன்னால் அனுப்பி விஷயத்தைத் தெரிந்து கொள்வார். கோயில் வேலை 4 -5 லட்சம்தான் ஆகும் என்றால், 'நாமே பண்ணிவிடலாமே?' என்பார். தாமே திரும்பத் திரும்பப் போய் அந்த வேலையைப் பார்ப்பார்.



• டாக்டர் கௌசல்யா • டாக்டர் சாந்தி

"பிறந்த நாளுக்கு திருவிடைமருதூர் மகாலிங்கர் கோயிலுக்குப் போய் அங்கேயே இருப்பார். நான் முழுக்க வழிபடுவார். இதைச் சாக்காக வைத்துக் கொண்டு பக்கத்தில் உள்ள அத்தனை கோயில்களுக்கும் போய் தரிசனம் செய்து விட்டு வருவார்.

"அய்யா - அம்மா இரண்டு பேருமே, எதை நினைத்தாலும் ஒரே மாதிரி நினைப்பார்கள். மாறுபட்ட கருத்து இருந்தது என்றால் அய்யா கொஞ்சம் பொறுத்துப் பார்ப்பார். பிறகு எங்களிடம், 'மாரியம்மாகிட்டே பேசிப் பாருங்க. கன்வின்ஸ் பண்ண முடியுமான்னு பாருங்க!' என்பார். அவர் உறுதியாக இருக்கிறார் என்று தெரிந்தால், ஒத்துப் போய்விடுவார்! விட்டுக் கொடுத்தல் என்பதை ஐயா அவர்களிடம்தான் கற்றுக் கொள்ளவேண்டும்.

''விருந்தாளி யாராவது வந்தால், அவர்கள் காரை விட்டு இறங்கும்போதே, கீழே வந்து வரவேற்று, அவர்களுக்கு என்னென்ன பிடிக்கும் என்று தெரிந்து கொண்டு, தயார் பண்ணி விடுவார்கள் அம்மா. அவர்களுக்கு அத்தனை கவனம் தருவார். சமையல் அறையில் ஒரு ஸ்டூலைப் போட்டு உட்கார்ந்து கொண்டு, 'சரியாகப் பண்ணினியா? சரியா இருக்குதா?' என்று கேட்பார்.

டாக்டர் முருகையன் – கௌசல்யா

"சுவாமிக்கு அம்மா தான் பூமாலை தொடுப்பார். நூலில் அல்ல, நாரில்தான் தொடுப்பார். கோயிலில் சிலைக்கு ஜடை, அலங்காரம் எல்லாம் கவனமாகப் பார்த்துவிட்டு வந்து நம்மிடம் 'கவனித்தாயா?' என்று விசாரிப்பார்.

"சிவராத்திரி, திருவாதிரை என்றால் விரதம்தான். சாப்பிடவே மாட்டார். ஒரு வாய் தண்ணீர் கூடக் குடிக்க மாட்டார். வீட்டில் குளித்திருந்தாலும் பங்களாவுக்கு வந்ததும் மறுபடி ஐயரைக் குளிக்கச் சொல்லிவிட்டுத்தான் வீட்டில் பூஜை செய்யச் சொல்லுவார்! மந்திரம் ஏதாவது விட்டுப் போய்விட்டால் அம்மாவே சொல்லி நினைவுபடுத்துவார்!

• உயிர்களிடத்து அன்பு...



"எங்கள் திருமணத்தை நடத்தி வைத்ததே அய்யா அவர்கள்தான். கௌசல்யாவின் அப்பா, பெரிய வழக்கறிஞர். பப்ளிக் பிராசிக்யூட்டராக இருந்தார். அவர் அய்யாவுக்கு மிகவும் வேண்டியவர். நான் அய்யாவின் கஸின். ஒன்றுவிட்ட சகோதரன்" என்று டாக்டர் முருகையன் சொல்ல –

"அம்மா எனக்குச் சகோதரி மாதிரி. எங்கள் வீட்டில் எனக்கு மாப்பிள்ளை தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை என்.எம்.அய்யா தெரிந்துகொண்டு, 'மாப்பிள்ளை ரெடியாக இருக்கிறார்' என்று இவரைக் கல்யாணம் பண்ணி வைத்தார்" என்றார் டாக்டர் கௌசல்யா.

"எங்கள் வீட்டில் எந்த விசேஷம் என்றாலும் முதலில் அவர்களைக் கேட்டுத்தான் செய்வோம். அதேபோல், அவர்கள் வீட்டு விசேஷம் என்றால் முதலில் எங்களைத்தான் அழைப்பார்கள். நாங்கள்தான் அவர்களுக்குக் குடும்ப டாக்டர்கள்" என்றனர் இருவரும். அவர்களுக்கு, கருணாம்பாளைப் போல எங்கள் மகள் சாந்தி.

"அய்யாவுக்கு அறிவாளிகள் எங்கே இருந்தாலும் கூப்பிட்டுப் பேச வேண்டும். எந்தக் கஷ்டத்திலேயும் யாரையும் விட்டுக் கொடுக்க மாட்டார். விரோதம் பார்க்க மாட்டார். சதர்ன் பாட்லிங் சிக்கல் வந்த போது, சம்பந்தப்பட்டவரை, பின்னால் இருந்து காப்பாற்றியிருக்கிறார்.

"ஒரு நிலம் சம்பந்தப்பட்ட பிரச்னையில் நான் பண விஷயத்தில் கொஞ்சம் பிடிவாதமாக இருந்தேன். என்னைக் கூப்பிட்டனுப்பினார். 'பணம் இன்றைக்கு வரும், நாளைக்குப் போகும். எதை நாம் கட்டிக் கொண்டு போகிறோம், சொல்! எத்தனை பணம் குறைகிறது என்று நீ சொல்கிறாயோ, அதை நான் உனக்குக் கொடுத்து விடுகிறேன். நீ அவரிடம் ஒப்பந்தத்தை முடித்துவிடு!' என்றார். எனக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. அவர் சொன்னபடியே ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துவிட்டேன். அவரைப் பார்த்தாலே கும்பிடத்தான் தோன்றும். வாதம் செய்யத் தோன்றவே தோன்றாது. இப்படி ஒரு தம்பதி வாழ்கிற சமயத்தில் நாமும் அவர்களுடைய உறவினர்களாக வாழ்கிறோமே என்ற மகிழ்ச்சிதான் எப்போதும் தோன்றும்."

பேட்டிகள், கட்டுரைகள்
தொகுப்பு : **சாருகேசி**

(ஆதிசக்தி தனை உடம்பில் அரனும் கோத்தான்
அயன்வாணி தனைநாவில் அமர்த்திக்
கொண்டான்
சோதிமணி முகத்தினளைச் செல்வமெல்லாம்
சுரந்தருளும் விழியாளைத் திருவை மார்பில்
மாதவனும் ஏந்தினான்)...
காதல் செய்யும் மனைவியே சக்தி கண்டீர்
கடவுள் நிலை அவளாலே எய்தல் கூடும்.
- பாரதியார்

அம்மாவுக்கு நன்றி!



எனக்கு அப்போது 20 வயதுகூட ஆகியிருக்கவில்லை. அய்யா அப்போது மாநில திட்டக்குழு உறுப்பினராகவும், பல நிறுவனங்களுக்குத் தலைவராகவும் பல அரசுச் சார்பு நிறுவனங்களில் இயக்குனராகவும் இருந்த சமயம். அவருடைய செயலராக இருந்த சதாசிவம் ஓய்வு பெற வேண்டியிருந்ததால், என்னை நேர்முக உதவியாளனாக வருமாறு அய்யா அழைத்தார்.

ஆனால், மாநில திட்டக் குழுவில் நான் மட்டுமே அறிந்திருந்த பணிகள் இருந்ததால், அய்யாவின செயலர் பேரா. மகாதேவன் என்னை அனுப்பி வைக்க இயலவில்லை. அதனால் பங்களாவுக்கு வந்து டைப் செய்ய வேண்டியவற்றைச் செய்து கொடுத்துக் கொண்டிருந்தேன். என்னுடைய அறைக்குப் பின்னால்தான் அம்மாவின் அறை. வேகமாக டைப்ரைட்டரில் அடிக்கும் ஓசை அவருக்குக் கேட்டுக் கொண்டே இருக்கவே, "யார் இப்படி வேக வேகமாக டைப் செய்கிறார்கள்?" என்று விசாரித்திருக்கிறார்.

மறுநாள் அய்யாவுக்கு உணவு பரிமாறும்போது, என்னையே அவருடைய நேரடி உதவியாளராக அமர்த்த சிபாரிசு செய்திருக்கிறார்.

இப்படி, நான் அய்யாவிடம் வேலை செய்கிற வாய்ப்பை எனக்குத் தந்தவர் அம்மாதான்! அதற்காக நன்றி சொல்ல வேண்டும்.

அந்த நாள் - டிசம்பர் 1972. அன்றுதான் அய்யாவின் நேர்முக உதவியாளராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டேன். பத்து வருடத்தில் பி.ஏ. என்ற பதவியையும், அடுத்த பத்தாவது வருடம் எக்ஸிக்யூடிவ் செக்ரடரி என்ற உயர்வும், சென்ற வாரம் கோவைக்கு அழைத்து ஜி.எம்.என்கிற அந்தஸ்துக்கும் என்னை உயர்த்தி இருக்கிறார் அய்யா.

பதவி உயர்வுக்கான கடிதத்தைக் கொடுத்துவிட்டு, "நான் பொள்ளாச்சிக்குப் போகிறேன். வருகிறாயா?" என்று அய்யா கேட்டார். நான் ஏன் மறுக்கிறேன்? அங்கே அம்மா கையால் சாப்பிடக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே!

ஒரு நேர்முக உதவியாளர் எவ்வளவு விழிப்பாகவும் துடிப்பாகவும் இருக்க வேண்டும் என்பதற்குப் பாடத்தை நான் அய்யாவிடமிருந்துதான் கற்றேன்.

என் திருமணத்தை திருநீர்மலையில் நடத்தி வைத்ததே அய்யாவும் அம்மாவும்தான். அறுநூற்றுச் சொச்சம் படிகளை ஏறி வந்து நடத்தி வைத்தார்கள். எந்தக் கோயிலுக்கு அய்யா போனாலும் அவருடன் நானும் இருப்பேன்.

பாராட்டு என்றால் அதை உடனே செய்துவிடத் துடிப்பார் அய்யா. அவர் நடத்தும் விழாக்கள் ஆகட்டும், இறைபணி ஆகட்டும், எல்லாவற்றிலும் அவருக்கு உதவியாக நான் கூடவே இருக்கிறேன் என்ற மகிழ்ச்சியும் ஆத்ம திருப்தியும் வேறு எங்கு இருந்தாலும் எனக்குக் கிடைக்காது!

சி.ரவீந்திரன்

(அருட்செல்வரின் தனிச்செயலர்)



நடத்தையில் அடக்கம்...

சௌந்தரா கைலாசம்



செந்தமிழ் நாட்டை நினைக்கும் போதில், அருட்செல்வரின் தந்தை, அய்யா நாச்சிமுத்துக் கவுண்டர் அவர்களையும் நினைத்துத் தான் ஆக வேண்டும்.

முன்பொரு முறை நாங்கள் கோவை சென்றபோது, அருட்செல்வர் திரு. மகாலிங்கம் அவர்கள் வந்து என்னையும் குழந்தையையும் பொள்ளாச்சிக்கு அழைத்துச் சென்றார். அய்யா நாச்சிமுத்துக் கவுண்டர் அவர்கள் எங்களை வரவேற்று அன்புடன் உபசரித்தார். "நீ என் மகள். மகாலிங்கம் உன் அண்ணன்!" என்று பாசத்தோடும் பரிவோடும் கூறியதைக் கேட்டதும் விழிகளில் நீர் திரண்டது.

தந்தத்தினால் ஆன, தேசப்பிதா மகாத்மா காந்தியின் சிறிய உருவச் சிலையை அப்போது எனக்குப் பரிசாகத் தந்தார்.

ஒருமுறை வேடிக்கையாக, "ஏனம்மா, போலீஸ்காரர் ஒருவர் சொன்னார், 'கார் வேகமாகப் போனால் மிஸஸ் கைலாசம் ஓட்டுகிறார். மெதுவாகப் போனால் திரு. கைலாசம் ஓட்டுகிறார்' என்று தெரிந்து கொள்வோம்!' சரிதானா அம்மா? இனிமேல் வேகமாக கார் ஓட்டாதே!" என்று அறிவுரை தந்தார்.

மகாலிங்கம் அவர்களுடைய நேர்மை அவருக்குச் சிறப்புத் தந்தது.

நாணயமும் நல்லொழுக்கமும் மதிப்பைத் தந்தன.

ஓயாத உழைப்பு உயர்வைத் தந்தது.

ஆனால் இவை அவருக்குத் தருக்கையும் செருக்கையும் தரவில்லை. மாறாக அன்பையும் அடக்கத்தையுமே தந்திருக்கின்றன. ○

தலைமுறைகள் கடந்த தாக்கம்...



யார் வந்தாலும் வரவேற்றுப் பேசுவார். பல துறைகளில் அக்கறை உள்ளவர். பிரியமாக இருப்பார். அடிக்கடி படிப்பு பற்றி விசாரிப்பார். ஆலோசனைகள் தருவார். என்னைக் காணவரும் நண்பர்களிடமும் பிரியமாக விசாரிப்பார். தமிழ்ப்பற்று மிக்கவர். எதையும் திணிக்க மாட்டார்.

- பேரன் ஹரிஹரசுதன்


அய்யா மகாலிங்கம் எனக்கு (துரைசாமி) அத்தை பேரன். 1937-லிருந்து அதாவது ஆறு வயதிலிருந்து அடிக்கடி வீட்டுக்கு வருவார். அப்புறம் மெட்ராஸ்ல படிக்கப் போயிட்டார். லீவுக்கு வந்தால் எங்கள் வீட்டில்தான் இருப்பார். இரண்டு பேரும் கேரம் ஆடுவோம்.

எனக்கு அவரோட மாமா பெண் (அத்தை பேத்தி) தனலட்சுமியைப் பெண் பார்த்து, கல்யாணத்தை நடத்தி வைத்தார். 1958-ல் எனக்குக் கல்யாணம். கல்யாணத்திற்கு ஆறு மாதம் முன்னால் அவர் கம்



• பி.கே. துரைசாமி

வாழ்க்கை வழிகாட்டி!





• லட்சுமி துரைசாமி

பெனியில் சேர்ந்தேன். சுமார் பதினெட்டு வருடம் ஆன பிறகு, 1974-ல் ஒரு பார்ட்டிஷனில் பிஸினஸை அவராகவே கொடுத்தார். இன்றைக்கு எங்கள் உயர்வான நிலைக்கு அவர்தான் காரணம்.

அய்யா ஒரு வழிகாட்டி. ஒரு கட்டுப்பாடான வாழ்க்கைக்கு உதாரணம் அவர்...

தான். அவருடைய பரந்த மனப்பான்மைக்கும் தர்ம சிந்தனைக்கும் நிறைய சம்பவங்களைச் சொல்லலாம். அதில் ஏதோ கொஞ்சம் எங்களுக்கும் கிடைத்திருக்கிறது! அவர் செய்கிற நல்ல காரியங்களை எல்லாம் நாங்களும் முடிந்த வரை தொடர்ந்து கொண்டிருக்கிறோம். அவரை கன்சல்ட் பண்ணாமல் எதையும் செய்ய மாட்டோம்.



எங்களுக்கு எல்லாமே அய்யாவும் - அம்மாவும்தான். (லட்சுமி). சின்ன வயதிலேயே அவர்கள் வீட்டிலிருந்துதான் படித்தேன்.

ஊரில் இருந்தபோது, மகாலிங்கம் அய்யா ராமாயணம், மகாபாரதம் எல்லாம் வாங்கிக் கொண்டு வந்து படிக்கச் சொல்லுவார்.

என் திருமணத்தின் போது அப்பா உடம்பு சரியில்லாமல் படுத்திருந்தார். கல்யாணம் நிச்சயம் பண்ணினதும், காலமாகி விட்டார். அய்யாவும் - அம்மாவும் தான் பிறகு எல்லாம் கவனித்துச் செய்தார்கள். பழனியில் திருமணம் நடந்தது. காலையில் எனக்குக் கல்யாணம். அய்யாவின் மகள் கருணாம்பாளுக்குக் காது குத்து. இரண்டும் ஒரே நாளில், ஒரே மண்டபத்தில்! எனக்கு எல்லாமே தாய் வீட்டிலிருந்து செய்வது போல் செய்தார்கள்.

விரதம் இருந்தால் அம்மாவை மிஞ்ச யாராலும் முடியாது! என்னிடமும் சொல்வார்கள். முடிந்தவரை கடைப்பிடிப்பேன்.

(என்.எம்மின் நெருங்கிய நண்பரும் முன்னாள் மத்திய துணை அமைச்சருமான கே.எஸ்.ராமசுவாமியின் மனைவி சாரதா ராமசுவாமி)

அய்யாவின் எண்பதாவது பிறந்த நாள் விழாவின்போது, மலர்க் கிரீடம் செய்து சூட்ட வேண்டும் என்று கொண்டு போயிருந்தோம். அய்யா சம்மதிக்கவே இல்லை. ‘மாட்டவே மாட்டேன்’ என்று சொல்லி விட்டார். பிறகு அவரை வற்புறுத்திச் சம்மதிக்க வைத்தோம்!

என் கணவரை ‘பிரதர்’ என்றுதான் கூப்பிடுவார். ஒரு தடவை இரண்டு பேரும் தில்லியிலிருந்து ரயிலில் வந்து கொண்டிருக்கும்போது ஆக்ராவுக்குப் பக்கத்தில் வண்டி தடம் புரண்டுவிட்டது. இவர் கீழ் பெர்த். அவர் மேல் பெர்த்திலிருந்து விழுந்து விட்டார். "என்ன பிரதர், என்ன பிரதர்?" என்று அப்படியே தவிச்சுப் போயிட்டார் முதலில். பிறகுதான் சமாளித்துக் கொண்டார்கள்!

என்.எம். அய்யாவும் என் கணவரும் சத்தம் போட்டு பேசிக் கொண்டிருப்பார்கள். என் மாமனார் (சுதந்திரப் போராட்டத் தியாகி கே.கே.சுப்பண்ணக் கவுண்டர்) அங்கு வருகிறபோது கப்சிப் என்று இரண்டு பேரும் அடங்கிப் போய்விடுவார்கள். சத்தமே இருக்காது! அவ்வளவு பயம்!


இப்போதும் என்.எம்.அய்யா வீட்டுக்குப் போனால், நானும் அம்மாவும் நெருக்கமாக உட்கார்ந்து நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டே இருப்போம்!"



• சாரதா ராமசுவாமி

- 'டிப்பர்' சுப்பிரமணியம், (சக்தி சர்க்கரை ஆலை செய்தி மடல் ஆசிரியர்)





• 'டிப்பர்' சுப்பிரமணியம்

பழமுதிர்சோலை!

அய்யாவிடம் 41 ஆண்டுகள் வேலை பார்த்து வருகிறேன். அவர் நிழலில்தான் வளர்ந்தேன்.

நல்ல புத்தகங்கள்தான் சமுதாயத்தை மாற்றக் கூடியவை என்று உணர்ந்து, மகாத்மா காந்தி நூல்களை வெளியிட உதவியவர் அய்யா. எப்படி பெரிய புராணம் வெளிவர ஒரு மன்னர் காரணமாக இருந்தாரோ, அப்படிப்பட்ட மனிதர்தான் அருட்செல்வர்.

பல தமிழ் நூல்கள் இந்தியிலும் ஆங்கிலத்திலும் வெளிவர அய்யாதான் காரணம்.

வியாழனன்று வார வழிபாட்டு நிகழ்ச்சியில் முஸ்லிம், கிறிஸ்துவர், ஜெயின் என்று எல்லாரையும் அழைப்பார்.

தமிழிசையை மட்டுமல்ல, இசைக் கலைஞர்களையும் ஆதரித்தவர் அய்யா.

பவானி கோயிலில் ஒரு முறை குடமுழுக்கு விழா, அய்யா தலைமையில் நடந்தது. சமூகத்தில் பெரியவர்கள், வி.ஐ.பி.க்கள் எல்லாருக்கும் மட்டுமல்ல, பூக்கட்டுகிற ஏழை மூதாட்டிக்கும் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசு கொடுத்தார். தன் வாரிசுகளும் தன்னைப் போலவே இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்.

அய்யா தினசரி வாக்கிங் போவார். கூடவே பொறுப்பான நபர் யாராவது போவார். சில இடங்களைச் சுட்டிக் காட்டி 'இங்கே எல்லாம் பழச் செடிகள் ஏதாவது வைக்கலாமே?' என்றார் அய்யா.

'எல்லாரும் பறிச்சுட்டுப் போயிடுவார்களே!' என்றார் கூட வந்த அதிகாரி.

'அதுக்குத்தானே வைக்கச் சொல்றேன்!' என்றார் அருட்செல்வர்!

நல்லது செய்தால் பாராட்டு!

ஆழியாறில் சுவாமி வேதாத்ரி மகரிஷி கேட்டுக்கொண்டபடி அறிவு ஆலயம் கட்டி முடித்து, உடனேயே எங்களை எல்லாம் பொள்ளாச்சிக்கு அழைத்து ஒரு பாராட்டு விருந்து வைத்துவிட்டார் அருட்செல்வர் அய்யா. ஏதாவது நல்லது செய்துவிட்டால், உடனுக்குடன் பாராட்டி விடுவார்.

என் பெண் கல்யாணத்துக்கு, சமையல் ஜட்டம் முதல் எல்லாமே அம்மா போட்ட திட்டப்படிதான் நடந்தது. கர்நாடகாவிலிருந்து சிறப்புச் சமையல்காரர்களை வரவழைத்து, அவர்கள் தயாரிக்கும் 'பதிர் பேணி' என்ற இனிப்புவகை முதல் எல்லாவற்றையும் பரிமாற, அம்மாதான் காரணம். இந்த மாதிரி அற்புதமான தம்பதியைக் காண்பது அபூர்வமான சமாசாரம்.



- எம்.சின்னசாமி

(அருட்செல்வரின் நெருங்கிய நண்பர்)



திரு சண்முகவேல் கூறுகிறார்: (பரம்பரை அறங்காவலர் நா. மகாலிங்கம் அவர்கள் சார்பாக, பொள்ளாச்சி அருள்மிகு மாரியம்மன் கோயிலில் பணி புரிபவர். சுமார் 45 ஆண்டுகளாக அய்யா அவர்களுடன் பணியாற்றி வருபவர்):

திறமையும் தரும சிந்தனையும்...



• பொள்ளாச்சி வீட்டில் நடராஜர் விக்கிரகம் உள்ள சந்நிதி...



• சண்முகவேல்

“அய்யாவிடம் கணக்குகள் பார்த்துக்கொண்டு இருக்கிறேன். அய்யா நடத்தி வருகிற நாச்சிமுத்துக் கவுண்டர் டிரஸ்ட் இருக்கிறது. பங்களாவில் உள்ள மாடுகள் கறக்கும் பாலை, மூன்று மாதம் முதல் ஒரு வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இலவசமாகக் கொடுப்போம்.

“இ.ஒ.வுடன் சேர்ந்து உண்டியல் திறப்பது, கோயில் விசேஷங்கள் நடத்துவது, மற்ற கோயில்களுக்கு நன்கொடை கொடுப்பது எல்லாம் அவர் சொல்கிறபடி செய்வேன். ரம்ஜான் பண்டிகைக்கு ஒருநாள் கஞ்சி ஊற்றுவார். அதை எல்லாம் ஒழுங்காக நடக்கிற மாதிரி நான் பார்த்துக் கொள்வேன்.

“சில மாணவர்கள், டிகிரி வரை அல்லது பட்ட மேற்படிப்புக்குக் கூட நிதி உதவி கேட்டு அய்யாவுக்கு எழுதுவார்கள். யார் யாருக்குக் கொடுக்கலாம் என்று சொல்லி, அதில் அனுமதி அளித்து எழுதி விடுவார்.

“அம்மா, முன்பு கோயிலுக்கு அடிக்கடி வந்து கொண்டிருப்பார். அய்யா ஊரில் இல்லாத போது, கோயில் விஷயங்களை அம்மா தான் கவனித்துக் கொள்வார்கள். அவர்களைக் கேட்டுத்தான் செய்வோம்.

“அய்யாவின் அம்மா ருக்மணி அம்மாளும் தர்ம சிந்தனை உள்ளவர்கள். வேண்டியவர்கள் வீட்டுக் கல்யாணம் போன்ற விசேஷங்களுக்கு உதவுவார். ஆனால் வெளியே யாருக்கும் தெரியாது.”

குற்றம் குறை காணாதவர்



நான் நாற்பது வருஷமா பொள்ளாச்சியிலே அய்யா வீட்டிலே இருக்கேன். பங்களாவில் பூஜை, விசேஷம் என்றால், குடும்பத்தில் ஒருவர் மாதிரிதான் எங்களை நடத்துவார்கள்.

யாரும் பங்களாவுக்கு வந்தவுடனே, 'சாப்பிட்டீங்களா?' என்றுதான் அம்மா கேட்பாங்க. 'முதல்லே அவருக்குச் சாப்பாடு வை!' என்பார். இதுதான் முதல் வேலை.

நேரா நேரத்தில் எல்லாம் நடக்கணும் என்று அய்யாவும் அம்மாவும் எதிர்பார்ப்பார்கள். குற்றம் குறை கண்டுபிடிக்க மாட்டார்கள்.

- ஊழியர் சிவசுப்பிரமணியம்

உங்கள் இளம் பருவ நினைவுகள் பசுமையாக இன்னும் இருக்கின்றனவா?

பொள்ளாச்சியில் உள்ள சோமந்துறை சித்தூரில் நான் பிறந்த வீடு, பக்கத்தில் உள்ள சிவன் கோயில், நாங்கள் சிறுவர்களாக விளையாடிய இடம் எல்லாமே நினைவில் இருக்கின்றன. லண்டன் மிஷன் ஆரம்பப் பள்ளியில் நாலாவது வரை படித்ததும், பின்னர் ஐந்தாவதில் பொள்ளாச்சி நகராட்சிப் பள்ளியில் சேர்ந்ததும் நினைவு இருக்கிறது. தினசரி பிள்ளையார் கோயிலுக்கு, விபூதிப் பூச்சுடன் போய் வழிபட்டது கூட ஞாபகம் இருக்கிறது. அதற்குப் பிறகுதான் சாப்பிட்டு விட்டுப் பள்ளிக்கூடம் போவேன்.

உங்கள் வாழ்க்கையில், உங்கள் தாய் -தந்தையரின் தாக்கம் எந்த அளவுக்கு இருந்தது?

என் தந்தை விவசாயத்தை விட்டு விட்டு, தொழில் துறையை நாடினார். தொழிலில் உயர்ந்து சிறக்க வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இருந்தது. என் தாத்தா பழனிக்கவுண்டர் போலவே அவரும் ஒரு தேசியவாதி. காந்தியவாதி. கதராடை மட்டுமே கட்டுவார். மாரியம்மன் மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் கொண்டவர். எனவே, என் தகப்பனாரும்



• நேருவுடன் அருட்செல்வர்...



கடவுள் நம்பிக்கையோடு வாழ்ந்தார். அப்பா - அம்மாவுடன் தமிழ்நாட்டுக் கோயில்கள் பலவற்றுக்கும் சிறு வயதிலேயே நான்

“காந்தியமே



போய் வந்திருக்கிறேன். அதனால் இளமையிலேயே, எனக்குத் தேசபக்தியும் தெய்வபக்தியும் இயல்பாகவே உருவாயின.

நமது கல்வி முறை உங்களுக்குத் திருப்தி அளிக்கிறதா? எத்தகைய மாறுதல்கள் வர வேண்டும்? தமிழ் வழிக் கல்வி பற்றி உங்கள் கருத்து என்ன?

கல்வி விஷயத்தில் காந்தி சொன்னதைக் கேட்டிருந்தால் போதும்! படிக்கும்போதே வேலை செய்ய வேண்டும் என்று காந்திஜி எவ்வளவோ சொல்லியும், யாரும் அதைக் கேட்கவில்லை. 8 - 9 வயதிலேயே தக்ளி நூல் நூற்கக் கற்க வேண்டும். பிறகு இராட்டை சுற்ற, தச்சு வேலை, நெசவு போன்று, கல்வியோடு இணைந்து கைத்தொழில்களும் பயில வசதி இருக்க வேண்டும். உயர் நிலைக் கல்விக்கு, காந்திஜி சொன்னது போல, கட்டடம், கருவிகள், நூலகத்துக்குப் புத்தகங்கள் ஆகியவற்றுக்கு மட்டுமே அரசு மானியம் கொடுக்க வேண்டும். உயர் கல்வி எதற்கு? அதிகமாகச் சம்பாதிப்பதற்குத்தானே? அரசு, உயர் கல்வி நிறுவனங்களின் அடிப்படைக் கட்டமைப்புத் தேவைகளுக்கு மட்டும் தான் உதவ வேண்டும்.



• அப்துல் கலாமுடன் அருட்செல்வர்...

பகுதி நேர வேலை மூலம் மாணவர்கள் சம்பாதித்துக் கிடைக்கும் சம்பளத்திலிருந்து மற்ற செலவுகளைப் பார்த்துக் கொள்ள வேண்டும். வருடத்தில் பாதி நாட்கள்தான் மாணவர்கள் படிக்கிறார்கள். மீதி நாட்களில் வேலை செய்யலாம். உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் போது வேலை செய்யலாம் என்றார் காந்திஜி. ஷிஃப்ட் முறை இதற்கு ஏற்றது. நாடு விடுதலை பெற்ற பிறகு, யார் அவர் பேச்சைக் கேட்டார்கள்?

ஆரம்பக் கல்வியில் ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழியையும் மாநில மொழியையும் கட்டாயம் பயில வேண்டும். 6 அல்லது 7 ஆம் வகுப்பில் ஆரம்பித்தால், பள்ளியிறுதிப் படிப்புக்குள் அதிகப்படியாக இரண்டு மொழிகளைப் படித்து

தீர்வு!”

• அருட்செல்வர் பேட்டி

விடலாம். எட்டாம் வகுப்புக்கு மேல், எத்தனை மொழி வேண்டுமானாலும் படிக்கலாம். ஒரு வருடத்துக்கு ஒரு மொழி கூடுதலாகப் படித்தால் போதும். ஆங்கிலம் வேண்டுமென்றால் ஆறாம் வகுப்பிலிருந்து வைத்துக் கொள்ளலாம்.

நீங்கள் எதிர்பார்த்த அளவுக்கு நம் நாட்டில் தொழில்வளம் பெருகி இருக்கிறதா? எந்தவிதத்தில் நாம் பின்தங்கி இருக்கிறோம்?

மகாத்மா காந்தி, மாஸ் ப்ரொடக்ஷன் என்ற வெகுஜன உற்பத்தியை வேண்டாம் என்றார். அதற்குப் பதிலாக, ப்ரொடக்ஷன் பை மாஸஸ் - அதிகமானவர்களுக்கு வேலை தரும் உற்பத்தியை ஆதரித்தார். ஜவுளி மற்றும் உணவுப் பொருள் தயாரிப்பில் ஏகபோக உற்பத்திக்குப் பதில் எல்லோரும் உற்பத்தி செய்ய அனுமதித்தால், எல்லோருக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

ஒரு கிராமம் என்ற அளவில் பார்க்காமல், ஊராட்சி ஒன்றியம் அல்லது நகரசபை என்ற அளவில் எடுத்துக் கொண்டு அங்கு வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்பவர்களை விடுவிக்க என்ன செய்ய வேண்டும் என யோசிக்க வேண்டும். காந்திஜி சொன்னது போல, அந்த எல்லைக்குள் இருக்கும் நிலங்களைக் கொண்டு எல்லோருக்கும் வேலை கொடுப்பது எப்படி என்று திட்டமிட வேண்டும்.



நமது மக்களில் 70 சதவிகிதத்தினர் விவசாயத்தில் உள்ளனர். சிறு தொழில்களோ அவ்வளவு சிறப்பாக இல்லை. செருப்புத் தைப்பவர், தச்சர், கொல்லர்; குயவர் போன்றவர்களுக்கு நவீன தொழில்நுட்பங்களைச் சொல்லிக் கொடுத்து, அவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

இயந்திரங்களை உபயோகிக்க நேர்ந்தால், மனிதர்களின் வேலை வாய்ப்புகளை அது குறைத்துவிடக் கூடாது. உடல் கஷ்டத்தைப் போக்கத்தான் இயந்திரமே தவிர, வேலையை ஒழிப்பதற்கு அல்ல.


மேஜர் இண்டஸ்ட்ரீஸ் எனப்படும் பெரிய தொழில்களில், அவசியமானால்தான் இயந்திரமயமாக்க வேண்டும். வேலையின்மையைப் போக்கி, வேலை வாய்ப்புகளை உருவாக்கத்தான் தொழில்கள் அமைய வேண்டுமே தவிர, வேலைகளையே போக்குவதற்கு அல்ல!

வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட பின், தொழிற்துறை வளர்ச்சி வேகம் அதிகரித்திருக்கிறதா?

1939-க்கு முன் இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இரண்டு மட்டுமே தமிழ்நாட்டில் பெரிய வங்கிகள். மற்ற பெரிய வங்கிகள் எல்லாமே வட இந்தியாவில்தான். பெரிய கடன் தொகை பெற வேண்டுமானால், பம்பாய்க்குத்தான் செல்ல வேண்டும். இதை மாற்றி, மற்ற பெரிய நகரங்களில் கூட கடன் பெற முடியும்



என்ற நிலைமையை உருவாக்கியவர் மொரார்ஜி தேசாய். என்னைப் பொறுத்தவரை, மொரார்ஜி அளித்த வங்கிகளின் மீதான சமூகக் கட்டுப் பாட்டுத் திட்டம், வங்கிகள் தேசியமயமாக்குவதை விடச் சிறந்த திட்டம் என்பேன். வங்கிகளின் செயல்பாடுகள் சமூக ரீதியான பயன் பாடுகளைத் தரவேண்டும் என்று சில கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தார். நிதி நிர்வாகத்தைச் சீராக்கி, தாராள மாகப் பணப்புழக்கம் ஏற்படச் செய்தார்.





நதிகள் இணைப்பு இப்போதைக்கு சாத்தியமா?

சாத்தியமே. தென்னக நதிகளான மகாநதி, கோதாவரி, கிருஷ்ணாவுடன், காவேரி, வடபெண்ணை, தென் பெண்ணை, பாலாறு இவற்றை இணைத்தால் போதும். அண்ணா பல்கலைக் கழக உறுப்பினராக இருந்த போது, இந்த இணைப்பின் மூலமாக சுமார் ஒன்றரைக் கோடி ஹெக்டேர் நிலத்தை இரட்டைப் பயிர் முறையில் பயன் படுத்த இயலும் என்று தெரிவித்தேன். 60,000 கோடி ரூபாய் செல வாகும் எனத் திட்டமிடப் பட்டது. தேவே கௌடா பிரதமராக இருந்தபோது நேரில் சென்று திட்டத்தைக் கொடுத்தேன்.

வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது, இந்தத் தேசத்தின் பெரிய நதிகள் அனைத்தையும் சுமார் ஐந்தே கால் லட்சம் கோடி ரூபாயில் இணைத்து, 35 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்புக் குப் பாசன வசதி ஏற்படுத்தித் தரும் திட்டத்தை ஆராய ஒரு குழு நிய மித்தார். விவசாயம் மட்டுமின்றி, விவசாயத் தொழிலாளர்களுக்கும் இதனால் வேலை வாய்ப்புகள் நிச்சயம் பெருகும்.

பெருந்தலைவர் காமராஜ் தமிழக முதல்வரா;க இருந்தபோதே தென்னக நதிகள் இணைப்புப் பற்றிச் சிந்தித் திருக்க வேண்டும். அவர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்தபோது, எல்லா மாநிலங்களிலும் அவருக்குச் செல்வாக்கு இருந்தது. அப்

போது சுலபமாக இதைச் செய்திருக்கலாம்.

அரசியலில் ஆன்மிகம், ஆன்மிகத்தில் அரசியல் - எதை நீங்கள் ஆதரிப்பீர்கள்?

ஆன்மிகத்தில் அரசியல் தேவை இல்லை. அரசியலில் ஆன்மிகம் அவசியம் தேவை.

சமீப காலமாக கட்சி அரசியல் எதிலும் சிக்காமலே எப்படி உங்களைக் கட்டிக் காப்பாற்றிக் கொண்டீர்கள்? எப்படி உங்களால் ஒதுங்கி இருக்க முடிகிறது?



''இதுவரை அரசியலில் நிறைய வருடங்களைச் செலவழித்து விட்டீர்கள். போதும். இனி தொழிலைக் கவனியுங்கள்!'' என்று மனைவி கேட்டுக் கொண்டாள். மூப்பனாருடன் ஒருமுறை பேசிக் கொண்டிருந்தபோதுகூட, முனிசிபாலிடி, பஞ்சாயத்து அளவிலாவது காங்கிரஸ் தனியே போட்டியிட வேண்டும் என்று சொன்னேன். வேணுமானால் நானே காங்கிரசுக்கு வந்து உதவுகிறேன் என்றேன். அப்படி ஏதும் நடக்காததில் எனக்கு வருத்தம்தான். அரசியலிலிருந்து விலக இதுவும் ஒரு காரணம்.

இப்போது நான் சுதந்திரமாக இருப்பதை உணர்கிறேன். எனக்கு விருப்பம் தரும் செயல்களில் ஈடுபட்டு வருகிறேன். கல்வி, நுண்கலைகள், ஆன்மிகம் மற்றும் அறம்சார்ந்த விஷயங்களில் கவனம் செலுத்துகிறேன்.

இராமலிங்கர் பணிமன்றம் தொடங்க வேண்டும் என்று, ஏன் - எப்போது உங்களுக்குத் தோன்றிற்று?

என் தகப்பனார் பொள்ளாச்சியில் சன்மார்க்க சங்கத் தலைவராக இருந்ததும் அவருக்குப் பிறகு நான் தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும் முதல் காரணம். ஏவி.எம். அவர்களின் உதவியோடு சென்னையில் விழாக்கள் நடத்தினேன். வள்ளலாருடைய படைப்புகளையும் கருத்துக்களையும் பரப்புவதற்கு கிரிதாரி பிரசாத் போன்ற அறிஞர்களும் பல சாதுக்களும் என்னோடு வந்தனர்.

ஜோதி வழிபாடு என்பதை, மிக உயர்ந்த சிந்தனை அளவில் புரிந்துகொள்ளலாம். ஆனால் சாதாரண நிலையில் புரிந்து கொள்வது கஷ்டம்.

ரூபம்-அரூபம்-ரூபாரூபம் என்று அதன் பரிணாமத்தைச் சொல்லலாம். எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிற உருவ வழிபாட்டிலிருந்து, இந்த மாதிரி ஒளிவழிபாட்டுக்கு மாறுவது சிரமம் தான். இஸ்லாம் மற்றும் ப்ராடஸ்டன்ட் கிறிஸ்தவப் பிரிவினர் உருவமற்ற வழிபாட்டைப் பின்பற்றுகின்றனர். ஒற்றுமையாக அமர்ந்து தியானம் செய்ய உகந்த இடம் ஜோதிதான். இதைப் புத்தகங்கள் வாயிலாகவும், சொற்பொழிவுகள் மூலமாகவும் பரப்பி வருகிறேன்.

'சக்தி' என்று வீட்டுக்கும் தொழில்களுக்கும் பெயர் சூட்டக் காரணம் ஏதும் உண்டா?

தனியான காரணம் ஏதும் இல்லை. மாரியம்மன்தான் சக்தி. அம்மன் வழிபாட்டில் தகப்பனாருக்கு ஈடுபாடு உண்டு. பொதுவாக அம்மனை 'சக்தி' என்றுதானே சொல்லுவோம்? எனவே அதையே வீட்டுக்கும், தொடர்ந்து நிறுவனங்களுக்கும் பெயராகச் சூட்டினோம்.

● ● ●





அய்யா-அன்பு; அம்மா-பக்தி!



• குமாரசாமி குருக்கள்

'**க**ல்கண்டு' பத்திரிகையில் அதன் ஆசிரியர் தமிழ்வாணன் ஒரு முறை, 'பொள்ளாச்சி மகாலிங்கம் அய்யா அவர்கள் வீட்டுக்குச் சாப்பிட அழைத்தால், யாரும் மறுக்காமல் ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனென்றால் அறுசுவை உணவு என்பார்களே, அங்கு சாப்பிட்டவர்களுக்குத்தான் அது தெரியும். அதை விட அவர் உபசரிப்பு மகத்தானது!' என்று எழுதியிருந்தார். இதை நான், அய்யா கோவிலுக்கு வந்திருந்தபோது சொன்னேன். அய்யா ஒரு புன்சிரிப்புடன், "அவர் சும்மா வேடிக்கையாக எழுதி இருக்கிறார்!" என்று அமைதியாகச் சொன்னார்.

வாரியார் சுவாமிகளுக்குப் பிறகு வடலூர் சத்தியஞான சபைக்குத் திருப்பணி செய்தவர் அய்யா.

அருட்செல்வரின் துணைவியார், மயிலை கற்பகாம்பாளிடத்தில் ஆழ்ந்த பக்தி உடையவர். மயிலை கபாலீசுவரர் கோயிலில் நடைபெறும் நவராத்திரி திருவிழாவின்போது, எட்டாம் நாள் விழாவின் உபயதாரராக இருந்து உதவி வருகிறார். அம்பாள் வழிபாட்டில் கலந்து கொள்ளும் பெண்களுக்கு மங்கல தாம்பூலம் கொடுத்துச் சிறப்பித்து வருகிறார்.

இந்தத் தம்பதி எல்லா நலத்தோடும் வாழ மயிலைக் கபாலீசுவரரும் அன்னை கற்பகாம்பாளும் துணை புரிவார்களாக!

- ந.குமாரசாமி குருக்கள்



பொள்ளாச்சி பங்களாவில் பிரமிக்க வைக்கும் பூஜைகள் பல, மிகச் சிறப்பாக நடக்கும்.

என் மகள் திருமணத்தின்போது இரு முழு நாட்கள் திருமண மண்டபத்திலேயே உடனிருந்து, அவர் திருமணத்தை நடத்திக் கொடுத்தது என் மனதில் பசுமையாக இருக்கிறது.

- ரத்னா சென்னியப்பன்,
பொள்ளாச்சி



• கலைஞருடன்
அருட்செல்வர்...

சாதனைச் செல்வர்!

மகாத்மா காந்தி, நேருஜி ஆகியோரின் தாக்கத்தினால் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, 1940-ல் இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்தார் அருட்செல்வர். கோவை மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவராக இருந்து 1949-ல் அவர் நடத்திய மாநாட்டுக்கு அன்றைய மத்திய அமைச்சர் பி.வி.கேஸ்கர் வந்து கலந்து கொண்டார். தமிழ்நாடு சட்ட மன்றத்துக்கு பொள்ளாச்சியிலிருந்து 1952-ல் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1967 வரை மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து பணியாற்றினார்.

கோயமுத்தூர் மாவட்ட காங்கிரஸ் அமைப்பின் செயற்குழு உறுப்பினராக 1953-லிருந்து இருந்து வந்தார். பொருளாளராகவும் சில காலம் இருந்திருக்கிறார். 1956-59-களில் நகராட்சி தேர்தல் நடத்த அமைந்த அட்ஹாக் கமிட்டி உறுப்பினராக இருந்து, மதுரை மாவட்டத்திலும் கேரளாவிலும் கட்சிப் பணி ஆற்றியிருக்கிறார். 1961-ல் கேரளாவில் நடந்த தேர்தல்களுக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். 1958 முதல் 1968 வரை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகச் செயல்பட்டிருக்கிறார்.

பண்டித நேரு, டாக்டர் ராஜேந்திர பிரசாத், ஜெயப்பிரகாஷ் நாராயண், டாக்டர் ராதாகிருஷ்ணன், சஞ்சீவ ரெட்டி, இந்திரா காந்தி, ஜகஜீவன்ராம் ஆகியோர் இவர் இல்லத்துக்கு விருந்தினராக வந்து மகிழ்ந்துள்ளனர்.

1969 முதல் அரசியலில் இருந்து விலகி, தொழில்துறை, கல்வி, சமூகம் என்று கவனத்தை முழுவதுமாகச் செலுத்தி வருகிறார்.




நிறைவேற்றிய திட்டங்கள் :

பரம்பிக்குளம் - ஆழியாறு நீர்ப் பாசனத் திட்டம் மூலம் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம் பகுதிகளில் இரண்டரை இலட்சம் ஏக்கர் நிலத்துக்குப் பாசன வசதி.

1960-ல், மேட்டூர் அணையிலிருந்து பவானி வரையுள்ள நீரோட்டப் பாதையில், சிறு மின் நிலையங்கள் அமைத்து 120 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்ய, இவர் கொடுத்த திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 'பவானியிலிருந்து கொடுமுடி வரையுள்ள பாதையில் மின் நிலையம் அமைக்கவும், நாகப்பட்டினத்திலிருந்து மேட்டூர் அணை வரை காவிரியில் படகுப் போக்குவரத்துக்கும், மேட்டூர் வரை நிலக்கரி எடுத்துச் செல்ல வசதியும் செய்யலாம் என்று இவர் அளித்த திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

ஸ்டாக்ஹோம் மாதிரியில், சுயநிதி நகர விரிவாக்கத் திட்டத்தை 1965-ல் அளித்தார். மகாலிங்கபுரம் கூட்டுறவு வீட்டமைப்புத் திட்டமும், ஜோதிநகர் கூட்டுறவு வீட்டமைப்புத் திட்டமும் இதன்படி பொள்ளாச்சியில் உருவாகி முன்மாதிரியாகத் திகழ்கின்றன.


• பக்தவத்சலத்துடன் அருட்செல்வர்...

நீட்டிய திட்டங்கள்; சீரிய சிந்தனைகள்:

ஓர் ஏக்கர் நிலத்தை வழக்கமான நீர்ப்பாசனம் மூலம் பயிரிடுவதைவிட, ஸ்பிரிங்க்ளர் நீர்ப்பாசனம் மூலம் இரண்டு ஏக்கர் நிலத்தைப் பயிரிட

லாம்; சொட்டுநீர்ப் பாசனம் மூலம் மூன்று ஏக்கர் நிலத்தைப் பயிரிடலாம். இதற்கு ஏக்கருக்கு 5000 ரூபாய் முதல் 12000 ரூபாய் வரை செலவாகும். வேளாண் வளம் பெருக, விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் வசதி அளிக்கலாம்.

ஒன்றிணைந்த சர்க்கரை - ஆல்கஹால் - காகிதத் தொழிற்சாலை மூலம் இன்னும் வளம் காண முடியும். இந்திய சர்க்கரை ஆலைத் தொழில் பயில வகை செய்ய வேண்டும்.

2000 மெகா வாட் திறன் உள்ள ஐந்து மின் உற்பத்தி நிலையங்களை சென்னை - தூத்துக்குடி கடற்கரை வழியில் நிறுவ வேண்டும். இதற்கு திரவ இயற்கை எரி வாயு பயன்படுத்தப்பட வேண்டும். இதற்கான தொழில் நுட்பத்தை ஜப்பான், கனடா, ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து பெறலாம்.

1975-களிலேயே, இந்தியா ஒரு பொருளாதார வல்லரசாக மாற இந்துமாக் கடல் பொருளாதார சமுதாயத் திட்டத்தை அளித்திருக்கிறார் அருட்செல்வர்.



• வாஜ்பாயுடன் அருட்செல்வர்...


கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு மற்றும் காவிரி நதிகளை இணைத்து, கூடுதலாக 10 லட்சம் ஏக்கர் நிலத்தைப் பாசன வசதி பெறச் செய்யும் திட்டத்தை 1969-ல் அளித்தார். இதனால் 10 லட்சம் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். இதற்காக 30% நிலத்தைப் பயனாளிகளிடமிருந்து பெற்று, அவர்களுக்கு நீர்ப்பாசன வசதி தருவதற்கான முதலீடாக வைத்துக் கொள்ளலாம். இதனால் தேசிய சொத்து மதிப்பு 1000 கோடி ரூபாய் அதிகரிக்கும். வருடாந்தர விவசாய உற்பத்தி 1000 கோடி ரூபாய்க்கு மேல் போகும்.

திருச்சி முதல் விழுப்புரம் வரை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் சங்கிலித் தொடர்போல 40 சுயநிதி தொழிற்பேட்டைகள் அமைக்க 1965-ல் ஒரு திட்டம் கொடுத்தார். வறட்சி நிலங்களில் தொழிற்பேட்டைகளுக்காகக் காவிரியிலிருந்து நீர் எடுத்துப் பயன்படுத்தலாம் என்று யோசனை தந்தார்.

54,000 கோடி ரூபாய் அளவுக்கு GDP-யைப் பெருக்க முடியும்.

ஒரு தைவான், இரண்டு இஸ்ரேல், ஒரு டென்மார்க், ஒரு சிங்கப்பூர் எல்லாம் சேர்ந்த அளவுக்குத் தமிழ்நாட்டை வளம் கொழிக்கச் செய்ய முடியும் என்கிறார். தமிழ்நாட்டின் ஆதார பலங்களை ஒன்று திரட்டினால் இது சாத்தியமாகும். அன்றாட வாழ்க்கைத் தரமும், தனிநபர் வருமானமும் மேற்கண்ட நாடுகளைப் போலவே இதனால் உயரும்.

சமஸ்கிருதம் ஆட்சி மொழியாக்கப்பட்டால் தேசிய ஒருமைப்பாடும், நாட்டின் கலாசாரமும் காப்பாற்றப்படும். பட்டப் படிப்புவரை தாய் மொழியில் தொழிற்கல்வியும், கல்வியும்



வந்தே மாதரம்!



அருட்செல்வர் இல்லத்து அன்பு நெஞ்சங்கள்